சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ) (தமிழ் - பாகம்-3)

1. லிங்கவகைகளின் இலக்கணம்.
2. சிவாசார்யர்கள் இயற்றிய நூல்கள்.
3. விழாவகைகளின் செயல்முறைகள்
4. ஆலயஆறுகாலபூசைமுறைகள்
5. பாலஸ்தாபன செயல்முறைகள்
6. பஞ்சபருவபன்னிருமாஸ பூசைமுறைகள்

பாகம்-3



நூலாசிரியர் - வி. சோமசேகர சிவாசார்யர்

வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை - சென்னை-1.

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் - சென்னை-1.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ) (தமிழ் - பாகம்-3)

2010ம் ஆண்டின் முன்மோத, ஆகம சிறப்புச் சொற்பொழிவுகள்

1. லிங்கவகைகளின் இலக்கணம்.
2. சிவாசார்யர்கள் இயற்றிய நூல்கள்.
3. விழாவகைகளின் செயல்முறைகள்.
4. ஆலயஆறுகாலபூசைமுறைகள்
5. பாலஸ்தாபன செயல்முறைகள்
6. பஞ்சபருவபன்னிருமாஸ பூசைமுறைகள்

கருத்தவை நடத்துநர் & கட்டுரை சேகரித்தவர்
சிவஸ்ரீ வி. **சோமசேகர சிவாசார்யார்** M.A.,
குருமுதல்வர் சைவாகம கலாசார வித்யாகேந்திரம்,
சென்னை-600 001.

நூல் தொகுப்பாளர் & நூல் பரிசோதகர்
வேதாந்த சிரோமணி, சிவாகம வாசஸ்பதி
சிவஸ்ரீ Dr. T. S. **ஷண்முக சிவாசார்யார்** M.A..P. hd.,
நிறுவனர் & தலைவர்
ஸ்வாமி ஸதாசிவோம் சிவாகம ஞானகேந்திரம்,
ஸ்ரீஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன், சென்னை-600 001.

நூல் வெளியீட்டாளர்
சிவஸ்ரீ T. S. **காளிதாஸ் சிவாசார்யார்**
அர்ச்சகர், சென்னை ஸ்ரீகாளிகாம்பாள் கோயில்,
சிவசார்யர் அறக்கட்டளை நிறுவனர் & ஆலயஆசார்யார்.

சென்னை-1, தம்புசெட்டித்தெரு, புதுஎண்.207ல் இயங்கி வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில் சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன் இணைந்து மாதந்தோறும் நடத்திவந்த சிவாகம சிறப்புச்சொற்பொழிவு நிகழ்ச்சி களில் பேசிக்கட்டுரை அளித்தவர்களுக்கு "சிவாகம வாசஸ்பதி" எனும் விருதுஅளித்துப்பாராட்டி, இந்நூல் வெளியிடப்பட்டது.

வெளியீடு: **சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும்**
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)
207/101, தம்புசெட்டி தெரு, சென்னை-1.

உ

நூல் வெளியீட்டுக் குறிப்பு

சிவாகம கட்டுரைத் திரட்டு (தமிழ் – பாகம்–3)

நூலின் பெயர்	: ஆகமார்த்த ப்ரபந்தமஞ்ஜரீ
நூலின் மொழி	: தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து	: தமிழ்
நூலின் அளவு	: 5.5" x 8.5"
நூலின் எண்ணிக்கை	: 100
வெளியீடு வரிசை எண்	: 9
நூலின் பதிப்பு எண்	: முதற்பதிப்பு
நூலின் பக்கம்	: 136
கட்டுரை சேகரித்தவர்	: சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்
தொகுப்பு ஆசிரியர், நூல்வடிவமைப்பு & திருத்தம்	: சிவஸ்ரீ Dr. தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
பதிப்பு உரிமை	: சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ சிவாசார்யர்
வெளியீட்டு நாள்	: 25.12.2011
நூல்கணிணிப் பதிவு	: சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியீடு	: மேதா சக்ரீணீ கோஷ்டம்
நூற் தொகுப்பு	: சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	: சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி ஸதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் சிவஸ்ரீ மு. கார்த்திகேய குருக்கள்
மீள்பதிப்பு & திருத்தம்	: சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்
இரண்டாம் பதிப்புகாலம்	: சோபக்ருத்–ஞு தை–மீ 26–உ. சுக்ரவாரம்.
இரண்டாம் பதிப்பு நாள்	: 09–02–2024 தை அமாவாசை புண்யதினம்.
புத்தகத்தின் விலை	: **விலை ரூ.300/-**
புத்தகம் கிடைக்கும் இடம்	: சேகரித்தவர்–வெளியிட்டவர் அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352

உரிமை : © இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக் கூடாது.

Copyright © All reserved including the rights of reproduction in whole or in part in any form.

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

சிவாகம கட்டுரைத் திரட்டு (பாகம்-3)
(அரைஆண்டு அயனமலர்)

நூலின் உள்ளடக்கம்

1. ஞானதீப நமஸ்காரம் 4
2. கோமாதா ஸ்துதி 4
3. ப்ராதஸ்மரணம் 5
4. ஆசார்யவந்தனம் 6
5. இஷ்டதேவதா வந்தனம் 7
6. திருமுறைத்துதிகள் 10
7. ஆசியுரை 14
8. வாழ்த்துரை 15
9. நூல்முன்னுரை 16
10. மதிப்புரை 17
11. நூல்முகவுரை 19
12. தொகுப்புரை 21
13. நூல் – கட்டுரையாளர் அறிமுகம் மற்றும் கட்டுரைகள்
    1. சிவலிங்க ப்ரபேத விவரணம் (லிங்கலக்ஷணம்) 24
    2. ஆதிசைவ ஆசார்ய விரசித கிரந்த விவரணம் 56
    3. உத்ஸவ பிரபேத கிரியாகிரம விவரணம் 60
    4. ஆலய ஷட்கால பூஜா கிரியாகிரம விவரணம் 85
    5. பாலஸ்தாபன விதி கிரியாகிரம விவரணம் 99
    6. ஆலய பிரதிமாஸிகே பஞ்சபர்வ ஆராதனக்ரமம் 117
14. வாழ்த்து 134
15. வெளியிட்ட நூல்கள் 135

[stamp]

ஞானதீப நமஸ்காரம்

(காலை மாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம் செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயு ராரோக்ய ஸம்பத: |
சத்ருபுத்தி விநாசாய தீபஜ்யோதிர்! நமோ(அ)ஸ்து தே ||

***

கோமாதா ஸ்துதி. (பசுவணக்கத் துதிகள்)

இந்த அபூர்வமான ஸ்தோத்திரத்தைச் சொல்லி கோபூஜையைச் செய்து, பிரதக்ஷிணம் செய்தால், அளவற்ற புண்யங்களும், சகலபாக்யங்களும் ஏற்படும். இதனைக்கூறிப் பணிந்து வாசகர்கள் பயன்பெற வேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவ்ருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம: 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry



ப்ராதஸ்மரணம் (காலைஇறைவணக்கம்)

ப்ராதர் நமாமி கணநாத மநாத பந்தும் –
சிந்தூர பூர பரிசோபித கண்ட யுக்மம் |
உத்தண்ட விக்ன பரிகண்டன சண்டதண்டம் –
ஆகண்டலாதி சுரநாயக ப்ருந்த வந்த்யம் || 1

ப்ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரி –
பானுஸ் சசீ பூமி சுதோ புதஸ் ச |
குருஸ் ச சுக்ரஸ் சனி ராகு கேதவ: –
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் || 2

ப்ராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம் –
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம் |
திவ்யா யுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ர ஹஸ்தாம் –
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம் || 3

ப்ராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட –
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம் |
ப்ரஹ்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீல லீலாம் –
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம் || 4

ப்ராதர் பஜாமி பவதா மபிலாஷ தா^{3}த்ரீம் –
தா^{4}த்ரீம் ஸமஸ்த ஜகதாம் துரிதாப ஹந்த்ரீம் |
ஸம்ஸார ப^{3}ந்தன விமோசன ஹேது பூதாம் –
மாயாம் பராம் ஸமதி^{4}கம்ய பரஸ்ய விஷ்ணோ: || 5

சைவாகம பத்ததிகளின் ஆசார்ய வந்தனம்



18பத்ததி ஆசார்ய ப்ரணதி: ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்பூர் ப்ரம்ம சம்புஸ் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவா(அ)த ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ் சைவா(அ)ஷ்டாதசா சார்ய புங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்க தர்சிப்யோ ஆசார்யேப்யோ (அ)ஸ்து மே நதி:.

பக்தசுந்தரமூர்த்திஸ்தவ:- கேயூர குண்டல கிரீட விபூஷி தாங்கம் -
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம் |
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம் -
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம் ||



சைவ ஸந்தான ஆசார்யர்கள்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

இஷ்டதேவதாவந்தனம்



ஓம் கணேசாய நம:

குணாதீத மாத்யம் சிதானந்த ரூபம் -
சிதாபாஸகம் ஸர்வகம் ஞானகம்யம்.
முனித்யேய மாகாச ரூபம் பரேசம் -
பரப்ரஹ்ம ரூபம் கணேசம் பஜே(அ)ஹம்.

ஓம் ஷண்முகாய நம:

குந்தேந்து மந்த ஸ்மித சுந்தரா ஸ்யம் -
வந்தாரு பூதேவ வரை ருபா ஸ்யம்.
ப்ருந்தாரகா ராதி ஜனை ரசா ஸ்யம் -
வந்தே பவானீ தநயம் ஷடா ஸ்யம்.

ஓம் சங்கராய நம:

தவள மய சரீரம் ஸர்ப்ப சூலஞ் ச பாசம் -
பரசு மனல கட்கம் கேடகம் வஜ்ர ஹஸ்தம்.
அபய வரத ஹஸ்தம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் -
பணி சசி ஜல மௌளிம் தேவதேவம் நமாமி.

ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:

கபர்திநம் சந்த்ர கலா வதம்ஸம் -
த்ரிநேத்ர மிந்து ப்ரதிமா நநோ ஜ்வலம்.
சதுர் புஜம் ஞானத மக்ஷ சூத்ரம் -
புஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதி பாவயேத் சிவம்.

ஓம் நடேசாய நம:

க்ருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் –
ஜடாதரம் பார்வதி வாம பாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்த ரூபம் –
சிதம்ப ரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஓம் லலிதாம்பாயை நம:

ஸ்ரீம் பதபூர்ண மஹா மநு ரூபே –
ஸ்ரீ சிவகாமி மஹேச்வர ஜாயே .
ஸ்ரீ குஹ வந்தித பாத பயோஜே –
ஸ்ரீ லலிதா பர மேசி நமஸ்தே.

ஓம் க்ருஷ்ணாய நம:

இந்தீவர ச்யாமள கோமலாங்கம் –
இந்த்ராதி தேவார்ச் சித பாத பத்மம்.
ஸந்தான கல்ப த்ருமம் ஆச்ரிதானாம் –
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி .

ஓம் விஷ்ணவே நம:



மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம் –
ஸ்ரீவத் ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்.
புண்யோ பேதம் புண்டரீகாய தாக்ஷம் –
விஷ்ணும் வந்தே ஸர்வ லோகைக நாதம்.

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே –
தவளதரா ம்சுக கந்த மால்ய சோபே.
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே –
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

ஓம் துர்க்காயை நம:

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே –
நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே.
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே –
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே.

ஓம் ஸரஸ்வத்யை நம:

சுராசுர சேவித பாத பங்கஜா–
கரே விராஜத் கமநீய புஸ்தகா.
விரிஞ்சி பத்னீ கமலாஸந ஸ்திதா–
ஸரஸ்வதீ ந்ருத்யது வாசி மே ஸதா.

ஓம் ஹயக்ரீவாய நம:

ஞானா னந்த மயம் தேவம் –
நிர்மல ஸ்படிகா க்ருதிம்.
ஆதாரம் ஸர்வ வித்யானாம் –
ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

ஓம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாய நம:

யஸ்யா (அ)பவத் பக்தஜனா (ஆ)ர்த்தி ஹந்து: –
பித்ருத்வம் அன்யேஷு அவிசார்ய தூர்ணம்.
ஸ்தம்பே (அ)வதாரம் தம் அநந்ய லப்யம் –
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் மஹாசாஸ்த்ரே நம:

ஹரிவரா ஸநம் விச்வ மோஹனம் –
ஹரிததீ ச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிம ர்தநம் நித்ய நர்த்தனம் –
ஹரிஹரா த்மஜம் தேவ மாச்ரயே.

ஓம் பைரவாய நம:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம் –
கராம் புஜைஸ் ஸந்தததம் த்ரிநேத்ரம்.
திகம் பரம் பஸ்ம விபூஷி தாங்கம் –
நமாம் யஹம் பைரவ மிந்து சூடம்.

ஓம் ஹநுமதே நம:

அசேஷ லங்கா பதி ஸைன்ய ஹந்தா –
ஸ்ரீராம ஸேவா சரணைக கர்த்தா.
அசேஷ துக்காஹத லோக கோப்தா –
த்வஸௌ ஹநூமான் தவ ஸௌக்ய கர்த்தா.

உ
திருச்சிற்றம்பலம்
தென்னாடுடைய சிவனே போற்றி ! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

திருமுறைத்துதிகள்

விநாயகர் துதி
(உமாபதி சிவாசார்யார் அருளியது)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

நால்வர் துதி
(உமாபதி சிவாசார்யார் அருளியது)

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத் தாள் போற்றி



அண்ணாமலையார் துதி (தேவாரம்)
(திருஞானசம்பந்தர் அருளிது)

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங் கள் எரித்த அன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழை நின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந் தணையும் சாரல் அண்ணா மலையாரே.

திருவாசகம் – (மாணிக்கவாசகர்)

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையா னைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருவிசைப்பா – திருமுறை–9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் **தாளம் : ஆதிதாளம்**

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

திருப்பல்லாண்டு – திருமுறை–9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் **தாளம் : ரூபகம்**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம் – திருமுறை–12 (சேக்கிழார்)

ராகம் : மத்யமாவதி விருத்தம்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

அபிராமி அந்தாதி

ஞானமும் நல்வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

தியானத்தில் நிலைபெற

கண்ணியது உன்புகழ் கற்பது உன்; நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபாதாம் புயத்தில்; பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,
காத்தும், அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.

திருப்புகழ்

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதப் பெருமாளே.



சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

ஆசியுரை

ஸ்ரீ சிவசைவாச்சாரியராகிய

ஸ்ரீ சீர்காழி சட்டநாத சுவாமிகள் மடம்

கோமளீஸ்வரன்பேட்டை கோயில் தெரு

மவுண்ட்ரோடு, சென்னை-600 002.

போன் : 65180106

சிவஸ்ரீ. T.S.சதாசிவோம் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.காளிதாஸ் சிவாசாரியர்

சிவஸ்ரீ. T.S.சண்முக சிவாசாரியர் அவர்களுக்கு

ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் கிருபா கடாக்ஷத்தினால் என்றும் அநேக ஆசீர்வாதங்களை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களின் சிவாச்சாரியர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சார்யர் பௌண்டேஷன் மூலமாக கடந்த இரண்டு வருடங்களாக சிவாகமத்திற்கும் வரும்கால சிவாச்சார்ய இளைஞர்களின் பூஜா விஷயங்களுக்கு உதவியாக நடைபெற்று வரும் ஆகம சொற்பொழிவுக்கும் பேரறிஞர்களின் வருகை தரும் நம்முடைய சமுதாயத்திற்கும் பேருதவியாக அமைந்து என்றும் நம்முடைய ஆதிசைவ சமூகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் என்றும் துணை நிற்க ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் பேரருள் துணை நிற்க ஆசீர்வாதம் செய்கின்றோம்.

15/12/11
சென்னை-2

இப்படிக்கு

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

மீமாம்ஸ், வ்யாகரண சிரோமணி **சிவஸ்ரீ தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்**
பரம்பரை .பூஜை ஸ்தானீகர்
அருள்மிகு குளிர்ந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில்
திருமழிசை, சென்னை, தொலைபேசி 044 26496007

வாழ்த்துரை

எனது ஸஹோதரர் தெய்வத்திரு. தி.ஷ.ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களின் லக்ஷியங்களை நிறைவேற்றும் விதமாக அவரது திருக்குமாரர்கள் தந்தையாரின் பெயரில் அறக்கட்டளைகள் அமைத்து பொதுநலத் தொண்டுகளையும், சிவாகமசொற்பொழிவுகளையும் இன்னும் பல நற்காரியங்களையும் செய்து வருவது எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பிகையின் பேரருளே. மாதந்தோறும் சிறந்த ஆகம வல்லுனர்களை கொண்டு அவர்களின் சொற்பொழிவுகளை பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல், கட்டுரைகளாகவும் பெற்று வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையுமாறு இந்த புத்தகத்தினை தொகுத்து அளித்திருக்கிறார்கள். "ஸூத்ரே மணிகணா இவ" என்றபடி பல மணிகளை ஒரு நூல் இணைத்திருப்பது போல், இதுபோன்ற பல நறுமலர்களை சிறந்த முறையில் தொகுத்து அளித்த சிவஸ்ரீ ஸோமசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், புத்தகத்தை பதிப்பித்த அறக்கட்டளை நிர்வாகத்தினருக்கும் எனது அன்பான வாழ்த்துகள். இது போன்று பல மலர்கள் இந்த அகண்ட ஞானவ்ருக்ஷத்தில் இருந்து பூத்து, இருளால் சூழப்பட்டிருக்கும் இவ்வுலக மக்களுக்கு ஒளிதர எல்லாம் வல்ல எனது ஈசன் குளிந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேச்வர சுவாமியை வேண்டி பணிகின்றேன்.

அன்புடன்
தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்

ஸாஹித்ய சிரோமணி. ஆகமப்பிரவீனர். சைவாகம வித்யா ரத்னம்

சிவஸ்ரீ. வி. சந்திரசேகர சிவாசார்யர்

சைவாகமப் பேராசிரியர் (ஓய்வு)

ஸ்ரீ வெங்கடேஸ்வர வேதசாஸ்த்திர ஆகமவித்யாகேந்திரம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஏ2, ஆனந்தி அடுக்ககம், 33/17, சாலைத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

தேதி : 21-12-2011

ஓம் ஸ்ரீ குருப்யோ நம :
நமோ வாமார்த ஜானயே.

சென்னை, தம்புச்செட்டி தெருவில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துவரும் **அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் பிராதான அர்ச்சகரும், "சிவாசார்ய குல திலகம்", "சாக்த ரத்னாகரம்"** போன்ற விருதுகளைப் பெற்றவரும், இந்து மதத்தின் குரு என்கிற முறையில் அயல்நாட்டுக்கு சென்று ஐக்கிய நாடுகளின் சபையில் நமது இந்துமதத்தின் சிறப்பையும், சைவ-சமயத்தின் மேன்மையையும் எடுத்துரைத்துப் பெரும்புகழ் பெற்றவருமான சிவாசார்ய குல பூஷணம் **சிவஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்** அவர்களுடைய அருளாசியுடன் அவருடைய குமாரர்களால் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில், கடந்த இரண்டு வருடங்களாக பிரதிமாதம் சைவாகம விற்பன்னரான ஒரு சிவாசாரியார், சைவாகம ஞான, கிரியா, சர்யா, யோக பாதங்களில் கூறப்பட்ட விஷயங்களை சிறப்பாக உரையாற்றியவற்றை கட்டுரைகளாக எழுதி அவை தொகுக்கப்பட்டு மலராக வெளியிடப்படுகிறது.

இந்த விழாவில், இரண்டு ஆண்டுகளில் பிரதிமாதம் உரையாற்றிய சிவாசார்யர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதும் வழங்கப்படுகிறது.

பொது ஜனங்களுக்கு ஆன்மிகத்தில் அதிகப்பற்று உண்டாக வேண்டுமென்பதும், ஆதிசைவ குலத்தில் பிறந்த சிவாசார்ய சிறுவர்களுக்கு சிவாகமங்களைக் கற்பதிலும், ஆலயத்தில் அர்ச்சகராக பணிபுரிவதில் ஆர்வம் உண்டாகவேண்டுமென்பதுமே இதுபோன்ற விழாக்களின் நோக்கமாகும்.

எனவே இதுபோன்ற ஆன்மிக விழாக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளாகிய அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிகளை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

இப்படிக்கு,
ஸாஹித்திய சிரோமணி ஆகமப்பிரவீணர்
சைவாகம வித்யா ரத்னம்
V. சந்திரசேகர சிவாசார்யர்

Phone : 2498042

The Madras Sanskrit College & S.S.V. Patasala

(Affiliated to University of Madras)

[Recognised by Rashtriya Sanskrit Sansthan, The Ministry of Human Resource Development, Govt. of India, New Delhi, Under Adarsh Sanskrit Mahavidyalaya Scheme]

Dr. N.V. DEVIPRASAD
Principal

84, ROYAPETTAH HIGH ROAD,
MYLAPORE, CHENNAI - 600 004.
E-mail : mds.sanskritcollege@gmail.co

மதிப்புரை

மனிதனுடைய்ய வாழ்க்கையில் அடைய வேண்டியவை நான்கு - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம். மனிதனால் அடையப்படவேண்டியவை என்பதினால் இவை நான்கும் புருஷார்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு புருஷார்த்தங்களை அடைவதிலும் ஆன்மீகம் நிறைந்திருக்க வேண்டும். புனிதத் தன்மையுடன் போற்றப்படவேண்டும். இந்த நான்கு வகைகளிலும் கடைசியாக கூறப்பட்டுள்ள மோக்ஷம்தான் மனித வாழ்க்கையின் லக்ஷியம். மற்றநாட்டவர்களை விட நம் நாட்டவர்களுக்கு இதுதான் சிறப்பு. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பது பெரியோர்களின் வாக்கு. நமது பிறவியைத் தொடங்கி அனைத்து கார்யங்களும் பரமேஸ்வரனுடைய அருளால் தான் நிகழ்கின்றன. எவ்வாறு உயிரினங்கள் பிறவியிலிருந்து கடைசி வரை ப்ராண வாயுவை ஸ்வாசிக்கின்றனவோ அதுபோல் ஈசனிடம் பக்தி, ஆன்மீக சிந்தனை வாழ்க்கை முழுவதும் நிறைந்திருக்கவேண்டும். இது தான் வேதங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

இத்தகைய ஆன்மீக சிந்தனை செழித்தோங்கி நிற்கத்தான் அனாதி காலமாக கோயில்கள் கட்டப்பட்டு வேதாகம சாஸ்த்ரங்கள் அறிந்த சிவாசார்ய பெருமக்களால் சாஸ்த்ரவிதிகளின்படி செவ்வனே பூஜை செய்யப்பட்டு வருகின்றன. வேதவிதிகளின் படியும், சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவையான ஆகமங்களின் விதிமுறைகளின் படியும் பூஜை முதலான சடங்குகள் நடத்தப்படுவதனால் மட்டுமே கோவில்களும், அங்கிருக்கு மூர்த்திகளும் சிறப்பு மிக்கவையாகவும், மகிமைக்கொண்டவையாகவும், நாட்டு மக்களுக்கு நலம் தருபவையாகவும் அமையும். நாட்டில் அமைதி, மகிழ்ச்சி, சுகபோகங்கள், தர்மம், ஆன்மீக சிந்தனை செழிக்க முறைதவறாது நடக்கும் பூஜைகளோடு விளங்கும் ஆலயங்கள்தான் காரணம். ஈசன் அருள் இல்லையென்றால் நம் மனதில் பக்தியே தோன்றாது.

"திவஸம் திவாஸார்தம் வா முஹுூர்த்தம் வா க்ஷணம் லவம்
நஹி அலப்த ப்ரஸாதஸ்ய பக்திர்பவதி சங்கரே!!

ஒரு நாளோ அல்லது அரை நாளோ கடைசி பக்ஷமாக ஒரு கணமோ, சிவபெருமானிடம் பக்தி ஏற்படவேண்டுமென்றால் இறையருள் இன்றி ஏற்படாது என்று மஹாபாரதம் கூறுகின்றது. பூஜை முறைகளும் சிவஞானமும் சைவாகமங்களை அறிவதன் மூலமாகத்தான் உண்டாகும்.

"பரமாப்த பரமேஸ்வர ப்ரணீதத்வேனைவ வேதாகமானாஞ்ச
ப்ராமாண்யம்

என சைவாகமங்களின் மகிமை சைவபரிபாஷை என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. சைவாகமங்கள் பல இருந்தாலும் வேத் வழியை பின்பற்றுகின்ற ஆகமங்களைத்தான் சான்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென காமிகாகமத்தின் கூற்று.

சைவாகமோபி த்விவித: ச்ரேளதோ (அ)ஸ்ரெளதஸ் ஸஸ்ம்ருத:
ச்ருதிஸாரமய: ச்ரெளத: ஸ்வதந்த்ர இதரோமத:

நாளடைவில் சர்யா, க்ரியா, யோக, ஞான என்ற பாதங்கள் அடங்கிய சைவாகமத்தின் நுணுக்கங்களை அறிந்த சிவாசார்ய பெருமக்களும், சான்றோர்களும் குறைந்து கொண்டே இருக்கின்ற இச்சூழ்நிலையில் ஆலயங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் போல் புத்துணர்ச்சி மிகமிக அவசியமான ஒன்று.

கல்லூரிகளிலும், பல்கலைகழகங்களிலும், புத்துணர்வு பயிற்சி என்னும் கருத்தரங்குகள் என்றும், சொற்பொழிவுகள் என்று பல நடத்தப்படுவது போல் சிவாசார்யர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் பல கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், இளம் மாணாக்கர்களுக்கு பயிற்சி முதலியவை நடத்தப்படவேண்டும்.

இப்பெரும் முயற்சியில் மஹேஸ்வரனின் இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தி ஸ்ருரூபினியான, சென்னையில் எழுந்தருளி பக்தர்களின் கற்பக வ்ருக்ஷமாக விளங்கும் ஸ்ரீகாளிகாம்பாளின் பரம பக்தரும், அம்பாளுக்காகவே தன்னை அர்பணித்துக்கொண்டவரும், சிவாசார்ய குல திலகம், சைவாகமக்கடல் சிவஸ்ரீ தி.ஸா. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களுடைய புத்திரமாமணிகள் சிவஸ்ரீ தி.ஸா. ஸதாசிவோம் சிவாசார்யர், சிவஸ்ரீ தி.ஸா.காளிதாச சிவாசார்யர் மற்றும் சிவஸ்ரீ டாக்டர் தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் அவர்களும், மிகுந்த ஆர்வம் கொண்டு ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் சைவாகம சொற்பொழிவுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துவது மட்டுமல்லாமல் பல சைவாகம நூல்களையும் அச்சிட்டு சைவாகம வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வருகின்றனர் என்பது மிகவும் போற்றத்தக்கது. வெறும் சொற்பொழிவுகள் அமைப்பதோடு நின்று விடாமல், காலம் காலமாய் நிலைத்து நிற்கவும் தலைச்சிறந்த சிவாசார்ய சைவாகம புலவர்களின் ஞானத்தாலும் கருத்துக்கட்டுரைகளாலும் இளையத்தலைமுறை மற்றும் பொதுமக்கள் அறிவதன் பொருட்டும் புத்தக வடிவமாக அச்சிட்டிருப்பது தங்கத்திற்கு வாசமும் சேர்வது போலாகும். சொற்பொழிவாற்றிய பன்னிரெண்டு புலவர்களும் பன்னிரெண்டு சிவாகம ஞான்சூரியர்கள் ஆவர். இவர்களின் சொற்பொழிவுகள் கட்டுரைகள் ஆகிய கதிர்களின் ஒளியினால் இளம் சிவாசார்யர்களின் நெஞ்சத்தில் மலமாகிய அக்ஞானம் நீக்கப்பட்டு ஞானஒளி பிரகாசிக்கும் என நினைக்கிறேன்.

இவ்வனைத்து கட்டுரைகளையும் மிகவும் சிரமப்பட்டு தொகுத்து வழங்கிய ஆகமப்ரவீன, சிவாகமசார்வபௌம, வ்யாகரண சிரோமணி முதலிய பிருதங்களால் போற்றப்பட்ட தன்னிகரற்ற சைவாகம வித்வான் சைவாகம கலாசார கேந்திரத்தின் முதல்வர் ப்ரம்ம ஸ்ரீ சோமசேகர சிவாசார்யர் அவர்களின் இறைப்பணி மிக மிக பாராட்டத்தக்கதாகும். இந்நிறுவனங்களின் நிர்வாகிகளும் பரமேஸ்வரனின் அருள் பெற்று மேன்மேலும் தொண்டுபுரிய வேண்டும் என ஈஸ்வரனை ப்ரார்த்திக்றேன்.

சுபமஸ்து

அன்புடன்

Dr. N.V. தேவி பிரசாத் M.A., Phd.

Dr. N.V. Devi Prasad
Sahitya Siromani, M.A.,Ph.D.
PRINCIPAL
The Madras Sanskrit College
Mylapore, Chennai-600 004.

நூல் முகவுரை

சிவனருளால் சிவபுண்ணியச்செயல்கள் தழைத்திடும்பொருட்டு, சென்னை சிவாசார்யார் அறக்கட்டளை பல சமயத்தொண்டுகளைச் செய்வதுடன், ஞானவேள்வி-யாகிய ஆகமஞான உபதேசரூபமான சிறப்புச்சொற்பொழிவுஒன்றை மாதந்தோறும் நிகழ்த்திவருவது காலத்திற்குத் தேவையானதும், எதிர்காலத்திற்கு உதவக்கூயதுமாக உள்ளதால் போற்றுதற்கு உரியதாகஉள்ளது. சிவாசாரியர் குலபூஷணமாகவிளங்கிய ஸ்ரீ ஸாம்பமூர்த்திசிவாசார்யர் அவர்களின் குமாரர்கள் மாதம் ஒரு சிவாகமஅறிஞர்களை அறிமுகப்படுத்தி, கௌரவித்துவருவது சாலப்பொருத்தமான சிறப்புப்பணியாகஉள்ளது. இத்துடன் மாதந்தோறும் பேசப்படும் சிவாகமகருத்துக்களை ஆண்டுதோறும் மலராகத் தொகுத்து வெளியிட்டுவருவது எதிர்காலத்திற்கு உதவக்கூடிய, செயற்கரிய அறப்பணியாகிறது. இவ்விதம் நடப்பதில் மூன்றாம்ஆண்டான 2011-ல் நடைபெற்ற பன்னிருமாதபேச்சுகளின் கட்டுரைகளைவெளியிட, நூல்வடிவில் தொகுத்தளித்திடு-வதற்கு என்னைத்தேர்வுசெய்து பேச்சுக்கட்டுரைகளை அளித்தனர். அவைகள் கிரந்தம், நாகரம், தமிழ் ஆகியவற்றில் பலவகை எழுத்துக்களில் கைஏடுகளாகவும், ஒரு சிலகட்டுரைகள் மூலசான்றுகள் மட்டுமாகவும், சிலகட்டுரை தமிழ்உரை மட்டுமாகவும், சிலகட்டுரை கலந்தும்விளங்கின. மேலும், ஒரேவடிவில்இல்லாமல், பேச்சுப்பொருள்கள் பலவாறாக கருத்துசேமித்தவண்ணமாக, சிறுகுறிப்புகளாக முறைமாறியும் இருந்தன. இக்கேந்திரத்தில் முழுநேரபணியாளர்கள், கணினிஅறிந்தவர்கள், பணியில் இல்லாத-தாலும், சிலர் ஈடுபாடுஇல்லாமல் இருந்தமையாலும் இவற்றை, இருமொழியையும் ஒரேதமிழ்எழுத்தில் தட்டச்சுசெய்துஉள்ளோம். இதனால் சமஸ்கிருதம் அறிந்தவர்களும், அதனை அறியாதவர்களும், இதிலுள்ள சான்றுகளை எளிதில் அறிந்துகொள்ளமுடியும். மேலும், ஒரு தலைப்பில் விரிவாக பேசப்பட்டமையால், இக்கட்டுரைகள் பலநூல்களின் மேற்கோள்களையும், சான்றுகளையும் பெற்றுஇருப்பது, கல்விபயில்வோருக்கு மிகவும் பயனுள்ளதாக, அமைந்துஉள்ளது. இம்மலரில் ஒவ்வொரு கட்டுரைக்கான பேச்சுப்-பொருளும், சிறுசிறுஉட்பிரிகளின்கீழ், சிறுசிறுபகுகளில் சமயம் பற்றி அறிய ஆர்வமுள்ள-வர்களுக்கு ஏற்றவைகயிலும், எளிதில் யாவரும் விளங்கிக்கொள்ளுமாறும், கட்டுரை-யாளரின்கருத்தும், நோக்கமும் சிதைவுறாமலும், கருத்துமாறாமலும், தலைப்புத்தொடர்பு உடையதாகவும், பலதலையங்கங்களில் தொகுத்து, பிரித்து, முறைப்படுத்திஉள்ளது சிறப்புஅம்சமாகும். இந்த வடிவஅமைப்பு ஆகமபாடசாலை மாணவர்களுக்கும்,

போதிக்கும்ஆசிரியர்களுக்கும், தமிழில் ஆகமகருத்துக்களின் எழுத்துத்தேர்வு, பேச்சுப்-போட்டி இவற்றிற்கு, வினாக்களை தயாரிக்கவும், விடைகளைஅறியவும், எளிதில் செய்தியை எடுத்துக்கையாளவும், பகுத்து, மனதில்பதித்துக்கொள்ளவும் மிகவும் ஏற்ற அமைப்பாகும் எனலாம். இந்துசமய ஆகமகருத்துக்களை எளியமுறையில் தமிழில் அறிய விரும்புவோருக்கு, இக்கட்டுரைத் தொப்புநூலானது அரியபலகருத்துக்களைப் பல்வேறு சான்றுகளுடன் அறியபெரிதும்உதவும் என்பதில் வேறுகருத்து இருக்கமுடியாது. கட்டுரையைஎழுதிஅளிக்காதவர்களின் பேச்சுப்பொருளும், பதிவிலிருந்து குறிப்பு எடுக்கப்பட்டு, குறைபடாவண்ணம், ஆண்டின் பன்னிருமாதகட்டுரைகளும் ஒரேவடிவில் பொருத்தமாகதொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் மும்முறை பிழைநீக்கத் திருத்தம் செய்யப்பட்டப்போதிலும், கணினிப்பதிப்பில் ஏற்படும் குறைகளால் ஏற்படும் சிலகுறைகளைக்காண்போர், பிழைநீக்கிப்பொருத்தருள வேண்டுகிறேன். சமஸ்கிருதத்திலும், ஆங்கிலம், பிரஞ்ச்சு முதலிய பிறமொழிகளிலும், பெரியநூல்கள் பல இருப்பினும் அவற்றின்பொருளை பட்டப்படிப்பு இல்லாத பாமரமக்களும், இந்துசமயத்தின் பலதரப்பட்டபொதுமக்களும் அவற்றை எளிதில் அறிந்திடஇயலாது. சமயநூலின்படியான சடங்குகளின் விளக்கத்தை நிகழ்ச்சிகளில் மட்டுமே அவ்வப்பொழுது விளக்கப்-படுவதால் அறியமுடியும். இக்குறையைப் போக்கிடவும், அறியபல ஆகமகருத்துக்களை தலையங்கமாகக்கொண்டு மூன்றுஆண்டுகளாக முற்றிலும், எளியதமிழில் கட்டுரை வடிவிலேயே இந்நூல் திட்டமிட்டுநடத்தப்பட்ட கட்டுரைகளின் திரட்டாக வெளியிடப்பட்டு உள்ளதால், இது இந்துசமயமக்கள் அனைவருக்கும் உதவிடும் எனலாம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய, அறியவேண்டிய சமயசெய்திகள்நிறைந்த சிவஞானமாகிய அறிவுக்களஞ்சியமாக இந்தநூல்திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வடிவமைத்துத் தொகுத்திட்டதில் பெருமிதமும், மகிழ்ச்சியும் கொண்டு, நூலும், சமயமும் சிறக்க வாழ்த்தி, நன்றி தெரிவித்து வணங்குகிறேன்.

இங்ஙனம்,
சமயப்பணியில் உள்ள,
வி. சோமசேகர சிவாசார்யர்
முதல்வர், S.K.V.K.சென்னை.

வாழ்க சீர்அடியாரெல்லாம்

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

Vedantha Siromani, Vedantha Visharada

Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,

DIRECTOR
SWAMI SADASIVOM SIVAGAMA JNANA KENDRAM
(A unit of Sri Sambamurthy Sivacharyar Foundation)
E-mail : adisaiva@sivacharya.org

76/96 Ramaswamy Street, Muthialpet,
Chennai - 600 001.
✆: 0091-44 -2526 1320
Web: www.sivacharya.org

உ

ஸ்ரீ குருவருள் துணை

தொகுப்புரை

எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பாள் பேரருளினால் எனது தந்தையார் தெய்வஸ்ரீ தி.ஸா. சாம்பமூர்த்தி சிவாசார்யரின் லக்ஷியங்களை, நானும் எனது சகோதரர்களும் தந்தையாரின் பெயரில் நிறுவிய தர்ம ஸ்தாபனங்களின் வாயிலாக நிறைவேற்றி வருகிறோம். எங்கள் குடும்பத்தாரின் பேராசான் K.A. ஸபாரத்ன சிவாசார்யர் அவர்கள், சைவாகமங்களை பற்றி ஆச்சர்யமாக கூறும் பொழுது இவை எல்லாம் எப்படி இவர் சொல்லுகிறார் இவ்வளவு விஷயங்கள் நமது ஆகமங்களில் இருக்கின்றனவா? இவற்றை எல்லாம் நாம் அறியமுடியுமா? என்ற கேள்வி சிறுவயதில் எனது மனதில் நிரம்பி இருந்தன. அவற்றிற்கான விடைகள் எனது ஆசார்யரான சிவஸ்ரீ V. சந்திரசேகர சிவாசார்யர் அவர்களின் தீக்ஷை விசேஷத்தினால் நல்ல ஒரு ஆசானாகவும், வழி காட்டியாகவும் சிவஸ்ரீ V. சோமசேகர சிவாசார்யர் அவர்கள் அமைந்தார். சிறுவயது முதற்கொண்டே எனது சஹோதரர் ஸ்வாமி ஸதாசிவோம் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆலயங்களில் எங்களால் முடிந்த சிறு சிறு சேவைகளை செய்து வருவது வழக்கம். தற்போழுது ஆசானின் நல்வழி காட்டுதலினால் நாம் செய்யக் கூடிய ஒவ்வொரு க்ரியைக்கும் அர்த்தங்களும் பலன்களும் தெளிவாக புரிகின்றன. ஆதிசைவ பெருமக்களும் சைவ சமய அபிமானிகளும் தெளிந்து அறிந்து பயன்பெற கூடிய வகையில் எங்களது கேந்திரத்தின் சார்பாக மாதந்தோறும் நடைபெற்ற சிவாகம சொற்பொழிவுகளின் கட்டுரைகளை தொகுத்து அளிப்பதில் பெறு மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு காரணங்களால் சிலரால் கட்டுரைகளை அளிக்க முடியாமல்போனது. நானும் அடுத்த பதிப்பில் அதனை வெளியிடலாம் என கூறியபோது, எனது ஆசான் கட்டுரைகள் முழுமையாக இடம் பெறவில்லை எனில் மலரை ஆர்வமுடன் படிக்கக் கூடிய மாணவர்களுக்கும் அறிஞர்களும் ஏமாற்றம் அடைவார்கள் என்று எண்ணி அவர் சிரமம் பாராமல் விடுப்பட்ட கட்டுரைகளை எழுதி பூர்த்தி செய்தார். எங்களது அழைப்பை ஏற்று சிறப்பாக சொற்பொழிவு ஆற்றிய அனைத்து சிவாசார்ய பெருமக்களுக்கும் எனது ஆசானுக்கும் எங்களது அறக்கட்டளை சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

ஆசியுரை அளித்த சென்னை கோமளீஸ்வரன்பேட்டை சைவ மடாதிபதி சிவஸ்ரீ சீர்காழி சட்டநாத பாலசுப்ரமண்ய சிவாசார்ய ஸ்வாமிகளுக்கும், வாழ்த்துரை அளித்த எனது பெரிய தகப்பனர் சிவஸ்ரீ T.S. சச்சிதானந்த சிவாசார்யர்

ஸ்ரீ காமாக்ஷியம்பாள் துணை

Vedantha Siromani, Vedantha Visharada

Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,

DIRECTOR
SWAMI SADASIVOM SIVAGAMA JNANA KENDRAM
(A unit of Sri Sambamurthy Sivacharyar Foundation)
E-mail : adisaiva@sivacharya.org

76/96 Ramaswamy Street, Muthialpet,
Chennai - 600 001.
✆: 0091-44 -2526 1320
Web: www.sivacharya.org

அவர்களுக்கும், முன்னுரை அளித்த எனது ஆசார்யர் சிவஸ்ரீ V. சந்திரசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், மதிப்புரை அளித்து எங்களை கௌரவித்தது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் நாங்கள் ஆற்றக் கூடிய பணிகளுக்கும் உறு துணையாக இருப்பேன் என்று எங்களை ஊக்கப் படுத்திய மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத கல்லூரி முதல்வர் ப்ரம்மஸ்ரீ Dr. N.V. தேவிப்ரஸாத் அவர்களுக்கும், மஹாபாரதத்தில் பீஷ்ம பிதாமஹரை போன்று எங்களது அனைத்து காரியங்களுக்கும் தலைவராக வழி நடத்தி கொண்டு இருக்கும் எனது பெரிய தகப்பனார் சிவஸ்ரீ தி.ஷ. வாகீச சிவாசார்யர் அவர்களுக்கும் எனது நமஸ்காரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகத்தை குறைந்த நேரத்தில் சிறந்த முறையில் கணினியில் தயார் செய்து கொடுத்த அம்பிகை `லேமினேஷன் நிறுவனத்திர்க்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது கேந்திரம் மேலும் மேலும் தந்தையாரின் லக்ஷியங்களை சிறந்த முறையில் நிறைவேற்றிட இதுகாலமும் எங்களுக்கு ஊக்கமளித்து உதவி செய்த அறக்கட்டளை சார்ந்தவர்களுக்கும் அனைத்து சிவநேய செல்வர்களுக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். சொற்பொழிவுகளை சிறந்த முறையில் படமாக்கிய நூரைய சந்ததியினர், பெரியோர்ககளின் குரல்களை கேட்டும்படி பதிவு செய்த திரு. V.S. அர்ஜுன் குழுவினருக்கு நன்றியை பதிவு செய்து கொள்கிறேன். 2010 ஆண்டில் பேசிய அறிஞர்கள் உரையை தொகுத்து அளித்திட வாய்ப்பு அளித்த எனது ஸஹோதரர் திரு.காளிதாஸ சிவாசார்யருக்கு எனது நன்றிகள். திருத்தம் பார்ப்பதற்கு உதவிய G. ரமேஷ் சிவாசார்யர் D. அஸ்வத்தாமசிவம், V. விமலசிவம், C. வேங்கடராம சிவம் ஆகியோர்க்கும் மாதம்தோறும் சொற்பொழிவுகளை சிறப்பாக ஏற்பாடு செய்தும், அனைவருக்கும் தொடர்பு கொள்ள செய்தும் உதவிய திரு. V. சுப்பையா, R. விக்னேஷ் சிவம் அவர்களுக்கும் திரு. மஹேந்த்ரன் அவர்களுக்கும், திரு. M. விக்னேஷ் அவர்களுக்கும் ஒளி ஒலி அமைத்துக்கொடுத்த திரு. சீனி மற்றும் திரு கணபதி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய இக்காரியங்களை எல்லாம் பார்த்து ரசித்து சந்தோஷம் அடைந்து இருக்கவேண்டிய, எனினும் சூக்ஷ்ம ருபத்தில் இருந்து ஆசீர்வதித்து வரும் எங்களது பேராசான் தெய்வத்திரு சபாரத்ன சிவாசார்யர் அவர்களுக்கும், எனது தந்தையார் தெய்வஸ்ரீ தி.ஷ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களுக்கும் எனது மூத்த சஹோதரர் தெய்வதிரு தி.ஷா. முனுசாமி சிவாசார்யர் அவர்களுக்கும் எனது குருநாதர் காஞ்சீபுரம் தெய்வத்திரு S. உமாபதி சிவாசார்யர் அவர்களுக்கும் இம்மலரை சமர்ப்பிக்கின்றேன். தோஷங்களை எங்களுக்கு தெரிவிப்பின் அடுத்த பதிப்பில் சிறந்த முறையில் அளிப்போம் என்று உறுதிஅளிக்கின்றேன்.

அண்ணாமலையார் அருளை
தி.ஷ. ஷண்முக சிவாசார்யர்
24/12/2011



ஸ்ரீகுருப்யோ நம:

லிங்க லக்ஷணம்

கோனேரிராஜபுரம், சிவாகம ஞானபானு
சிவஸ்ரீ S. ஸபேச சிவாசார்யர்
மயிலாடுதுறை.

சித்தாந்த சேகரத்தில் கருவறையின் மொத்த உயர அளவில் இருபது பாகங்களாக உயர்த்தி அதில் பத்துபாகம் அளவில் கருவறையின் நீளம் இருப்பது கீழ்அளவு எனப்படும். பதினோருபாக அளவு உள்ளது மத்யமம். 12பாக அளவு உத்தமம் ஆகும். பத்துபாகமாக அளவு இருப்பது சமசூத்ரம் எனப்படும். இவ்வாறு கருவறையை அளந்து, அதில் நவலிங்கங்களை நிறுவலாம். இது கர்பமானம் எனப்படும். ஒருமுழம் முதல், ஆறுஅங்குலஅளவு வளர்த்தியாக எண்பதுமுழம் வரையிலும், முப்பத்துமூன்று அளவு எண்வரை உள்ளதாக லிங்கத்தின் உயரம் காணப்பட்டுள்ளது. ஒரு லிங்கத்தின் குறைந்த அளவு உயரம் ஒரு முழம் என்பதாகும். கோயில்களில் ஐந்துமுழ அளவு லிங்கத்தின் உயரம் இருக்கலாம். இது கைமுழ அளவாகும். இதுவே லிங்கத்தின் உயரவிபரம் ஆகும். அடுத்து அகல நீள விபரம் உயரத்தின் அளவை எட்டுபாகம் செய்து, அதில் ஐந்துபாகம் ப்ரம்மபாகத்தின் நீளமாகும். கீழுள்ள சதுரச்ரம் ப்ரம்மபாகமும், நடுவில்உள்ள எட்டுபட்டை அளவு விஷ்ணுபாகமும், மேலேஉள்ள வட்டமானபகுதி ருத்ரபாகமும், ஆகும். மற்றும் கீழ்பாகமான சதுரமான ப்ரம்மபாகமானது நடுபாகமான அஷ்டாச்ரம் விஷ்ணுபாகமானது, இது ஸ்த்ரீபாகமானதாகும். அதன் மேலுள்ள வட்டவடிவமான ருத்ரபாகமானது ஆண்வடிவமாகவும் கருதப்படும். நடுவில் உள்ள எட்டுபட்டைபாகம் கர்ணக்கூடு உடன் உள்ள ஆவுடையார் ஆகும். அல்லது வேறுவிதமாகவும் அமையலாம். நடுவில் உள்ள எட்டுபட்டை அளவு சதுரமாகவோ, எட்டுபட்டை உடையதாகவோ நடுப்பட்டை உடையதாகவோ இருக்கலாம்.

எட்டுபட்டை உடையது பிரசித்தமாகும். அதற்கும் மேலானது ருத்ரபாகத்தில் பதினாறுபட்டைகளை உடைய லிங்கமாகும். இந்த எட்டுபட்டை பாகத்தை நடு(விஷ்ணு) பாகமாகவும், மேல் புள்ளி கோட்டுடன் உடையதாகவும் நிரூபிக்கப்படும். அந்த வருத்தலிங்கத்தின் உயரம் எந்தஅளவோ அதேஅளவு சுற்றளவுமாகும். மிக உயர்ந்த லிங்கத்தின் நீளவிபரம் இவ்வாறு கூறப்படுகிறது.

அந்த லிங்கத்தின் உயரத்தில் (தாராலிங்கம்) ஐந்தில் ஒருபாகம் எட்டுபட்டை பாகமாகும். லிங்க (விஷ்கம்பம் நீளத்தை மூன்றாக வகுத்து, அதில் உயரத்தில் ஐந்துபாகம் வகுத்து, எட்டுபட்டை சேர்க்க வேண்டும். இந்த அளவுடைய லிங்கம் கீழ்கண்டவாறு அறியப்படும்.

1. சமகண்டலிங்கம், 2. வரத்தமானம், 3. சைவாதிக்யம், 4. த்ரிராசிகம் எனப்படும். ப்ராஹ்மணர் முதலான நான்கு வர்ணத்தார்க்கும் இந்த நான்குவிதமான லிங்கங்கள் உரியதாகும். இதில் வர்த்தமானமும், சிவாதிக்யமும் அனைத்து ஜாதியினருக்கும் உரியதாகும். லிங்கத்தின்அளவு நான்குபட்டை, எட்டுபட்டை, வட்டம் ஆகியவை 4–5–6 பாகங்களாகவும் 5–6–7 பாகங்களாகவும் இருக்கும். நான்கு வித லிங்கங்கள் ப்ராஹ்மணர் முதலியோருக்கு உரியவை.

ப்ரம்ம, விஷ்ணு, ருத்ர பாகங்கள் ஒரேஅளவில் இருந்தால் அது சமகண்டலிங்கமாகும். லிங்கத்தின் உயரத்தில் நான்கில் ஒருபங்கு நான்குபட்டையாக உள்ளது சிவாதிக்ய லிங்கமாகும். இது ப்ராஹ்மணர்கள் பூஜிக்க உரியதாகும். உயரத்தில் பாதிஅளவு எட்டு பட்டையாகும். அதற்கு மேல் ருத்ரபாகம் உள்ளது. சிவாம்சமாகவும் உயரத்தில் ஏழு பாகம் வரை விஷ்ணுபாகமும், அதிலிருந்து இருமடங்கு சிவபாகம் உடையதும் சிவாதிக்ய லிங்கமாகும். மேல், கீழ், நடு பாகங்கள் ஒரே அளவாக உள்ளது சமலிங்கமாகும். ஊயரத்தை ஒன்பதாகவகுத்து, அதில் ஆறுபாகம் வட்டமாக உள்ளதும் ஏழுபாகம் எட்டுபட்டையாகவும், சதுரம் மீதமுள்ளதாகவும் உள்ளது த்ரிராசிக லிங்கமாகும். இது பொருள், பயிர், நலன் பயப்பதாகும். கீழ்பாகம் கல்லாக உள்ள சிலைகளை பொடிகளால் (அஷ்டபந்தனம்) கட்டவேண்டும். இவ்வகை லிங்கம் தாராலிங்கம் எனப்படும்.

ரத்னலிங்கம்

இது அசைவது என்றும், அசையாதது என்றும், இருவகைப்படும். திருக்கோயில்களில் இருக்கும் லிங்கம் அசைவதானாலும் அது அசலமாகும். கோயில் ஆனாலும் அசையும் லிங்கங்கள் அனைவராலும் பூஜிக்கப்படும்.

நவரத்ன லிங்கங்களின் பலன்

1. மரகதம் : வலிமையைத் தரும்.
2. பத்மராகம் : மக்களை செல்வராக்கும்.
3. வைடூர்யம் : ஆயுள்விருத்தி உண்டாக்கும்.
4. ஸ்படிகம் : குழந்தை வளர்க்கும்.
5. புஷ்பராகம் : ஸ்தம்பிக்கச் செய்யும். (நிலைக்கச் செய்யும்).

6. பவளம் : அரசை வயப்படுத்தும். ராஜவசீகரம்.

7. வஜ்ரம் : அனைத்தையும் ஆகர்ஷிக்கும். கவர்ந்து இழுக்கும்.

8. மாணிக்கம் : அனைத்து சித்திகளையும் தரும்.

9. நீலம் : வீடுபேறு (மோக்ஷம்) கிட்டும்.

இவ்வாறு ஒருஅங்குலம் முதல், ஒன்பதுஅங்குலம் வரையில், ரத்னலிங்கம் செய்யப்படலாம். ரத்னலிங்கத்திற்கு அதன் அளவுப்படியே ஆவுடையார் செய்யப்படவேண்டும். அது இல்லாவிடில் தங்கத்தினால் அமைக்கவேண்டும். வெள்ளி, செம்பு இவைகளால் ஆனது அதமம் எனப்படும். சதுரமாக அல்லது வருத்தமாக பீடம் அமைக்கலாம். அளவில் ஆறுபங்கோ இருமடங்கோ அல்லது இரண்டில் ஒருபங்கோ பீடத்தின் அளவு ஆகும். அதேஅளவு அகலமும் ஆகும். மற்றவைகளை முன்புபோல் செய்யவேண்டும். லிங்கத்தில் மூன்றில் ஒருபங்கு அளவுள்ள பீடத்தை லிங்கத்தின் மையத்தில் நிறுவவேண்டும்.

மிருத்திகா லிங்கம்

மலை அடிவாரத்திலோ, ஆற்றங்கரையிலோ, புனிதமான இடத்திலோ, மனதுக்கு பிடித்த இடத்திலோ, அனைத்து விருப்பங்களையும் தரவல்ல மண்ணை லிங்கத்திற்காக எடுக்கவேண்டும். வெள்ளை, சிவப்பு, மஞ்சள் அல்லது கருப்பு நிறங்களில் உள்ள, மனதுக்குப்பிடித்த, மண்ணை பொடியாக இடித்து பஞ்சகவ்யத்தால் மாவுபோல் பிசையவேண்டும்.

காமிகாகமம் = வெள்ளைவண்ணத்தில் உள்ள மண்ணை எடுத்து, பால், தயிர், நெய், இவைகளோடு யவை, கோதுமைப் பொடியுடன், பால் உள்ளமரத்தின் பட்டையுடன் கூடியதாக, அழுக்கற்றதாக, நல்ல வாசைனப் பொருட்களைக் கொண்டும், பொடிகளை நன்கு குழைக்க வேண்டும். முரப்பட்டை, கொம்பரக்கு, குங்குலியம், சர்க்கரை, மெழுகு ஆகிய ஐந்தையும் கலந்து, இவைகளுக்கு அளவில் சமமானதாக மண்ணை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சுப்ரபேதாகமம் = பொடிகளால் கலக்கச்செய்து, ஒருமாதமோ ஒரு பக்ஷமோ ஊறியதாக இருத்தல் வேண்டும்.

ம்ருண்மயலிங்கம்

இந்த ம்ருத்திகாலிங்கத்தை இருவிதமாக செய்யலாம். அவை பக்குவம், அபக்குவம் என்பன. பக்குவம் செய்வது, பக்குவம் செய்யாததைக் காட்டிலும் பத்துமடங்கு புண்யமானதாகக் கருதப்படும்.

முன்பு சொன்ன இலக்கணப்படி உள்ள மண்டலம் சில சன்னதிகளில் பூஜிக்கத் தகுந்தது. ஒரு வருடம் வரையிலும் முன்குறிப்பு எடுத்துக் கொள்ளத்தக்கது. மூன்று வருடமோ 5–6–7–8 வருடமோ முயற்சிஉள்ள காலம்வரையிலும் தினமும் மண்டலபூஜையைச் செய்ய வேண்டும்.

இந்த மண்டலத்தில் பூஜித்த பிறகு உத்தமமான முறையில் அங்குரார்ப்பணம் செய்து புண்யாஹவாசனம் செய்து, கும்பத்தில் உள்ள உமாமஹேஸ்வரரை மூலாலயத்தில் செய்வதுபோல பூஜை செய்து, ரக்ஷாபந்தனம் செய்து அதிவாசனம் செய்யவேண்டும். இதில் ஸ்தண்டிலத்தின் மேல் வாசனைப் பொருட்களோடு, விளாமிச்சவேர், சந்தனம், கற்பூரம், குங்குமப்பூ, ஏலக்காய், லவங்கப்பட்டை, கோஷ்டம் இவைகளைப் போட்டு நீர்நிரப்பி, மாலைசாற்றி, பூஜை செய்யவேண்டும். இவ்வாறு வஸ்திரத்தோடும், ஹிரண்யத்தோடும், சுற்றியநூலோடும், கூர்ச்சத்தோடும், கூடிய கும்பத்தைப் பூஜைசெய்ய வேண்டும். இதில் ரத்தினங்கள் கலந்து சுட்டுச்செய்வது பக்குவலிங்கம் எனப்படும்.

கால்முதல் முடிவரையில் ஒரேஅளவில் உள்ளது தாராலிங்கமாகும். 16–8–4–பட்டையுடனும் கீழே நான்குபட்டை கொண்டதும் ஆகும். தாராலிங்கம் நான்கு விதமாக உள்ளது. குடை போன்றது அந்தணர்களுக்கும், கோழி முட்டை போன்றது அரசர்களுக்கும், நியாய வழிகளில் உள்ளது வணிகர்களுக்கும், கருக்காய் உரு உள்ளது உழவர்களுக்கும் ஆகும். த்ரிபுஷாக்ருதி என்பது லிங்கத்தின் உயரமானது தலையில் மூன்று பாகமாகவோ இரண்டரை பாகமாகவோ பிரிவாக சுற்றியிருந்தால் அது த்ரிபுஷாக்ருதி ஆகும். லிங்கத்தின் நீளத்தினை மூன்றாக வகுத்து இரண்டு பாகம் வட்டமானதாக இருந்தால் அர்த்த சந்திரம் எனப்படும். இது அனைத்துவிருப்பங்களையும் தரவல்லது. ஊயரத்தில் பாதி அளவு வட்டமாக இருந்தால் குக்குடாண்டம் எனப்படும். சத்ரம் என்பது குடைமுடி என்பதாகும். இது அனைத்து வர்ணத்தவர்க்கும் உரியதாகும். இதன் அளவு குறைவினால் வியாதியும், அதிகஅளவால் எதிர்ப்பு குறைவினால் வளர்ச்சியும், சுற்றளவு குறைவால் வறுமையும், முடிவில்லாதது செல்வ குறைவாகவும் ஆகலாம். ஆகையால் மிகவும் முழு முயற்சியால் உரிய இலக்கத்துடன் சிரோவர்த்தனத்தை செய்யவேண்டும். 9–12–16–20–24–28 என வகைப்படும். எட்டுபட்டைக்கும்மேல் தலைமுடிவரையில் ஒன்பதுமடங்கு உள்ளது யவாம்சம் எனப்படும்.

சித்தாந்தசேகரத்தில் கோயிலில் வைக்கப்பட்ட லிங்கம் அசலலிங்கம் எனப்படும். மகுடாமத்தில் அசையாலிங்கத்தில் மந்த்ரம் செய்முறைகளால் தெய்வசாநித்யமும், மந்த்ரம் செய்முறை இல்லாதது உருவத்தால் மட்டுமே லிங்கமாகும் என்றும், வீடுகளில் நிறுவப்பட்ட லிங்கம் சலலிங்கம் எனவும் சொல்லப்படும்.

சலலிங்கத்தில் எப்பொழுதும் இருக்கும் பரமேஸ்வரனை பூஜிக்க வேண்டும். சலலிங்கத்தில் சிறப்பாக சிவபெருமான் நிலைத்திருப்பார். ஸ்தாவரம், ஜங்கமம் என இரண்டு விதமாக லிங்கம் உள்ளது. மந்த்ரம் இல்லாதுபோனால் ஸ்தாவரலிங்கம் பயனற்றதாகும்.

சுயம்புலிங்கம்

பலவடிவங்களோடும், பலவண்ணங்களோடும், கூடியதும், கரடுமுரடானதுமான லிங்கம், அதன் அடிப்பாகம் காண முடியாததாக இருப்பதும், பலவிதங்கள் ஆனதும் சுயம்புலிங்கம் ஆகும்.

சுப்ரபேதத்தில், பதாகை, ருத்ராக்ஷம், மத்தளம், இந்த உருவங்களிலும், மலை போன்ற உருவத்திலும், நெய், தேன், வாசனையை உடையதும், ஆகிய லக்ஷணங்கள் உள்ளது ஸ்வாயம்புவ லிங்கம் என்று கூறப்படுகிறது. சங்கு போன்ற தலையை உடையது வைஷ்ணவலிங்கம் ஆகும்.

தாமரை போன்ற தலையையுடையது பிரம்மலிங்கம் ஆகும். வஜ்ரராயுதம் போன்ற தலையை உடையது இந்திரலிங்கமாகும். இருதலை உடையது அக்னிலிங்கமாகும். அவல் போன்று தட்டையாக உள்ளது யமலிங்கமாகும். கத்தி போன்றது நைருதலிங்கமும், குடம் போன்றது வருணலிங்கமுமாகும். கொடிபோன்ற லிங்கம் வாயுலிங்கமும், கதாயுதம் போன்றது கௌபேரலிங்கமும், திரிசூலம்போன்றது ஈசான லிங்கமாகும். இவ்விதம் யோகலிங்கம் கூறப்படும். ஸதாசிவனால் பூஜிக்கப்பட்டு பாணன் என்ற அரசனிடத்தில் தரப்பட்டதும், பாணம் என்ற நீரில் நனைக்கப்பட்டது பாணலிங்கம். இது சுயம்புலிங்கத்திற்கு சமமானதாகும்.

லிங்கங்கள் பாரதபூமியில் மொத்தம் பதினான்குகோடி உள்ளதாக கூறப்படுகிறது. அதில் கைலாயத்தில் மூன்றுகோடியும், ஸ்ரீசைலத்தில் மூன்றுகோடியும், காளிகர்த்தில் மூன்றுகோடியும், மஹிந்திரமலையில் ஒருகோடியும், மாஹேஸ்வரத்திலும், கன்யாதீர்த்தத்திலும் கௌரீ

குண்டத்திலும் நேபாளத்தில் தலா ஒருகோடியும், ஆக பதினான்கு கோடிகளாகும். இவை அனேக வடிவங்களிலும் பலவண்ணங்களிலும் உள்ளதாக இதன் லக்ஷணம் கூறப்படுகிறது. இவற்றிற்கு பீடம் கிடையாது, தூசிஇல்லாது பளபளப்பாக பிரகாசிக்கும் தலையை உடையதும் நர்மதைநதியில் உருவாகும் பாணலிங்கமாகும். அனைத்துக் கோயில்களில் வைக்கத்தக்கதும், அனைத்து பீடங்களில் நிறுவப்படக்கூடியதுமாகும்.

இம்மை மறுமை நலனும், பலசித்தங்களைத் தரவல்லதுமாகும். இவை இந்திரன் முதலானவர்களால் பூஜிக்கப்பட்டவையாகும். அந்தந்த தேவர்களின் சின்னத்தை உடையதும் ஆகும். இவை மஞ்சளா கவும் ஆறுபட்டையாகவும் உள்ளது. வஜ்ரம்போன்றது இந்திர லிங்கமாகும். இந்த பாணலிங்கம் உலகாளும் தன்மையைத் தரவல்லது. செப்புவண்ணம் சக்தியாகவும் சக்தி உடையதும், தொட்டால் சுடும் லிங்கம் அக்னிலிங்கம் ஆகும். எது குறுகியகாலத்தில் (அவ்யக்த மூர்த்தம்) முடிவாக உருவானதோ, அது சத்ருக்களை அழிப்பதற்காக சிவாகமத்தில் சிவனால் சொல்லப்பட்டதாகும். வர்த்தமானமாகும் அளவில் 4–5–6 வர்த்தமானலிங்கம் இது ப்ராம்மணர்களுக்கு ஆகும். 5–6–7 அரசர்களுக்கும், 6–7–8 அளவில் வணிகர்களுக்குமாகும். 7,6,8 பாகங்களை கீழிருந்து முறைப்படியாக உள்ளது சிவாதிகலிங்கமாகும். இது ப்ராம்மணர்களுக்கு வளர்ச்சியைத் தரும்.

லிங்க உயரத்தில் கீழிருந்து 8–7–6 பங்குகளில் உயரம்கொண்டது, த்ரைராசிகலிங்கம் ஆகும். லிங்கத்தில் ஆட்ய, காம்ய, ஸ்வஸ்திக பீடலக்ஷணம் பிரம்மபாகம்–6, மற்றது 5–5 ஆக கொள்ளுதல் ஆட்ய லிங்கமாகும். ப்ரம்மபாகம்–5, விஷ்ணுபாகம்–5, ருத்ரபாகம்–6 என்ற கணக்கு அனாட்ய லிங்கமாகும். ப்ரம்மபாகம்–4, விஷ்ணுபாகம்–4, ருத்ரபாகம்–8 எனசெய்யப்படுவது சுரேட்யலிங்கமாகும். ஸ்வஸ்திக லிங்கம் 11பாகத்தில் கீழிருந்து ப்ரம்மபாகம்–3, விஷ்ணுபாகம்–4, ருத்ரபாகம்–4 எனப்படும். இந்த எட்டுவகை லிங்கங்களும், அனைத்து விரும்பிய பயனையும்தரும். கத்தி போன்றதும், கத்திஅடையாளம் உள்ளதும் நைருதலிங்கம் எனப்படும். கருப்பாகஉள்ள இது, எதிரிஅழியவே உபயோகிக்கப்படும்.

வருணலிங்கம் என்பது வட்டமாகவும் பாசக்கயிறு போன்றும் வெண்மையானதுமாகும். நீரில் நடுவில் இருக்கும். இதன் நடுவில் நீர் இருக்கும். வாயுலிங்கம் கருநிறமுடையதும் கொடி அடையாளம்

உள்ளதும் ஆகும். இதன்மேல் வைக்கப்பட்ட வில்வம் உடனே அசையும் அல்லது கீழே விழும்.

மந்த்ர உச்சாடனம் செய்பவர்களால் பயன்படுத்தப்படும் கதை ஆயுதம் போன்றதும், பெரியஅளவு உள்ளதும் குபேரலிங்கமாகும். இதனைப் பயிர்நடுவில் வைத்தால் தினமும் பயிர்வளர்ச்சி உண்டாகும். சூலம் போன்றதும் சூலஅடையாளம் உள்ளதும் பனி, மல்லிகை, நிலவு போன்றதும் (வெண்மை) ஈசானலிங்கமாகும். இது அனைத்து நற்பயனையும் அளிக்கும்.

சங்கு, சக்கரம் தன தாமரை, ஸ்ரீவத்ஸம், ஸஸ்திகம் ஆகிய அடையாளம் உள்ளதும் மீன், ஆமை, பன்றி முதலிய அடையாளம் உள்ளதும், வைஷ்ணவலிங்கமாகும். இவை பாணலிங்கங்களில் மிகவும் நற்பயனளிக்கும் லிங்கவகைகளாகும்.

தாமரைபோன்ற அதன் வண்ணமும், மிளிறும் கண்களை உடையதும் மாலை தண்டு அடையாளம் உள்ளதும் பிரம்மலிங்கமாகும். இது குழந்தைவரம் தருவதாகும். நதியில் விழுந்தால் மீண்டும் எது கிடைக்கிறதோ அது பாணலிங்கம் என்று உணரப்படுகிறது. சிவாகமங்களில் ஈஸ்வரனுடையதாக லக்ஷணமாக சொல்லப்படுகிறது. எது மூன்றுமுறையோ அல்லது ஐந்துமுறையோ கூட தராசில் அளந்தாலும் நேர்நிலை காணமுடியாதோ அதுவே பாணலிங்கமாகும். சாதாரண கல் இதற்கு நிகராகாது எனலாம். பழுத்த நாவல்பழம் போன்றதும், கோழிமுட்டை போன்றதும் ஆன லிங்கத்தை கிரஹஸ்தர் பூஜிக்கவேண்டும். பாணலிங்கம் கரடு முரடானால் குழந்தை, மனைகளில் குறைவு உண்டாகும். பட்டையான பாணலிங்கம் வீடு, அழிவுகளை உண்டாக்கும். ஒரு பக்கம் உடைந்து காணப்பட்டால் மாடு, மகவு, செல்வம், மனைவி குறையும். ஒவியம் போன்ற குறைவுகள் இருப்பது கீழ்பிறப்பார்களுக்கு சேவகனாகும் தன்மையைத் தரும்.

எது கூப்பியபடி உள்ளதும்,ஆயம், மழு, சந்திரன் உடையதும், கோடு, குழி உள்ளதும், மேடு, பள்ளமுள்ளதும் நீளமானதும், ப்ரம்மபாகம், விஷ்ணுபாகம் இல்லாததும், தேங்காய் போன்ற பழவடிவுற்றும் நடுக்கோடு இல்லாததும் கீழ்பாகம் அல்லது மேல்பாகம் பொருந்தாததும் இப்படியாக உள்ளது ரிஷிலிங்கம் ஆகும். (ஆகர்ஷலிங்கம்)

ரத்னலிங்கம்

மரகதலிங்கம் வலிமையைத்தரும். பத்மராகலிங்கம் மக்கட்பேற்றையும், வைடூர்யம் ஆயுள்நிலையையும் தரும். குழந்தை பாக்யமும் ஸ்படிகமும் புஷ்பராகமும், பவளமும் அரசவையால் வைரம் சேகரிப்பும், அனைத்து ஐஸ்வர்யமும் தரும் மாணிக்கமும் நிலம் வீடு பேறும் தருவனவாம். இவ்வாறு ரத்னமணி லிங்கங்களின் பயனாகும். பெரிய ரத்னகல்லைக் கொண்டு அசையும் வகையில் அடிப்பாகம் பெரியதாக உள்ளதும், வயிறுமுதல் அங்குலம் அளவு உள்ள சமமான கிருத்ரிம (தவறான) லிங்கம் செய்யக்கூடாது. இரண்டிரண்டு அங்குலமாக வளர்ச்சி உள்ளதாக ரத்னலிங்கம் செய்யப்பட வேண்டும். அனைத்து இலக்கணத்தோடு கூடியதும், மூன்றுபகுதிகள் உள்ளதுமாக செய்யலாம். பத்மராகலிங்கம் செல்வம் தருவதும், வைரம் ஆயுள்தருவதும், முத்து மோக்ஷத்தையும், நீலம் புகழ்பெறவும், வைடூர்யம் எதிரியை அழிக்கவும், புஷ்பராகம் நலம்தரவும், பவளம் உலகவசியத்திற்கும், மரகதம் மலர்ச்சியைத்தரவும், எல்லா விருப்பத்திற்கும் ஸ்படிகலிங்கம் எனவும் கொள்க. இவை ரத்னலிங்கங்களின் பயனாகும்.

இவைகளின் இலக்கணம் மணிகளின் ஒளிவீச்சு உள்ளதாகவும் சமமானதாகவும், கெட்டியானதாகவும் ஏழு தாதுக்களால், ஆனதாகவும், தோல், ரத்தம், சதை, எலும்பு, மஜ்ஜை (எலும்பு கொழுப்பு நீர்) வீரிய ரசம் ஆகியவைகளின் சேர்க்கையாகவும், பெரியதாக உள்ளதுமாகும்.

மாணிக்கம்

வெளிப்படையாக உடைந்த தலையை உடையதும் விபூதிக்கீற்று உள்ளதுமான **மாணிக்கலிங்கம்** உத்தமமாகும். பிசுபிசுப்பு உள்ளதும் அழுக்கானதும் (குற்றம்உடையதும்) உடைந்ததும் கருமையானது, கரடுமுரடு உள்ளதும், கடினமானதும், தோஷமுள்ளதுமான மாணிக்க லிங்கம் இது ஏற்றகத்தகாதது.

வைரம்

ஆதாரத்தோடு உள்ளதும், அழுக்கற்றதும், தூயதும் நீரோட்டமுள்ளதும், எட்டுபங்கு நீளமுள்ளதும், அழகாகமிளிர்வதும், வைரத்தின் லிங்கத்திற்கு ஏற்ற நல்லதாகும். காக்கையின் கால்போல பட்டையானதும் வட்டமானதும் தோஷம் ஆகும். கோடு அழுக்கு உள்ளதும், கோடு வெட்டு உள்ளதும் சிவப்பு கோடு உள்ளதும், புள்ளி உள்ளதுமான வைரம் விலக்கத்தக்கது ஆகும்.

முத்து

மிளிர்வதும் ப்ரகாசிப்பதும் கெட்டியானதும் உடுபோல் அதாவது நட்சத்திரம்போல ஒளிவீசுவதும், நீளசட்டமுள்ளதும், பெரியதும் வெள்ளையாக உள்ளதுமான முத்துக்கு பத்து மடங்கு குணங்களாகும்.

இந்த்ர நீலம்

மெதுவானதும், நீளமானதும், கருத்த மேனியை உடையதும், எடை உள்ளதும், உருண்டையாக பளபளப்பானதும், கெட்டியானதும், தலையில் உடைந்ததும், பத்துமடங்கு நன்மை தருபவைகளாகும். தெளிவடைந்ததும், கரடு முரடானதும், சொரசொரப்பானதும், நல்ல கருமையானதும், வெளுப்பு மற்றும் குறைந்த வலிமை உடையதுமான இந்த்ரநீலம் தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

வைடூர்யம்

நல்லதும் தெளிவானதும் கெட்டியானதும் மேல்பகுதி பட்டையானதும் அழுக்கற்றதும் தேன் உப்பு சுவையுள்ள உள்ளதும், மயில்கழுத்து போன்றதும், நல்லதாகும். வன்மையற்றதும், கூர்மையானதும், கருப்பு, மண், கல், நெருப்பு சக்தி உள்ளதும், கோடு அற்றதும், சிறிது பளபளப்பு உள்ளதும் வைடூர்யத்தின் தோஷ மாகும். தோஷமுள்ளதை தவிர்க்கவும்.

புஷ்பராகம்

பெரியதும், கெட்டியானதும், தங்கம்போலத் தெளிவானதும், அழுக்கற்றதும், வளைவுள்ளதும், தலையில்உடைந்ததும், மஞ்சள்நிறப் பளபளப்பு உள்ளதும், நல்ல புஷ்பராகம் ஆகும். புள்ளி, குற்றம், அழுக்கு, வெள்ளை, கரடு, கருப்பு, இவையோடு பிசுபிசுப்பு உடையதும், சொரசொரப்பானதும், சிறியபகுதி உடையதும், புஷ்பராகத்தின் தோஷமாகும்.

மரகதம்

வெளுத்ததும் அழுக்கற்றதும் வழுவழுப்பானதும் உருண்டையானதும் மிருதுவான வெளிப்பட்ட ஒரே அளவானதும் மரகதத்தில் நல்லது. சிறு சொர சொரப்பானதும் அழுக்கு குற்றம் கோடு உரு கடினம் பிசுபிசுப்பு உடைந்துள்ளதும், பிளந்ததும் தோஷமான மரகதமாகும்.

கோமேதகம்

வெண்மையானதும், அழுக்கற்றதும், பிசுபிசுப்பானதும் சுத்தமான நீரோட்டம் போன்று பசுவின் சிறுநீர்றைப் போன்றதும் தெளிந்த அழகான கனமானதுமான **கோமேதகம்** நல்லவையாகும். குதிரை போன்று சிவப்பாகவும், கருப்பாகவும், மொட்டுபோன்று இருப்பதும், வெளுத்த, கெட்டியான, சிவந்த, பளபளப்பில்லாத, கோமேதகத்தை விட்டு விட வேண்டும்.

பவளம்

பவளம் என்பது பிரகாசமாகவும், செம்பருத்திப்பூ போன்ற வண்ணமுடையதும் தெளிவானதும் மிருதுவாக வெளிப்படுவதும், வண்ணவண்ண வட்டமுடையதும் சமமானதும் வழவழப்பானதும் உருண்டையானதும் (பிண்டம் போன்றதும்) பத்துநன்மைகளாகும். அழுக்கோடு கூடியதும், முடிபோன்றதும் (ஜடை) மேல்பகுதி சிறுத்ததும் வெண்மையானதும், கருப்பானதும், சந்திரனைப்போன்று வட்டமானதும், சிறுவெடிப்பு உள்ளதும், கோடு உள்ளதும் விலக்கத்தக்கது.

ஸ்படிகம்

ஸ்படிகம் என்பது மூன்று விதமாகும்.சூரியன் சந்திரன் இவை இரண்டையும் சமமாகக் கொள்வதும் நடுப்பகல் வேளையில் உச்சிவெயில் படும்பொழுது அவைகளைத் தாங்கிக் கொள்வதும் அதிலிருந்து நெருப்பு உண்டாக்க கூடியதும், சூரியகாந்த ஸ்படிகமாகும். பௌர்ணமியன்று பூரணநிலவில் படும்பொழுது எதிலிருந்து நீர் வெளிப்படுகிறதோ அது சந்திர காந்த ஸ்படிகமாகும். சூரியனில் காண்பிக்கும் பொழுது தீ வராமலிருப்பதும் சந்திரனில் காண்பிக்கும் பொழுது நீர்வராமலிருப்பதும் ஆக நான்கு விதமாக கூறப்படும் வெள்ளை சிகப்பு மஞ்சள் கருப்பு இந்த வண்ணங்களை உடையது பிராமணர்களுக்கு உரியது. நீர் திவிலைப்போன்றது, தெளிவானது, சமமானது, வழவழப்பானது, பளிச்சென்றுஇருப்பது, எந்த வித தோஷமும் இல்லாதது, ஆகிய ஸ்படிகம் அனைத்து பயனையும், விருப்பங்களையும் தரும். (நிர்பயம் = நிர்மலம் என்றுபொருள்).

ஒளியில்லாததும், அழுக்கற்றதும், சொரசொரப்பானதும் பல வண்ணம் உடையதும், தடிப்பானதும், பனிக்கட்டி போன்றதும், துகள்கள் உள்ளதும், தோஷம் உள்ளது. கோடு, பள்ளம், தூண் போன்றது, சொர

சொரப்பும் மற்ற வகை ரத்தினத்தின் கலவை உள்ளது ஆகியவை தோஷம் உள்ள ஸ்படிகம் ஆகும். எனவே இவற்றை விலக்கவும்.

ரத்னலிங்கபீடம்

அனைத்து ரத்னங்களின் பீடங்களும் அதனதன் ரத்தினத்திலேயே அமைய வேண்டும். அது இல்லாவிட்டால் தங்கத்தினால் ஆனதோ, வெள்ளியினாலானதோ, அல்லது செப்பினாலானதோ, அதுவும் இல்லை எனில் விரும்பிய உலோகத்தில் ஆன பீடமாக அமையலாம். (பீடத்துடன் கூடிய ஸ்படிக லிங்கத்தின் லக்ஷணத்தை இனி கூறுகிறேன்) ஒருஅங்குலம் முதல் ஒன்பதுஅங்குலம் வரை (சாண்) அளவுள்ள லிங்கம் வீடுகளில் பூஜிக்கலாம். அதற்குமேல் கோயில்களில் முயற்சியில் பூஜிக்கலாம். லிங்கத்தின் தலையின் நீளம் அகலம், அளவு பீடத்தின் மேல்பகுதி (ஆவடையும்) அதன் மும்மடங்கு சுற்றளவும் அந்த சுற்றளவின் அளவின் ஆவடையரின் நீளமும் வேண்டும். லிங்க உயரத்தின் இருமடங்கு பீடத்தின் உயரம் உத்தமமாகும். வட்டமாகவோ சதுரமாகவோ நடுவில் கழுத்து உள்ளதாகவும் பீடம் அமைய வேண்டும். லிங்க சுற்றளவில் சில மடங்கு பீடத்தின் சுற்றளவும் அதன் பாதி (லிங்க சுற்றளவு) கண்டம் செய்ய வேண்டும். சித்தாந்தசேகரத்தில் த்ரிமேகலமதஸ்ச்சோர்த்வம் என்று கூறப்படுவதால் லிங்கபீடத்தில் மூன்றுபடிகள், மேலும் கீழுமாகவோ, இருபடிகளாகவோ சமமாகவோ இருக்கலாம். லிங்கத்தின் தலையின் அகலத்தில் அதில் ஒருபங்கு படியின் அளவாகும் அல்லது அதன் சமஅளவிலும் செய்யலாம்.

பீடத்தின் வெளியில் லிங்கத்தின் உயரஅளவில் மூன்று பட்டியுள்ள வாய்க்கால் செய்யவும். அதன் நீளம் அடியில் அதே அளவும் நுனியில் அதன் பாதி அளவும் அமைய வேண்டும். அதில் நீர் ஓடும் வழி மூன்று பகுதிகளை உடையதாகவும் செய்ய வேண்டும். அல்லது பீடத்தின் பாதி அளவு வாய்க்கால் ஆவது செய்ய வேண்டும். அனைத்து ரத்ன லிங்கங்களும் அதே பீடத்தின் அளவு முறையாகும். இதே அமைப்புப்படி உலோகத்திலான பீடமும் அமைக்கப்பட வேண்டும். ப்ரம்மா மேகலாமயம்.

லிங்கவகையின் பூசைப்பயன்

சிலைவடிவான லிங்கத்தை மங்களகரமான ப்ரம்மா தினமும் பூஜிக்கிறார். அந்த லிங்கத்தின் பூஜையினால் மேலான ப்ரம்மத்துவம், அவருக்கு கிடைத்து. இந்திரநீல லிங்கத்தை விஷ்ணுபூஜிக்கிறார்.

எப்போதும் அதனை பூஜிப்பதினால் நிரந்தரமான விஷ்ணுபதவியை அடைந்தவராக ஆனார். தேவர்களின் தலைவனான சக்ரன் எனும் இந்திரன் கூடரத்தினமயமான லிங்கத்தை பூஜித்தான். அதனால் இந்திரபதவி அவருக்கு கைகூடியது. மனதை இழுக்கும் தங்கமயமான லிங்கத்தை குபேரன் பூஜித்ததால் இந்த குபேரன் என்பவன், தனதன் என்ற பதவியை அடைந்தான். விஸ்வேதேவர்கள் வெள்ளியிலாலான சிவலிங்கத்தை பூஜித்தனர். மிகப்பெரியவர்களாக ஆனார்கள்.

அதனால் இவர்கள் விஸ்வேதேவர் என்ற தன்மையை அடைந்தனர். வாயுதேவர் அன்புடன் பித்தளையால் ஆன லிங்கத்தை பூஜித்தார். உயர்வான அர்ச்சனையால் (மௌன) மேலான வாயுநிலையை அடைந்தார். அஷ்டவசுக்கள் எனும் தேவர்கள் வெங்கலத்தால் ஆன லிங்கத்தை முறைப்படி பூஜித்தனர். அதனால் அப்பெரியவர்கள் விரும்பிய வசுத்தன்மையை அடைந்தனர். அஸ்வினீ தேவர்கள் செப்பு லிங்கத்தை பூசித்து தெய்வீகசரீரத்தை அடைந்தனர். வருணன் அழகான ஸ்படிகலிங்கத்தை எப்போதும் பூஜித்தார். அதனால் வருணன் வசதியான வலிமையான வருணநிலையை அடைந்தார். நல்ல அன்னலிங்கத்தை அக்னி துதிப்பவனாகப் பூஜித்தார். அதனால் அவர் ஒளிமயமான அக்னி நிலையை அடைந்தார். சூரியன் எப்பொழுதும் மூன்று வேளையும் செப்பால் ஆன லிங்கத்தை பூஜித்தார். அதனால் உத்தமமான சூர்ய நிலையை அடைந்தார். சந்திரன் முத்து மயமான லிங்கத்தை பூஜித்தார். அதனால் சந்திரன் சோமகிரஹநிலையை அடைந்தார்.

பவளமயமான லிங்கத்தை பாம்புதேவர்கள் உத்தமமானவர்களாக பூஜித்தனர். அதனால் அந்த பாம்புதேவர்கள் மேலான சுகமுடைய நாகேந்திர பதவியை அடைந்தனர். கருப்பு இரும்பால் ஆன லிங்கத்தை அசுரர்களில் தேர்ந்தவர்கள் பூஜித்தனர். அதனால் அளவற்ற வலிமையான ராக்ஷசத்தனத்தை அடைந்தனர். ஈயம் காரீயம் மயமான லிங்கத்தை பிசாசர்கள் பூஜித்தனர். அதனால் வலிமை உடையவர்களாக மேலான நல்ல நிலையை அடைந்தனர். மூன்று உலோகங்களால் ஆன லிங்கத்தை குஹ்யர்கள் பூஜித்தனர். அதனால் பாம்பின் வலிமை உள்ளவர்களாக மேல்நிலையை அடைந்தனர். மாத்ருதேவிகள் பல உலோகமயமான லிங்கத்தை எப்போதும் பூஜித்தனர். அதனால் அவர்கள் மாத்ருதேவி எனும் நிலையை அடைந்தனர்.

க்ஷணிகலிங்க பலம் (க்ஷணிகலிங்கப் பூசைப்பயன்கள்)

வீடுபேற்றை விரும்புவர்களுக்கு லிங்கம் மணலால் ஆனதும், செல்வத்தை விரும்புபவர்களுக்கு அரிசியினால் ஆனதும், உணவு வழங்குபவர்களுக்கு அன்னலிங்கமும், மண் நிலச்செல்வம் வேண்டு பவர்களுக்கு ஆற்றுமணலும், அறிவுவளர்ச்சிக்கு ருத்ராக்ஷமும், சுகந்தம் விரும்புபவர்களுக்கு சந்தணமும், முக்திக்கு கூர்ச்சமும், பூலிங்கம் ஆயுளுக்கும் விருத்திக்கு வெல்லமும், மாவு வலிமையைத் தருவதும் ஆக க்ஷணிகலிங்கங்களின் (உடனே பூஜிக்கும் பொருள்) பூசைப்பயனாகும்.

நவரத்னலிங்க பயன்

மரகதம் வலிமையும், பத்மராகம் செல்வப் பெருக்கத்தையும், வைடூர்யம் ஆயுள்விருத்திக்கும், ஸ்படிகம் குழந்தை வளர்ச்சிக்கும், புஷ்பராகம் ஸதம்பனத்துக்கும், பவளம் எதிரியை வசீகரிக்கவும், வைரம் வயப்படுத்தவும், மாணிக்கம் அனைத்துப்பயன் வழங்கவும், மோக்ஷத்துக்கு இந்திரநீலமும், ஆக நவரத்னலிங்கபூஜை பயனாகும். உலோகத்தின்பலன். தங்கத்திலான லிங்கம் இம்மை மறுமை பயன்களை தருவதாகும். செப்பு குழந்தைச் செல்வம் தரும். வெள்ளி வெண்கலம் சுகத்தைத் தரும். பித்தளை வியாதியை நீக்கும். இரும்பு எதிரியை அழிக்கும். மூன்று உலோகம் இறப்பைத் தரும். ஈயம் சாரீர பயன் தரும்.

தாருலிங்க பலம் (மரவகை லிங்கப்பயன்கள்)

தேவதாரு மரம், வன்னி, வில்வம், இலுப்பை, கருங்காலி (அத்தி, வேங்கை) அரசு, சந்தனம் ஆகிய மரங்கள் லிங்கம் செய்ய உரியதாகும். இந்த மரங்களில் லிங்கம் செய்யலாம் அல்லது இலை, பூ, பழம் சூகூடியதும் நேரானதும் முடிச்சு அற்ற வகைகளான மரங்கள், பல கிளைகளும் பெருங்கிளைகளும் உள்ளது குற்றம் இல்லாதது ஏற்கலாம். காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டதும், காட்டு யானைகளால் முறிக்கப்பட்டதும், முனை வளர்ந்த மரங்கள், இடியால் எரிக்கப்பட்டதும், முடிச்சு உள்ளதும், பொந்து உள்ளதும், தேனீக்கள் உள்ளவை, கெட்ட கொடிகள் உள்ளவை, சுவை இல்லாதவை விலக்கத்தக்க மரங்கள். இவ்வாறு மரங்களை பரிசோதித்து தேர்ந்தெடுக்கவும். காமிகாமகத்தில் வன்னி, இலுப்பை, சிவப்புமரம் (செங்கருப்பு) முருங்கை, புளியம்,

மருதமரம், அரசமரம், கருங்காலி, சந்தனம்,உயர்தேக்கு மரம், மகிழ மரம், நேரான மரம், வில்வம், கடம்ப மரம், இலத்தை, தேவதாரு (வேங்கை) பலா, அசோகம், பால மரம், செஞ்சந்தனம், நயந்த சாரமுடையவை எந்த மரங்களோ அந்த மரங்கள் சிவலிங்கம் செய்யத்தக்கவை. பாலுள்ள மரங்கள் நடுத்தரமானவையாகும்.

முகலிங்கம் (முகலிங்கவகை)

ஐந்துமுகம், நான்குமுகம், மூன்றுமுகம், இரண்டுமுகம், ஒருமுகம் ஆகியவை ஈசனின்முகங்களாகும். இவை ஈசானம் முதலான பஞ்ச ப்ரம்மங்களை உடையவை. பஞ்சமுகங்களின் பெயர்கள், மேலே தலை யின்மேல் ஒருமுகமும், கிழக்கில் தத்புருஷமும், தெற்கே அகோரமும், வடக்கே வாமதேவமும், மேற்கே சத்யோஜாதகமும், நிர்ணயிக்கப்பட்ட முகங்கள் ஐந்து, மூன்று, இரண்டு, ஒருமுகலிங்கம் ஆகும். ஐந்து, மூன்று, இரண்டு, ஒருமுக லிங்கம் ஆன்மபூஜை செய்யத்தக்கதாகும். நான்குமுக லிங்கம் கோயிலில் வைத்து பூஜைசெய்யத் தக்கதாகும். மேற்குவாயில் இல்லாத ஒருமுகத்தையும், கிழக்கு மேற்கு இரண்டு வாயில்கள் இல்லாத இரு முகத்தையும் வீடுகளில் வைக்கலாம். கோயிலில் கிழக்குமுகமாக ஒருமுக லிங்கத்தை வைக்கவும். ப்ரதிமாலக்ஷண முறைப்படி முகங்கள் செய்யவேண்டும்.

சதலிங்கம்

ஸுராார்சிதலிங்கம் (தேவர்கள் பூசித்தவை)

சுரர் எனும் தேவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கத்தின்மேல் (ருத்ர) பகுதியின் நீளத்தை நான்காகப்பிரித்து, அந்த நான்கிலும் (ஒவ்வொன்றிலும்) 27 லிங்கங்கள் செய்வது சதலிங்கம் எனப்படும். (108லிங்கமுள்ளது).

ஸ்தாவர லிங்கம்

ஸ்தாவரலிங்கம் (அசையாலிங்கம்) கருங்கல்லால் ஆனது. இது ப்ரம்மா, விஷ்ணு, ருத்ர பாகங்களை உடையதாகும். மேலும் மூன்று கோடுகள் உடையதாக இருக்கும்.

ஜங்கமலிங்கம்

உற்சவமூர்த்திகள் மற்றய அனைத்துலிங்கங்களும் ஜங்கம லிங்கமாகும்.

ஸஹஸ்ர லிங்கம்

பெரியலிங்கத்தின் உயரத்தை பதினோருபாகமாகச் செய்து, அதில் ஒவ்வொன்றிலும் தொண்ணூறு என்று கணக்கிட்டு (100) ஆயிரத்து ஒரு லிங்கம் என செய்யவேண்டும். இந்த கணக்கில் செய்யப்படுவது சஹஸ்ரலிங்கம் எனப்படும். இது அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதாகும்.

சைலஜலிங்கம் (கல்லாலான லிங்கம்)

சுப்ரபேதத்தில் = கற்சிலையும் கூட வண்ணத்தின் பிரிவால் அறிந்து சோதனை செய்யத்தக்கது. வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கருப்பு என அவை நான்கு விதமாகும். பால், சங்கு வண்ணமுடைய சிலை அந்தணர்க்குரியது. செம்பருத்திப்பூ, செம்மஞ்சள், பூவண்ணமுடைய சிலை அரசர்களுக்கு உரியது. மஞ்சள், தங்கம் போன்றது வணிகர்களுக்கு உரியது. உளுந்து, குங்கிலியம், போன்றது உழவர்களுக்கு வலிமையுடைதாகும். கருத்தநிற உருவமுடைய சிலை அனைவருக்கும் செல்வம்தரும் அனைத்தும் செய்யுமாம். ஊப்பான, பொரு பொருப்பான, வெளுத்த,ஈரமான சூரியக்கதிர்களால் காய்ந்த நெருப்பால் எரிக்கப் பட்ட வேறுகற்களின் சேர்க்கையுள்ள சிலையை கண்டிப்பாக விலக்க வேண்டும்.

தைவிகலிங்கம்

மகுடத்தில் = விளக்கு ஜோதி போல் உள்ளது. ஆழமாக உயரமாக உள்ளது. கோடு, பள்ளம் உள்ளது. உளி, சூலம் அடையாளம் உள்ளது. அதே அளவு உயரம் முகத்தில் உள்ளது தைவிகலிங்கம் ஆகும்.

ஆர்ஷலிங்கம்

பழுத்த பூசணிக்காய் போன்றது. நாரத்தைப்பழம் போன்றது. வெள்ளரிப்பழம் போன்றது. விளாம்பழம் போன்றது. இவற்றில் நடுக்கோடு இல்லாதது ஆர்ஷக (ரிஷிகள் பூஜித்த) லிங்கம் எனப்படும்.

மானுஷலிங்கம்

சைவாகமத்தில் லிங்கலக்ஷணம், எப்படி அமையவேண்டுமோ, அவ்வழியில் அமைந்ததும் தலையில் வட்டமாக உள்ளதும், நடுக்கோடு கூடியதும், மானுஷ லிங்கம் எனப்படும்.

ஸார்வதேசிகலிங்கம்

கருவறையின் அளவுக்குத் தகுந்தபடி அமைவது சார்வதேசிகலிங்கம் எனப்படும். கோயிலின் கருவறையின் ஐந்தில் மூன்று பங்கு அமைந்த அளவு உள்ளது மேலானதாகும். ஒன்பதில் ஐந்து பங்கு அளவு உள்ளது நடுத்தரமானதாகும். கருவறையின் பாதி அளவு உள்ளது கீழ்தரமாகும். இதைத்தவிர ஆறுவிதங்கள் உள்ளன. அந்தந்த கோயில் அளவில் முப்பத்துமூன்று அளவானதில் இருபதில் ஒரு பங்கு கருவறையும் அதில் பத்தில் ஒரு பங்கு லிங்கமும் அமைவது மத்யமாகும். பதினொன்றில் பொருட்டு அமைவது மத்யமாகும். ஆறில் ஒரு பங்கு லிங்கத்தின் அமைப்பும் அதில் பாதியும் அதமமாகும். கருவறையின் மூன்றில் ஒரு பங்கு லிங்கம் உத்தமமாகும்.

நடுவில் எட்டு பாகத்தில் அதனதன் நடுப்பாகமாக முப்பத்து மூன்று அளவு பிரிவுகளாக லிங்கங்கள் சொல்லப்பட்டன. (அல்லது) கருவறையின் மூன்றில் ஒரு பங்கு லிங்கத்தின் அளவு மத்யமாகும். முன்பு போல் மையம் செய்து ஒரு முழம் முதல் ஒரு பங்கு ஒரு பங்கு வளர்ச்சியாக ஒன்பது முழம் வரையிலும் உள்ளது முப்பத்து மூன்று அளவுள்ளது நீள அளவு ஆகும். சிறிது மேலும் உட்பக்கமாக கர்ப்பக்ரஹம் பிரிக்கப்பட்டு பதின்மூன்றாவது பாகம் உத்தமமாகும். பத்து அம்சம் உள்ளது மத்யமமாகும். முன்பு போல் மையம் செய்து முப்பத்து மூன்று அளவாக லிங்கத்தை அடைந்து வேறுபடுத்தி அதில் எட்டு பங்கு அளந்து அதில் ஐந்தே முக்கால் முழு அளவில் லிங்கத்தின் நீளம் உள்ளதாம். 24 பங்கின் லிங்கத்தின் உயரத்தில் 5 பங்கு அகலமும் அல்லது 18ல் 5 பங்கு லிங்க அகலம் ஆகும். 4ல் ஒரு பங்கு அகலமும் உரியதாகும். ஊயரம் 21 பாகம் செய்து அதில் 6–7–8 அளவு பாகமாக மூன்று பாகம் செய்ய வேண்டும். உயர்ந்த குறைந்த திவ்யலிங்கங்கள் காமிகாமகத்தில், லிங்கத்தின் உயரத்தில் 4–5–6 பங்கு கீழ், நடு, மேல் பகுதிகளை உடையது. குறைந்த அளவுள்ள சுரேட்யலிங்கமாகும் மிகுதி அளவான லிங்கம் என்பது (ஆட்ய) மூன்று பாகமும் ஒரே அளவான லிங்கமாகும்.

சமலிங்கம்

லிங்காயாமே த்ரிபாகேதி அம்சுமதியில் கூறப்படுகிறது. லிங்க உயரத்தில், மூன்றாவது பாகமான ஒரே அளவாக சதுரமாக அமைவது சமலிங்கமாகும் . இது ப்ராம்மணர்களுக்கு வளர்ச்சியைத் தரும்.

வர்தமான லிங்கம்

சூரியன் 12 என்ற அளவில் இருமடங்கு 24 பாகத்தில் 7 பாகம் நான்கு பட்டையும் 8 பாகம் எட்டு பட்டையும் 9 பாகம் வட்டமாகவும் உள்ளது வர்தமான லிங்கம் எனப்படும். அதுவே 6–7–8 பாகமாகவும் 4–5–6 பாகமாகவும் இந்த வர்தமான லிங்கம் கூறப்படும்.

சைவாதிக்ய லிங்கம்

லிங்கஉயரத்தில் பத்துபாகம் செய்து, 4பட்டையும், 8பட்டையும், மூன்று பாகமாகவும், மேலே வட்டம் 4 பங்காகவும் உள்ளது சைவாதிக்ய லிங்கம் எனப்படும். அதுவே மேலும் வேறுவிதமாக 4–4–5 ஆகவும், 5–5–6 பாகமாகவும் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ரஸலிங்கம்

பாதரசத்தால் செய்யப்பட்ட லிங்கம் அந்தணர்களுக்கு அனைத்து விருப்பங்களையும் தரவல்லதாகும். ரத்தினங்களாலான லிங்கம் அரசர்களுக்கு ஆட்சியைத் தருவதாகும். தங்கத்திலான லிங்கம் வணிகர்களுக்கு பொருட்களைத் தந்திடுமாம். கற்சிலையால் ஆன லிங்கம் உழவர்களுக்கு பெரும்செல்வம் தந்திடுமாம். ஸ்படிகலிங்கமும் பாணலிங்கமும் அனைவருக்கும் அனைத்துப்பயன்களையும் தருவதாகும். சுமங்கலிப் பெண்களுக்கு மண்ணாலான லிங்கம் சிறப்பானதாகும். கைம்பெண்களுக்கு பாதரசலிங்கம் உரியதாகும்.

ரஸலிங்க மஹிமை

வாதுளாகமத்தில் லிங்கத்தின் அரசரான பாதரசலிங்கத்தைப் பற்றி சொல்லப்படுகிறது. இந்த லிங்கத்தைப் பார்த்தமாத்திரத்தில் அக்கணமே பாபங்கள் அழிக்கப்படுகின்றன. அதனுடைய இரண்டு மூன்று தினப்பூஜையினால் அனைத்து ஐஸ்வர்யங்களும் அன்றே வரவழைக்கப்படும். இதன் ஒருபூஜையே ஜபம் செய்வதனால் ஏற்படும் ப்ரியமான பயன்களையும் வழங்கும் என்று கூறப்படுகிறது. எத்தனை லிங்கங்கள் இந்த மூன்றுஉலகில் உள்ளனவோ, அத்தனை லிங்கங்களும், அர்ச்சனை அவை அனைத்தும் பூஜிக்கப்பட்ட பயன்களைத் தரும். மேலும் ஆயிரம் அந்தணர்களைக் கொன்றபாபம் அழிக்கப்படும். மீண்டும் அதனை தரிசனம் செய்யும் போதே பத்தா யிரம் பசுக்களைக் கொன்றபாபம் எரிக்கப்படும்.

சிஷ்டலிங்கம்

தான்தோன்றியதும், அம்மன்பூஜித்ததும், பாணலிங்கமும், தேவர்கள் பூஜித்ததும், ரிஷிக்கள் பூஜித்ததும் இவைகள் சிஷ்டலிங்கம் எனப்படுவதாகும். இவைகள் முன்புபோலவே பூஜிக்கப்பட வேண்டும்.

அமர்ந்த-நின்ற-படுத்த லிங்கங்கள்

நான்குபட்டை பீடத்தில் உள்ள லிங்கங்கள் நின்றலிங்கம் ஆகும். வட்டமான பீடமுள்ளது அமர்ந்தலிங்கம், ஆகும். எட்டுபட்டையில் ஆசனம்உள்ளது படுத்தலிங்கம் ஆகும்.

மானுஷலிங்கம்

திருக்கோயிலின், வாயில்அளவிலோ, கருவறைஅளவிலோ, கைமுழ அளவிலோ உள்ளதும் சைவாகமத்தில் கூறப்பட்டது போலவே அமைந்ததும், தலையில் குடையைப் போன்றதும், ஒரே வண்ணமாக உள்ளதும், நல்லதாக வழவழப்பானதும், முகப்பில் நடுக்கோடு (பிம்மசூத்திரம்) உள்ளதும், இவ்வாறு பலவாறு அமைக்கப்பட்ட லிங்கங்கள் மானுஷலிங்கம் எனப்படும்.

சயனலிங்கம்

லிங்கஉயரத்தை 27 பாகமாகச்செய்து, பிரம்மபாகம் 9 பங்கும், விஷ்ணுபாகம் 12 பங்கும், மேலே பூஜைசெய்யக்கூடிய ருத்ரபாகம் 6 பங்கும் உள்ளது சயனலிங்கம் ஆகும்.

வர்த்தமானலிங்கம்

லிங்கத்தின் உயரம் 24 பங்கு அளக்கப்படும். அதில் 7 பங்கு ப்ரம்ஹபாகம், 8பங்கு விஷ்ணுபாகம் 9பங்கு ருத்ரபாகமும், மேல்தலை வட்டமுள்ளதும் வர்த்தமான லிங்கமாகும்.

சிஷ்டலிங்கங்கள்

லிங்கத்தின் உயரத்தினை அளந்து, அதில் எட்டுபங்கு ப்ரம்ஹ பாகம், 12பங்கு விஷ்ணுபாகம் மீதமுள்ளது, கணாதிக லிங்கங்கள் எனப்படும். லிங்கத்தின்உயரத்தை மூன்றாகப் பங்கிட்டு, விஷ்ணுபாக, ப்ரம்மபாக ருத்ரபாகங்கள் மூன்றும் முறையே ஒவ்வொன்றும் 10 பாகமாக இருப்பதுவும் சிஷ்டலிங்கமாகும்.

தைவிகலிங்கம்

கோடு, பள்ளம் உள்ளதும், தலையின் உயரம், யவை, தானிய அளவு உள்ளதும், மலையின் முகடுபோன்ற உருவம் உள்ளதும் ஒட்டையும் பலமுக கலையுடையதும் இருகை கூப்பிய அளவு போன்றதும், ப்ரம்ஹ சூத்ரம் இல்லாததும் **தைவிகலிங்கம்** எனப்படும்.

காணபலிங்கம்

பூசணிக்காய், நாரத்தம்பழம், வெள்ளரிப்பழம் பனம்பழம் இவைகளைப்போல் உள்ளது **காணபலிங்கம்** எனப்படும்.

சூக்ஷ்மலிங்கம்

முறையாக ஹ்ருத்கும்பஸ்தாபனம் செய்யப்படுவது **சூசஷ்மலிங்கம்** ஆகும். சூக்ஷ்மமான லிங்கத்திற்கு திருக்கோயில் ஊனுடம்பாகும்.

பீடலக்ஷணம்

பெண் மக்களுக்கு நலன் ஏற்படும் பொருட்டும், அனைத்து அமைதியின் நிலமான **மோனபீடலக்ஷணத்தை** கூறுகிறேன். லிங்கத்தின் உயர அளவிலும், கழுத்து அளவிலும், கருவறையின் அளவிலாவது பீடம் செய்யப்படவேண்டும். பெண் (கருங்கல்) எடுத்து நன்றாக பீடம் செய்யவும். லிங்கத்தின் அளவில் மூன்று மடங்கு பீடத்தின் அகலமாகும் அல்லது லிங்க ருத்ரயாகத்தின் உயரம் மூன்றாக்க அதில் ஒரு பங்கு லிங்கத்தின் அகலமாகும். ஆர்ஷ லிங்கத்திலும் மானுஷ லிங்கத்திலும் லிங்கத்தின் அளவாலே கோயிலும் அடுத்த அளவால் பீடமும் கோயிலில் லிங்கமும் பீடமும் அளவானதாகும். ஆர்ஷலிங்கத்திற்கு பொடிமண்ணால் (சிமெண்ட்) கட்டவேண்டும். (கற்சிலை பீடம்) சுதையானால் அந்தசிலையிலேயே பீடமும் செய்தல்வேண்டும். வேறு வடிவத்தில் செய்தால் செய்தவன் அழிவான். பெண் கல்லால் லிங்கம் செய்தால் வீடு உயிர் செல்வம் அழிவும் ஏற்படும். லிங்கமோ பீடமோ அலிகல்லால் அமைக்கப்பட்டால் செய்தவன், காப்பவனுக்கு அழிவும் இடமாற்றமும் ஏற்படும். ஆண்கல்லில் பீடத்தைச் செய்தால் பெண்களுக்கு அழிவு ஏற்படும்.

பீடவகைகள்

இது பதின்மூன்று விதமாகும். அதை முதலில் பத்மபீடமும், இரண்டாவது ஸ்ரீபத்ம பீடமும், மூன்றாவது ஸ்ரீகரமும், நான்காவது நிஸ்வாஸபீடமும், ஐந்தாவது விஜயபீடமும், ஆறாவது சுவாயம்புவபீடமும்,

ஏழாவது சம்பத்பீடமும், எட்டாவது ஸ்வஸ்திக பீடமுமாகும். ஒன்பதாவது பூர்ணசந்த்ர பீடமும், ஸ்தண்டிலம் பத்தாவதும் சக்ரபீடம் பதினொன்றாவதும், ருத்ரபீடம் பன்னிரண்டாவதும் ஆகும். பதின்மூன்றாவது கமல பீடமாகும்.

எந்த பீடமோ அதை உயயரத்தை பதினாலாகப் பிரித்து, அதில் இருபகுதியில், இருந்து பட்டிகையும், ஐந்துபகுதியால் தாமரைவர்க்கமும், இருவட்டம் மேல் தாமரை நான்கு பங்கும் அதன் மேல்பட்டிகை இரண்டுபங்கும், அதில் ஒருபங்கும், கர்ணிகையுமாக கொள்ளவேண்டும். பீடத்தின் பங்கின் மூன்றில் ஒருபங்கு நீர் விழும் தண்டு செய்யவேண்டும். எந்த அளவில் பீடத்துடன் ஒட்டிய பகுதியும் அதில் மூன்றில் ஒரு பகுதி அதன் நுனிப்பகுதியமாயும் இந்த நீர்விழும் பகுதியை வடக்கில் நோக்கியபடி (குபேரதிசைப்பகுதியை) செய்யவும்.

1. லிங்கத்தின் மேலே விஷ்ணுபாகம் ஆவுடையாருடன் கூடியதாகும். ஆதன் மேல் சிவனும் நினைக்கத்தக்கவர் ஆவர். மேலும் ப்ரம்ஹா, விஷ்ணுபாகங்கள் எட்டாகப் பிரித்து, அதில் மூன்று பாகம் கீழே விட்டு மீதமுள்ள ஐந்து பாகத்தில் ஆவவுடையார் செய்யவும். இது பத்ம பீடம் ஆகும்.

2. அடுத்து பத்ரபீடம் முன்பு மேல் பீடத்தின் உயரத்தினை பதினான்குகளாக பிரித்து, ஒரு பங்கு பாதமாகவும் நான்கு பங்கு ஜகதியாகவும் தாமரைத்தளம் மூன்று பாகமாகவும் ஒரு பங்கு மேல்பட்டையும் மேல் பெரிய பட்டையும் இருபாகமும் அதன்மேல் கன்னிருது ஒரு பாகமுமாக செய்ய வேண்டும். பத்ர பீடம் அனைத்து லிங்கங்களுக்கு உரியதாகும்.

3. பீடத்தின் உயரம் பத்து பாகமாக்கி அதில் அரைபாகம் பாதமாகவும், ஜகதி மூன்று பாகமாகவும் தாமரை தளங்கள் மூன்று பாகமாகவும் அதன் மேல் பத்மம் ஒரு பாகமும், மேல் முகம் மூன்றுபாகமாகும். ஆதன் மேல் பத்மம் மூன்று அம்சமும் அதன் மேல்பட்டி ஒருபாகமும் அதன் மேல் அரைபாகம் நீர் கன்னியுமாகும். ஸ்ரீகரம் எனும் பீடமாகும். எல்லா செல்வமும் நலமும் பயக்கும்.

4. பீடத்தின் உயரத்தை பதினைந்து பாகமாக பிரித்து ஒரு பகுதி பாதமாகவும் பத்மம் ஒரு அம்சமும் அதன்மேல் நான்கு அம்சம் கணுக்கால் அதன் மேல் தாமரை நான்கு அம்சமும், மேல் காம்பும் தாமரையும் இரண்டு பாகம் அம்சமும் மூன்று பாகமும் அதன் மேல் பத்மம் ஒரு அம்சமும் இரண்டு கர்ணிகை இரு பாகமும்

அதன் மேல் காம்பு ஒரு பாகமும் மேலே தாமரை ஒரு அம்சமும் மேல் பலகை இரண்டு அம்சமும் மேலே ஒரு அம்சமும் மேலும் ஒரு பங்குமாக அமைவது **நிஸ்வாஸ பீடமாகும்.**

5. பீடத்தை 21 பாகமாகப் பிரித்து 1 அம்சம் குடம், 3 அம்சம் தாமரை, 1 அம்சமும் காம்பும், கர்ண கொரடும் 4 அம்சமும் மேலே பத்மம் 1 அம்சமும் பட்டிகை 2 அம்சமும் தாமரையும் நீர் போக்கி ½அம்சமுமாக அமைவது **விஜய பீடமாகும்.**

6. பீடத்தை 18பாகப்படுத்தி கம்பும், பத்மமும் ஜகதி 4 பங்கும், பத்மம் அரைபங்கு மேல் காம்பு 1 பகுதியும் கர்ண கூடு மூன்று அம்சமும் அதன் மேல் காம்பு 1பங்கும் பட்டிகை 2 பங்கும் மேல் பத்மம் 1 பங்கும் நீர் போக்கி அரை அம்சமுமாக அமைவது **விஜய பீடமாகும்.**

7. பீடத்தை 18 ஆக வகுத்து அதில் அரைபங்கு காம்பும், பத்மமும் ஜகதி நான்குபங்கும், பத்மம் கூடும் 3 பங்கும் மேல் காம்பு 1 பகுதியும், கர்க்கோடு 3 அம்சமும் அதன் மேல்காம்பு 1 பங்கும், பட்டிகை 2 பங்கும், மேல்பத்மம் 1 பங்கும், நீர்போக்கி அரை அம்சமுமாக அமைவது **ஸ்வாயம்புவ பீடமாகும்.**

8. உயரத்தை 16 பங்கு செய்து, 1 பங்கு பாதுகையும், அரைபங்கு தாமரையும், அதன் 2மடங்கு குடமும், வயிற்றுப் பகுதியும், மேல்பத்மம் 1 அம்சமும், கழுத்துப் பகுதி அரை அம்சமும், பட்டை பாதி பாகமும், பாதி பாகம் மேல் தாமரையும், மேல் பலகை பாதி அம்சமும் மேலே நீர்போக்கி 1 அம்சமுமாக அமைப்பது **ஸம்பத் பீடமாகும்.**

9. அரைபங்கு பாதுகையும், அரைஅம்சம் தளவட்டமும், 4 பங்கு பத்மமும், 2 பங்கு அதன்மேல் வட்டமும், அரை பங்குமேல் பத்மமும், கம்பு அரைபங்கும், மேலே தாமரை நான்கு அம்சமும், மேல்பட்டி அரை அம்சமும், நீர்போக்கி அரை அம்சமும், அதன் உள்ளே பள்ளம் அரை அம்சமும் உள்ளது **ஸ்வஸ்திக பீடமாகும்.**

10. பீடத்தின் உயரஅளவை, மூன்றுபங்காக்கி, அதில் நடுவில் கர்ண கூடு செய்து, ஒரு பாகத்தை கீழ் பகுதியாக்கி, மீதியை பதினோரு பாகமாக்கி, அதன் இரு பகுதி பட்டிகையும், மூன்று பாகம் பத்மமும், அதன் மேல் ஒரு பாகம் காம்பும், மேலே மூன்றுபாகம் பத்மமும், அரைபாகம் மேல்பட்டையும், அரைபாகம் நீர் போக்கியுமாக பூர்ண சந்திரபீடம் செய்யப்பட வேண்டும். கோயில் வாயில்,

கருவறை லிங்கத்தின் அளவை பாகமாக செய்யவேண்டும். அந்த லிங்கத்தின் கீழே நடுவில் மேலே என, முறையே, ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரனின் இடத்தைச் செய்யவும். அதில் ப்ரம்மாவின் பகுதிசதுரமாகவும், விஷ்ணுபகுதி எட்டுபட்டையும் ருத்ரனின்பகுதி வட்டமாகவோ, 16பட்டையாகவோ செய்யவேண்டும்.

ப்ரம்மபாகம் அலிஉருவமாகவும், விஷ்ணுபாகம் பெண் உருவமாகவும், ருத்ரபாகம் ஆண்வடிவமாகவும், செய்யவேண்டும். இந்த மூன்றுபகுதிகளிலுள்ள லிங்கம், எட்டுவிதமாக கூறப்படும். சமலிங்கம், வர்த்தமானலிங்கம், சைவாதிக்யலிங்கம், ஆட்யலிங்கம், அநாட்யலிங்கம், ஸ்வஸ்திகலிங்கம், சுராட்யலிங்கம் எனப்படும். இவைகளிலும் பற்பலபிரிவுகள் உள்ளன. அவை சொல்வதற்கு அரியனவாம். இங்கு சொல்லப்பட்ட எட்டுலிங்கத்தின் வடிவங்கள் இங்கு சொல்லப்படுகிறது. முதலில் லிங்கத்தின் உயரம் கூறப்படுகிறது. இந்த லிங்கத்தின் பதினாறாக நான்கு பங்கு அளவு ப்ரம்மபாகத்தின் நான்குபட்டை சுற்றளவாகும். இதுவே ஐந்து பாகமாகவும் இருக்கக் கூடியது உத்தமமாகும். இவ்வாறு எட்டு விதமான லிங்கங்களுக்கும் ஒவ்வொரு அளவு (அம்சம்) குறைவாக இருப்பது ப்ரம்மபாகமாகும்.

இவ்வாறு ப்ரம்மபாகம் சதுரமாக அமைக்கக்கூடியதாம். அடுத்து எட்டுபட்டைபாகமாக நடுவில் விஷ்ணுபாகம் உள்ளதாகும். கர்ணக் கூடு உள்ள கோடு அளவாக எட்டுபட்டையாக இருக்கவேண்டும். இவ்வாறு எட்டுபட்டை அளவு இருக்கவேண்டும். அடுத்து வருத்த லக்ஷணம் சொல்லப்படுகிறது. எட்டுபட்டையின் ஒவ்வொரு கோணத்திலும் பாதிஅளவு செதுக்கி குறியிடவேண்டும். இது 16 பட்டை லிங்கமாகும். இதில் பாதிஅளவு குறிப்பிட்டு செதுக்குவது 32பட்டையாக இப்படி பட்டையாக செதுக்குவது தாராலிங்கமாக சிறப்பாக சொல்லப்படுவதாகும்.

லிங்கத்தின் ருத்ரபாகத்தின் உயரஅளவு சமமாக சுற்றளவும் இருக்கவேண்டும். இது உத்தமோத்தம லிங்கத்தின் அளவாகும். சுற்றளவை ஐந்துபாகமாகச்செய்து, அதில் ஒருபங்கை எட்டாகப் பிரித்தும், அதில் ஒரு பங்கு குறைவாக சுற்றளவுகொள்வது, இந்த எட்டுலிங்கத்தின் சுற்றளவு லக்ஷணமாகும்.எந்த லிங்கத்தின் மூன்று பாகங்களிலும் ஒரேஅளவாக பிரிக்கப்பட்டுள்ளதோ அது சமகண்ட லிங்கமாகும்.

பீடமில்லாமல் எந்தலிங்கமும் முறையாக பிரதிஷ்டை செய்யப்பட்டாலும் கூட அதனால் பயன் ஏதும் ஏற்படுவது இல்லை. அதனால் லிங்கத்தோடு பீடமும் அவசியம் செய்யவேண்டியதாகும். லிங்கம் ஞானசக்திமயமும் பீடம் க்ரியாசக்திமயமும் ஆகும். அதனால் பீடத்தோடுகூடிய லிங்கத்தையே அர்ச்சனை செய்யவேண்டும்.

லிங்கபீடத்தை பெண்கல்லால் செய்யவேண்டும். ஆண்கல்லினால் செய்யக்கூடாது. ஆண்கல்லில் செய்வதால், அனைத்துதோஷமும் உண்டாவதாகும். லிங்கத்தின் சுற்றளவில் மூன்றுபங்கு பீடத்தின் சுற்றளவாகும். லிங்கத்தின் உயரத்தின் அளவிலே பீடம்செய்தும் வைக்கலாம். லிங்கத்தின் உயரத்தின் அதேஉயரத்தில் இருபங்கும் பீடத்தின் நீளமாக்கலாம். அல்லது கருவறையின் அளவில் ஆவுடையார் செய்யலாம். கருவறையின் அளவு நீளத்தை மூன்றாகப் பகுத்து அதில் மூன்றில் ஒருபாகம் பீடத்தின் நீளம் கொள்ளலாம். எல்லா லிங்கபீடங்களின் நீளமும் இதே அளவாகும். பீடங்களுக்கு உயரம் நீளம் விஷ்ணுபாகத்தின் அளவில் உள்ளதாகும். உயரமும் நீளமும் ஒரே அளவாக உள்ளதாகும். ஆதாரபீடமானது வட்டமாகவோ சதுரமாகவோ எட்டுபட்டை அல்லது 16பட்டையாகவோ செய்யவும். பீடங்கள் பலவகை உண்டென்றாலும், குறிப்பாக **பத்மம், பத்ரம், சுவாம்புயம், விஜயம், ஸ்தண்டிலம்** என்பவையாகும். இவைகளில் அனைத்து லிங்கங்களும் செய்யலாம்.

இந்த பத்மபீடத்தில் ஒருமுறை சொல்லப்படுகிறது. பீடத்தின் உயரம் பதினாறு பாகமாக பிரித்து, அதில் இருபாகம் கீழ்பட்டிகையும், ஐந்து பாகம் தளமாகவும், இரு பாகம் வட்டமும், நான்கு பாகம் மேல் பத்மம் மேலே இருபாகம், ஒரு பாகம் அதன் மேல் நீர் வழி போக்கியும் ஆக வரிசையாக செய்ய வேண்டும். பீடத்தின் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கு நடுவட்டம் மையத்தில் செய்யவும். மற்றவை பீடத்தின் வெளி அளவாக செய்யவும். நடுவட்டத்தின் அளவு போல் அடியில் ஒரு பாகம் பீடத்தின் வெளி அளவு வேண்டும். அதனில் மூன்றில் ஒரு பாகம் அளவு, நீர்விழும் வழி (கோமுகம்) அளவாகும்.

மூலபாகம் (நடுவட்டம்)

அளவில் மூன்றில் ஒரு பங்கு மேலே பள்ளம் வேண்டும். நீர் வழி (கோமுகம்) வடக்கில் இருக்கவேண்டும். இது பத்மபீடமாகும். இது அனைத்து லிங்கத்திற்கும் உரியதாகும்.

பத்மபீடமானது, முன்புபோல் உயரத்தை 16 பங்கிட்டு, அதில் ஒரு பாகம் பாதமும், 4 பாகத்தில் ஜகதியும், (கணுக்காலும்) அல்லது மூன்று பாகத்திலோ அதன் மேல் ஒரு பாகத்தில் பட்டியும், கழுத்து மூன்று பாகத்தாலும், மேலே ஒரு தாமரை ஒரு பாகத்தாலும், இரு பங்கால் மேல்பட்டியும், ஒரு பாகத்தால் மேல் வளைவும் உள்ளது. இப்பீடமானது அனைத்து லிங்கத்துக்கும் உரியதாகும். ஊயரத்தை 18 பாகமாக வகுத்து அதில் பாதம் ஒரு பாகத்தாலும் 1½பாகத்தால் கம்பும் ஸ்தண்டில பீடம் எனப்படும். இவ்வாறு இந்த பீடம் என்பது பாகங்களாலும் வேலைப்பாடுகளாலும் பல விதமாக சொல்லப்பட்டுள்ளது. ஒரு கண்டம், இரு கண்டம், பல கண்டம் என வகைப்படுத்தப்படுகிறது.

ஸஹஸ்ர லிங்கத்திலும், பெரியலிங்கத்திலும் பீடம் ஒரேகல்லால் உருவாக்கவும், இருஉருவங்களே மற்ற உருவமான விக்ரஹங்களுக்கு சதுரமானபீடம் செய்யவேண்டும்.

உருவத்தின் உயரஅளவோ அல்லது பாதிஅளவோ பீடத்தின் நீளம் அமைக்கப்பட வேண்டும். உருவத்தின் கழுத்தளவோ தொப்புள் அளவோ முழு கால் அளவோ பீடத்தின் அகலம் இருக்க வேண்டும். அல்லது அதில் பாதி அளவாக இருக்க வேண்டும். கீழிருந்து மேலாக வரும் வரிசை கீழ் பகுதியின் அளவில் பாதி அளவு மேல் பகுதி இருக்க வேண்டும். இவ்வாறு பீடலக்ஷணம் சொல்லப்பட்டது.

அடுத்து ப்ரம்மா சிலையின் லக்ஷணம் சொல்லப்படுகிறது. நான்கு பாகத்தால் ஜகதியும், தாமரைபட்டி மூன்றுபாகத்தாலும், பத்மம் ஒரு பாகத்தாலும், கழுத்து மூன்றுபாகத்தாலும், ஒருபாகத்தால் மேல் கம்பும், இருபாகத்தால் மேல்பட்டியும், மேல் தாமரைதளம் ஒரு பாகத்தாலும், மேல் பாகத்தால் மேல்கன்னியும் ஆக செய்வது சுவாயம்புவ பீடமாகும்.

விஜயபீடமானது பீடத்தின் உயரம் 21 பாகமாக செய்வித்து ஒரு பாகமும் நான்கு பாகத்தால் ஜகதியும் ஒரு பாகத்தால் கண்டமும் ஒரு பாகத்தால் தாமரையும் மூன்று பாகத்தால் குடமும் மேலே தாமரை ஒரு பாகத்தாலும் மேலே கம்பு ஒரு பாகத்தாலும் பத்மம் இரு பாகத்தாலும் நடு கழுத்தும் அதன் மேல் கம்பு ஒரு பாகத்தாலும் பத்மம் ஒரு பாகத்தாலும் இரு பாகத்தால் பட்டியும் அதன் மேல் பத்மம் ஒரு பாகத்தாலும் அதன் மேல் ஒரு பாகம் பட்டியும் மேல் கன்னி ஒரு பாகத்தாலும் அமைவது விஜயபீடமாகும்.

ஸ்தண்டிலபீடமானது, உயரம் 16 பாகம் செய்வது. கீழ் ஒரு பாகம் பாதமும், இருபாகம் பங்கஜமும், ஒரு பாகம் கம்பும், நடு ஏழு பாகம் மேலே கம்பு ஒரு பாகமும் மேலே தாமரை 2½ மேலே பெரியபட்டி 1½மேல் அரைபாகம் தாமரையும், கன்னி 2 பாகம் செய்வது.

விஜயமண்டலம்

பிரம்மாவானவர் தலையால் சிவபெருமானை வணங்கி கேட்கிறார். இந்த விஜய மண்டலம் பற்றி சொல்லுங்கள் சந்திரசேகரரே என்று. சிவபெருமான் அனைத்து பாபங்களையும் போக்கவல்லதும் மேலானதும் ஆகும். இந்த விஜயமண்டலம் அதைச் சொல்கிறேன் மறையோர் மன்னர் வணிகர் உழவர் ஆகியவர்களுக்கு இதை வழங்க வேண்டும் மற்றவர்களை விடவேண்டும். மண்டலத்தில் திருவாதிரை நக்ஷத்திரம் மண்டலத்தைப் போடவேண்டும். பஞ்சகவ்யத்தை எடுத்து சிவனுக்கு அபிஷேகம் செய்து பெரும்சாதம் நிவேதனம் செய்யவும். ஆசார்யருக்கு நன்மையானதாக அந்தணர்கள் மண்டலம் எழுதவும் கோயிலின் முன்பகுதியில் பசுஞ்சாணியால் மெழுகி அதன் மேல் வணிகர் மற்றும் உழவர்கட்கு எட்டுஅங்குலத்திலும், அந்தந்த வர்ணத்துப்பெண்களுக்கு ஒவ்வொருஅங்குலம் குறைவாகவும், எழுதவேண்டும். அங்கு நடுவில் மண்டலம் போட்டு அதன் நடுவில் தாமரைப்பூ வைக்கலாம். பிரபா சந்திரபிரபை அளவில் செய்யவும். அதில் மண்டலம் போடவும். பின் ஆசையுள்ள மக்களுக்கு ஆயிரம் ஐநூறு அளவில் தாம்பூலம் மீண்டும் வழங்கவும்.

இந்த மண்டலத்திலே தேவதைகளின் வருகைக்காக வெள்ளை முதலான வண்ணங்கள் செய்யப்படவேண்டும். நடுவில் வெள்ளைத் தாமரையும், கிழக்கே மஞ்சள் தாமரையும், தென்கிழக்கில் சிவப்பு தாமரையும், தெற்கே கருப்புநிற தாமரையும், தென்மேற்கே மஞ்சள் மற்றும் மேற்கே கருப்பு தாமரையும், ஈசானத்தில் முத்துவண்ணமும், அதன் தெற்கே வெளுத்ததாமரையும், அல்லது நடு முதலான ஒன்பது தாமரையும் (பொருள்) இவ்வாறு ஒன்பதுபொருள் கொண்ட சிவனின் கோயிலாக உருவாக்கப்படும். நடுவில் தாமரையில் சிவனும் மற்றவைகளில் லோகபாலர்களும் (இந்திராதிகள்) பூஜிக்கப்பட வேண்டிய உள்ள பின்புவலிமையான அஸ்திரங்களையும் யாரொருவர் பூஜிக்கின்றாரோ அஸ்வமேதயாகத்தின் பயனும் நூறுராஜசூய யாகத்தின் பயனும் இந்த மண்டலபூஜையின் இனிமையை தரும் தகுதி உடையதாகும்.

அவன் பாபங்களால் தாமரைஇலை தண்ணீர்போல் பாதிக்கப்பட மாட்டான். நித்ய பூஜையிலும் நைமித்திக (சிறப்பு கால) பூஜையாலும், காம்ய (விருப்பப்பட்ட) பூஜையிலும் இன்பம் வீடு பேறுகளுக்காக பூஜை செய்யப்பட வேண்டும்.

அனந்த விஜய மண்டலம்

மண்டலத்தின் மொத்த அளவான இடத்தை 64 பாகம் செய்து நடுவில் உள்ள கோட்டில் தாமரை செய்யவும். நான்குபதங்களில் அதன் வெளியே உள்ள பதங்களில் பாதிஅளவில் வழிவிட்டு பின் வெளியே உள்ள பதத்தையும் இணைத்து இந்திரன் முதலான தேவர்கள் இடமாக செய்யும் பின் வழியின் கோணங்களில் உள்ள எட்டு பதங்களில் (பக்கத்திற்கு இரு பதங்கள் வண்ணம்) வெள்ளை கருப்பு சிவப்பு மஞ்சள் என வர்ணம் மட்டும் வெளியே பூபுர கோடு பொருட்டும் வருவது சுவாயம்பூ எனும் அனந்தவிஜய மண்டலமாகும்.

பத்ர மண்டலம்

மண்டலத்துக்கான இடத்தை எட்டுபாகமாக வகுத்து, நடுவில் நான்குபதங்களில் தாமரையும், அதன் வெளியே சுற்று ஒருபதமளவும், அதன் வெளியே இருபதங்களால் தாமரை அளவு பாதையும் அதன் வெளியே உள்ள ஒரு சுற்று பதத்தில் கோடு பூபுரம் போடுவது பத்ர மண்டலமாகும்.

நான்கு, ஆறு, எட்டு, அல்லது பதினாறு முழம்அளவில் மண்டலம் செய்து, அதை இருபத்தைந்து கோடுகளால், இருபத்துநான்கு 24x24 பதம்வகுத்து நடுவில் நான்குபதங்களில் பத்மமும், வெளியில் இருபதங்கள் வீதியும், அதன் வெளியே ஒருபதம் ஆவரண தேவதைகளின் பூஜைக்கு வேண்டியும், இரண்டு பதங்கள் வாயில் களாகவும், அதன் வெளியே கர்ணிகை ஒரு பதத்தாலும், அதன் வெளியே துணைகண்டம் (உபகண்டம்) வரைந்தும், அதன் வெளியே நீண்ட தளங்களை உடைய செங்கழுநீர் பூவிதழ்களையும், அதன் வெளியே ஸ்வஸ்திக மண்டலத்தில் லோக பாலர்களும் பூஜிக்கப்பட வேண்டியவர்கள். ஆதன் வெளியே வட்டமண்டல பதத்தில் அஸ்த்ரதேவர்கள் பூஜிக்கப்பட வேண்டியவர்கள்.

லதாலிங்க மண்டலம்

இருபது பதம் உள்ள மண்டலம் (21 X 21) (20 X 20) வெளியே ஒரு சுற்று பதம் வழியாகவும், அதில் நான்கு பக்கங்களிலும் ஒரு பதம், மூன்று பதம், மீண்டும் ஒரு பதம், மீண்டும் மூன்று பதம், என துவாரங்களும், (வாயில்களும்) மீதி பதத்தில் உள்ளே ஐந்துபதம் லிங்காகாரமாகவும் அதன் உள்ளே பத்ரமண்டலம் போல் 4பதமும், ஒருபக்கம்போல் இரு பக்கமுமாக 20 பதங்களில் மண்டலம் அமைத்து வாயில்களில் வண்ணங்களும் இடவும். லிங்கங்களின் நடுவில் வெள்ளையும் கிழக்கில் தங்கநிறமும், தெற்கே கருப்பும், மேற்கே வெள்ளையும் வடக்கே சிவப்பும் போடவும். இது லதாலிங்கோத்பவ மண்டலமாகும்.

லதாலிங்க மண்டலமானது இருபத்தெட்டாக பதம் போட்ட மண்டலத்தில் நடுவில் எட்டுபதமும் லிங்கபட்டைக்கு ஒருபதமும் மூலைகளில் ஏழுபதங்களில் கொடிகளும், பக்கங்களின் அதன் வெளியே 7 பதங்களின் நான்கு பக்கத்திலும் அதன் வெளியே வீதியும் வாயில்களும் போடுவது லதாலிங்க மண்டலமாகும்.

நவநாப மண்டலம்

மண்டலத்தை ஏழு பாகங்களாகப் பிரித்து, நடுவில் தாமரையைச் செய்ய வேண்டும். 32 அங்குல (கட்டத்தில்) அளவாக முன்புபோல் செய்து வெளியே எட்டு பக்கங்களிலும் ஒருபாகம் விட்டு, உள்ளே உள்ள தாமரை போலவே எட்டுபத்மங்கள் எழுத வேண்டும். 8தளம் அதன் வெளியே 24 தளங்களும் இரண்டு இரண்டு துவாரங்களை 8 வாயில்களும் பொடிகளால் நிரப்ப வேண்டும். இதுவே அழகான நவநாப மண்டலம் என்பதாகும்.

கௌரீ லதாமண்டலம்

பதினேழு கோடுகளால் பதினாறு பதம் கொண்ட மண்டலத்தில் நடுவில் உள்ள நான்கு பதங்களிலும் ஐந்து பத்மங்கள் வரையவும் அதன் வெளியே லிங்கமும் அதன் ஆவுடையாரின் மேல் பத்மம் கண்டம் கீழ் பதமம் கீழ் பட்டை என்று முறையே நான்கு கோணங்களில் கொடிகள் வரைவது கௌரீ லதா மண்டலமாகும்.

சுபத்ர மண்டலம்

மண்டல மொத்த அளவை, பன்னிரெண்டு கோடுகளால் பதினோறு பதங்கள் செய்து, நடுவில் உள்ள ஒன்பது பதங்களால் வெள்ளை வண்ணத்தில் தாமரை வரையவேண்டும். நான்கு மூலைகளில் உள்ள நான்குபதங்களிலும் பொன் மஞ்சள் நிறத்தில் ஸ்வஸ்திகங்களும் நான்கு பக்கங்களிலும் உள்ள 3X4 பன்னிரெண்டு பதங்களில் லிங்கம் பட்டிகண்டம் பட்டி 1–3–1–3 உள்ளிருந்து வெளியாக கண்டு வரைந்து மற்ற இடங்களில் பல பொடிகளால் அழகு செய்தல் நிகரற்றதான **சுபத்ர மண்டலம்** ஆகும்.

உமாகாந்த மண்டலம்

33 கோடுகளால் இருபக்கமும் நிரப்பி 32 பதங்கள் உள்ள மண்டலம் அதன் நடுவில் (8 X 8 = 64) அறுபத்திநான்கு பதங்களில் பத்மம் போட வேண்டும். வெளியே மூன்று பதங்களில் வீதிபட்டையும் அதன் வெளியே ஒருபதம் பச்சைவண்ணக் கோலத்தில் ஒருபட்டையும் அதன் வெளியே 7 பதங்களின் நடுவில் துவார (வாயிலும்) இருபுறமும் இரண்டு லிங்கங்களும், அதன் வெளியே வெளி மீது கொடுவரை ஒரு பதமாக போடுவது உமாகாந்த மண்டலமாகும்.

அறுபத்தெட்டு சிவக்ஷேத்ர இடங்கள்

மிகவும் தவவலியவரான ப்ரம்மாவே ஞானபாதம், க்ரியாபாதம், சர்யாபாதம், யோகபாதம் என்ற நான்கு பிரிவுகளோடு விளங்குவதும், என்னால் சொல்லப்பட்டதும் ஆன 68 இடங்களை நீவிர் கேட்கவும் என்றார்.

காசியில் மகாதேவரும், ப்ரயாகையில் மகேச்வரரும், நைமிசாரண்யத்தில் ப்ரபிதாமஹரும், குருக்ஷேத்திரத்தில் ஸ்தானுவும், ப்ரவாகத்தில் சந்திரசேகரரும், புஷ்கரத்தில் மஹேந்திரமலையில் மஹாவிரதரும், உஜ்ஜயினியில் மஹாகோடத்தில் மதோர்கடரும், சங்கு கர்ணத்தில் மஹாதேவரும், கோகர்ணத்தில் மஹாபலரும், ருத்ரகோடியில் மஹாயோகியும், மஹாலிங்கரும், ஸ்தலேஸ்வரரும், கேதாரத்தில் சம்பு ஈசானரும், மஹாலயத்தில் ருத்ரரும், ஸ்வர்ணபுரத்தில் சஹஸ ராக்ஷரும், பத்ரகர்ணத்தில் சதாசிவரும், தேவதாருக வனத்தில் தண்டியும், வரஜங்கத்தில் சங்கரரும், த்ரிசந்தியில் ஊர்த்வரேதஸரும், கரண்டத்தியில் கபர்தியும், க்ஷகாக்ரத்தில் க்ருத்திவாஸரும்,

ம்ருதகேஸ்வரத்தில் ஸூக்ஷ்மரும், க்ருதேஸ்வரத்தில் பஸ்மஸாயரும், கைலாசமலையில் கிராதகரும், வருஷஸ்தானத்தில் த்ரயம்பகரும், விரஜையில் த்ரிலோசனரும், தீப்தத்தில் மகேசரும், நேபாளத்தில் பசுபதியும், காரோஹணத்தில் லகுளீசரும், அம்பிகா பீடத்தில் உமாபதியும், கங்காசாரத்தில் அமர்நாதரும், ஓங்கார பீடத்தில் ப்ரணவநாதரும், ஹரிசத்திரத்தில் அப்திநாதரும், குருக்ஷேத்திரத்தில் சங்கரரும், அமரேஸ்வரத்தில் ஜடிலரும், ககுதேஸ்வரத்தில் சௌம்யரும், ஸப்த கோதாவரி க்ஷேத்திரத்தில் பீமரும், நாகலேஸ்வரத்தில் ஸ்வயம்பரும், த்ரிசூலத்தில் ஜல்பேஸ்வரரும், திருபர்வதத்தில் த்ரிபுராந்தகரும், கர்ணிகாரோஹணத்தில் அத்யபரும், கைலாசத்தில் கணநாயகரும் இடமாகக்கொண்டு அருள்கின்றார்.

விமான லிங்கசக்திகளின் வகைகள்

நளிக விமானம்	ஸமகண்ட லிங்கம்	சாந்தி சக்தி
ஸ்வஸ்திக விமானம்	சதுர்முக லிங்கம்	ப்ரஜா சக்தி
ஸர்வதோபத்ர விமானம்	ப்ரதிஷ்டா லிங்கம்	வராஹி சக்தி
ஹஸ்திப்ருஷ்ட விமானம்	யோனி லிங்கம்	க்ரியா சக்தி
ஸமுஜ்வல விமானம்	பிரணோத்கரலிங்கம்	ஸ்திர சக்தி
ஸ்ரீசந்த விமானம்	விகட லிங்கம்	பலினி சக்தி
வ்ருத்த பத்ர விமானம்	பவ லிங்கம்	குண சக்தி
ஸ்ரீகாந்த விமானம்	ஸதாபித லிங்கம்	பார்வதீ சக்தி
ஸ்ரீப்ரதிஷ்டா விமானம்	மூலஸ்தூல லிங்கம்	ஸ்ரீசக்தி
ஆத்மசக்தி விமானம்	மத்யஸ்தூல லிங்கம்	க்ஷீராசக்தி
சர்வத விமானம்	நிஷ்களாதம் லிங்கம்	அங்க சக்தி
விஷ்ணுகாந்த விமானம்	ஹர்ம்ய லிங்கம்	த்ரிகுண சக்தி
ஸௌபத்ர விமானம்	பங்கலிங்கம்	க்ரியா சக்தி
கைலாச விமானம்	விகடலிங்கம்	பார்வதி சக்தி
சந்திர விமானம்	மகுடலிங்கம்	சசி சக்தி
ருத்ரசந்த விமானம்	ஸ்தூலலிங்கம்	பைரவி சக்தி
மேருசந்த விமானம்	ப்ரகீரணலிங்கம்	ஆதார சக்தி
ஜகட விமானம்	சண்டிலிங்கம்	விராட்சக்தி
கும்ப விமானம்	பத்ரலிங்கம்	நாத சக்தி
ஜெயாங்க விமானம்	பரலிங்கம்	க்ரீடா சக்தி

கோமள விமானம்	கோமளலிங்கம்	ஆதிசக்தி
ஸ்கந்தகாந்தவிமானம்	ஸ்திரலிங்கம்	வீரசக்தி
ஹம்ஸசந்த விமானம்	விபுலலிங்கம்	மனோன்மணி சக்தி
விர்ஷந்த விமானம்	த்ரோணலிங்கம்	ஹஸியசக்தி
க்ரச்தேசமுக விமானம்	நிஷ்களலிங்கம்	மந்திர சக்தி
கோபுர விமானம்	சகலநாமலிங்கம்	ரக்ஷா சக்தி
கர்ணசந்த விமானம்	ஸாலிங்கம்	மோக்ஷ சக்தி
பத்மாங்க விமானம்	ஸ்திரலிங்கம்	மனோன்மணி சக்தி
காலிபத்ர விமானம்	விலம்பிதலிங்கம்	வாசவீ சக்தி
காமார விமானம்	பத்ரலிங்கம்	வைணவ சக்தி
கேதுலிங்க விமானம்	சொர்ணலிங்கம்	க்ருஷ்ண சக்தி
பத்மபத்ர விமானம்	பாவணலிங்கம்	மனோன்மனி சக்தி
காணவசாலா விமானம்	வர்ணலிங்கம்	தாம்பரா சக்தி
ஆதிசண்ட விமானம்	மஹாசலலிங்கம்	காம சக்தி
பத்ரலிங்க விமானம்	சிவலிங்கம்	க்ஷுத்ர சக்தி
சால விமானம்	சந்திரலிங்கம்	அங்க சக்தி
ஸதர்ய விமானம்	விஷ்ணுலிங்கம்	பூத சக்தி
விக்ரமாலய விமானம்	பட்காரலிங்கம்	காளி சக்தி
ஸர்வக விமானம்	ஸப்ததாராலிங்கம்	ரவி சக்தி
லலிதாலய விமானம்	நவதாராலிங்கம்	தாத்ரீ சக்தி
தாரா விமானம்	ஷோடசாரலிங்கம்	லமித் சக்தி
விசால விமானம்	ஸஹஸ்ரலிங்கம்	காம சக்தி
சிகராக்ர சத்ர விமானம்	சத்ரகலிங்கம்	சித் சக்தி
ராஜவள்ளி விமானம்	மாணிக்கலிங்கம்	க்ஷாந்தி சக்தி
சந்திரமாலிகா விமானம்	சுபலிங்கம்	க்ருஷி சக்தி
நிதிசாலாக்ர விமானம்	சைலலிங்கம்	த்யுதி சக்தி
கார்முக விமானம்	சிகராக்ரலிங்கம்	ஜ்வாலினி சக்தி
விஜயவிமானம்	ஸஹஸ்ரதாராலிங்கம்	வாக் சக்தி
ஸர்வதாலய விமானம்	சதுஷ்டதாராலிங்கம்	நிவர்த்தி சக்தி
அங்காலய விமானம்	யவலிங்கம்	மோஹ சக்தி

சாயாசதன விமானம்	ஸ்படிகலிங்கம்	த்ருதி
சக்தித்ராவிட விமானம்	வர்த்தமானலிங்கம்	நாக சக்தி
வேசர விமானம்	சயனலிங்கம்	க்ஷாந்தி சக்தி
ரித்விகீர்ய விமானம்	நிம்னாநிததலிங்கம்	ஜீவ சக்தி
குக்குட விமானம்	சாரலிங்கம்	ருத்ர சக்தி
அக்னிகாந்த விமானம்	பாலலிங்கம்	பராசக்தி
ருத்ரச்சந்த விமானம்	ரவிகாந்தலிங்கம்	தராமலி சக்தி
யோகப்ரத விமானம்	பத்ரலிங்கம்	சாந்தி சக்தி
போகபத்திர விமானம்	சக்ரலிங்கம்	சோசனி சக்தி
விந்தியசக்ர விமானம்	ச்ருங்கதலிங்கம்	பைரவீ சக்தி
மேருகூட விமானம்	பந்தலிங்கம்	அங்க சக்தி
மஹேந்திர விமானம்	ஸ்தம்பலிங்கம்	த்ரீசூல சக்தி
பத்மபத விமானம்	ராசிலிங்கம்	கல்யாண சக்தி
ஸ்ரீ மண்டல விமானம்	ஆர்யலிங்கம்	சித்திய சக்தி
ஆலோகர விமானம்	ஜெயலிங்கம்	பைசா சக்தி
மங்களாபித விமானம்	மங்களலிங்கம்	பாலினீ சக்தி
நீலபர்வத விமானம்	சாந்திலிங்கம்	விஷ்ணு சக்தி
நிஷதங்குலி விமானம்	ப்ரம்ஹலிங்கம்	ஜோதி சக்தி
பிசுகார விமானம்	ப்ரபுலிங்கம்	ச்ரேஷ்ட சக்தி
விஜய விமானம்	ப்ருதிவீலிங்கம்	வித்யா சக்தி
காந்தபத்ர விமானம்	லலிதலிங்கம்	த்வணி சக்தி
அத்வைத விமானம்	மத்யலிங்கம்	தாண்டவ சக்தி
சோமசந்த விமானம்	பல்லவலிங்கம்	மாயா சக்தி
த்ரிவ்ருத்த விமானம்	நாகலிங்கம்	சாந்தி சக்தி
இந்திர விமானம்	மூலாக்ரலிங்கம்	சன்னதி சக்தி
ஸ்ரீவர்த்த விமானம்	ஊர்த்வலிங்கம்	ஸ்ம்ருதி சக்தி
பத்மக்ருஹ விமானம்	சதுரலிங்கம்	வித்ருமா சக்தி
ப்ரேஷ்யதாலய விமானம்	அச்ரலிங்கம்	தரா சக்தி
க்ரியாவர்த்த விமானம்	தாதாலிங்கம்	ப்ரீதி சக்தி
நிகாம விமானம்	ஸ்ருசக்திலிங்கம்	லயமஹா சக்தி

மிகவும் ப்ரசித்தமான சிவஸ்தலங்கள்:

1. ஸ்ரீசைலம்	2. ஸ்ரீகாளகஸ்தி	3. ஜல்பேஸ்வரம்
4. திருவாரூர்	5. வேதாரண்யம்	6. திருவானைக்காவல்
7. கும்பகோணம்	8. திருவெண்காடு	9. மயிலாடுதுறை
10. திருவிடைமருதூர்	11. பொன்னமவராவதி	12. மதுரை (தென்மதுரை)
13. வைத்தீஸ்வரன்கோயில்	14. பந்தநல்லூர்	15. ஸ்ரீசைலம்
16. விருத்தாசலம்	17. பசுமலை	18. பொன்மலை

இப்பதினெட்டு சிவபுண்ணிய ஸ்தலங்களும், மங்களத்தைத் தருபவையாகும்.

ராமேஸ்வரம், துவாரகை, இலந்தைக்காடு, சித்ரகூடம், யானைக்காடு இதனை நினைக்க பூமியைச்சுற்றிய பயனாகும். மாதவன் கணேசம், கங்கை, வயிலோன், சூரியன், ஸ்ரீசைலம், வேதாரண்யம் இந்த ஸ்தலங்களை நினைப்பவர்க்கு பூமியைச்சுற்றிய பயன்ஏற்படுவதாகும். இவ்வாறு காலையில் மூன்றுமுறை நினைத்து, மூன்றுமுறை வலம் வருபவர், குறைந்தது நூறு அச்வமேதயாகத்தின் பயனைஅடைகிறார்கள்.

ஸேது (ராமேஸ்வரம்), வாஸபுரம், மதுரை, சிதம்பரம், கோகர்ணம், பம்பை, திருவெண்காடு, திருவாலங்காடு, வேதபுரி, திருவண்ணாமலை, விருத்தாசலம், காஞ்சீபுரம், ஸ்ரீசைலம், காளஹஸ்தி, திருக்கேதாரம், காசி, கைலாசம் ஆகிய இவைகள் சிவபெருமானின் இருப்பிடமும் நமக்கு வீடுபேறு கிட்டக்கூடிய தலங்களாகும்.

ஆதிசைவ ஆசார்ய
விரசித க்ரந்த விவரணம்

சமஸ்கிருத போதகர்,
சிவஸ்ரீ Dr. அபிராம சுந்தர சிவாசார்யர், M.A.,Ph.D., மயிலை.

எல்லாம் வல்ல இறைவன் இவ்வுலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்தும் இகபர சுகங்களை அனுபவிப்பதற்கு தனு, கரண, புவன போகங்களைப் படைத்து இறுதியில் சிவசாயுஜ்யம் பெறுவதற்கான வழிமுறைகளை தொகுத்தளிக்கும் ஆகமங்களை தனது ஐந்து முகங்களில் இருந்தும் தோற்றுவித்தான். இப்படி தோற்றுவிக்கப்பட்ட மூல ஆகமங்கள் 28 ஆகும். இம்மூலமாகங்களின் உப ஆகமங்களாக 207ம் பின்னர் தோன்றியவையாம். இவ்வாகமங்களுக்கு பின்னர் எழுந்த நூல்கள் ஆகமங்களின் ஞானபாதத்தைத் தழுவியும், க்ரியாபாதத்தைத் தழுவியும், சரியாபாதத்தைத் தழுவியும், எழுதப்பெற்றன. அவ்வாறே இயற்றப்பெற்ற நூல்களைப் பற்றி சிறு குறிப்புகளைப் பார்ப்போம்.

1. ஆத்மார்த்த பூஜா பத்ததி: பதினாறாம் நூற்றாண்டு இரண்டாம் வேதக்ஞானர் (1)
2. ஈசான குரு தேவ பத்ததி:
3. க்ரியாக்கிரமத்யோதிகா: அகோர சிவாசார்யரால் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலுக்கு மூவர் விளக்கவுரை எழுதியுள்ளனர். இதில் நிர்மலமணி என்பவர் எழுதிய ப்ரபா என்கிற நூல் பதிப்பில் உள்ளது. இதைத் தவிர கச்சபேஸ்வரர் மற்றும் சதாசிவர் எழுதிய விளக்கவுரை பதிப்பிக்கப் பெறவில்லை.
4. ஞானரத்னாவளி ஞானசம்பு சிவாசாரியரின் பன்னிரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த நூல்.
5. தத்வத்ரயநிர்ணய வருத்தி மற்றும் தத்துவப் பிரகாச வருத்தி இவை அகோரசிவரின் நூல்கள்.
6. இரண்டாம் வேதக்ஞானரின் தீக்ஷாதர்சனம் (4)
7. அகோரசிவரின் நாதகாரிகாவ்ருத்தி என்ற நூல்.
8. க்ஷேமராஜரின் நேத்ரோத்யோதா என்ற நூல்.
9. சந்த்ரசேகர பட்டாரகரின் பிரதிஷ்டாவிதி (5) என்றநூல்.
10. வித்யாகண்டரின் பாத சூடாமணி

11. அகோரசிவரின் யோககாரிகா வ்ருத்தி
12. ராமகண்டரின் மதங்க வ்ருத்தி
13. வக்த்ர சம்புவின் ம்ருகேந்தர பத்தி டிகா (6)
14. நாராயணகண்டரின் ம்ருகேந்தர வ்ருத்தி (7)
15. அகோரசிவரின் ம்ருகேந்த்ர தீபிகா (8)
16. சதரத்ன சங்க்ரஹத்தின் விளக்கவுரையான சதரத்ன உல்லேகினி இதன் ஆசிரியர் பெயர் தெளிவாகத் தரப்படவில்லை.
17. ஊமாபதி சிவாசார்யரின் சதரத்ன சங்க்ரஹம்.
18. ஞானப்ரகாசரின் (சாலிவாடி) சிவ ஞான போத வ்ருத்தி
19. சிவாக்ர யோகியின் சிவ ஞான போத சங்க்ரஹ பாஷ்யம்.
20. வேதக்ஞானரின் அல்லது நிகமக்ஞான தேசிகரின் சிவ ஞான போத உபன்யாசம். இவரது வேறொரு நூலான சிவஞான சித்திஸ்வபக்ஷ த்ருஷ்டாந்த சங்க்ரஹம் பதினாறாம் நூற்றாண்டு (9)
21. சிவ தீக்ஷா விதி வ்யாக்யானம் ஆசிரியர் பெயர் தெளிவாக இல்லை.
22. சிவ பூஜா பத்ததி வ்யாக்யானம் ஆசிரியர் பெயர் தெளிவாக இல்லை
23. சிவ பூஜாஸ்தவ வ்யாக்யானம் ஆசிரியர் பெயர் தெளிவாக இல்லை.
24. ஞான சம்புவின் சிவ பூஜாஸ்தவம்
25. ஞானப்ரகாசரின் சிவயோகரத்னம் மற்றும் சிவயோகசாரம் இதே ஆசிரியரின் சிவாகமாதி மஹாத்மிய சங்க்ரஹம் தற்போது பதிப்பில் உள்ளது.
26. சிவாக்ரயோகியின் சிவாக்ரபாஷ்யம் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் சிவஞான போத சூத்ரத்தின் சமஸ்கிருத உரையாகும்.
27. இதே ஆசிரியரின் சைவபரிபாஷா எனும் நூல் பதிப்பில் உள்ளது.
28. இவரது மற்றொரு நூலான சிவசன்யாஸ பத்ததி இதுகாறும் பதிப்பிக்கப்படவில்லை.
29. சைவ சித்தாந்த சங்க்ரஹம் எனும் நூல் மூலாகமங்களின் மற்றும் பத்ததிகளில் காணப்படுகின்ற கருத்துக்களின் தொகுப்பாகவே அமைந்துள்ளது. (15)
30. சகலாகமசார சங்க்ரஹம் வேதக்ஞானரின் சைவாகம பரிபாஷா மஞ்சரி ஆகியவைகளும், இது போன்ற தொகுப்பு நூல்களாகும்.

31. அகோரசிவரின் சர்வக்ஞாதோத்ர வ்ருத்தி இதுகாறும் பதிப்பிக்கப் பெறவில்லை.
32. மத்யார்ஜுனரின் சித்தாந்த தீபிகா இதுகாறும் பதிப்பிக்கப் பெறவில்லை.
33. ஞானப்ரகாசரின் சித்தாந்த சிகாமணி பதிப்பிக்கப் பெறவில்லை.
34. த்ரிலோசன சிவாசார்யரின் சித்தாந்த சதுஷ்டயம் மற்றும் சித்தாந்த சாராவளி.
35. அனந்தசம்புவின் சித்தாந்த சாராவளி வ்யாக்யானம்
36. சுதாசிவ சிவாசார்யரின் சித்தாந்த சூத்ரவ்ருத்தி இந்நூல் சிவஞான போத சூத்ரத்தின் சமஸ்கிருத உரையாகும்.
37. க்ஷேமராஜரின் ஸ்வச்சந்த தந்த்ர உத்யோதம்.
38. த்ரியம்பக சம்புவின் கிரணவ்ருத்தி கிரணாகமத்தின் விளக்கவுரையாக உள்ள இந்நூல் இதுகாறும் பதிப்பிக்கப் பெறவில்லை. (2)
39. இது தவிர 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த கணபதி பட்டரின் தீக்ஷா மண்டல பத்ததி.
40. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த பஞ்சாக்ஷர யோகயின் சைவ பூஷணம்.
41. அதே நூற்றாண்டைச் சேர்ந்த திருவாரூர் அருண தேவரின் ப்ராசாத சந்த்ரிகா.
42. 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த சர்வாத்ம சம்புவின் சைவ சித்தாந்த தீபம்.
43. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த சூர்ய பட்டரின் சைவசித்தாந்த பரிபாஷா போன்ற நூல்களும் பதிப்பிக்கப்படாமல் உள்ளன.
44. 17 ம் நூற்றாண்டைச் சேர்ந்த சதாசிவ ப்ரம்மேந்த்ரரின் சிவமானச பூஜா.
45. இதே நூற்றாண்டைச் சேர்ந்த திருவையாறு குருமூர்த்தி சிவரின் சிவதத்வசார சங்க்ரஹ சந்த்ரிகா.
46. நீலகண்டதீக்ஷிதரின் சிவோத்கர்ஷமஞ்சரி சிவாஷ்டரோத்தர பத்ததியின் விளக்கவுரையாக மற்றும் அமைந்த சிவதத்வ ரஹஸ்யம் போன்ற நூல்களும் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்ப்பதாகும்.
47. நீலகண்டதீக்ஷிதரின் சிவலீலார்ணவம் எனும் ஸம்ஸ்கிருத மஹா காவ்யமும் முறைப்படி தொகுக்கப்பட்டு முறைப்படி பதிப்பிக்கப்பட வேண்டியதாகும்.

CENTRE ... SAIVA STUDIES Puducherry

இவற்றினைத் தவிர அடிப்படையான 17 பத்திகளும் இதுகாறும் பதிப்பிக்கப்படாத 1. துர்வாச பத்ததி, 2. சம்யோத்யோத பத்ததி, 3. உக்ரஜ்யோதிபத்ததி, 4. ராமகண்டர், 5. வித்யாகண்டர், 6. நீலகண்டர், 7. ஞான சம்புஹ்ருதயசிவர், 8. வைராக்யசிவர் போன்றவர்களின் பத்ததிகளும் பதிப்பில் கொண்டு வரப்பட வேண்டியவை.

ஆகமத்தின் ஞானபாதக் கருத்துக்களை விளக்கக் கூடியவைகளான அஷ்டப் ப்ரகரணங்களும் ஆராய்ச்சியாளர்கள் மூலம் வெளிக்கொணரப்படல் வேண்டும். பாதராயனரின் ப்ரம்ஹ ஸூத்ரத்தின் விளக்கவுரையாக அமைந்த சைவ சித்தாந்த பரமான ஸ்ரீகண்ட பாஷயமும் ஆகமபாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்கள் மூலம் வெளிக்கொணரப்படல் வேண்டும்.

அகோரசிவாசார்யரின் ஆஸ்சர்ய சாரம், பாஷண்டாப ஜெபம் போன்ற காவ்யங்களும் அவரது அப்யுதயநாடகமும் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படல் வேண்டும்.

அகோரசிவாசார்யரின் சிவபஞ்சாவரண ஸ்தவம் மற்றும் உமாபதி சிவாசார்யரின் ஸ்ரீ குஞ்சிதாங்க்ரி ஸ்தவம், கல்பகணேச பஞ் சரத்ன ஸ்தவம், நடராஜ தண்டகம் போன்ற ஸ்தோத்திரங்களும் ஆகம பாடசாலை மாணவர்களிடையே கற்பிக்கப்பெற்று போட்டிகள் நடத்தப்படவேண்டும்.

இப்படி மிகப்பெரிய பாரம்பர்யம் கொண்ட சைவாகமநூல்களை வெளிக்கொணர்ந்து, அதைப்பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களிடம் ஏற்படுத்தி, **மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்** எனும் கூற்றை மெய்யாக்குவோமாக.

குறிப்பு: இந்த கட்டுரையில் காணப்படும் நூல்களின் பெயர்கள் ஒரு சில மட்டுமே அண்மையில் நடைபெற்ற சைவாகம ஓலைச்சுவடிகளின் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 17000 க்கும் மேலான நூல்கள் பதிப்பிக்கப்பெறாமல் உள்ளதென்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

[library stamp]

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ சிவாப்யாம் நம:

உத்ஸவ கிரியாபேத விவரணம்
(விழாக்களின் செயல்முறை விளக்கம்)

கட்டுரையாளர்
ஆகமசிரோமணி. ஆகமரத்னாகரம்,
சிவஸ்ரீ. S. சந்திரசேகர சிவாசார்யர்
திருச்சி, திருவாணைக்காவல்

ஸதாசிவ ஸமாரம்பாம் ஸ்ரீகண்டாசார்ய மத்யமாம் |
அஸ்ம தாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் ||

உத்ஸவவகைகளைத் தொகுத்து அவற்றின் காலம், செய்முறை, பயன் இவற்றை மட்டும் பொருளாகப்பற்றி, குருவருள் துணையுடன் சைவாகமங்களின் கருத்துக்களை தெரிவிக்க முயல்கிறேன்.

சிவபெருமானால் உலகில் உயிர்களுக்கு புருஷார்த்தங்கள் சித்திப்பதற்கு சிருஷ்டிகாலத்தில் வெளியிடப்பட்ட சிவனது ஞானமே சிவாகமங்கள். சிவனைப் பரம்பொருளாகக்கூறும் சைவசமயச்சிறப்பு நூல்கள் காமிகம் முதலாக வாதுளமீறாகஉள்ள 28சித்தாந்த நூல்களே ஆகும். ஆலயங்களில், செய்யப்படுகிற கிரியைகள் யாவும் ஆகமங்களின் விதிமுறைப்படி 1) நித்தியகிரியை, 2) நைமித்திக கிரியை, 3) காமியக்கிரியை என்று மூன்று வகைப்படும். இவற்றுள் நைமித்திககிரியைகள், பிரதிஷ்டை, தீக்ஷை, மஹோத்ஸவம் முதலியனவாம்.

ஆலயகிரியைகளுள் உத்ஸவம்

ஆலயங்களில் இறைவனுக்குச் செய்யப்படும், பூசையின் சிறப்பு அங்கமாக விளங்கும்கிரியை உத்ஸவம் செய்வித்தல்ஆகும். மூலஸ்தானத்தில் பூசிக்கப்படும் இறைவனே, உத்ஸவ மூர்த்தங்களில் எழுந்தருளி, சுற்றுதெய்வங்கள்சூழ, வெளியில் வலம்வருதலே உத்ஸவம் எனப்படுவதாகும். இது முதன்முதலில் பிரதிஷ்டை செய்தவுடன் முதலாவதாக பிரதிஷ்டோத்ஸவம் என்று இடம்பெற்று, பின்பு தொடர்ச்சியாக பக்திக்கும், வசதிக்கும் எற்றவாறு, நித்தமும் நித்யபூஜையின் முடிவில் நித்யோத்ஸவமாகவும், ஆண்டுக்கு ஒருமுறை

மகோத்ஸவமாகவும், சிறப்புதினத்தில் ஒருநாள் சிரத்தோத்ஸவமாகவும் இடம்பெற்றுஉள்ளது. கோயிலில், ஒருஆண்டில், கட்டாயமாக கிராமவிருத்திக்காக ஒருநாளாவது உத்ஸவம் செய்யப்படவேண்டும் எனகிறது சைவாகமம்.

உற்சவத்தின் தேவையும், பயனும். ஆலயங்களில் சிறப்புபூஜை, ஹோமம், பலிதானம் இவற்றுடன் செய்யப்பட வேண்டியதாகையால், உத்ஸவம் ஒரு உத்தமயாகமாகும். உத்ஸவக்கிரியைகள், அனைத்தும் உயிர்களுக்கு, இறைவனாற்றும், 1. படைத்தல், 2. காத்தல், 3. அழித்தல், 4. மறைத்தல், 5. அநுக்ரஹித்தல் என்கின்ற பஞ்சகிருத்யத்தையும் குறிப்பதாய், இவற்றை விளக்குவனவாகவும், அளிப்பவையாகவும் உள்ளதால், உலகமக்களுக்கு வெகுகாலத்திற்கு நல்வாழ்வுஏற்பட உத்ஸவம் மூலகாரணமாகும். உலகில்உள்ள 84லக்ஷம் தேஹவகை களில் உள்ள எண்ணிலா உயிர்களுக்கும், சுகபோக வாழ்வையும், பரமபத முக்தியையும் கொடுப்பது உத்ஸவமே என்கின்றன ஆகமங்கள். இதனை பூர்வகாரணமத்தின்

"உத்ஸவஸ்ய விதிம் வக்ஷ்யே ஸர்வ ஸித்தி ப்ரதம் சுபம்"

எனும் வசனத்தால் அறியலாம். உத்ஸவத்தின் பயனாக உத்தமயாகமாகிய உற்சவத்தைச் செய்தவர்களும், செய்வித்தவர்களும், உதவி செய்தவர்களும், சகலபோகங்களையும் அனுபவித்து முடிவில் மோக்ஷத்தை அடைவார்கள். விதிப்படி உற்சவத்தை செய்பவர்களுக்கும், செய்விப்பவர்களுக்கும் பாவம்நீங்கும், ஞானம்உண்டாகும். எல்லா மங்களங்களும் உண்டாகும் என்றும், கிராமாதிகளில், ஆலயாதிகளில் அசுரர்களின் அழிவின் பொருட்டு உற்சவத்தைச்செய்க என்றும், ஸர்வதோஷ நிவிருத்தியின் பொருட்டும், சர்வலோக சுகத்தின் பொருட்டும், ஸர்வதேவ பிரியமாகவும், ஸர்வப்பிராணிகளின் சுகத்தின் பொருட்டும், அரசர்களுக்கு விஜயசித்தியின்பொருட்டும், எல்லாரையும், இரட்சித்ததற்பொருட்டும் உற்சவத்தைச்செய்க என்றும், பக்திமுக்தியைக் கொடுப்பது. ஸர்வஆன்மாக்களுக்கும், சுகத்தைத்தருவது, பரிசுத்த மானது, எப்பொழுதும் விஜயத்தை உண்டாக்குவது, ஸர்வஸித்தியை யும் கொடுப்பது, இஷ்டகாமிய பலனைத்தருவது எனவும், சிவனாரின் திருவாக்காகிய திவ்ய ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையை வெளி யிடுகின்றன. மேலும் இவ்வாறே தேவாரம் முதலிய திருமுறைகளும் உற்சவங்களைப்பற்றி சிறப்பித்துக் கூறுகின்றன. வேதாகமபுராணங் களினாலே மண்ணினிற்பிறந்தார், பெறும்பயன், அண்ணலாரது விழாக்களை, மனவுறுதியோடு நடத்துதலும், தரிசித்தலுமேயாகும் என்கிற உண்மை இனிது பெறப்படுகின்றது.

உற்சவம் சொல் விளக்கம்

உத்ஸவம் என்ற சொல் படைப்பாற்றலை உணர்த்துவது ஆகும். எல்லாவிதமான சித்திகளையும் அளிக்கக்கூடிய உத்ஸவத்தின் சொல்லை காரணாகமத்தில் சிவன் விளக்குகிறார்.

ஸவ இத் யுச்யதே சிருஷ்டிர் ததுத் ஸ்யாத் சப்த பாஷிதம்.
உத்பூதஸ் சிருஷ்டி காரத்வாத் உத்ஸவக் கதிதோ மயா.

மேற்கண்ட காரணாகம சிவவசனத்தின்படி, உத்ஸவம் என்ற சொல்லில், உள்ள (உத் + ஸவ = உத்ஸவம் என்பது). ஸவ என்ற பதம் சிருஷ்டி என்பதையும், உத் என்ற பதம் உண்டு பண்ணுதல்என்பதையும், உணர்த்துபவைகளாய், உலகசிருஷ்டியை ஏற்படுத்துவதால் இக்கிரியை உத்ஸவம் என்பதாக தன்னால் கூறப்பட்டதாகி, பெயருடையதாய் விளங்குவதாம். உத்தர காரணாகமத்தில், உத் என்ற பதம் ஞானமளித்தலைக் குறிப்பதாகவும், இச்செயல் ஸர்வ கல்யாணங்களுக்கும் மூலகாரணம் என்றும் கூறப்பட்டுள்ளது. உலகில் மகிழ்ச்சியே படைப்புக்கு முதல் காரணமாகிறது. அத்தகைய மகிழ்ச்சி, இந்த விழாவினால் ஏற்பட்டு இதனால் தேவர்கட்கும், அவர்களால் மக்களுக்கும் கிட்டுகிறது.

உத் சப்த: ஞான மித் யுக்தம் ஸர்வ கல்யாண காரணம்.
போக மோக்ஷ மிதி ஞேயம் சதுர்வித மிதி ஸ்மிருதம்.

(உத்தரகாரணாகமம்)

உத்ஸவமானது, உத்தமயாகமாகவிளங்கி, உயிர்களுக்கு, சாம்பவீ தீட்சையை அளித்து, ஞானத்தையும், அந்த சிவஞானத்தால் முக்தியையும், தருவதாகும். இதனால் யாவருக்கும் மேன்மையையும், போகமோக்ஷத்தையும் தருவது உத்ஸவம் என்பதே எனப்பொருள்படும்.

மூவகை உற்சவம்

உற்சவமானது நித்தியோத்ஸவம், நைமித்தி யோற்சவம், காமியோற்சவம் என்று மூன்றுவிதமாகும். அவை தினந்தோறும், நித்திய பூசையின் முடிவில் செய்வது நித்யோத்ஸவம் ஆகும். வருஷந்தோறும் ஒரு குறித்தமாதத்தில் வரும் திதி அல்லது நக்ஷத்திரம், சங்கிராந்தி, என்பனவற்றுள், ஒன்றை முடிவாக (தீர்த்தவாரியாக) மூலகாரணமாகக் கொண்டு செய்யப்படுவது நைமித்தியோற்சவம் ஆகும். (விரும்பும்) இஷ்டகாலத்தில் இஷ்டப்பயன் ஸித்திக்கவிரும்பிச்செய்வது காமியோற்சவம் ஆகும். மேலும் பொதுவாக நித்தியோற்சவம், மாசோற்சவம், வருஷோற்சவம் என்று உத்ஸவம் மூன்றுவிதம்

அருணாசலோற்சவ பத்ததியிற் கூறப்பட்டிருக்கிறது. உற்சவமானது, மேலும் 1. மாசோத்ஸவம், 2. மகோத்ஸவம், 3. பக்ஷோற்சவம் என்று மூன்றுவிதம் என்று குமாரதந்திரம் கூறும். உற்சவமானது வாரோத்ஸ்வம், பக்ஷோற்ஸவம், மாசோற்சவம் என்று மூன்றுவிதம். ஒருநாளில் செய்யப்படும் ஏகாஹஉத்ஸவம் என்பது 1.பாவனம், 2.சாந்திகம், 3.மாங்கல்யம் என்று மூன்றுவகைப்படும். மேலும் உத்ஸவம், 1.மாசஉற்சவம், 2.மகோற்சவம், 3.பக்தோத்ஸவம் என்று மூவகைப்படும். மேலும் 1. சௌரோத்ஸவம், 2. சாந்திரஉத்ஸவம், 3. ஸாவனஉத்ஸவம் என்றும் மூவகைப்படும். மகோத்ஸவமானது கர்மாரம்பத்தினால், 1. பேரீதாடநபூர்வகம், 2. துவஜாரோஹணபூர்வகம், 3. அங்குரார்ப்பணபூர்வகம் என்று மூன்று வகைப்படும். உத்ஸவமானது. காலமானத்தால், நாள்கணக்கினால், உத்தமம், மத்யமம், கன்யஸம் என்று மூவகைப்படும். இதனையே ஒன்பதுவகையாக, உத்தமத்ரயம், மத்யமத்ரயம், கன்யஸத்ரயம் என்று நாள்கணக்கு முறைகளால், மூவகையும், மூவகையாய், ஒன்பதுவகைகளாக, பலவேறுபாடுகளுடன் ஆகமங்கள் உத்ஸவத்தை விளக்கியுள்ளன.

உத்ஸவபேதம் (விழாவகை)

உற்சவமானது 1) சாகல்யம், 2) பாவனம், 3) சாந்திகம், 4) மாங்கல்யம், என நான்குவகைப்படும். துவஜாரோஹணாதி தீர்த்தாந்தமான உற்சவம். ஸாகல்யம் எனப்படும். கொடியேற்றத்தை மட்டும் தவிர்த்து, மற்றெல்லாக்கிரியைகளையும், ஸாகல்யத்திற்குக் கூறியவாறு செய்வது பாவனம் எனப்படும். பிராதக்காலத்தில் ஹோமமும், பலியும் தந்து, இவற்றை இரவில் தவிர்த்து, சாயங்காலத்தில் உற்சவம்செய்வது சாந்திகம் என்னும் உற்சவமாகும். எஜமானரும், ஆலயகுருவும், ஒருதினத்தை அந்தமாகநியமித்துச் செய்யும் சிவோற்சவம் மாங்கல்யம் என்னும் உற்சவமாகும்.

நவவிதோத்ஸவம் (9வகை விழாக்கள்)

இவற்றுள் முதலாவதாக கூறப்பட்ட ஸாகல்ய உற்சவமானது ஒன்பது வகைப்படும் என்கிறது உத்தரகாரணாகமம். (சான்று)

ஸாகல்யம் பாவநம் சாந்தம் மங்களம் ச சதுர்விதம்.
துவஜாரோஹாதி தீர்த்தாந்தம் ஸாகல்யம் சேதி கீர்த்திதம்.
சேஷம்ச பூர்வவத் கிருத்வா துவஜா ரோஹனகம் விநா.
பாவனம் சேதி விக்யாதம் சாந்திம் சைவ ததச் சுருணு.
ஹித்வா ஹோமம் பலிம் சைவ பூர்வ யாமே த்வி யாமகே.

ஸாயான்ஹே சோத்ஸவம் குர்யாத் சாந்திகம் பரிகீர்த்திதம்.
யஜமானேச்சயா குர்யாத் ப்ராதக்காலே சிவோத்ஸவம்.
மாங்கல்ய மிதி விக்யாதம் ஸாகல்யம் நவ பேதகம்.

(உத்தர காரணாகமம்)

உத்தரகாரணாகமநூல், ஒருநாள்முதலாக, இருபத்திஏழுநாள் வரையில், செய்யத்தக்கவகையில் ஸாகல்யஉத்ஸவத்தை, ஒன்பது வகையாகக் கூறுகிறது. அதாவது 27 நாளில் செய்யப்படுவது (1) ஸௌரம் என்றும், 17 நாளில்செய்வது (2) சாந்திரம் என்றும், 15 நாளில்செய்வது (3) ஸாவித்ரம் என்றும், இந்த மூவகையும் உத்தமத்ரயம் என்றும், 13 நாளில்செய்வது (4) கௌமாரம் என்றும், 9 நாளில்செய்வது (5) தைவிகம் என்றும், 8 நாளில்செய்வது (6) பௌவனம் என்றும், இவை மூவகையும் மத்யமத்ரயம் என்றும், 5 நாளில்செய்வது (7) பௌதிகம் என்றும், 3 நாளில்செய்வது (8) கௌணம் என்றும், ஒருநாளில்செய்வது (9) சைவம் என்றும், இந்த மூவகையும் கன்யஸத்ரயம் என்றும் 9வகையான உத்ஸவங்கள் ஆகும்.

(சான்று)

ஸௌரோத் ஸவம் து ப்ரதமம் சாந்திரோ த்ஸவம் த்விதீயகம்.
ஸாவித்ரம் சைவ கௌமாரம் தைவிகம் பௌவனம் ஸ்மிருதம்.
பௌதிகம் கௌண மித்யுக்தம் சைவம் நவ விதம் பவேத்
ஸப்தவிம்சத் தினம் ஸௌரம் சாந்த்ரம் ஸப்த தசா ஹகம்.
பக்ஷம் ஸாவித்ர மித்யுக்தம் கௌமாரம் து த்ரயோதசம்.
நவாஹம் தேவிகம் புரோக்தம் ஸப்தாஹம் பௌவநம் ஸ்மிருதம்.
பஞ்சாஹம் பௌதிகம் புரோக்தம் த்ரயாஹம் கௌன முச்யதே.
ஏகாஹம் சைவ மித் யுக்தம் உத்தமாதி க்ரமாந்திகம்.

(உத்தரகாரணாகமம்)

இவற்றில் உத்தமத்ரயஉத்ஸவம் மூவகையும், ஸௌக்ய மளிப்பவை, மத்யமத்ரயஉத்ஸவம் மூவகையும், விஜயமளிப்பவை, கன்யஸத்ரயஉத்ஸவம் மூவகையும், ருத்தி (செழிப்பு) யளிப்பவை என்றும் கூறுகிறது. காமிகாகமம் வேறுவகையில், 12வகையாக உத்ஸவநாட்களை முறையே, 1, 3, 5, 7, 9, 11, 12, 13, 15, 17, 19, 21 வரை கூறியுள்ளது. காரணாகமத்தின்படி இவற்றில் ஸௌரம் கூறப்படாமல், சாந்த்ரம் முதலாகவும், நான்காவதாக 11நாளில் செய்யத்தக்கதாய் பைத்ருகம் எனும் உத்ஸவத்தைச்சேர்த்து, பிறபெயர்களுடனேயே, ஒன்பதுவகை உத்ஸவத்தை சூக்ஷ்மாகமம் கூறியுள்ளது. அதன்படி 1, 3, 5 நாட்கள் கொண்டவை அதமத்ரயம். 7, 9, 11 நாட்கள் கொண்டவை மத்யமத்ரயம். 13. 15, 17 நாட்கள்

கொண்டவை உத்தமத்ரயம் ஆகும். சுப்ரபேதாகமத்திலே ஒன்பதுநாள் விழா உத்தமம், 7 நாள் விழா மத்திமம், 5 நாள் விழா அதமம் என்று சொல்லப்படுகிறது. உத்தரகாரணாகமம் 27, 17, 15 நாட்களில் செய்யும்டி கூறிய உத்தமத்திரயம் மூன்யையும் விடுத்து, பூர்வகாரணாகமம் மற்றவைகளை ஆறுவகையாகக் கூறி உள்ளது. அதன்படி பைத்ருகம் 12நாளும், சௌக்யம் 9நாளும், ஸ்ரீகரம் 7நாளும், பார்த்திவம் 5நாளும், ஸாத்விகம் 3நாளும், சைவம் 1நாளும் செய்யத்தக்கதாம். இவ்வாறாக உத்ஸவம் ஆறுவகையாம். குமாரதந்திரத்தில் உத்ஸவமானது, பைத்ருகம், சௌக்யம், ஸ்ரீகரம், பௌதிகம், ஸாத்விகம், சைவம் என்ற பெயர்களில் முறையே 11, 9, 7, 5, 3, 1 என்ற நாள் கணக்கில் ஆறு வகைப்படும். இவ்விதமாக சைவாகமங்களில் கூறுகையில் பைத்ருகம் என்பது 11 நாளிலும், மேலும் 18 நாளில் செய்யத்தக்கதாயும், 12நாட்களில் செய்யத்தக்கதாயும், தொடர்ந்து திரிபக்ஷகாலமான 45நாளில் செய்யத்தக்கதாக மண்டலோத்ஸவம் கூறப்படுகிறது. உத்தரகாரணாகமத்தில் 32நாள், மற்றும் 27நாள், 18 நாட்களில் செய்யத்தக்க உத்ஸவமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. ஸாவச்யம் சைவ ஸௌபாக்யம் மங்கள மேவச (சூக்ஷ்மாகமம்) உத்ஸவத்தை, ஸாவசியம், சௌபாக்கியம், சௌக்கியம், மங்களம் என்று நால்வகை என்றும், 7நாள், 9நாள் செய்வது மங்களம் என்றும் சூசஷ்மாகமம் கூறியுள்ளது.

உற்சவகாலவிதானம்

உற்சவமாசங்கள் (1)ஸாவனமாசம், (2) சாந்திரமாசம், (3) நாக்ஷத்திரமாசம், (4) சௌரமாசம் என்று நான்குவகைப்படும். இந்த நான்குமாசத்திலும் உற்சவத்தைச் செய்யலாம். மகோத்ஸவத்தை மட்டில் சௌரமானத்திலேயே செய்தல்முறை. “சௌரமாஸம் ப்ரசஸ்தம் ஹி சாந்திர மாஸோ அப்ரசஸ்தகம்“ என்கிறது பூர்வகாரணாகமம். சௌரமாதத்தில் சாகல்யம், பாவனம் என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. சாவனம், சாந்திரம், நக்ஷத்திரம் என்னும் மாதங்களில் சாந்தி, மங்களம் என்னும் உற்சவங்கள் செய்யத்தக்கன. சாவனமாசஉற்சவம் சாந்தியையும், சந்திரமாசஉற்சவம் முக்தியையும், நக்ஷத்திரமாசஉற்சவம் பாபநாசத்தையும், சௌரமாசஉற்சவம் பிரஜா விருத்தியையும் கொடுக்கும். உத்தரகாரணகமத்தில் சிவராத்திரி விதிபடலத்தில் சௌரமானம், சாந்திரமானம் ஆகியவற்றின் விளக்கம் கூறப்பட்டுள்ளது. அதன்படி சைவாகமங்களில் சைத்ரம், வைகாசம் என்று கூறியுள்ளது ஸௌரமான மாதப்பெயரே ஆகும். சிவராத்திரியை ஸௌரமானத்தில், மாசி, பங்குனி, மாதத்தின்

கிருஷ்ணசதுர்தசியில் விரதபூஜையை கடைபிடிக்க வேண்டும். சாந்திரமானமாஸத்தில் பின்பற்றக்கூடாது என்கிறது. சந்திரன் பூரணமாக இருக்கும் நக்ஷத்திரத்தை உத்தேசித்து ஸௌரமானமாத மென்றும், சுக்லபக்ஷபிரதமை முதல், அமாவாஸ்யைவரை உள்ள முப்பது தினங்களாக கணக்கிடப்படுவது, சாந்திரமானமாதம் என்றும், மேஷம் முதலான ராசிகளில் சூரியன் பிரவேசிக்கும் காலத்தை அனுசரித்து கணக்கிடுவது சௌரமானமாதம் என்று கூறப்படுகிறது. சௌர மானத்தில் மாஸம் என்பது நக்ஷத்திரத்தை பிரதானமாகக்கொண்டு கூறப்படுவதாகும். மேஷமாதத்தில் சித்திரை நக்ஷத்திரத்தைக் கொண்டு சைத்ரமாஸம் என்றும், விருஷபமாதத்தில் விசாகத்தைக்கொண்டு வைசாகம் என்றும், மிதுனமாதத்தில் மூலநக்ஷத்திரத்துடன்கூடிய காலமே ஜ்யேஷ்டமாதமென்றும், கடகத்தில் உத்திராடத்தைக் கொண்டு ஆஷாடமென்றும், சிம்மத்தில் அவிட்டத்தைக்கொண்டு ச்ராவணமென்றும், கன்னிமாதத்தில் உத்திராட்டாதியுடனாக ப்ரோஷ்டபதம் என்றும், துலாமாதத்தில் அச்விநீ நக்ஷத்திரத் துடனாக ஆச்விஜமென்றும், விருச்சிகமாதத்தில் கிருத்திகாநக்ஷத்திரத்துடன் கூடியதே கார்த்தீகமாதமென்றும், தனுர்மாதத்தில் ஆருத்ராநக்ஷத்திரத்துடன் கூடியது மார்கசீர்ஷமாசம் என்றும், மகரமாதத்தில் பூசநக்ஷத்திரத்துடன் கூடியதே புஷ்யமாசம் என்றும், கும்பமாதத்தில் மகநக்ஷத்திரத்துடன் கூடியதே மாகமாசம் என்றும், மீனமாதத்தில் உத்திரநக்ஷத்திரத்துடன் கூடியதே பால்குணமென்றும் கூறப்பட்டுள்ளன. அந்தந்த மாதத்தில் பௌர்ணமியுடன் மாதநக்ஷத்திரம் கூடியநாளில் உத்ஸவமுடிவான தீர்த்தஉத்ஸவம் செய்யப்படுவது பருவம் சேராவிடினும் நட்சத்திரத்தில் தீர்த்தம் செய்யப்படலாம். சூரியன் குறிப்பிட்டராசியில் உள்ளபொது சௌரமானமாதத்தில் அந்தந்த மாஸ நக்ஷத்திரத்தில் உத்ஸவம் செய்வதுஉத்தமமாகும்.

"பர்வயுக்த மயுக்தம் வா மாஸருக்ஷம் ப்ரதானகம்"

(உத்தரகாரணாகமம்).

பௌர்ணமியுடன் கூடியிருந்தாலும், கூடியில்லாவிடினும் அந்தந்த மாதநக்ஷத்திரத்தையே முக்கியமானதாக கொள்ளவேண்டும். கொடி ஏற்றம் முதல் தீர்த்தம் வரை ஒரே மாதத்திற்குள் உத்ஸவம் செய்வது உத்தமமென்றும், இரட்டிப்புமாதத்தில் செய்யப்படுவது மத்யமம் என்றும், கடற்கரையை சார்ந்துள்ள ஆலயங்களில் பௌர்ணமியை முக்கியமாகவும், கடலுக்குத் தொலைவிலும், மலை போன்ற மற்ற இடங்களிலும் நக்ஷத்திரத்தை முக்கியமாகவும், கொண்டு தீர்த்த உத்ஸவம் செய்யப்படவேண்டும்.

உத்ஸவமஹிமை

மானுஷலிங்கத்தின் பிரதிஷ்டையானது எங்கும். எப்பொழுதும் செய்யத்தக்கது, ஆகையினால், அந்தந்த, லிங்கத்தின் விஷயத்தில் தீர்த்தநக்ஷத்திரத்தை, எவ்வாறு நிர்ணயிப்பது? என்று ஷண்முகர் கேட்டதற்கு பதிலாக, சிவனார் உத்ஸவகாலத்தைக் கூறியுள்ளதாவது, அரசனின் பட்டாபிஷேகநக்ஷத்திரம், பிறந்தநக்ஷத்திரம், சுவாமியின் பிரதிஷ்டாநக்ஷத்திரம், ஆசாரியரின் ஜன்மநக்ஷத்திரம், கிராமத்தின் ஜன்மநக்ஷத்திரம், ராஜகுருவின் ஜன்மநக்ஷத்திரம் இவற்றில் தீர்த்தநக்ஷத்திரம் நிச்சயிக்கத்தக்கதாகும். உத்தரகாரணாகமத்தில் சிவபெருமான் ஷண்முகருக்கு உத்ஸவமகிமையைக் கூறும்பொழுது, ஆன்மாக்களின் பாவத்தை நீக்கவல்ல சிறந்த **சாம்பவீதீக்ஷையே** இந்த **பிரம்மோத்ஸவம்** என்றும், ஸகலபாவங்களையும் போக்குவதும், ஸர்வகல்யாணங்களைத் தருவதும், சிவஞானமளிப்பதும், பிரம் மோத்ஸவமே என்று கூறியுள்ளதுடன், இந்த உத்ஸவத்தை **“ஆண்டுதோறும் செய்யவேண்டும்“** என்றும் கூறியுள்ளார்.

ஸாது ஸாது மஹாஸேந வக்ஷ்யே அஹம் ச்ருணு ஷண்முக.
பரம் சாம்பவாதி தீக்ஷாக்யம் உத்ஸவம் பாபநாசநம்.
ஸர்வ கல்யாண மித்யுக்தம் உத்ஸவம் ஞான ஸம்பவம்.
தஸ்மாத் உத்ஸவ மாக்யாதம் உத்ஸவம் ப்ரதி வத்ஸரம்.

(உத்தரகாரணாகமம்)

ஒருமாதத்தில் உத்ஸவத்தின் தீர்த்தத்திற்குஉரிய திதியாவது. நக்ஷத்திரமாவது இருமுறை வந்திடின், முந்தியதைவிட்டுப் பிந்தியதில் தீர்த்தோற்சவத்தைச் செய்க. பிந்தியதிற், சங்கிராந்தியானால் (மாசப் பிறப்பாகில்) முந்தியதில் செய்க. முந்திய நக்ஷத்திரம் பூரணையோடு கூடிவரின் பிந்தியதை விட்டு முந்தியதில் தீர்த்தம் செய்க. ஒவ்வொரு வருஷத்திலும், எந்தமாசத்தில் எந்தத் திதியில், எந்த நக்ஷத்தித்தில் உற்சவம் செய்யப்பட்டுவந்ததோ, அந்த திதி அல்லது நக்ஷத்திரத்திலேயே ஆண்டுதோறும் உற்சவத்தைச்செய்தல்வேண்டும். வழக்கப்படி செய்யா விடின் கோயில் அதிகாரிகளுக்கும், கிராமமக்களுக்கும் க்ஷேமம் உண்டாகாது. சிகரத்தில் **ஸ்தூபிஸ்தாபனம்** இல்லாத கோயில்களில் உற்சவம் செய்தல் ஆகம சம்மதம் ஆகாது. உத்ஸவம் பலநாட்களில் செய்யுமாறு பலபிரிவுகளை உடையது. ஏழுநாள் முதலாகிய **உத்ஸவங்களுக்கே** கொடியேற்றம் செய்யத்தக்கது. **பார்த்திவே ஸாத்விகே சைவே வர்ஜயேத் கேது ரோஹணம்** (உத்தரகாரணாகமம்) ஐந்துநாள் உத்ஸவத்தை கொடியேற்றத்துடன் செய்யவேண்டிய கட்டாயம் இல்லை. விலக்காகவும் கூறப்பட்டு உள்ளது.

சாந்திகே பௌஷ்டிகே சைவ ந துவஜா ரோஹண க்ரியா |
ஸத்வஜம் நிர்த்வஜம் வாபி ஜயதம் காரயேத் புத: ||
தனதே காமிகே சைவ ஸாவச்யம் ஸ்யாத் த்வஜ க்ரியா |

என்று ரௌரவாகமம் ஐந்துநாள் உத்ஸவத்தை இருவகையிலும் விதித்துள்ளது.

ஏகாஹம் சாந்திகம் புரோக்தம் த்ரியஹம் பௌஷ்டிகம் மதம்.
பஞ்சாஹம் ஜயதம் புரோக்தம் ஸப்தாஹம் தனதம் ஸ்மிருதம்.
ஸார்வகாமிக மித்யுக்தம் நவாஹோத் ஸவகம் பரம். (ரௌரவாகமம்)

உத்ஸவத்தின் நேரம். ஒருமகோத்ஸவத்தின் மத்தியில் வேறுஒரு உத்ஸவம் செய்வதுவந்தால், அதனை இரக்ஷாபந்தனம், யாகம், தீர்த்தம் என்பவைகளை விடுத்து, அந்தஉற்சவத்தை மாத்திரம் இணைத்துசெய்க. இதற்குப் பிரமணாம் காமிகத்திலும், பீமசங்கிதையிலும் காண்க. ஒவ்வொரு தினங்களிலும் காலசந்தி உற்சவத்திற்செய்யும் ஹோமம், பலி முதலியவைகளைப் காலையில் பத்துநாழிகைக்கு உள்ளாகவும், (4மணிநேரம் 6மணி முதல் 10மணிக்குள்), சாயங்காலஹோமம், பலி முதலியவைகளை இரவு பத்துநாழிகைக்கு உள்ளாகவும் (மாலை மணி6முதல்10க்குள்) செய்தல் உத்தமம். காலாதீதத்தில் (காலம்கடந்தகாலத்தில் தாமதாக) செய்யும் கிரியைகள் பயன்படாதவை ஆகும். ஆகையால் காலந்தவறாது சிரத்தையோடு கிரியைகளைச் செய்தல்வேண்டும். மூன்றுநாள்செய்யும் உத்ஸவத்தையும், ஒருநாள் செய்யும் உத்ஸவத்தையும், கோயிலின் ஆசாரியரே நிச்சயித்துச் செய்திடவேண்டும். பொதுவாக உத்ஸவங்களுக்கு காலையில் யாகமுடிவும், மாலையில் துவக்கமும் அமையவேண்டும் என்று மகுடாகமம் கூறுகிறது.

உத்ஸவம் செய்யத்தக்க விசேஷகாலங்கள்

குறிப்பிட்ட மாதத்தின், திதி, நட்சத்திரம், புண்யகாலங்களைத்தவிர, மேலும் பலவகையில் இயற்கை இடர் முதலியன ஏற்படுகிற சிறப்பு காலங்களிலும், மஹாயாகமாகிய பிரம்மோத்ஸவத்தை பெருஞ்சாந்தி யாகவும், செய்து பயன்பெறலாம் என்கிறது உத்தரகாரணாகமம்.

யுத்தாரம்பே மஹோத்பாதே மஹாக்ஷோபே சவிட்வரே.
பூத பைசாச தாஹே ச மஹாமாரி ப்ரவர்த்தகே.
புத்ரார்த்தீ லபதே காலே ப்ரதிசூர்ய ப்ரதர்சகே.
ரஜநீந்த்ர தனுர் திருஷ்டே ராத்ரி யுபக்ரஹ தர்சநே.

அவர்ஷே த்யதிவர்ஷே ச ராக்ஞாம் துஸ்வப்ந தர்சநே.
பைசாசே விட்வரே சைவ ப்ராந்தி தர்சன ஸம்பவே.
ஏவம் காலே மஹாயாகம் ஸத்யஸ் சாந்திகரம் வரம்.

(உத்தரகாரணாகமம்)

இதன்பொருள் : நாட்டில் போர் துவங்கிடும் காலத்திலும், வால்நட்சத்திரம் முதலான பலவித கெட்டசகுனம் ஏற்படும்போதும், பெரியகலவரம் அல்லது குழப்பங்கள், ஏற்படும்போதும், பூதர், ராட்சதர், பிசாசுகளின் தொந்தரவு, துன்புறுத்தல்கள் ஏற்படும் போதும், மாரி, வைசூரி, ஏற்பட்டபோதும், பிள்ளைவரத்தைக் கேட்டுப்பெற்ற காலத்திலும், பகலில் இருசூரியனைப் பார்த்தபோதும், இரவில் வானவில்லைக் கண்டபோதும், இரவில் வேறு துணைக்கோள், மற்றும் கிரகங்களை வானில் கண்டபோதும், மழையின்றி, பஞ்சமுற்ற காலத்திலும், பெருமழையால் அவதியுற்ற காலத்திலும், மன்னர்களுக்கு தீயகனவுகள் தோன்றும்போதும். பிசாசுகளின்தொல்லை, அட்டகாசம் ஏற்படும்போதும், மக்களுக்கு அதிகபிரமை, அதிர்ச்சி, மனோபயம் ஏற்படும் காலத்திலும், உடனே அமைதியைத் தரவல்ல மஹாயாகமாக மஹோத்ஸவத்தைச் செய்யவேண்டும் என்கிறது காரணாகமம்.

மேலும் விழாதின கணிப்புமுறை.

ஸாயே சோத்ஸவ மாரப்ய ப்ராத ரேவா வப்ருதம் குரு.
ராத்ரி ஸாய மிதி புரோக்தம் திவா ப்ராத: ப்ரகீர்த்தித:.

பெருவிழாவை மாலையில்துவக்கி. காலையில் முடிக்கவேண்டும். இரவே சாயமென்றும், பகலே ப்ராதரென்றும் இங்கு கூறப்படுகிறது. சுப்ரபேதாகமம் உத்ஸவத்தை 9–7–5 நாட்களில் உத்தம மத்ய அதம பக்ஷமாகக் கூறி, இந்த தினசங்கியயை இருமடங்கு அல்லது மும்மடங்காகக் கொள்க என்கிறது. இதனால் (9 X 3 = 27 நாள், 7 X 3 = 21 நாள், 5 X 3 = 15 நாள் என்றும், 9 X 2 = 18 நாள், 7 X 2 = 14 நாள் என்றும், 5 X 2 = 10 நாள் என்றும், நாள் கணக்கில் 9 வகை உத்ஸவம் கூறப்படுகிறது).

தத்தினம் திரிகுணீ கிருத்ய ததாதௌ துவஜ முத்தரேத் |
த்விகுணே தத்திநாதௌ வா துவஜ மாரோப்ய புத்திமான் ||
துவஜா ரோஹண பூர்வம் வா பேரீதாடந பூர்வகம் |
திரிகுண த்விகுணே காலே காரயேத் தேசிகோத்தம: ||
அங்குரார்பண பூர்வே து ஆதி ராத்ரி யங்குரார்பணம் |

(சுப்ரபேதாகமம் 14–4–6)

உத்ஸவக்கிரியைகளில் பஞ்சகிருத்யம்:

உத்ஸவகாலத்திலே, செய்யப்படுகிற ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தைக்குறிப்பதால், இக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது பாசமாகிய மலத்தைநீக்கி வீடுபேறு அருளுவதற்காகவே கூறப்பட்டுஉள்ளன என்பதை இதன் மூலம் உணர வேண்டும். இதனை காரணாகமம், பகுத்து விளக்கிஉள்ளது. அதாவது, அங்குரார்ப்பணம், வாஸ்துசாந்தி பூஜை, கல்யாணஉத்ஸவம், உத்ஸவயாகம், பேரீதாடநானம். இவை **சிருஷ்டிகர்மம்** (படைத்தல்) என்றும், தேவதாஆவாஹனம், யாத்ராஸ்நபனம், துவஜாரோஹணம், வாஹநோத்ஸ வம், ஸந்தியா ஆவாஹநம் இவை **ஸ்திதிகர்மம்** (காத்தல்) என்றும், பலிபூஜை, தீர்த்தாங்குரம், ரக்ஷாபந்தனம், கணயாகம், அஸ்திரயாகம் இவைகள் **ஸம்ஹாரகர்மம்** (அழித்தல்) என்றும், துவஜஅவரோஹணம், மிருகயாத்ரா, கிருஷ்ணகந்தம், இவை **திரோபாவகர்மம்** (மறைத்தல்) என்றும், சக்தியாத்ரா, மத்ஸ்யலீலா, சண்டேசபூஜை, குருபூஜை இவைகள் **அநுக்ரஹகர்மம்** (அருளுதல்) என்றும் ஐவகையில் ஆகமம் பகுத்து விளக்கிஉள்ளது.

சோமாஸ்கந்தர் உலாசிறப்பு

உத்ஸவத்தில் சோமாஸ்கந்தமூர்த்தி வீதிஉலாவிற்கு எழுந்தருளுவது, தனிச்சிறப்பு ஆகும். பெருவிழாவில் 25மாஹேசமூர்த்தங்களுக்குள், மிகவும் சிறந்தது. **சோமாஸ்கந்தமூர்த்தம்,** இதற்கானகாரணத்தை காரணாகமம் சிறப்பாக விளக்குகிறது. சிருஷ்டியை உணர்த்திடும் உத்ஸவத்தில், எவ்வாறு பஞ்சகிருத்யமூர்த்தங்களான இருபத்தி ஐந்துவகை மாகேசமூர்த்தங்களும், **சாம்பவதீட்சைக்குரிய, 1. மண்டலம், 2. கும்பம், 3. அக்னி, 4. ஆசார்யர், 5. சிஷ்யர்** எனப்படும் ஐவகை அதிஷ்டானங்களும் எவ்வாறு? பொருந்தி அமைந்ததாகும் என்று ஷண்முகப்பெருமான் சிவபெருமானிடம் கேட்க, சிவனார் விளக்கி கூறியுள்ளது, 1மண்டலமூர்த்தி, 2அஸ்திரமூர்த்தி, கலசமூர்த்தி, 2சோமாஸ்கந்தர்மூர்த்தி, 3அக்னிமூர்த்தி, 4ஆசாரியர், 5சிஷ்யர்கள் என ஐந்தும் இருப்பதாகவும், இங்கு சிஷ்யர்களாக தீக்ஷிக்கப்படாத பக்தர்கள், ஆசையற்ற தீக்ஷிதர்கள், ஸமயஆசாரமில்லாதவர்கள் இருப்பார்கள் என்று விவரித்துள்ளார். சோமாஸ்கந்தரில் பரமேச்வரனே வாகீச்வரர் என்றும், போகசக்தியே (சோமாஸ்கந்தரின் அருகில் தனித்து உள்ள சக்தி) வாகீச்வரீ என்றும், இருவரின் நடுவில் உள்ள கந்தப்பெருமானே ஞானசிவாக்னி என்றும், இருப்பதனாலேயே, உத்ஸவம் சாம்பவீதீக்ஷை எனப்பட்டு, அதில் பக்தர்கள் அருள்நோக்கால் பயனடைவர் என்றும் கூறப்படுகிறது. சிவாக்னிவடிவினரான ஸ்கந்தர் இடம்பெறாத மற்று

மாகேச்வரமூர்த்தங்களில் தேவன்தேவி இருவரே இருப்பார்கள். ஆதலால் சோமாஸ்கந்ததேச்வரர் மூர்த்தமே மகோத்ஸவத்திற்கு ஏற்ற உத்தம சிவமூர்த்தம் ஆகும் என்றறிக. சோமாஸ்கந்தமூர்த்தி இல்லாதபக்ஷத்தில், நடராஜர், அல்லது சந்திரசேகரர், அல்லது கல்யாணசுந்தரதேவர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒருமூர்த்தத்தை முக்கியமாக மத்யமபக்ஷமாக கைக்கொள்ளலாம்.

(இதற்கான சான்று).

வாகீச்வரா கிருதிச் சம்பு: வாகீசீ போக சக்திகா.
சிவாக்னி ஸ்கந்த இத்யுக்தம் தஸ்மாத் ஞானாக்னிருச்யதே.
வீக்ஷ்யதே ஸர்வலோகாநாம் சோமாஸ் கந்தேச் வரம் விது:.
அன்யேஷா மபி தேவாநாம் தேவதேவீ த்வயம் ததா.
சிவாக்னி பாவநா நோ சேத் அன்யாம்ச சிவபேதகான்.
வர்ஜயேத் முக்யம் வசஷ்யாமி உத்ஸவேசம் ப்ரகீர்த்திதம்.
சோமாஸ் கந்தேச்வரா (அ)பாவே நடேசம் சசிசேகரம்.
வைவாஹ்யம் ஸ்யாத் உமேசம் ச மத்யமம் பரி கீர்த்திதம்.

(உத்தரகாரணாகமம்)

உத்ஸவமானது பஞ்சகிருத்தியங்களையும் உணர்த்துவதால், சிவனார், ஞான, கிரியா சக்திகள் இருவருடன் கர்த்தாவாக விளங்கியே ஐந்தொழிலாற்றுவதை உணர்த்திடவே சோமாஸ்கந்த மூர்த்திக்கு, தனித்தவீரசக்தியுடன் கூடியதாகவே உத்ஸவம் செய்யப்படவேண்டும். சோமாஸ்கந்தேச்வரருடன் ஒரேபீடத்தில், கந்தருடன் உள்ள பிரியாத யோகசக்தியும் கட்டாயம் உலாஉத்ஸவத்தின்போது இருந்திடவேண்டும். இருசக்திகளில் எதையும் விலக்கிவைக்கக்கூடாது. விலக்குவதால் பஞ்சகிருத்ய பாவனையை உத்ஸவம் உணர்த்தமையால் அது குற்றமாகஆகும். சிவனின் உத்ஸவகாலத்தில், சக்திஉத்ஸவத்தையும், சக்தியின்உத்ஸவம் முடியாதகாலத்தில் நடுவே சிறப்பாக சிவனுக்கு உத்ஸ வத்தையும் செய்யவேண்டும் என்கிறது காரணாகமம். சோமாஸ்கந்தரது வீரசக்தியை மற்ற மாகேசமூர்த்தங்களோடு சேர்த்திடுதல் பெருங்குற்றமாகி குலத்தை அழிக்கும். ஆதலால், தேவியை மாற்றிசேர்த்திடுதல் விலக்கத்தக்க கூடாதசெயலாகும். நடேச்வரரைமட்டில் தேவியின்றியும், பெருவிழாவில் ஊர்வத்திற்கு ஏற்கலாம். இனி உத்ஸவவகைகளைத் தனித்தனியே அறிவோம்.

பிரதிஷ்டாந்தோ (உ)த்ஸவம் குர்யாத் ஸபதாகம் தத்ர காரயேத் |
ஏகாஹம் வா ப்ரகர்தவ்யம் உத்ஸவம் சைவ காரயேத் ||

பிரதிஷ்டோத்ஸவம்

புதியகோயிலில், முதன்முதலாக, லிங்கபிம்பாதிகளில், தேவதையை, மந்திரத்தால் நிலைபெற்றுஇருக்கச்செய்வதே பிரதிஷ்டை எனப்படும். இது ஆவர்த்தம், புனராவர்த்தம், அனாவர்த்தம், அந்தரிதம் என நான்கு வகையாக, கும்பாபிஷேகமாக, செய்யப்படும். இவ்விதம் கும்பாபிஷேகம் (பிரதிஷ்டை) முடிவுற்றதும், அன்று இரவில் துவங்கி 7நாளிலோ, ஒருநாளிலோ செய்வதும், ஆண்டுதோறும் அதேமாதநட்சத்திரத்தில் முறையே செய்யப்படுவதும் பிரதிஷ்டோத்ஸவம் எனப்படும். இதனை பூர்வகாரணாகமப்படி அறியலாம்.

பிரதிஷ்டா யாக மாரப்ய யத் ருக்ஷம் சோத்ஸவாந்தகம் |
பிரதிஷ்டோத்ஸவ மேதத் ஹி தத்வா ப்ரத்யப்த மாசரேத் ||
(பூர்வகாரணாகமம்)

நித்யோத்ஸவம்

ஆலயத்தின் நித்யபூஜையின் அங்ககிரியைகளுள் உத்தமமானது நித்யஉத்ஸவமாகும். நித்யபூஜை நித்யாக்னிகார்யம், நித்யபலி முடிந்த பின்பு அன்னலிங்கத்தை நிர்மாணம்செய்து பூசித்து, சந்திரசேகர், அஸ்திரதேவர், பாசுபதமூர்த்தி இவற்றில் ஒன்றுடன் இணைத்தோ, தனித்தோ அன்னலிங்கத்துடனோ மூன்றுவேளையோ, இருவேளையோ, அல்லது ஒருவேளையாவது உத்ஸவம் செய்துமுடித்தல் நித்யோத்ஸவம் ஆகும்.

பூர்வான்ஹே புஷ்பலிங்கம் ஸ்யாத் மத்யான்ஹே து அன்னலிங்ககம்.
அக்ஷதம் சைவ ஸாயான்ஹே அர்யாமே து பாதுகா.

மேற்கண்டகூற்றால் கோயிலுக்குள் செய்யபப்டும் நித்யஉதஸ்வ புறப்பாட்டிற்கு மூவகை லிங்கங்களும் அல்லது பாசுபதாஸ்திரமூர்த்தி விக்ரஹமும், பலிநாயகபேரமும் ஏற்றது. பள்ளிஅறைக்கு சென்றுவர பாதுகையும் ஏற்றது. காலையில் புஷ்பலிங்கம், மதியத்தில் அன்னலிங்கம், மாலையில் அக்ஷதலிங்கத்துடனோ மூன்றுவேளையும், அன்னலிங்கத்துடனோ, கோயிலை வெளிச்சுற்றில் மும்முறை வலம்வந்து கோபுரவெளிப்புற பலிபீடத்தைச்சுற்றியபின்பு, அன்னலிங்கத்தை மீண்டும் ஆலயம் புகுந்து, நிலைபெறச்செய்தபின்பு அந்த லிங்கத்தை புனிதகுளத்து தீர்த்தத்தில் சேர்த்துக்கரைத்து, முடித்தல் நித்யோத்ஸவ செயல்முறையாகும்.

நவான்ன லிங்க ஸம்யுக்தம் அத நித்யோத்ஸவம் நயேத்.
ஸர்வை ரேதைஸ் ஸமாயுக்தம் நித்யோத்ஸவ மதாசரேத்.
கிராமே வா நகரே வாபி ததா ப்ராகாரே ஏவ வா. (உத்தரகாமிகாகமம்)

CENTRE FOR SAIVA STUDIES Puducherry

ஸங்கிரமண உத்ஸவம் (மாதப்பிறப்பு விழா).

மாதசங்கிராந்தியானது, அதிகாலையிலோ, முற்பகலிலோ, நடுப் பகலிலோ, பிற்பகலிலோ, சாயங்காலத்திலோ, முன்னிரவுப் பிரதோஷ நேரத்திலோ, மாதம்பிறந்திடும்பொழுது, எந்த நேரத்தில் மாதம்பிறக் கிறதோ, அப்பொழுது "தேவோத்ஸவம் ச தத்ரைவ பூஜாம் குர்யாத் சிவஸ்ய ச" என்ற வசனப்படி ஸங்கிரமணோத்ஸவத்தைச் செய்ய வேண்டும். பூஜையுடன்கூடிய தீர்த்தோஸ்வத்துடன் இது ஒருநாள் உத்ஸவமாகச் செய்யப்படவேண்டும் என்கிறது காரணாகமம்.

உஷக்காலே து பூர்வான்ஹே மத்யான்ஹே வா பரான்ஹகே.
ஸாயான்ஹே ச ப்ரதோஷே து ஸங்கிராமே ஸம்பவே ஸதி.
தீர்த்தம் ச யஜனம் கிருத்வா ஏகாஹோத்ஸவ மாசரேத்.
ஆருத்ராந்தம் ஸர்வமாஸேஷு விஷு கிரஹண மந்தகம்.
அன்ய புண்யதினே சைவ உத்ஸவம் காரயேத் புத:

(சூக்ஷ்மாகமம்)

உபராகோத்ஸவம் (கிரஹணகால விழா)

சூரியகிரகணத்தில் சந்திரகிரகணத்தில் ராகு ராகுவிமோசனகாலமும் கிரஸ்தஸ்பர்சகாலமும், புண்யகாலமாகும். சூரியசந்திரகிரஹணம் ஏற்படுகிற உபராக புண்யகாலத்திலும், இரவிலோ, பகலிலோ கிரகணம் ஏற்படும்பொழுது, அந்தநேரத்தில் தீர்த்தக்கரையை அடைந்து,சிறப்பான ஜபத்துடன்கூடிய பூஜை மற்றும் தீர்த்தோத்ஸவத்தைச் செய்ய வேண்டும்.

ராத்ரா வா(அ)த திவா வா(அ)பி க்ரஹணே சந்திரசூர்யயோ: |
தத்காலே தீர்த்த மாச்ரித்ய பூஜயேத் து விசேஷத: |

(பூர்வகாரணாகமம் 133–17)

கிரஹண காலத்தில் சைவோத்ஸவமாக ஒருநாள்விழா செய்யப் படுவது, பத்துமடங்கு உயர்வான பயனைத் தரவல்லது. இத்தருணம் பாவகாலமில்லை. உபராகபுண்ணியகாலம் என்றே பெயர்பெறும்.

அமாவாஸ்யோத்ஸவம் (அமாவாசைவிழா)

மாதந்தோறும் வருகிற அமாவாசைதிதி அன்று ஏகதினோத்ஸ வமாக செய்வது அமாவாஸ்யோத்ஸவம் ஆகும். அன்று மூலலிங்கம் மற்றும் ஏனையமூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம் இவற்றைச்சிறப்பாகச் செய்து, காலையில் உத்ஸவத்தைச் செய்யவும் இதன் பலனாக, அங்கு அகாலமழை, வியாதி முதலியன ஏற்படாது.

அமாவாசையானது திங்கள்கிழமையோடு, சேர்ந்துவருமானால், அது, விஷுபுண்ணியகாலத்திற்கும், சிவராத்திரிக்கும், ஒப்பான விசேஷ புண்யகாலமாகும். திருவாதிரையோடும், சோமவாரத்தோடும் கூடிவரும் அமாவாசையானது, கோடியாகத்தின் பயனையும், கோடிதானம், தவம் இவற்றின் பயனையும் தரும். அமாவாசைஉற்சவத்தை செய்பவர் புண்ணியப்பேற்றை அடைவர் என்கிறது ஆகமம்.

பௌர்ணமீ உத்ஸவம். (பர்வோத்ஸவம்)

மாதந்தோறும் வரும், முழுநிலவு இரவில்உள்ள பௌர்ணமிதினத் தன்று அந்தந்தமாதத்தின், சிறப்புப்பொருள்களால் சிறப்பாக பூஜை, அலங்காரம், நிவேதானாதிகளைச் செய்து, மாலையில் உத்ஸவத்தைச் செய்வது. பூர்ணிமோத்ஸவம் ஆகும். இதனால் இஷ்டகாமியஸித்தியும், செல்வச்செழிப்பும் ஏற்படும். இது பர்வோத்ஸவம் என்றும் கூறப்படும்.

புண்ணியகால உத்ஸவம் (நைமித்திகோத்ஸவம்). (ஷடசீதிமுகம், விஷ்ணுபதி, விஷுகாலம்)

ஸங்கிராந்தௌ ச சதுர்தச்யாம் பர்வணி யுபய பக்ஷயோ: |
அயனே விஷுவே ராகு க்ரஸனே மாஸ பூஜகே |
ஏதேஷு வன்யேஷு ருக்ஷேஷு நைமித்திக மிஹோச்யதே |
நைமித்திகம் து நித்யாந்தே கர்த்தவ்யம் அவிரோதத: |

(பூர்வகாரணாகமம்)

அர்தோதயம், மஹோதயம், முதலிய புண்ணியகாலத்தில் செய்யப்படுவதாகும். ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி ஆகிய நான்கு மாதங்களின் பிறப்புநேரம், ஷடசீதிமுகம் என்ற புண்ணிய காலமாகும். இவற்றில் மாதம்பிறந்தபிறகு, சூரியன்ராசியில் புகுந்தநேரம் முதல் பதினாறு நாழிகைக்கால அளவு (6 1/2 மணிநேரம்) மட்டில் புண்ணியகாலமாகும். அச்சமயத்தில் ஷடசீதி புண்யகாலத்தைச்செய்து முடித்திடவேண்டும்.இவ்வாறே கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவனி என்கிற நான்கு மாதப்பிறப்பாகிய சங்கிரமணமும், விஷ்ணுபதி என்ற பெயருள்ள புண்ணியகாலமாகும். இவைகளில் மாதம்பிறப்பதற்கு முன்பாக 16நாழிகை புண்ணியகாலமாகும். அச்சமயத்தில் உத்ஸவத்தை செய்துமுடித்தல் விதிமுறையாகும்.

அயனாரம்ப உத்ஸவம்

(வருஷப்பிறப்பு தைப்பொங்கல்விழா)

தக்ஷிணாயனத் துவக்கமாகிய ஆடிமாதப் பிறப்பாகிய சங்கிராந்தியிலே மாதம்பிறக்கும் முன்பாக பதினாறு நாழிகை புண்ணியகாலமாகும். இதில் தக்ஷிணாயனாரம்ப உத்ஸவம் செய்யத்தக்கது ஆகும். உத்தராயணத்துவக்கமாகிய தைமாதப் பிறபாக்கிய மகரசங்கிராந்தியிலே மாதம்பிறந்த பின்பு பதினாறு நாழிகை புண்ணியகாலமாகும். இத்தருணமாகிய ஆறுமணிநேரத்தில் பூஜையுடன்கூடிய உத்ஸவத்தைச் செய்வது, அயனோத்ஸவம் ஆகும். "வர்த்தமாநே துலா மேஷே நாட்யஸ் து உபயதோ தச"

விஷுவஉத்ஸவம்.

சித்திரை, ஐப்பசி என்கிற இரண்டு மாதங்களின் பிறப்புக்காலம் **விஷுபுண்ணியகாலம்** ஆகும். இவற்றில் மாதம்பிறப்பதற்கு முன்பு எட்டுநாழிகையும், பின்பு எட்டுநாழிகையுமாக 16 நாழிகை விஷு புண்ணியகாலமாகும். இத்தருணத்தில் செய்வது விஷுவோத்ஸவம் ஆகும். நைமித்திகஉத்ஸவங்களை நித்யத்திற்கு, கிரியாகாலவிரோத மில்லாதவாறு, நித்யபூஜையின் முடிவில் செய்யப்படவேண்டும் என்பது கட்டாயவிதியாகும். இதில் அபிஷேக அலங்காராதி கிரியைகளை இணைத்துச்செய்யவேண்டும்.

பவித்ரோத்ஸவம் (பெருஞ்சாந்தி விழா).

நியூநாதிரிக்தம் தத்ஸர்வம் கர்மணா மனஸா(அ)பிவா.
பதநாத் திராயதே யஸ்மாத் தஸ்மாத் ஏதத் பவித்ரகம்.

பூஜைகளின் ஸகலவிதமான குறைகளைநீக்கிப்ப ரிசுத்தம் செய்வது, நிறைவுறச்செய்வதால் இது பவித்ரஉத்ஸவம் என்று பெயர்பெற்றது. ஒருவருடத்தில் நாள்தோறும் செய்யும் பூசையில் மந்திரலோபம், திரவியலோபம், கிரியாலோபம் முதலியவைகளினாலும், மோகத்தினாலும், அறியாமையாலும், ராஜசோரபயம் முதலானவற்றினாலும், நேர்ந்த குறையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, ஆண்டுக்கு ஒருமுறை தவறாமல் பவித்திரசமர்ப்பணம், செய்யப்படவேண்டும். இந்த பவித்திரம் நாள்தோறும் பூசைமுடிவில் செய்வது தைவசிகம் என்றும், நித்யபவித்ரம் என்றும், வருஷந்தோறும் செய்வது வார்ஷிகம் என்றும் இருவகையாகும். நித்தமும் பட்டுநூல் மாலைக்கு சூத்திரத்திற்கு பதிலாக தர்பை அல்லது புஷ்பம் முதலியவற்றாலும், ஆண்டிற்கு

ஒருமுறை பட்டு முதலிய சூத்திரத்தால் விசேஷமாக யாகசாலை உபசாரத்துடன் செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

ஆஷாடாதி திரிமாசே ச துலா விருச்சிக ஏவச.
நியூநாதி பூரணார்த்தம் ச பவித்ரா ரோஹணம் குரு.
பூர்வபக்ஷே சதுர்தச்யா மேவா(ஆ)ஷாடே பவித்தரகம்.

இதனைச் செய்திட ஆடி, ஆவனி, புரட்டாசி மாதங்கள் உத்தமாதித்ரயம் ஆகும். சதுர்த்தசியிலும், அஷ்டமியிலும், பவித்ரம் அணிவிப்பது உத்தமமாகும். இதன் விதிமுறைகளை ஆகமங்களில் பவித்ராரோபணவிதியில் விரிவாகக்காணலாம். கார்த்திகைமாத கிருத்திகைதீபத்திற்கு பின்பு இதனைச் செய்யக்கூடாது. விருச்சிகே தீபத: பச்சாத்த பவித்ரம் வர்ஜயேத் புத: இதனால் ஆன்மாக்களுக்கு ஆதிதைவிகம், ஆதிபௌத்திகம், ஆத்யாத்மிகம் என்னும் மூவகைத் துக்கங்களிலிருந்து விடுதலையும், பாவநீக்கமும், போகமோக்ஷ ஸித்தியும் ஏற்படும்.

நவ சப்தாஹ பஞ்சாஹம் திரயஹ மேகாக முச்யதே |
அத ஊர்த்வம் ந கர்த்தவ்யம் ஸர்வ சாஸ்த்ரேஷு புத்திமான் |
தினம் பிரதி விசேஷேண பவித்ரம் விஸ்ருஜேத் புத: |
அருணோதயே ஸ்நாநகாலே சுத்த பாத்ரோபரி நியஸேத் ||
(சூக்ஷ்மாகமம்).

ஏகாஹஉத்ஸவங்கள் (ஒருநாள் விழாக்கள்)

ஒருநாள் விழாவானது, கோஷணம், கேவலம் என்று இருவிதமாகும். பேரீதாடனத்தோடும், ரக்ஷாபந்தனத்தோடும், சூர்ணோத்ஸவம், தீர்த்தோத்ஸவத்தோடும் செய்யும் ஒருநாள்விழாவானது கோஷணம் எனப்படும். இரக்ஷாபந்தனமும், பேரீதாடனமும் இன்றி மற்றதைச் செய்யும் ஒருநாள்விழாவானது கேவலம் எனப்படும். "பலி ஹோமாதிகம் ஹித்வா பிரமணம் கேவலம் துவா" (உத்தரகாமிகாகமம்–64–18) கோஷணம் ஸர்வஸித்தியையும், கேவலம் முக்தியையும் கொடுக்கும். "ஏகாஹம் உத்ஸவம் குர்யாத் பேரீதாடன பூர்வகம்" இதனை கருத்தாவி னுடைய ஜனனதினம், அவர் முக்தியடைந்த தினம், கர்தாவிரும்பும் நாள், மாதாந்திர திருவாதிரை நக்ஷத்திரம், சங்கிராந்தி (மாதப்பிறப்பு), இருசதுர்த்தசி (சிவனின்திதி) இருபக்ஷஅஷ்டமிகள், அமாவாசை, பௌர்ணமி, இருஅயனாரம்ப புண்ணியகாலம், இருகிரஹணபுண்ணிய காலம், சித்திரைமாஸ பருவ தமனோற்சவம், பவித்ரோத்ஸவம், மாசபூஜோத்ஸவம், கிருத்திகாதீபோத்ஸவம், சிவராத்திரிபுண்யகால உத்ஸவம், வர்ஷாதி உத்ஸவம், டோலோத்ஸவம் ஊஞ்சல், உடுபோத்ஸவம் (தெப்பம்), வசந்தோத்ஸவம் (ஸ்தானோத்ஸவம்),

பூங்காவனவிழா, பர்வதாதிக்கு விஜயோத்ஸவம், பக்தோத்ஸவம், (அடியார்கள்விழா) மேலும் புதுநீர்வரத்தின் போதும், புத்தரிசியின் நவநைவேத்யஉத்ஸவம், காம்யோத்ஸவம், நக்ஷத்திரோத்ஸவம், ஆடிப்பூரஉத்ஸவம், வாரோத்ஸவம், முதலானவற்றையும், மாசிமகம், துலாவிஷு முதலியவற்றின் தீர்த்தோத்ஸவத்தையும், மற்றய பலவகை மங்கள காரியங்களிலும், ஒருநாள் உத்ஸவமாக செய்யப்படவேண்டும் என்று உத்தரகாமிகாகமம் கூறி உள்ளது. ஒருநாளில் செய்யப்படுவது "சைவஉத்ஸவம்" என்று பெயர்பெறும். (பரம்பொருள் சிவம் ஒன்றே என்பதால் இப்பெயரை உடையதாகிறது). இது ஸர்வமங்களத்தையும், ராஜவிருத்தியையும், புக்திமுக்தியையும் தரவல்லதாகும். இந்த உத்ஸவம் சிவப்ரீதியையும் தரவல்லதாகும். இதனை மாலையில் துவங்கி மறுநாள் காலையில் தீர்த்தம் அளித்திடுமாறு இருவேளையில் ஆலயஆசாரியர் விருப்பப்படி நிச்சயித்து, செய்யவேண்டும் என்று மகுடாகமம் கூறுகிறது. இதற்கு சதாசிவர் ஒருதினத்தின் அதிதேவதை ஆவார்.

திரயாஹம் சைவ மேகாஹம் ஆசார்யஸ் யேச்சயா திசேத்.
பிராதக் காலே சாவபிருதம் ஸாயங்காலே ச ஸாதயேத்.

(மகுடாகமம்–28)

கர்த்ரு வாஞ்சா வசாத் க்லுப்த காலேஷ் வேதத் ச வாமதம்.
கர்த்ரு ஜன்மா வஸானர்க்ஷே சார்த்ரா நக்ஷத்ரே ஏவ வா.
சதுர்தச்யா மதாஷ்டம்யாம் பர்வணியுபய பக்ஷயோ:.
அயனே விஷுவே ராகு தர்சனே தமனோத்ஸவே.
பவித்ரே மாஸபூஜாயாம் கிருத்திகா தீபரோஹணே.
ஸம்வத்ஸராதி லேகாயாம் நவதோயா ஆகதா வபி.
பூர்வ பால்குன நக்ஷத்ரே நவ நைவேத்ய கர்மணி.
ஏவம் பிரத்யப்த ஸம்யுக்தம் புக்தியை நோசேத் விமுக்தயே.
அன்யஸ்மின் மங்களே கார்யே குர்யாத் ஏகாஹ முத்ஸவம்.

(உத்தரகாமிகாகமம்)

ஒருநாள் உத்ஸவம் செய்முறையால் மூவகைப்படும். அவை கொடியேற்றமின்றி அங்குராதி தீர்தாந்தமாக செய்யப்படுவது பாவனோத்ஸவம் என்றும், பலிஹோமங்களை நீக்கி இருவேளையில் செய்வது சாந்திகம் என்றும், பகலில் மட்டும் ஒருவேளை செய்யப்படுவது மாங்கள்ய உத்ஸவம் என்றும், பெயர்பெறுவதாக உத்தரகாரணாகமம் தெரிவிக்கிறது.

ஆருத்ராஉத்ஸவம் (திருவாதிரைத்திருவிழா)

பன்னிருமாதத்திலும், பகலில் திருவாதிரை நக்ஷத்திரம் உள்ளபோது, தீர்த்தோத்ஸவம் செய்யும்வகையில், ஒருநாளிலோ, பலநாளிலோ செய்யப்படுவது ஆதிரைவிழா ஆகும். இது மார்கழியில் அல்லது தையில் மிகவும் சிறப்பு உடையதாய், நெய்அபிஷேகத்துடனும், சிறப்புச் சந்தனப்பூச்சுடனும், சூர்ணோத்வஸத்துடனும் தீர்த்தஉத்ஸவம் செய்துமுடிக்க வேண்டியதாகும்.

"ஆர்த்ராயாம் ஸர்வமாஸேஷு கர்த்தவ்யம் து சிவோத்ஸவம்

(சுப்ரபேதாகமம்)

உத்தரகாமிகாகமம் ஒன்பதாம் படலத்தில் கூறப்படுகிறது. மேலும் பிரம்மதேவரின் திருநக்ஷத்திரமான ரோஹிணீயிலும், மகாவிஷ்ணுவின் திருநக்ஷத்திரமான திருவோணாத்திலும் சிவனுக்கும் உத்ஸவத்தை மாதந்தோறும் செய்யலாம் என்கின்றன சிவாகமங்கள்

பலநாள் திருவிழாக்கள்.

ஸாகல்ய (நவவித) உத்ஸவங்கள் மூன்றுநாள்விழா, (திரிதின கௌணஉத்ஸவம்). கௌண உத்ஸவம் மூன்றுநாட்களில் செய்யப்படும் உத்ஸவம் முக்குணங்களைக் குறிப்பதால் கௌணோத்ஸவம் என்றும், சுத்தஸாத்விக குணத்தர் சிவனாவதால் இவரது மூன்றுநாள் உத்ஸவம் சாத்விகஉத்ஸவம் என்றும் பெயர்பெறும் உத்தரகாமிகம் கொடியேற்றம் முதலாக கொடியிறக்கம் வரையிலான கிரியைகளை உடையதே உத்ஸவம், "த்வஜாரோஹாத்யவரோஹாந்தா கிரியா உத்ஸவ:" என்கிறது (உத்தரகாமிகாகமம்) ஆகமங்கள் 7நாள் முதலாகவே கொடியேற்றத்தை கட்டாயவிதியாக்கி உள்ளன. (காமிகம் சுப்ரபேதம் முதலிய). சில ஆகமங்கள் 3 நாள் மற்றும் 5 நாள் உத்ஸவத்தை விரும்பினால் கொடி ஏற்றத்துடனும் செய்யலாம் என்கின்றன. தீர்த்ததினத்தை நிச்சயித்து அத்தினத்தின் முன்தினத்திற்கு முன்தினத்தில் சாயங்காலையில் துவங்கி ஆறுகாலங்களில் தினதேவதை மற்றும் திக்தேவதைகளின் பலிகளை அளித்து மூன்றுநாள் உத்ஸவத்தைச்செய்க. நான்காம் நாள் காலையில் தீர்தோத்ஸவத்தைச்செய்க. சுப்ரபேதப்படி ருத்ரர், ஈச்வரர், ஸதாசிவர்கள் 3தினங்களின் அதிதேவர்கள் ஆவர். பஞ்ச திரியைக ருக்ஷேஷு தசஷட் த்விதயம் பலிம். (சுப்ரபேதம் 14–9). இது சிவப்ரீதியை யும், கிராமரக்ஷையையும் ஏற்படுத்தும், சித்தி தருவதாகும். ஒன்பதுநாள் உத்ஸவம் (தைவிகஉத்ஸவம்). (சௌக்யம்) இதனை பூர்வகாரணம் சௌக்கியோத்ஸவமென்றும், உத்தரகாரணம் தைவிகமென்றும் கூறுகிறது. தீர்த்ததினத்தை நிச்சயித்து, அதற்குமுன் ஒன்பதாம்நாளில்

மாலையில் ஆரம்பித்து இருவேளையுமாக பதினெட்டுகாலம் பலிதானம்செய்க. கொடியேற்றம் முதல் கொடியிறக்கம்வரையில் செய்யப்படுவதே மஹோத்ஸவம் ஆகும். ஒன்பதுஉத்ஸவநாளிலும், இரவில், தினமும், ஒன்பதுதின தேவதைக்கு ஒன்பதுவகை சிறப்புப்பொருள்களால் பலிகொடுத்து, திருப்தி செய்யப்படவேண்டும். அவர்கள் முதல் நாளிலிருந்து முறையே, 1.கணபதி, 2.பூதங்கள், 3.ரிஷிகள், 4.இந்திரன், 5.பிரம்மா, 6.விஷ்ணு, 7.ருத்திரா், 8.ஈச்வரா், 9.சதாசிவா் என்பவர்கள் தினங்களின் அதிதேவதைகளாவா். ஒன்பதுநாள்உத்ஸவம், லோகரக்ஷையையும், உலகஅமைதியையும் அளிக்கும்.

துவாதசாஹ உத்ஸவம் (12நாள் பைத்ருகவிழா)

பூர்வகாரணாகமம் **பைத்ருகம் த்வாதசாஹம்து** என்று 12தினங்களில் கூறியுள்ளது. இது தினசங்கியை என்பதை துவஜாம்ராஹணம் முதலாகக் கொள்வதும் ஒருமுறை. அவ்வாறாயின் அதிவாஸகாலம் நாள்கணக்கிலும், பலிகணக்கிலும், விடுபடும் நாள் ஒற்றைப்படை இலக்கிலும், பலிதானகாலம், இரட்டைப்படை இலக்கத்திலும், அமைவது ஆகமமரபு ஆகும். இதன் பயனாக மக்களுக்கு மகிழ்ச்சியையும், தேவர்களின் பிரீதியும், முக்தியும் ஏற்படும். காமிகாகமம் 12தின தேவதைகளாக முதல்நாளிலிருந்து முறையே கணபதி, பைசாசர்கள், பிரம்மா, கந்தர்வா், பூதங்கள், முருகன் கந்தா், ரிஷிகள், நாகங்கள், இந்திரன், விஷ்ணு, ராக்ஷஸர்கள், சிவன் இவர்களை தினாதிதேவதைகளாக சிறப்புபலி பூஜைக்கென கூறியுள்ளது.

“பூர்வம் தியக்த்வா பரம் புரோக்தம் தினதிரவ்யம் ச தேவதா:’ என்று. மேலும் இவற்றில் கடைசியிலிருந்து முறையே 1, 3, 5, 7, 9 நாட்களுக்கு தினதேவதையைக் கொள்ளுமாறு வேறுவகையையும் கூறுகிறது. 12 நாள் உத்ஸவம் ஸகலருக்கும், ஸகல தேவா் களுக்கும் மகிழ்ச்சியைத் தரும்.

திரயோதசாஹ உத்ஸவம் (13நாள் கௌமார உத்வஸம்) (காமிகம், காரணம், சூட்சுமம் முதலானவற்றில்)

பதிமூன்றுநாளில் செய்யப்படும் உத்ஸவத்தை கௌமாரஉத்ஸவம் என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. சாயங்காலத்தில் துவக்கி, தொடர்ந்து இருவேளைகளிலுமாக, இருபத்திஆறுகாலத்திற்கு பலியிட்டு, பதினான்காம்நாள் காலையில் தீர்த்தோத்ஸவத்தைச் செய்யவேண்டும். உத்ஸவதினங்கள் 13க்கும் முறையே, கணேசா்,

பூதங்கள், ரிஷிகள், இந்திரன், பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், ஈச்வரர், சதாசிவர், கந்தர், லக்ஷ்மீ, சண்டேசர் ஆகியோர் 12தின அதிபதிகளாக, சிறப்பாக பூசிக்கத்தக்கவர்கள் ஆவர். இவர்களுக்கு சிறப்புப்பொருள் கொண்டு பலிதருதல் வேண்டும். பதிமூன்றுநாள் செய்யப்படும் இந்த உத்ஸவம் கோயிலில் தெய்வஸாந்நியத்தியத்தைத் தருவதாயும், ஸர்வஸித்தியைத் தருவதாயும் சூட்சுமாகமம் கூறுகிறது.

பஞ்சதசாஹ உத்ஸவம் (15நாள் உத்ஸவம்) (ஸாவித்ர உத்ஸவம்)

பதினைந்துதின உத்ஸவத்தை உத்தரகாரணாகமம் "பக்ஷம் ஸாவித்ர மித்யுத்தம்" என்று உத்தமதிரயத்தில், அதமபக்ஷத்தில் ஸாவித்திரம் என்றபெயரில் கூறுகிறது. காமிகம் இதனை சௌக்யம் தரும் பக்ஷோத்ஸவம் என்று கூறுகிறது. முன்தினம் மாலை யில்துவங்கி, முப்பதுகாலம் பலியிட்டு, பதினாறாம் நாட்காலையில், தீர்த்தோத்ஸவத்தைச் சய்வது முறை. இது ஸொக்கியத்தைத் தருவதான உத்ஸவம் ஆகும்.

சப்தவிம்சதிதின உத்ஸவம். (27நாள் உத்ஸவம்) (சௌரஉத்ஸவம்). 27நாளில் செய்யப்படும் பெருவிழா).

ஸ்ரீமத் காரணாகமம் ப்ரதிஷ்டாமகாதந்திரமாகிய, உத்தரகாரணத்தில், "ஸௌரோத்ஸவம் து ப்ரதமம்" என்றும், "ஸப்தவிம்சத் தினம் சௌரம்" என்றும் உள்ளவசனத்தால் இருபத்தியேழுநாள் சிவோத்ஸவம் மிகச்சிறப்பாகவும் மிகவிரிவாகவும் கூறப்பட்டு உள்ளது. இப்பெருவிழாவானது துவஜாரோஹண பூர்வகமாயும், மூவகை அங்குரார்பணங்களோடும் சிறப்பாக 44 அங்குரபூசையுடனும், ஒன்பதுகொடிஏற்றத்துடனும் 9ஹோமகுண்டங்களுடனும், ஏழுவகை யான யாகங்களுடனும் செய்யத்தக்கது. முதல்நாள் மாலையில் துவஜாங் குரத்துடன் துவக்கி துவஜஸ்தம்ப, விருஷபடபிரதிஷ்டைக்கான அதிவாஸயாகத்தையும் மறுநாள் காலை யாகமுடிவில் இவற்றை சேர்த்து உத்ஸவமூர்த்திகளின் முன்நிலையில் கொடியேற்றத்தைச் செய்து அஸ்திரதேவரில் பேரீதாடனத்துடன் தேவதாஆவாஹனாதிகளைச் செய்தபின்பு மாலையில் யாகத்திற்கான யாகாங்குரார்பணத்தைச் செய்து, 8ம்நாள் காலைவரை 7நாளில் சப்தாஹமாக 14பலியுடன், கணேசயாக உத்ஸவத்தை செய்துமுடித்து, கணேசருக்கு யாககலசாபி ஷேகத்தைச் செய்துமுடித்து, அன்றே 8ம்நாள் மாலைதுவங்கி, கந்தயாகத்தை பஞ்சாஹவிதிப்படி 10கால பலியுடன்செய்து

பதிமூன்றாம்நாள் காலையில் ஷண்முகருக்கு யாககலசாபிஷேகத்தை செய்து கந்தயாகத்தையும் முடித்து, தொடர்ந்து 13ம் நாள் மாலை தொடங்கி ஐந்துநாட்களுக்கு, அஸ்திரதேவருக்கு யாகத்தைச்செய்து, 18ம் நாளில் காலை அஸ்திரதேவருக்கு யாககலசாபி ஷேகத்தைச் செய்துமுடித்து, 18ம்நாள் அன்றுமாலையே சிவனுக்கு பிரதான மஹாயாகத்தை தீர்த்தாங்குரத்துடன் துவக்கி 9நாள் நவாஹவி திமுறைப்படி 9நாட்கள் முறையே 18காலம் பலியிட்டுத்தொடர்ந்து செய்து 27ம்நாள் காலை தீர்த்தோத்ஸவத்தைச்செய்க. பின்பு அவரோஹணம் செய்து முடித்தல் ச்பதவிம்சதிதின உத்ஸவமாகும்.

மண்டல உத்ஸவம்.

இதனைத் தொடர்ந்து இவ்வாறே தேவிக்கு ஒன்பதுநாள் உத்ஸவத்தை 36ம் நாள் காலைவரையிலும், செய்துமுடித்து, அன்றுமாலையே தொடங்கி சண்டேசரருக்கும் 63 பக்தாதிகளுக்கும் 9நாள் உத்ஸவம்செய்து, 45ம் நாள் காலை தீர்த்தத்துடன் முடிப்பது திரிபக்ஷமண்டலோத்ஸவம் எனப்படுகிற 45நாள் உத்ஸவமாகும். பஞ் சமூர்த்திகளின் உத்ஸவமாக சௌரோத்ஸவமாக, பஞ்சசத்வாரிம்சத் தின் உத்ஸவம் ஆகும்.

காரணாகமம், நக்ஷத்திரஎண்ணிக்கையில் 27 நாட்களுக்கு சிவனுக்குமட்டுமே பிரம்மோத்ஸவத்தை விரிவாகக்கூறுகிறது. தனித்தனியே 27 நாட்களுக்கும் உரிய 27தின ராத்திரியின்பெயர்கள், 27அதிதேவதைகள், பேரயாத்ரைகள், 27தினயானகிரமம் (வாஹனம்) அனைத்தையும் 27 வகையாக விளக்கி உள்ளது. அதன் சுருக்கமாக 27வகையில் 27பலிதிரவ்யம், 27தீர்த்ததிரவ்யம், 27ஆடைவகை, 27சந்தனவகை, 27புஷ்பவகை, 27அங்காரவகை, 27ரத்தினவகை, 27காய்வகை, 27கனிவகை, 27அன்னவகை, 27ஜலதீர்த்தவகை, 27தூபப் பொருள்வகை, 27தீபவகை, 27வாகனவகை, 27ஹோமதிரவியவகை, 27சமித்துவகை, 27குண்டவகை, 27கொடிவகை, 27ராகவகை, 27தாளவகை, 27நிருத்தவகை, 27வாத்யவகை, 27பஞ்சமூர்த்த கௌதுகபேரவகை, முதலான அனைத்தையும் 27வகையாகக் கூறி விளக்கி உள்ளது. மேலும் 27நாள் சிவஉத்ஸவத்தைத் தொடர்ந்து, 30ம்நாள் தொடர்ச்சிவரை **பிக்ஷாடனோத்ஸவம்**, 33ம் நாள்வரை **சக்திஉத்ஸவம்**, 35ம் நாள் காலைவரை **சண்டோத்ஸவம்** இவற்றையும் சேர்த்து 35 நாள் வரை **மகோத்ஸவம்** விளக்கப்பட்டுள்ளது. இதனை விளக்கிடில் கட்டுரை விரியுமென்று இங்கு தவிர்க்கப்படுகிறது.

சௌரஉத்ஸவவிளக்கம்

27தினம் செய்யும் சிவோத்ஸவத்தில் 27நாட்களின் தேவதைகள் உத்ஸவத்தில், நித்தமும் விசேஷபலியுடன் பூஜைசெய்யத்தக்கவர்கள். உத்தரகாரணகாமத்தின் சௌரமானதினதேவர்கள் முதல்நாள் இரவிலிருந்து முறையே (1) பூத, (2) பூதேச, (சாஸ்தா), (3) ரிஷி, (4) நரா், (5) கந்தர்வா், (6) இந்திரர், (7) குஹன், (8) விஷ்ணு, (9) அக்னி, (10) நாகர், (11) ருத்ரர்கள், (12) மாத்ருக்கள், (13) கூச்மாண்டர்கள், (14) பித்ருக்கள், (15) பானு (16) ராக்ஷஸர்கள், (17) சிவன், (18) (பிரம்மா) துருஹிணர், (19) மேஷாம்சர், (20) ப்ரேதாதிபர், (21) கந்தர், (22) பௌஷ்கரீ (லக்ஷ்மீ) குபேரன், (23) விருஷபர், (24) ஜ்யேஷ்டாதேவீ, (25) கின்னரர், (26) கருடர், (27) தேவர்கள் என்று தினராத்ர பெயர்களையும், இதேபெயரில் 27 அதிதேவதைகளையும் கூறிஉள்ளது. இவர்களுக்கு 10திணேசபலி அளித்திடவேண்டும். அவ்வாறே 13நாளிலும் 9நாளிலும் அளிக்க. இவ்வாறே மாஹேச்வரமூர்த்தங்களுள் 64க்குள் ஒவ்வொரு தினத்திற்கும் தனித்தனியே கௌதுகபேரசிவமூர்த்தம் வீதிஉலா புறப்பாட்டிற்குக் கூறப்பட்டுள்ளதும் இவ்விழாவின் தனிச்சிறப்பாகும்.

நவராத்திரி உத்ஸவம் (நவதின சக்திஉத்ஸவம்):

முப்பெரும் தேவிகளுக்கு உரிய நவராத்திரி உத்ஸவம் ஆகமங்களில் சிறப்பாக கூறப்படுகிறது. அவற்றுள் ரௌரவாகமத்தில் கூறுவதாவது:

ஆர்த்ராயாம் மாசி கன்யாயாம் கிருஷ்ண பக்ஷே து பூஜயேத்.
ஆரப்ய ப்ரதமாயாஸ் து நவ ராத்ரம் ப்ரபூஜயேத்.
ரக்ஷாபந்தனகம் கர்ம தேசிக: காரயேத் புத:.
துர்காம் ச மத்யமே ஸ்தாப்ய வாமபார்ச்வே ஸரஸ்வதீம்.
மஹாலக்ஷ்மீம் து ஸம்ஸ்தாப்ய தக்ஷிணே து ப்ரபூஜயேத்.
நவ ராத்ரம் ப்ரபூஜ்யா த பாயஸான்னம் நிவேதயேத்.
யாநம் சேதம் ஸமாக்யாதம் துர்காயாஸ் து ப்ரபூஜனம்.
நவ ராத்ரே ச யாநம் ச தத் தைவம் தௌர்கயானகம்.
ஆலயாத் து ஸமாசிருத்ய யாநம் வாத்யைர் க்ரமேணச.
அனேகை ருபசாரைச் ச தோஷயேத் பரமேச்வரம்.
ஏவம் கிரமேண கர்த்தவ்யம் நவம்யந்தம் தினம் ப்ரதி.

(ரௌரவாகமம்)

என்ற மேற்கண்ட கூற்றின்படி கன்யாமாஸத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் பிரதமைதிதியில் துவங்கி ஒன்பது இரவுகளில் விதிமுறைப்படி நடுவில் துர்கையையும் அவளது வலதுபுறத்தில் லக்ஷ்மியையும்,

இடதுபுறத்தில் சரஸ்வதியையும், 8திசைசுற்றுகலசத்ததுடன் ஸ்தாபித்து, சிறப்புபூஜையும், பால் மற்றும் பாயசான்னம் படைத்து, துர்கையின் வாஹனவகைகளில், ஒன்பதுநாட்கள் கோவில்களில் நவராத்திரி உத்ஸவத்தைச் செய்தல் விதிமுறையாகும்.

நக்ஷத்திர உத்ஸவப்பயன்கள்

சிவாலயத்தில் மாதந்தோறும் உரிய நக்ஷத்திரத்தில், விரத காலவிசேஷ சிவபூஜையுடன் ருக்ஷோத்ஸவத்தைச் செய்வதால், விரும்பும் பயனைப்பெறலாம். அவை

1. கிருத்திகையில் – சௌக்கியத்தையும்,
2. ரோஹிணியில் – அபத்யதோஷம்நீங்கி மகனையும்,
3. மிருகசீரிஷத்தில் – தேஜஸையும் (ஒஜஸ்) தேஹப்பெரும்பொலிவையும்,
4. திருஆதிரையில் – ஸகலசெல்வத்தையும்,
5. புனர்பூசத்தில் – க்ஷத்ராதிசித்ர அரசுபாதுகாப்பும்,
6. பூசத்தில் – புஷ்டியும் (வளமும்),
7. ஆயில்யத்தில் – சிறந்தஸத்புத்திரர்களையும்,
8. மகத்தில் – சுஜநிச்ரேஷ்டாகுதல் செய்வதால் தம்மக்களிடத்தில் மேன்மையையும்,
9. பூரத்தில் – ஸௌபாக்யத்தையும்,
10. உத்திரத்தில் – முக்கிய சீலமான நல்லொழுக்கமுடைமையையும்,
11. ஹஸ்தத்தில் – உயர்நிலையையும், (சரசிரேஷ்டனாதல்),
12. சித்திரையில் – ரூபலாவண்யமுள்ள அழகையும், மனைவியையும்,
13. சுவாதியில் – (வர்த்தக) வியாபாரலாபத்தையும்,
14. விசாகத்தில் – விசேஷதாமனாவாப்தி விருப்பங்களை அடைதலும்,
15. அனுஷத்தில் – சக்ரவர்த்தியாதல் இந்திரபதவியும், பகையின்மையையும்,
16. கேட்டையில் – பணச்சேர்க்கையும்,
17. மூலத்தில் – ஆரோக்யத்தையும்,
18. பூராடத்தில் – புகழையும்,
19. உத்திராடத்தில் – சிறப்புமிக்கபுகழுச்சிநிலையையும்,
20. திருவோணத்தில் – சுகபோகங்களையும்,
21. அவிட்டத்தில் – பெரும்செல்வத்தையும்,
22. அபிஜித் நக்ஷத்திரத்தில் – வேதத்தைஞானத்தையும்,
23. சதயத்தில் – மருத்துவஸித்தியையும்,
24. பூரட்டாதியில் – அஜாவிகம் ஆடு முதலான செல்வயோகத்தையும்,

25. உத்திரட்டாதியில் – பசுமுதலான கால்நடைச்செல்வங்களையும்,

26. ரேவதியில் – சாபவிமோசனத்தையும்,

27. அச்விநியில் – குதிரைகளின் போகவளத்தையும்,

28. பரணியில் – உத்தமமான நீண்டஆயுளையும் (ஆயுள்விருத்தியை),

சிவபூஜையுடன் கூடிய சிவனது நக்ஷத்திரஉத்ஸவத்தின் பயனாக பெறுவார்கள் என்று சிவாகமங்கள் கூறியுள்ளன.

முடிவுரை

ஆகையினால் இந்த நக்ஷத்திரங்களில் விரதாதிகளை அநுஷ்டித்து, தெய்வத்திற்கு அபிஷேகம், நைவேத்யம், அலங்காரம், தூபம், தீபம் முதலான உபசார விசேஷங்களுடன் உத்ஸவமும் செய்க. திருநாட்களின் இப்பயன்கள் இவ்வாறு சகலஜாதியினரும் பாலர், குமாரர்கள், பேதை, பெதும்பையாதி, ஸ்திரீகளும், விருத்தாகரும், விதவைகளும் மற்றும் உள்ளவர்களும் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு செய்பவர்கள் ருத்திர லோகபிராப்பதியும், உத்பாதம், கிரஹபீடை, வியாதி இவற்றின் நிவாரணங்களும், ஆயுசு, சுகம் முதலியவைகளும் ஒருவருஷம்வரை இவ்வாறு விடாது செய்யபவர் சற்புத்திரப்பேறும் பெறுவர் என்று கூறிவிதிக்கப்பட்டிருக்கிறது. சிவோத்ஸவத்தைச் செய்யவேண்டும். யாவும் கோடிமடங்கு உயர்ந்ததாக திருவாதிரைநாளில் விரதமிருந்து செய்வதால் அளவில்லா பயனையும், ஆயிரம் அச்வமேதயாகங்களின் பயனையும், கோடியாகங்களின்பயனையும், கோடிகன்யாதானங்களின் பயனையும் பெறுவார்கள். சிவதீக்ஷை பெற்றவர்கள் யாராயினும், சிவநக்ஷத்திரமாகிய ஆதிரையில், பூசிக்காவிடில், அவர் பாபியாக நரகத்தைஅடைவார் என்றும் எச்சரித்துக்கூறுகிறது. ஆதலால் பன்னிருமாதத்திலும் திருவாதிரை விரதம், பூஜை, உத்ஸவம், தானம் இவைகளைச்செய்திட மிகவும் உயர்ந்த திருநாளாகும். எண்ணற்ற புண்ணியத்தைத்தருகிற சைவாகம உத்ஸவவகைகளை அறிந்து, உரிய காலத்தில், உரியமுறையில் இறைவனுக்கு உத்ஸவத்தைச்செய்வித்து, யாவரும் உலகில் போகமோக்ஷாதி இஷ்டபயனைப்பெற்று, உய்வோமாக.

லேகோஸ் ஸமஸ்தாஸ் சுகினோ பவந்து.
சுபமஸ்து நித்தியம்.

ஸ்ரீ சிவாப்யாம் நம:

குரும்கணபதிம் ஸ்கந்தம் ஸாம்பம் ச பரமேச்வரம் |
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே ||

ஓம் நமப் பிரணவார்த்தாய சுத்தஞானைக மூர்த்தயே |
நிர்மலாய பிரசாந்தாய தக்ஷிணா மூர்த்தயே நம: ||

ஆலய ஷட்கால பூஜா கிரியாக்ரம விவரணம்

கட்டுரையாசிரியர்
ஆகமப் ப்ரவீணர், சிவாகம போதகர்
சிவஸ்ரீ யு. ஏ. ரவி (எ) சுவாமிநாத சிவாசார்யர்
முதல்வர், வேதசிவாகம பாடசாலை, மயிலாடுதுறை.

ஸ்ரீ பரமேச்வரன் உயிர்களிடத்தில் கொண்டுள்ள பெருங் கருணை யினால் முதலில் உலகைப் படைக்கும் காலத்தில் அருளிச் செய்த முதல் நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டு . இவற்றுள் வேதம் பொது நூலென்றும், சிவாகமம் சிவனைப் பரம்பொருளாக போதிக்கும் சிறப்புநூலென்றும் வழங்கப்படும். அது காமிகம் முதல் வாதுளம் ஈராக இருபத்தியெட்டாகும். இவைகளின் உபாகமங்கள் இருநூற்றியேழாகும். ஆகமங்கள் தனித்தனியே ஞானபாதம், கிரியாபாதம், யோகபாதம், சரியாபாதம் என நான்குபாதங்களை உடையவனவாகும். அதனுள் கிரியாபாதத்தில் கர்ஷணம், பிரதிஷ்டை, உத்ஸவம், பிராயச்சித்தம், ஆத்மார்த்த பூஜை, பரார்த்த பூஜைமுறை, ஆகியவைகளும் மற்றும் பலவும் கூறப்பட்டுள்ளன.

ஆன்மாக்களுக்கு இடர்களைந்து இம்மை மறுமைப் பயன்களைத் தருவது சிவபூஜையாகும். அது ஆத்மார்த்தபூஜை, பரார்த்தபூஜை என இருவகைப்படும். ஆலயங்களில் சுயம்பு முதலிய ஏழு வகைத் தோற்றத்தோடு காட்சியளிக்கும் சிவபெருமானை முறைப்படி, ஆதிசைவர்களைக் கொண்டு, பூஜைசெய்வித்தல் பரார்த்தபூஜை எனப்படும். ஆன்மார்த்தபூஜை என்பது, அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கவாறு சமயம், விசேஷம், முதலிய சிவதீக்ஷை பெற்று குருவால் அளிக்கப்பட்ட ஆன்மார்த்தலிங்கத்தை, வழுவாது பூஜித்தலாகும். ஸர்வகர்மாக்களை பூர்த்திசெய்வதாலும், ஞானத்தை அளிப்பதாலும், பூஜை எனப்பெயர் பெற்றது இக்கிரியைகள், என்பதை காரணாகமம்,

பூர்யந்தே ஸர்வ கர்மாணி ஜாயதே ஞானம் ஆத்மனி |
பூரணாத் ஜாயதே யஸ்மாத் பூஜாசப்த இஹோச்யதே ||

என்று கூறி விளக்கி உள்ளது. சிவலிங்கத்தைப் பூஜிப்பதால் எல்லா தேவர்களையும் பூஜித்ததாக ஆகும்.

அக்னிஹோத்ரம் முதலிய சகலகர்மாக்களையும் செய்ததாக ஆகும். ஸன்யாசம் முதலிய, சகல ஆச்ரமங்களை அடைந்த பயனும் அடையப்படும். அரி அயன் முதலிய தேவர்களும் சிவபூஜையினால் பெரும்பேற்றை அடைந்தார்கள். மிருகம், பறவை முதலியவைகளும் சிவபூஜை செய்து நற்கதி அடைந்திருப்பதாலும் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் முடிந்த அளவு சிவபூஜை செய்யவேண்டும்.

மானுடப் பிறவி தானும் வகுத்தது மன வாக்காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ
வானிடத்தவரும் மண் மேல் வந்தரன் றனை யர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அன்றோ.

என்பது, ஸ்ரீமத்-அருணந்திசிவாசார்யர் அருளிச்செய்த சிவஞான சித்தியார் விருத்தம். இத்தகைய பூஜையானது நித்தியம், நைமித்திகம், காம்யம் என்று மூன்றுவகை. முதற்கூறிய நித்திய பூஜையும்

நித்திய நித்யபூஜை, ஆகந்துக நித்யபூஜை என்று இரண்டு வகை ஆகும். தினம்செய்யப்படும் பூஜை, நித்யமென்றும், அஷ்டமீ, பிரதோஷம், பூர்ணிமா, அமாவாச்யா, விஷு, சங்கிரமனாதி புண்யகால பூஜைகள், ஆகந்துக நித்யபூஜை என்றும் அம்சுமானாகமம் கூறுகிறது. இத்துணை சிறப்புவாய்ந்த, சிவபூஜைக்கு முக்கியமான காலம், விதிமுறை, செய்முறைகள்பற்றி இனிகாண்போம். இத்தகைய ஆகமநெறியில் பூஜைசெய்து,முதல்வனை மகிழ்வித்தவள் அன்னை பார்வதியே ஆகிறாள். ஆகமத்தைச் சிவனார் சொல்லக்கேட்டு, அதன்படியே பூஜித்து, இறைவனின் இடப்பாகத்தை நீங்காதிருக்கும் நிலையையெய்தினாள்.

ஆகதம் சிவ வக்த்ரேப்ய: கதம் ச கிரிஜா முகே |
மதம் ச வாசுதேவஸ்ய தஸ்மா தாகம முச்யதே ||

மேலும் இதனையே பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமானும்

எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என்றுரைத் தருள
அண்ணலார்தமை அருச்சனை செய்ய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயினள் பெருந்தவக்கொழுந்து.

(பெரியபுராணம்)

இதனால் இறைவனுக்கு விருப்பமானது பூஜைசெய்வதே என்பதும், அதனை அறிந்த பார்வதி அதனைச் செய்து மகிழ்வித்தாள் என்பதும், குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கருத்து ஐந்தாம் திருமுறையில் அப்பர்தேவாரத்தில் கூறப்படுகிறது. யுகமுடிவில் இறைவனும் இறைவியும் மட்டுமே உள்ளபோது இருவரும் தனிமை கழிய பெருமான் பெருமாட்டிக்கு வருகிற யுகத்தில் எப்படியெல்லாம் மக்களை மன்னு யிர்களை ஈடேற்றம் செய்வது என்று திட்டமிடும் ஆகமங்களைப் பயணைத்தெழுந்த மருதமரத்தடியில் உமாதேவியாருக்கு உபதேசித்தார் என்கிறது அப்பாடல்.

துணிலாமையில் தூங்கிருப்பேய்களோடு
அணையலாவது எமக்கரி தேனோ
இணையிலா இடைமாமருதில் எழு
பணையில் ஆகமம் சொல்லும் தன்பாங்கே. (தி–5–15–4)

ஆகவே பவரோக வைத்யநாதன் பிறவிநோயைத் தீர்ப்பவர். எனவே உடல் நோய்களையும் தீர்ப்பவர் என்பதும் அறியலாம். எல்லாவித துன்பங்களையும் போக்கி எல்லாவற்றிற்கும் மேலான மோட்சத்தை இவனன்றி யாரும் வழங்க இயலாது என்பதாலேயே வள்ளல் என்ற பெயர் இவரையே சாரும். எனவே அப்பர்பெருமான் வைதீஸ்வரன் கோயில் பதிகத்தில் வள்ளல் பாதம் வணங்கித் தொழுதால் இகத்தில் எல்லா நன்மைகளையும் பெற்று பரத்தில் வீடுபேறு அடையலாம் எனக் குறிப்பிடுகிறார். அப்பாடல்

உள்ளம் உள்கி உகந்து சிவன் என்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே.
புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

(திருமுறை 5ல் பதிகம் 79ல் பாடல்)

இவ்விதமாய் தேவனுக்கு பிரியமான பூஜை செய்வதை கட்டளையாக சிவபெருமானே கூறியமையால் உமாதேவியரும் திருமாலயனும் பலரும் பூஜித்து பேறுபெற்றமையால், அப்பூஜையை சிவாலயத்தில் ஆறு காலத்தில் செய்யும் முறைமையை ஆகமங்களின்படி இனி காண்போம்.

ஸ்ரீராம ஸௌமித்ர ஜடாயு வேத ஷடாநநாதித்ய குஜார்ச்சிதாய |
ஸ்ரீ நீலகண்டாய தயாமயாய ஸ்ரீ வைத்யநாதாய நமச்சிவாய ||

சிவலிங்கம் அருச்சிக்கப்பெற்றால் எல்லாசராசரங்களும் அருச்சிக்கப் பெற்றவையாகும். பிரம்மசரியம், வேதாத்தியயனம், மங்களகரமான பலவகையாகங்கள், சந்நியாஸம், பாசுபதம் முதலான

விரதங்கள் ஆகிய இவற்றால், எந்தப் பயனை அடைகிறானோ, அதை சிவபூஜையால் அடைகிறான் என்று ஆகமங்கள் கூறுகின்றன. ஊடலை வருத்தி காயக்லேசம், முதலியவற்றால் தவம்புரியும் முனிவரினும் சிவபூஜையைத் தீவிரமாகச் செய்கிறவன் உலகில் உத்தமனாகிறான் என்பது சிவவாக்கு. அதிகமாகக் கூறுவானேன். பிரமன் முதலா யினோருக்கு சிருஷ்டித்தல் முதலிய தொழில்கள் சிவபூஜையினாலேயே சித்தித்தன என்று பத்மபுராணம் கூறுகின்றது. சிவ ஏகோ த்யேய: என்று வேதோபநிஷதம் விதித்துள்ளதால் தியானிக்கத்தக்க சிவன் ஒருவரே பூசிக்கத்தக்கவர் என்பதை நன்கு உணரலாம். ஆலயத்தில் செய்யப்படுகின்ற பரார்த்தபூஜை மூன்றுவகைப்படும். இவற்றுள் அந்த நித்தியபூஜை எட்டுவிதம் என்று அஜிதாகமம் கூறுகின்றது.

இதற்கான அஜிதாகம சான்று:

உத்தம த்ரிதயே நாத மத்யம த்ரிதயேந ச |
அதம த்ரிதயே நாபி பூஜைஷா ஹ்யஷ்டதா ஸ்மிருதா ||

இதன்படி எட்டுவிதபூஜை எவ்வாறு நிச்சயிக்கப்பட்டுள்ளது? எனில் அதாவது உத்தமத்தில் மூன்றுவிதம், மத்யமத்தில் மூன்றுவிதம் அதமத்தில் இரண்டுவிதம் ஆக எட்டுவிதம் பகலில் 4 யாமம் இரவில் 4 யாமம் ஆக எட்டு யாமத்திலும் எட்டுகாலம் செய்யப்படும் பூஜை உத்தமோத்தமம். பகலில் 4 யாமத்திலும் இரவில் 3 யாமத்திலும் ஆக 7காலத்தில் செய்யப்படும் பூஜை உத்தமமத்மம் பகலில் 4 யாமத்திலும் இரவில் 2 யாமத்திலுமாக 6காலத்தில் செய்யப்படும்பூஜை உத்தமமத்யமம். குாலை நடுப்பகல் மாலை இரவு 2 வது யாமம் இரவு 4 வது யாமம் ஆக ஐந்து காலத்தில் செய்யப்படும்பூஜை மாத்யமோத்தமம். இதில் அர்தயாமம் நீக்கிய மற்றவை நான்கிலும் செய்யப்படும் நான்கு காலபூஜை மத்யமாதமம். காலை, நடுப்பகல், மாலை ஆகிய மூன்று காலங்களில் செய்யப்படும் பூஜை மத்யமாதமம்.காலை மாலை இருகாலம் செய்யப்படும் பூஜை அதமத்திலுத்தமம். ஒருகாலம் செய்யப்படும் பூஜை அதமத்தில் மத்யமம் என்று சிவனுக்கு செய்யப்படும் சிவலிங்க பூஜை கோயிலில் எட்டு விதமென்று அறிக. சிவாலயத்தில் சிவலிங்கத்திற்கு அதமத்தில் அதமபூஜைவிதி எங்கும் காணப்படவில்லை. வாரம் ஒரு கிழமையில் ஒருமுறை ஒருகாலபூஜை, மாதம் ஒருநாள் பௌர்ணமி கிழமை இவற்றில் செய்யப்படுவது இடைவெளி விட்டு விட்டு மேற்கொள்வது போன்ற பூஜை கிராமத்தின் வெளிப்புறம், மலைப்பகுதி, வனப்பகுதிகளில் உள்ள க்ஷுத்ர தேவதைகளான கருப்பர், காளீ, சாஸ்தா, மோடீ, வீரன் முதலான கிராமதேவதைகளுக்கு மட்டுமே இவ்விதமான அதமாதமபூஜை ஏற்புடையது. பூஜைக்கு உரிய காலத்தை வகுக்கும்முறை பூஜையின்செயல் விதிமுறைக்கு ஏற்ப

சிவாகமங்களில் மாறுபாட்டுடன் கூறப்படுகின்றன. அதாவது காலை, நடுப்பகல், இரவுமாலை (பிரதோஷம்) இவை மூன்றும் மஹாஸந்தி எனப்படும். முக்கிய பெரும் பூசைக்காலமுடையது. மற்றவை உபஸந்தி எனப்படுபவைகளாக இதில் பாதிஅளவு பூஜாகாலம் உடையவை என்று அறியப்படுகிறது. இவைக்கு ஏற்பவே அந்த பூஜாகாலம் அப்பூஜையின் உள்உறுப்புக் கிரியைகளுக்கு முறையே பகுத்தும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. ஆகமத்தில் பூஜைக்கான காலம் இருவகையாக விளக்கப்படும். இதனை சூக்ஷ்மாகமத்தின்படி அறிவோம். அதாவது ஒரு யாமம் என்பது ஏழரைநாழிகை. இதுவே ஸந்தி என்பதாகும். ஸ்தூலம் சூக்ஷ்மம் எனக் காலம் இருவகைப்படும். ஸதூலமென்பது லௌகிககாலம். சூக்ஷ்மமென்பது ஆத்யாத்மிககாலம். சிவபூஜை முதலியவைகளை ஸ்தூலகாலத்தினால் செய்யவேண்டும் என்கிறது. மேலும் யோகிகளுடைய இமைக்கொட்டலில் நாலுகொண்டது ஒரு துருடி, இரண்டு துருடி ஒரு லவம், இரண்டு லவம் ஒரு நிமிஷம், பதினைந்து நிமிஷம் ஒரு காஷ்டை, பதினைந்து காஷ்டை ஒரு கலை, கலையின் ஒரு அம்சம் முகூர்த்தம். ஒரு முகூர்த்தத்திற்கு இரண்டு கடிகை. ஏழரை கடிகை ஒரு யாமம், எட்டு யாமம் ஒரு இரவு பகல் கொண்ட நாள் என்று சூக்ஷ்மாகமம் விளக்குகிறது. காரணாகமத்தில் பூஜை ஆறுவிதம் என்று கூறப்பட்டிருக்கிறது. அது எவ்வாறெனில் சூரியனுதயம் தொடங்கி பத்து நாழிகை 1. பிராதக் காலம் (காலஸந்தி அக்காலம் முடிந்து அதிலிருந்து மேலே பத்து நாழிகை) 2. மாத்யான்ஹிகம் (உச்சிகாலம்). அது முடிந்து மேலே 10 நாழிகை 3. சாயங்காலம் பிரதோஷகாலம் சூரிய அஸ்தமனம் முதல் ஏழரை நாழிகை 4. சாயரக்ஷா (இரண்டாங்காலமென வழங்கப்படுகிறது.) அது முடிந்து மேல் மூன்றேமுக்கால் நாழிகை 5.அர்த்தயாமம். சூரியன் உதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை 6. உஷக்காலம் ஆகும். அந்தந்த காலங்களிலும் ஆலய பூஜை முறை வெவ்வேறு ஆக உள்ளது.

1. உஷக்கால பூஜாவிதி

உஷக்கால பூஜாவிதி (காரணாகமப்படி)

நிச்சித்ய நாடிகா ஸ்திரீணி போகசக்தி யாலயம் கத: |
அஷ்டபுஷ்பைஸ் ஸமர்ப்யர்ச்ய தந்த சோதன பூர்வகம் ||
பாவநா ஸ்நாநகைர் கர்ம நைவேத்யம் தாபயேத் தத: |
தூபதீபம் தத: கிருத்வா பாத்ய மாச மனீயகம் |
தாபயேத் சிவம் முத்தாப்ய பாதுகே யோஜயேத் சிவம் |

(காரணாகமம்)

உஷக்காலபூஜை குறித்து, காரணாகமத்தில் கூறப்படுவதாவது உதயத்திற்கு ஐந்துநாழிகை முன் எழுந்திருந்த ஆசாரியர் வாக்கினால் தோத்திரமும் மனதில் இறைவனை தியானம் செய்து கொண்டு பாஹ்யாதிகளை (காலைக்கடன்) முடித்துக் கொண்டு ஆசமனம் ஸ்நானம், அனுஷ்டானம் இவைகளால் சுத்தனாய் சாந்தனாய் வெண்மையான வஸ்திரம், உத்திரீயம் தரித்துக் கொண்டு சிவாலயத்திற்கு கைகளில் மலரேந்திச் செல்லவேண்டும். உதயத்திற்கு மூன்றுநாழிகை, நிச்சயித்து சயனாலயம் (பள்ளியறை) சென்று இறைவனுக்கு மனோபாவனை யினால் தந்ததாவனம், ஸ்நானம் முதலியவைகளைச் செய்வித்து அஷ்டபுஷ்பம் சார்த்தி, சிவபெருமானைப் பாதுகையில் ஆரோஹணம் செய்வித்து, பிரதக்ஷிணக்கிரமமாக கர்ப்பகிரஹத்தில் வைத்து, இறைவனை மூலலிங்கத்தில் சேர்த்தல் வேண்டும். உதயத்திற்குமுன் ஒருமுகூர்த்தத்தில்

பாஸ்கரஸ்யோ(உ)தயாத் பூர்வம் திரிபாதேந திரிநாடிகா |
உஷக்கால மிதி புரோக்தம்) ராத்ரியந்தக மிதிஸ்மிருதம் ||
. . . . ஞாத்வைவம் ஸர்வமாசரேத் |

அதாவது இரண்டு நாழிகைக்குள் உஷக்காலபூஜையை செய்ய வேண்டும். இப்பூஜையின் முடிவில் சூரியன் உதயம் ஆகவேண்டும். பரிவாரங்களை விட்டு மகேச்வரபேரங்களுக்குப் பூஜையை செய்ய வேண்டும். மாகேச்வரபேரம் என்பவை நடராஜர், ஸோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய மூர்த்திகளாம்.

2. பிராதக்கால பூஜை(முற்பகல் பூஜை)

பாஸ்கரோதய மாரப்ப ஸார்த்த ஸப்தக நாடிகா |
பூர்வஸந்தி ரிதி புரோக்த: யாவத்து தச நாடிகா ||
பிராக்கால மிதி புரோக்தம் பூர்வான்ன மிதி கீர்த்திதம் |

பிராதக்கால பூஜையில் காலையில் முதலில் சூரியனைப் பூஜித்து பின்பு மூலவரான கணபதியை பூஜிக்கவேண்டும். மகேச்வராதி மூர்த்திகளை விதிப்படி பூஜித்து பரிவாராதி ஸமஸ்த தேவதைகளுக்கும் அபிஷேகம் அலங்காரம் முதலியவைகளைச் செய்வித்து, பின்பு மூல லிங்கத்திற்கு விசேஷமான பூஜைகளைச் செய்யவேண்டும்.

பிராக்காலபூஜாவிதி (காரணாகமப்படி)

பிராதக்காலே யஜேத் சூரியம் கணேசம் பூஜயேத்தத: |
மஹேச்வராதி பேராணாம் பூஜநீயம் யதாகிரமம் |

பரிவாராதி தேவாநாம் அபிஷேகோப் யலங்கிருதி: |
மூலலிங்கே விசேஷேண பூஜாகர்ம ஸமாசரேத் |
பூர்வம் கணேச நைவேத்யம் மூலபேரஸ்ய தத்பரம் |
மஹேசாநாம் நிவேத்யா (அ) த சண்டேசஞ் ச நிவேதயேத் |
ஹுதாசனம் ஸமப்யார்ச்ய நித்யோத்ஸவ மதப்பரம் |
சண்டேச யஜனம் பச்சாத் பிராக்காலே விதீயதே ||

நிவேதனம் செய்வதன்முறை முதலில் விநாயகருக்கும், பிறகு மூல லிங்கத்திற்கும் பிறகு மகேசபேரங்கள் மற்றைய பரிவாரங்களுக்கும் நிவேதனம்செய்து பின்பு கௌரிக்கு நிவேதனம் செய்து தூபதீபம் கொடுத்து, பலிபோட்டு நித்யஹோமம், நித்யோத்ஸவம், சண்டேச்வர பூஜை முடியச் செய்வது காலசந்தி பூஜாமுறை.

பஞ்சகவ்யம் மற்றும் ஸ்நபனம் செய்துகொண்டு, துவாரபூஜை, வாஸ்துநாதபூஜை, இலிங்கசுத்தி செய்து, சுவாமியை ஸ்திராசனம் வரையில் பூஜித்து, பின்பு அபிஷேக அலங்காரங்கள் செய்து, போகாங்கம்பூஜை செய்து நைவேத்தியம் முதலிய உபசாரங்கள் செய்து பின் தேவியை பூஜித்து சண்டிகேச்வரனை பூஜிக்கவேண்டும்.

கணேசம் மூலலிங்கம் ச தாண்டவேச முமாபதிம் |
பரிவாரார்ச்சநாம் கிருத்வா பார்வதீம் சண்டபைரவௌ ||

இவ்வாறுபூஜித்து நித்யாக்னிகார்யம் நித்யபலி, நித்யோத்ஸவம், இவற்றுடன் செய்துமுடித்தல் பிராதக்காலபூஜை முறையாகும்.

3. மாத்யான்ஹிகபூஜா (காரணாகமத்தின்படி)

மத்யான்ஹ ஸமயே பிராப்தே ஸ்நபனம் பஞ்சகவ்யகம் |
துவாரபூஜாம் பிரகல்ப்யாத வாஸ்துநாதம் ஸமர்ச்சயேத் ||
லிங்கசுத்திம் தத: கிருத்வா கந்த புஷ்பை ரலங்கிருதம் |
போகாங்கம் பூஜயேத் பச்சாத் நைவேத்யாதி உபசாரகம் ||
கௌரீபூஜாம் ததக் கிருத்வா சண்டாந்தம் பூஜயேத் தத: ||

இதில் பிராதக்கால முடிவு தொடங்கி 10 நாழிகை மத்யான்ஹம் எனப்படுகிறது.

பாஸ்கரோதய மாரப்ய ஸார்தஸப்தக நாடிகா |
பூர்வஸந்தி ரிதிபுரோக்த: உபஸந்திஸ் ததர்தக: ||
உபஸந்தி ஸமாரப்ய யாமோ மாத்யான்ஹ உச்யதே |

எனப்படுவதாக காலத்தை அறிந்து, அந்த மாத்யான்ஹ காலம்

வந்தபோது, சுவாமிக்கு பஞ்சகவ்யத்தைப் பூஜித்து ஸ்நபனத்தை (பல கலசபூஜை) செய்துகொண்டு, துவாரபூஜை, வாஸ்துநாதபூஜை, லிங்கசுத்தி, செய்து, சுவாமியை ஸ்திராசனம் வரையில் பூஜை செய்து பின்பு அபிஷேக அலங்காரங்கள் செய்து ஆவரண போகாங்க பூஜை செய்து நைவேத்யம் முதலிய உபசாரங்கள் செய்து, பின்பு தேவியை பூஜித்து சண்டிகேச்வரனை பூஜிக்கவேண்டும்.

4. பிரதோஷ கால பூஜாவிதி (காரணாகமப்படி)

பாஸ்கரா ஸ்தமயாத் பூர்வம் திரிபாதேந த்ரி நாடிகா |
பிரதோஷ மிதி விக்யாதம் உபஸந்திரி தீரிதம் ||

இது சாயங்காலபூஜைக்கு முந்தியதான உபஸந்திபூஜை ஆகும். இதற்கான சான்று, காரணாகமத்தில் விதிகள்:

நடேசம் பூஜயேத் பூர்வம் நைவேத்யம் தூப தீபகம் |
மூலபேரஸ்ய நைவேத்யம் தூபதீபஞ்ச காரயேத் ||
மஹேச்வராதி பேராணாம் கௌர்யை சைவ நிவேதயேத் |
உபசாரான் ஸமர்ப்யர்சிய பூஜநீயம் யதாக்ரமம் ||

என்று கூறப்பட்டுள்ளது. சாயங்காலத்தில் செய்யப்படும் பிரதோஷகாலபூஜை, முதலில் நடராஜரைப் பூஜித்து, பின்பு மூலலிங்கத்திற்கு தூபதீபம் நைவேத்யம் முதலியவைகளை செய்து பிறகு சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகளுக்கும், தேவிக்கும், பூஜை மற்றும் உபசாரம் முதலியவற்றைச் செய்யவேண்டும். சிலநூல்களில் மூலலிங்க பூஜையின் முடிவில் நடேசபூஜையை சிறப்பாகச்செய்து, தாளம் மத்தளம் முதலிய வாத்யங்களுடன், நிருத்த உபசாரத்தையும் செய்யவேண்டும் எனப்படுகிறது. பிறகு இரவில் முதல் யாமத்தில் செய்ய வேண்டிய மஹாசந்தியாகிய சாயங்காலபூஜை கூறப்படுகிறது.

5. சாயங்கால பூஜா விதி (காரணாகமப்படி)

ஸாயம்காலேப்ரவ்ருத்தே து தேஹசுத்திம் ஸமாசரேத்.
ஸ்நபனம் காரயேத் பச்சாத் துவாரபூஜா விதீயதே.
மூலபேரம் ச ஸம்ஸநாப்ய நைவேத்யம் ச ததப்பரம்.
ராஜோபசார மார்க்கேண பூஜயித்வா யதாக்ரமம்.
மத்யே ஸர்வத்ர நைவேத்யம் பார்வதீ சண்டபைரவம்.
நைவேத்யம் து ததப் பச்சாத் உபசாரன் ததைவச.
ஹூதாசனம் ஸமர்ப்யர்ச்ய நித்யோத்ஸவ மதப்பரம்.

இரவு முதல்யாமத்தில் மகாசந்திபூஜையோவெனில் தேகசுத்தியை

செய்து கொண்டு, ஸ்நபனம், துவாரபூஜை, மூலபேரத்திற்கு அபிஷேகம் முதலியவற்றை செய்து நைவேத்யம் ராஜோபசாரத்துடன் பூஜைசெய்து ஏனைய பரிவாரங்களுக்கும் பின்பு தேவிக்கும் பூஜை செய்யவேண்டும். பின்பு அக்னிகார்யம் ஸ்ரீபலிதானம் நித்யோத்ஸவம் இவற்றைச் செய்து முடிக்க வேண்டும். ஒவ்வொரு சந்திபூஜையின் முடிவிலும் திரைஇட்டு மறைத்து பின்பு அடுத்தசந்தி பூஜையின் துவக்கத்தில் திரையை விலக்கித் துவங்கிச் செய்திடவேண்டும். சந்திபூஜையை உத்ஸவம், சண்டேச்வரபூஜை, பிரதக்ஷிணம், நமஸ்காரம் வரையில் உரிய சந்திகாலத்திற்குள் தவறாமல் செய்து முடித்திடவேண்டும். முன்னதாக முடித்தல் குற்றமாகாது. காலதாமதமாக முடித்தால் காலாதீதபிராயச்சித்தம் செய்யத் தக்கதாகும். நித்யபூஜை ஒரேசெயல் திட்டம், பொருள்திட்டம், காலப்பகுப்புத்திட்டம், மணிஓசை, இசைஒலி, அறிவிப்பு, விதிமுறைகளுடன் செய்துமுடிக்க வேண்டும்.

மஹாசந்திபூஜையில் பசனாலயத்திலிருந்து (மடப்பள்ளி யிலிருந்து) ஸகலஉபசாரத்துடன், முன்னதாக வழியில் நீர்வார்த்தபடி அமிருதேச்வரரை, அன்னநைவேத்யத்தை அழைத்துவந்து, வைத்து தேவனுக்கு எதிரில், வாழைஇலைகளைப் பரப்பி, அதில் நெய்யை அபிகாரம் செய்து பிறகு அன்னம்வைத்து, அன்னசூக்தத்தை ஓதிய பிறகு முறையே மூலமந்திரத்தால் நிவேதனம் செய்தல் முறையாகும்.

6. அர்த்தயாம பூஜை விதி (காரணாகமப்படி)

அர்த்தயாமம் ப்ரகுர்வீத ஸ்நபனம் பஞ்சகவ்யகம்.
பஞ்சாமிருதம் பிரகல்ப்யாத துவாரபூஜாம் நகாரயேத்.
சலாஸனம் ஸமப்யர்ச்ய ஸ்நாநம் நைவேத்யகர்ம ச.
தூபதீபாதிகம் தத்வா கௌர்யை சைவ நிவேதயேத்.
பாதுகாராதனம் பச்சாத் க்ஷேத்ரபாலம் ஸமர்ச்சயேத்.
ஸாயான்ஹாந்தம் ஸமாரப்ய த்ரிபாதேந த்ரிநாடிகா.
அர்த்தயாம இதிபுரோக்தம் ....

என்று நடுநிசி நேரம் கூறப்படும். அர்த்தயாம பூஜையை மூலசன்னதி துவாரபூஜையை தவிர்த்து ஸ்நபனத்துடன் பஞ் சாமிர்தம் முதலியவைகளால் நறுமணப்பொடிகளாலும் அபிஷேகம் செய்வித்து பிறகு பட்டாடை மலர் மாலையால் அலங்கரித்து சலாசன பூஜைசெய்து வெல்ல அப்பம் (அதிரசம்) செய்து ஸர்வ உபசாரங்களையும் செய்து, அதன் முடிவில் உரிய நைவேத்தியம் மற்றும் தீபாராதனையைச் செய்து, பின்பு போகசக்தியைப் பூஜித்து, தேவிக்கு

பூஜைசெய்து பாதுகாரணத்தைச்செய்து, பல்லக்கில் (சிபிகேச்வரரை ஆந்தோளிகையில்)ஸ்தாபித்து,எழுந்தருளச்செய்து,நன்கு அலங்கரித்து, ஆலயத்துள்ளே வலமாக பள்ளியறைக்கு அழைத்துச்சென்று, அங்கு, தேவியைவைத்து உபசரித்து, ஜாதீ முதலிய சுகந்தமலர்களால் பூஜித்து, பால், பழம், தேன்கலத பாலன்னத்தை நிவேதித்து மெல்லிசையுடன் கேயத்துடன் நீராஜனம் செய்து, வாய்ப்பாட்டு கானத்தை செய்து, ஏலாதிகளுடன் தாம்பூலமளித்து, திரையிட்டு மறைத்து, பிரார்த்தித்து, கதவைத் தாழிட்டு, திருக்காப்பிட்டுப் பூட்டி, ருத்ரகணிகையரைப் பாடச்செய்து பின்பு அந்த கதவுசாவியை எடுத்துக்கொண்டு பைரவர்ஆலயம் சென்று, பைரவக்ஷேத்திரபாலரை சிறப்பாகப் பூசித்து, முடிவில் ஆலயம் காத்திடவேண்டி சாவியை ஒப்படைத்து, வணங்கி, ஆலயத்தை திருக்காப்பிட்டு, ஆசாரியர் வீடுதிரும்புதல் ஆலயத்தின் ஆறுகாலபூஜைகளின் சைவாகம நெறியில் செய்முறைகள் என்று அறியலாம்.

ஷட்காலபூஜா கிரியாபேதம்

ஆறுகால பூஜைகளின் கிரியாபேதங்களை நன்கு அறிந்து, அர்ச்சகர் பூஜையை செய்திடவேண்டும். மேலும் ஆகமங்களில் கிரியைகள் முன்னும் பின்னும் சிறுமாறுபாட்டுடன் அந்தந்த ஆகம, ஆலயஅமைப்பு விதிமுறைக்கு ஏற்றவாறு வேறுபட்டும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் ஆகமங்கள் பலவாறு கூறினாலும் அந்தந்த அர்ச்சகர் தத்தமது குருவாக்கின்படியும் அவ்வாலய பூஜாபத்ததி வழிமுறை நடைமுறையை முன்னோர்களின் நடைமுறைச் சான்றாகிய **சிஷ்டாசாரப்படியே** தவறாது மாறாமலும் பின்பற்றவேண்டும். சிவாலயத்தில் சூரிய உதயத்திற்கு முன் **சிவசூரியபூஜை** செய்யப்படும். பொதுவாக அந்த பூவுலகசூரியன் வேறு, ஆலயத்தின் தனித்த **சிவசூரியன்** வேறு அம்சமானவர் என்று அறியலாம். காலசந்திபூஜையில் முதலில் சூரிய பூஜையை செய்துவிட்டு, பின்பு விநாயகர் மூலமூர்த்தி முதலிய பரிவார தேவதா பூஜைகளைச் செய்யவேண்டும். இவ்வாறே மாலையில் **சாயரக்ஷைபூஜையில்** முதலில் தனிசந்திரனைப் பூஜித்து, பின்பு முன்னுள்ளபடி எல்லா மூர்த்தங்களுக்கும் கிரமமாய் பூஜைசெய்தல் வேண்டும். காலசந்தியிலும் சாயரக்ஷையிலும் மட்டுமே ஆலய பரிவார மூர்த்திகளுக்கு, அபிஷேகத்துடன் விசேஷபூஜை செய்யத்தக்கது. மற்றகாலங்களில் நடைபெறுகிற பூஜையில், பரிவாரமூர்த்தி பூஜை இடம்பெறவில்லை. புரோக்ஷித்து உபசரித்தலே உரியதாகும். பெரியோர்கள் ஆகமவிதிமுறைகளை முற்றிலும் முழுமையாக பின்பற்றி நிலையான வழக்கத்தை ஏற்படுத்திஉள்ளனர். அதை

பலகாலம் உடனிருந்து முறையறிந்து அடுத்த தலைமுறையினரும் வழுவாமலும் மாற்றாமலும் இடைச்செருகல் இல்லாமலும் பின்பற்றி வரச்செய்வது அறங்காவல் துறையின் தலையாய கடமையாகும். பெரிய செயல்முறைகளான கிரியைகள் அதிகநேரம் பெற்றுள்ள மஹாசந்திகள் எனப்படுகிற காலசந்தி, உச்சிகாலம், சாயரக்ஷை, மூன்றிலும் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி காலசந்தி, உச்சிகாலம், சாயரக்ஷை இம்மூன்று வேளைகளிலே மட்டும் துவாரபூஜை, பலஎண்ணிக்கையில் 1–5–9–16–25 என்ற அளவில் கலாபிஷேகத்திற்கான ஸ்நபனபூஜை, நித்யாக்னிகார்யம், (அணையாத்தீயின் ஆராதனை) நித்யோத்ஸவம், எண்திசையிலும் எண்திசைப் பாலகர்களுக்கும்உரிய ஸ்ரீபலி அளித்தல் ஆகியவை இடம்பெற்று உள்ளன. இரவு அர்த்தயாம பூஜாகாலத்தில் முன்கூறியவாறு அபிஷேக அலங்கார நிவேதனம் செய்து, முதலில் அம்பாள் சன்னதியில் தீபாராதனை முதலிய பூஜையைமுடித்து பின்பு, சுவாமிஆலயத்தில் சந்திரசேகர், சோமாஸ்கந்தர், நடேசர், மூலமூர்த்தி என்கிற முறையில் இப்படி ஒடுக்கக்கிரமமாய் பூஜித்து, திரையிட்டு, பாதுகாராதனபிம்பத்தில், சொக்கேசமூர்த்தியை ரகசியமாக சம்யோஜித்து, பூஜித்து, சிவிகையிலே ஸகல உபசாரங்களுடன் பள்ளி அறையிலே சேர்த்தல் வேண்டும். இதில் ஆலய முழுபிரதக்ஷிணம் செய்யக்கூடாது.ஏனெனில் அர்த்தஜாமகாலத்தில் எல்லாகலாசக்திகளும் ஒடுக்கிய மூர்த்தியானதால் லயஸ்தானத்தை அடைவதன்பொருட்டே இச்செயல் ஆகும். பின் சக்திஆலயத்தில் திரையிட்டு அங்குள்ள சயனாலய பிம்பத்தில் அல்லது பீடத் திரிகோணத்தில், சம்யோஜித்து, சேர்த்து, ஆராதனையை முடித்து, சயனாலயத்தில் சுவாமி பாதுகையின் இடப்பக்கத்தில் அந்த சக்திபிம்பத்தை வைத்து, பள்ளியறை பூஜையை செய்யவேண்டும். மறுதினம் அதிகாலையில் பள்ளியறையைத் திறந்து, பூஜையைமுடித்து முதலில் அம்பாள்பிம்பத்தை சக்தி ஆலயத்தினுள் சேர்த்து, தேவீமூலமூர்த்தியின் பிம்பத்தில் திரைநீக்கி நீராஞ்சன உபசாரம் செய்தபின்பே சுவாமிபிம்பத்தை சிவிகையிலேற்றி வலமாக மூலாலயம் சேர்த்து, மூலமூர்த்தியில் சம்யோஜித்து, திரையைநீக்கி நீராஞ்சனம் உபசாரம்செய்து பின்பு நடராஜர், உத்ஸவர், சந்திரசேகர் ஆகிய மூர்த்திகளுக்கும், இதன்படி தோற்றக்கிரமமாய் உபசரித்து, பூசித்திட வேண்டும். உத்ஸவகாலங்களில், பள்ளியறை பூஜைக்கு சுவாமிபல்லக்கில் எழுந்தருளல் இல்லாமல் சங்கிரமமாய் ஆசார்யரே கொண்டு வைத்து வழிபாடுகளைச் செய்யவும். ஆகமவேறுபாட்டால் பள்ளியறை சிவனருகிலும் தனிதேவீ ஆலயத்தருகிலும் இடம்பெற்று விளங்கும். தனிகோயிலாகவும் சயனாலயம் அமைத்தும் வழிபடலாம்.

பூஜா பஞ்சக்ருத்யம்

பூஜை கிரியைகள் யாவும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் எனப்படுகிற ஐந்தொழில்களான பஞ்சக்ருத்தியங்களை உலகிற்கு உணர்த்துவன. பூஜையின் பஞ்சகிருத்தியங்களாவன முறையே பூசையில் அபிஷேகம் சிருஷ்டிகிருத்தியம். நைவேத்யம் ஸ்திதிகிருத்தியம். அன்னபலி போடுதல் சம்ஹாரகிருத்தியம். தீபாராதனை திரோபாவகிருத்தியம், ஹோமம் அனுக்கிரஹகிருத்தியம் ஆகும். இவ்வாறே நித்யோத்ஸவத்தில், காலையில் புஷ்பலிங்கமும் மதியம் அன்னலிங்கமும் மாலையில் அக்ஷதை-(அரிசி)-லிங்கமும் அல்லது மூன்றுவேளையும், அன்னலிங்கம் மற்றும் அஸ்திரதேவருடன் புறப்பட்டு ஆலய உள்வீதியில் வலம்வரத் தக்கது. அர்த்தயாமத்தில் பாதுகையின் உத்ஸவம்ஆகும். நித்யோத்ஸவத்தில் பலிதானம் சிருஷ்டி (இதுவே எண்திசையிலும் நிருத்கீதவாத்யத் துதிகளுடன் திக்பாலகர்களை மகிழ்விக்கும் ஸ்ரீபலி எனப்படுவதாகும்) புஷ்பலிங்கம் ஸ்திதி, அன்னலிங்கம் சம்ஹாரம் அக்ஷதலிங்கம் திரோபாவம் நவநீத (வெண்ணையால் ஆனது) லிங்கம் அனுக்ரஹம் என்று ஆகமங்களில் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

ஆலய பஞ்சார்ய கிருத்தியம்

ஆலயத்திற்கு ஐந்து பதவிகளில் பணிகளைப் பகிர்ந்து செய்வது சிவாகம விதிமுறை ஆகும். அது 1. ஆசார்யன்: ஆகமங்களுடைய விதிமுறைகளை ஆய்வுசெய்து, முடிவுசெய்து, ஆலயத்தின் சிறப்பு தின பூஜைகளை நெறிமுறைப் படுத்தவேண்டும். இவர் ஆகந்துக நித்ய பூஜைகளையும், உத்ஸவம், பிரதிஷ்டை ஆகிய நைமித்தகமான பூஜைக் கிரியைகளைச் செய்யவேண்டும். 2 அர்ச்சகர்: நித்யபூஜை களைச் செய்ய வேண்டும். 3. அலங்கிருதம்: நித்யமும் அலங்காரத்தை மூலவர் உத்ஸவர் முதலிய மூர்த்திகளுக்கு செய்யவேண்டும். 4. ஸாதகம்: உபகரணங்கள், பொருட்கள் இவற்றை அவ்வப்பொழுது முறைப்படி எடுத்துக்கொடுத்து உதவவேண்டும். 5. வாசகன்: வேதகோஷங்களை எல்லாகிரியைகளுக்கு மந்திரம் முதலியவைகளைச் செய்யவேண்டும் என்று சிவாகமங்கள் விளக்கி பணிகளை கூறுகின்றன. நைவேத்யமான அன்னவகைப்பிரசாதங்கள், அபிஷேக தீர்த்தம் எடுத்து வருதல் முதலிய பணிகளை பரிசாரகர்கள் செய்திடவேண்டும். நித்யத்துடனேயே நைமித்திகத்தை இணைத்து சேர்த்தே கிரியைகளை செய்யவேண்டும். நைமித்திகத்திற்கு உரிய காலத்தில், அக்கால பூஜையில் நித்தியம் நைமித்திகம் இரண்டையும் சேர்த்துச் செய்ய

வேண்டும். எவ்வாறு? எனில், நித்யஸ்நானத்துடன் நைமித்திக ஸ்நானத்தையும் சேர்த்து இவ்வாறே நித்தியநைவேத்யம், ஹோமம், பலி, தூபம், தீபம் இவற்றுடன் நைமித்திகத்தின் உபசரிப்புகளையும் கூடுதலாக சேர்த்து செய்திடவேண்டும். பிராயச்சித்தம் முதலானதுகளும் நித்யபூஜாகாலத்துடன் செய்யப்பட வேண்டும் என்கிறது சூக்ஷமாகமம்.

பஸ்மதான விதி

விபூதி தருவதற்கு பூஜை செய்தவருக்கே அதிகாரமுண்டு. கால பூஜை முடிவதற்று முன் ஒவ்வொரு சன்னதியிலும் இடை இடையே விபூதி வழங்க ஆகமவிதியில் சான்று இல்லை என்பதுடன் இடையே ஒவ்வொரு சன்னதியிலும் அர்ச்சகர் வழங்குவதால் பூஜாகாலம் தவறி தாமதம் ஏற்படவும் வாய்ப்புகூடும். ஆகையால் பூஜைமுடிவில் ஓரிடத்தில் அனைவரும் திருநீற்று பிரசாதத்தை பெறுவது சிறந்த உரியமுறையாகும்.

பரிவாராலய பூஜை

மூலஸ்தானபூஜையின் பின்பு கர்ப்பகிருஹத்தின் ஈசானதிக்கிலுள்ள அல்லது அர்த்தமண்டபத்திலுள்ள போகசக்தியின் பூஜையும் அர்த்த மண்டபதுவாரத்தின் முன்இருக்கும் உள்நந்தியும் அதன்பின்பு நடேசர் முதலிய உத்ஸவமூர்த்தி சன்னதிகளிலும், பின்பு பரிவார கோஷ்ட தேவதைகள், அறுபத்துமூவர், சப்தமாதா, வீரபத்ரர், சாஸ்தா, காளீ, சுற்றியுள்ள அங்கலிங்கம், நவக்கிரஹம், சன்னதிகளிலும் கர்ப்பா வரணத்துள் இருக்கும் அம்பாள்சன்னதியில் பூஜையும், இதன்பின்பு அதிகார நந்தி, கொடிமரம் முதலிய பரிவார தேவதைகளுக்கும் பூஜையைச்செய்து முடிக்கவேண்டும். அம்மன் சன்னதி ஸஹஜம் ஸ்வாந்த்திர ஆலயமாய் தனித்து இருந்தால் துவாரகணபதி முதல் முறையே பூஜைமுடித்து வெளிப்பிரகாரத்தில் உள்ள தேவ்யாலய பரிவாரமூர்த்திகளுக்கும் பூஜையை முடிக்கவேண்டும். சன்னதிக்கு என தனித்தனியே அர்ச்சகர் இருப்பினும், ஒன்றன் பின் ஒன்றாகவே உரிய விதிமுறைப்படியே, மணியோசை முதலான, உரிய அறிகுறிகளால் குறிப்பறிந்து, பெரிய கோயில்களில் பரிவாரபூஜையை செய்துமுடித்திடல் வேண்டும்.

நித்திய ஹோமம்

பரிவார பூஜைக்குப் பிறகு நடைபெறுவது நித்யாக்னிகார்யம். இதற்காக சுவாமிசன்னதியில் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கும்

குண்டத்தில் பூஜித்து முறையே ஆகுதிகளைச் செய்து ஹோம ஸமர்ப்பணம் வரை செய்வதானது நித்யஹோமம் எனப்படும். இவை தேவர்களுக்கு சாந்தியையும் வசீகரத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆக்னிகார்யம் முடிந்ததும், அந்த திருநீறான பஸ்மத்தை பொடியை ரக்ஷையை மூர்த்திக்கு சாத்திடவேண்டும். பின்பு உத்ஸவத்தை செய்யவேண்டும்.

நித்யோத்ஸவம்

நித்யாக்னிகாரியம் முடிந்தபின்பு நித்யோத்ஸவத்தை நிகழ்த்திட வேண்டும். தினந்தோறும் மூன்று வேளைகளிலாயினும் இரு வேளைகளிலாயினும், ஒரு வேளையிலாயினும் நித்யோத்ஸவத்துடன் பலி இடுதல் ஆகமவிதி முறையாகும்.

நித்ய பலிதானம்

தினமும் அன்னத்தினால் பலியிடுவது அளவினால், உத்தமம், மத்யமம், அதமம், என்று முறையே கோழிமுட்டைஅளவு, எலுமிச்சைபழ அளவு, நெல்லிக்கனிஅளவு என்று மூவகைப்படும். நித்யாக்னி கார்யம் முடிந்ததும், பலிநாதரைப் புறப்பாடுசெய்து, ஆசார்யர் மணியை, விட்டு விட்டு அடித்தவாறு, ஏகநாதத்தில் அடித்துக் கொண்டு, இறைவன் சன்னதிவாசலில் இருபக்கமும் உள்ள பீடத்தில், துவாரபாலகர்களுக்கும், முன்னிலிருந்து வலமாக வரிசையாக, எட்டுத்திக்குகளிலும், நந்தியின்முன்பு விருஷபத்திற்கும், பலியிட்டு ப்ரதக்ஷிணமாக மற்றவர்களுக்கும் இதற்கு வெளியில் உள்ள பிரகாரத்தில் இந்திராதி எட்டுதேவர்களுக்கும், மற்றவர்களுக்கு மகா பலிபீடத்திலும், பலியிட்டு உத்ஸவத்தை முடித்து, சன்னதியின் முன்பு நிறுத்திவைத்து நீராஜனாதி உபசாரம் செய்யவேண்டும். ஒவ்வொரு பிரகாரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பலிபீடங்களில் அந்தந்த ஆவரணதேவர்கள் வசிக்குமிடங்களில் அளிக்கப்படுவதே ஸ்ரீபலி. இவ்விதமாக பலிதானத்தை முடித்து, உத்ஸவத்தை முடித்து இறைவனிடம் விண்ணப்பித்து பூஜையைமுடித்து, அர்ச்சகர் தமது ப்ரதக்ஷிணத்தைசெய்து, நமஸ்கரித்திட வேண்டும். இதுவரை ஆறுகாலபூஜை விதிமுறைகள் மிகச்சுருக்கமாக விளக்கப்பட்டது.

மெய்யன்பர்களாய் ஆலய தரிசனத்தை தினமும் மேற்கொண்டு, இறையருள் பெற்று யாவரும் உய்ய வேண்டும்.

வாழ்க சீரடியாரெல்லாம்.

ஸ்ரீ சிவாப்யாம் நம:

பாலஸ்தாபனவிதி கிரியாகிரமம்

கட்டுரையாசிரியர்:
ஆகம சிரோமணி, சிவாகம பண்டிதர்
சிவஸ்ரீ ஸ. பாலசுப்ரமணிய சிவாசார்யர்
முதல்வர், வேதசிவாகம பாடசாலை, பழனி,

யச் சிவோ, நாம ரூபாப்யாம் யா தேவீ ஸர்வமங்களா |
தயோஸ் ஸம் ஸ்மரணாத் பும்ஸாம் ஸர்வதோ ஜயமங்களம் ||

ஓம் நமப் பிரணவார்த்தாய சுத்த ஞானைக மூர்த்தயே |
நிர்மலாய ப்ரசாந்தாய தக்ஷிணா மூர்த்தயே நம: ||

சிவாலயங்களில் சிவாகமங்களைப் பின்பற்றியே நித்திய நைமித்திக காமிய பூஜாக்கிரியைகள் யாவும் நடைபெற்று வருகிறது. ஆதிசைவர்களாகிய சிவாசார்யர்களும் சிவதீக்ஷை பெற்றவர்களும் தம்வீட்டில் ஆத்மார்த்தபூஜை முதலான நித்திய நைமித்திகாதி மத சடங்குகளை அவரவர் குலஅதிகாரத்திற்கேற்ப ஆகமொத்தமாகத் தனித்தேனும் வைதீகக் கிரியைகளுடன் கலந்தேனும் செய்ய வேண்டுமென்றும் விதியை அனுசரித்தே செய்யப்பட்டு வருகிறது. சைவசமய சம்பந்தமான ஆன்மார்த்த கிரியைகளையும் கர்ஷணம் முதல் பிரதிஷ்டைவரை, பிரதிஷ்டை முதல் உற்சவம் வரை உத்ஸவம் முதல் பிராயச்சித்தம் வரையிலான ஆலயத்தின் பரார்த்த கிரியைகளையும் விளக்கிக்கூறும், மூலஆகமங்கள் இருபத்தெட்டு. தென்னிந்தியாவில் உள்ள, பெரும்பாலான சிவாலயங்கள் காமிகம் முதலான இருபத்திஎட்டு சிவாகமங்களின்படியே பிரதிஷ்டை செய்யப்பட்டு அதன்படியே அவ்வாலயங்களில் நித்திய நைமித்திக பூஜாக்கிரியைகள் செய்துவரப்படுகின்றன. இவ்வாலயங்களில் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறையாகவோ ஜீர்ணமாகும் பொழுதிலோ புதுக்கோயில் கட்டப்பட்டு அதில் தேவதாபிரதிஷ்டை செய்யப்படும் காலங்களில் கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக செய்யப்படவேண்டிய முக்கிய முதல் கிரியை பாலஸ்தாபனம் ஆகும். புதுக்கோயில் அமைப்பதற்கு முன்பாக அதைப் போன்றே சிறிய அளவில் மாதிரி கோயிலாக அமைக்கப்படவேண்டியது பாலாலயம் எனப்படும். இக்கோயிலை திருநாவுக்கரசு நாயனார் இளங்கோயில் என்று குறிப்பிட்டு உள்ளதால் அறியலாம். பழுது நீக்கி பழைய கோயிலை மேம்படுத்தும் போதும் முதலில் செய்யப்படவேண்டியது பாலாலயப்பிரதிஷ்டையே

ஆகும். இத்தகைய அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஆலய பாலஸ்தாபனம் எனும் பொருள் பற்றி சிவாகமங்களின் கருத்துக்களை இனி அறியலாம். 28ஆகம நூல்களிலும் பாலஸ்தாபன விதி ஒரு படலமாக இடம் பெற்று உள்ளதும் அதில் இச்செயல் விளக்கப்பட்டுள்ளதும் யாவரும் அறிந்ததே. ஆதலால் காமிகாகமத்தின் பாலஸ்தாபன விதிப்படி அனுசரித்து பாலஸ்தாபன ஆலயத்தின் இலக்கணத்தை இனிஅறிவோம்.

பாலஸ்தாபனத் தேவை

பாலஸ்தாபனம் இல்லாமல் மூலஸ்தாபனத்தைச் செய்யக்கூடாது. பாலலிங்கம் முதலியவை குறைபடுமாயின் மூலலிங்கம் முதலியவை ஸாந்நித்யம் பெறாது. ஒரு கிராமம் நகரம் முதலானவற்றை முதன் முதலில் அமைக்கும்போது முதலில் அவ்விடத்தில் தெய்வத்துக்கு பாலாலயத்திற்கு இடம்ஒதுக்கி செய்வித்த பின்னரே மக்கள் வசிப்பிடத்தில் குடிபுகவேண்டும். அது போன்ற காலங்களில் இடஒதுக் கீட்டை மட்டும் செய்துவிட்டு, மக்கள் குடியேறிய பின்பும் கோயிலை அமைத்துக் கொள்ளலாம். இளங்கோயிலோ அல்லது மூலக்கோயிலோ உள்ளஇடத்திலேயே மக்கள் வசித்திடவேண்டும் என்கிறது ஆகமம். புதியகோயிலை உருவாக்குவதற்கு முன்னதாக பாலஸ்தாபனத்தைச் செய்து, பிறகு கட்டுவது சிறப்புதரும். அல்லது முதலில் மூலக் கோயிலை இளங்கோயிலை அமைக்காமலும் கட்டலாம் என்று காமிகாகமம் கூறுகிறது.

பாலஸ்தாபன இடம்

மூலஸ்தானத்திற்கு வடகிழக்கு மூலையான ஈசான்யபாகத்திலாவது வடக்கிலாவது, கிழக்கு, தெற்கிலாவது, ஆக்னேய திக்கிலாவது, இஷ்டமான திக்கிலாவது, குருவானவர் பாலஸ்தாபன ஆலயத்தை நிர்மாணம் செய்யவேண்டும்.

மூலஸ்தானஸ்ய சைசான்யம் உத்தரே பூர்வ யாம்யகே |
ஆக்னேய்யா மிஷ்டதேசே வா குர்யாத் பாலகிருஹம் குரு: ||

(காமிகாகமம்)

மூலஸ்தானத்திற்கு எதிரிலோ, வடகிழக்கிலோ, வடக்கிலோ, இரண்டாம் பிரகாத்திலோ, மூன்றாம்பிரகாரம் அல்லது நான்காம் பிரகாரத்திலோ, ஐந்தாம் பிரகாரத்திலோ, பாலஸ்தாபனத்தை அமைத்திட வேண்டும் என்கிறது காரணாகமம்

மூலஸ்தானாக்ரகே குர்யாத் ஈசானே வா (அ)த சௌம்யகே |
ப்ராகாரேது த்விதீயே வா திருதீயே வா சதுர்த்தகே |
ப்ராகாரே பஞ்சமே வாத பாலஸ்தான மிதி ஸ்மிருதம் ||

பாலஸ்தாபன பாலாலய வகை (காரணாகமப்படி)

பாலாலயமானது இருவகைப்படும். அவை ஆத்யபாலாலயம் என்றும் த்விதீயபாலாலயம் என்றும் கூறப்படும். கிராமத்திலோ நகரத்திலோ பட்டினத்திலோ, தலைநகரத்திலோ, இவைகளில் ஒன்றில், ஓரிடத்தில் மூலக்கோயிலை போலவே, அதற்கு முன்பாகவே தேவவாஸ்துவை அமைத்து, முடித்திடும் போது அமைக்கப்படுவது முதலாவதான பாலஸ்தானமாகிய **ஆத்யபாலாலயம்** ஆகும்.

துவிதா பாலாலயம் புரோக்தம் பிரதமம் ச த்விதீயகம் |
கிராமே வா நகரே வாபி பத்தனே ராஜதானிகே |
ஏதேஷ் வன்யேஷு வா ஸ்தானேஷ மூலஸ்தானவத்புரா |
. . . . நிர்தேசநாந்தே ச கல்பிதம் பிரதமம் பவேத் ||

முதலில் பால ஆலயத்தை அமைத்து தேவனை பிரதிஷ்டை செய்து விட்டு, அதன்பிறகே மூலஆலயத்தை முறைப்படி கட்டிமுடித்து அங்கு மூலலிங்கத்தை பிரதிஷ்டைசெய்து, பிறகு பாலாலயத்தை கைவிடவேண்டும். மறுபடி கோயில்கட்டுவதிலும், சிதைவுற்ற பொழுதிலும், உடைந்த பொழுதிலும், புதுப்பிக்கும் பணியிலும், விரிசல் ஏற்பட்ட பொழுதிலும், பீடம் லிங்கம் பிரதிமை முதலியவற்றில் திருத்தத் திருப்பணியை செய்யும்பொழுதிலும் செய்யப்படுவதே இரண்டாவதான உத்தமமான பாலாலயம் ஆகும்.

ஆத்யம் பாலகிருஹம் கல்ப்ய மூலகேஹம் ததப்பரம் |
மூலலிங்கம் பிரதிஷ்டாப்ய பச்சாத் பாலகிருஹம் த்யஜேத் |
புனப் பிராஸாதகரணே சின்னே பின்னே நவீகிருதே |
விச்லிஷ்டே ச ததா பீடே லிங்கே ச ப்ரதமே ததா |
யத் கிருத்யம் தத் த்விதீயாக்யம் தருணாலயமுத்தமம் | (அம்சுமதி)

பாலஸ்தானம் எவ்விடத்தில் பிரதிஷ்டை செய்யப்படுகிறதோ, அல்லது தவிர்க்கப்படுகிறதோ, அது செய்வோர்க்கு பிள்ளை பேரன்களின் விநாசத்தைத் தரும். ஆகையினால் பாலஸ்தானத்தை ஏற்படுத்தாமல் திருப்பணி செய்வதைத் தவிர்த்து அனைத்து வகையான பெருமுயற்சியோடும் தவறாமல் பாலஸ்தாபனம் செய்திட சூக்ஷ்மாகமத்தில் பாலஸ்தானத்தின் அவசியம் விதிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தாநம் விநா யத்ர புத்ர பௌத்ர விநாசனம் |
தஸ்மாத் ஸர்வ பிரயத்னேந பாலஸ்தாநம் விதீயதே ||(சூக்ஷ்மாகமம்)

மேலும் இந்தசூக்ஷ்மாகமத்தின் கருத்தை உறுதிப்படுத்துவதாக காரணாகமவசனமும் பாலலிங்கபிரதிஷ்டையை வலியுறுத்தி உள்ளது. ஒருபோதும் ஒருலிங்கத்தையே இருவகையாகவும், பாலாலயம் மூலாலயம் இரண்டிலும் ஏற்கக்கூடாது என்பது இதனாலேயே உறுதிப்படுத்தப்படுகிறது. இதற்கு சான்று:

பாலலிங்கம் பிரதிஷ்டாப்ய மூலம் து ஸ்தாபயேத் தத: |
பாலஹர்ம்யம் விநா பூர்வம் மூலஸ்தானம் ந காரயேத் ||

(காரணாகமம்)

காமிகாமமம் மூன்றுமுழ அளவு, நான்குமுழம், ஐந்துமுழம், ஆறுமுழம், ஏழுமுழம் அளவினால் இவற்றில் ஏதேனும் ஒரு அளவினால் சமசதுர உட்புற அளவுடன் பாலஸ்தாபன ஆலயத்தைச் செய்யவேண்டும் என்கிறது. அல்லது இனி கட்டப்போகிற மூல ஆலயத்தினுடைய முழுஅளவில் இரண்டுமுழ அளவினாலோ, மூலாலய கருவறைஅளவில் பாதிஅளவிலும் அல்லது அதிகஅளவாக மூலாலயஅளவிலோ பாலாலயத்தை அமைக்கவேண்டும் என்கிறது காமிகாமகம். மேலும் பாலாலயசுவரின் அளவானது மூலாலய சுவர் பாகத்தின் அகலத்தின் ஐந்தில் இரண்டுபங்கோ அல்லது மூன்று பங்கோ உள்ளதாக பாலாலயசுவர்கனம் சம்மதிக்கப்பட்டதாகும் அதற்கு முன்புறம் மண்டப வடிவிலோ சபையை போன்ற வடிவிலோ அக்ரபாகமான அர்த்தமண்டபமானது, முகமண்டபம் அமைக்கப்பட வேண்டும்.

அந்த முகப்புமண்டபப் பகுதி அக்கருவறைக்கு பாதிஅளவிலோ கால்பங்கு அளவிலோ, முக்கால்பங்கு அதிகபட்சமாக அதே அளவிலோ, அதேஅகலத்தில் அமைக்கப்படவேண்டும் என்கிறது காமிகாமகம். இவ்வாறே காரணகாமகமும் கூறுகிறது.

திரிஹஸ்தாதி ஸமாரப்ய என்ற காமிகாகமக்கூற்றின்படி அளவு முழம் என்பது 24 அங்குல அளவான கை முழமாகும். அதில் பாதியான 12 அங்குலம் ஒரு சாண் அளவு ஒரு முக அளவு எனும் விதஸ்தி அளவாகும். இவ்விதம் மூன்று முழம் முதல் ஒவ்வொரு கைசாண் அளவினால், ஏழுமுழம்வரை அதிகப்படுத்திட்ட 1, 1 1/2, 2, 2 1/2, 3, 3 1/2, 4, 4 1/2, 5, 5 1/2, 6, 6 1/2, 7, 7 1/2, வரையில் பாலாலயத்தை அமைத்திடலாம்.

பாலலிங்க விதி

பாலாலயலிங்கமானது பாலாலயஅளவிற்கு ஏற்பவும், அகலமும் நீளமும் சமமாகக்கொண்டதாயும், ஸர்ப்பத்தை உடைய சிரசுடன் கூடினதாயும், ருத்ரபாக ப்ரம்மசூத்திரமில்லாததாகவும், சிறிய அளவில் உரியஅளவில் செய்யவேண்டும். இந்த லிங்கம் ஒன்பது அங்குலம் முதல் இரண்டிரண்டு அங்குலங்களை சேர்த்து, விருத்தி செய்து, முப்பத்துமூன்று அங்குலம் எவ்வளவோ அவ்வளவே பால லிங்கமாக ஆகும். பாலலிங்கத்தை மூன்று நான்கு பாகத்தின் அளவினால் பீடத்தில் பிரவேசிப்பிக்க வேண்டும். சிரசும் சமமா யிருத்தல் சிறந்தது. குறைவுபட்டது மத்திமம். இடைவெளியுள்ளது அதமம். எட்டுபாகமாகப் பகுக்கின் ஒன்பதாவது பாகம் லிங்கத்தின் உயரமாகச் சம்மதிக்கப்பட்டது. பிரதிமைகளுக்கு பாலலிங்கமின்றி பாலபிரதமைக்கு ஏழங்குலம் முதல் இரண்டிரண்டு அங்குலமாகக் கூட்டி ஒன்பதுபாகம் வரை 7,8,11,13,15,17,19,21,23 அங்குலம் வரை உருவச்சிலைகளை அமைத்திடல் வேண்டும். உருவத்திற்கு சகள மூர்த்தியாகில் அதற்கு சகளத்தையே உருவச்சிலையையே செய்திட வேண்டும். நிஷ்களத்தில் பாலபேரமானது நிஷ்களத்தைச் செய்ய வேண்டும். லிங்கபேரமோவென்னில் மூலபிம்பத்தின் பாதியளவில் நாலிலொருபாகத்தால் செய்வது சிறந்தது. எட்டில் ஒரு பாகமாகச் செய்வது மத்திமமாகும் ஒன்பது அளவைப் பிரமாணத்தை உடையது அதமமாகும். நிஷ்களலிங்கத்திற்கு ஆஸனமானது அகலத்தின் அளவாய் செய்வது உத்தமம். நாலில் ஒருபாகம் மத்திமமாகும். ஒன்பதாவது அளவு அதமமாகும். லிங்கத்தின் அளவு உள்ளதாக ஏற்றதாக முறையே பாலலிங்கபீடத்தைச் செய்யவேண்டும். லிங்கமும் பீடமும் கல், மரம், முதலானவற்றில் ஒரேபொருளால் இருத்தல் சிறப்பு உடையதாகும்.

பாலலிங்க மியற்றத்தக்க பொருட்கள்:

பாலஸ்தாபனத்திற்கு உரிய, பாலலிங்கத்தை விதிக்கப்பட்ட பொருட்களால் மட்டுமே செய்திடவேண்டும். உலோகம், கருங்கல், மரம் இவற்றால் பாலலிங்கத்தின் பேரமானது விதிக்கப்படுகின்றது. அதுவும் பாலுள்ளமரத்திற்கு எடுத்துரைக்கப்பட்ட யாகசம்பந்தமுள்ள மரவகைகளால் மட்டுமே செய்யப்படவேண்டும். அவற்றுள் சிறப்பாக 1. பலாசமரம், (பொரசமரம்) 2. ஆலமரம், 3. அத்திமரம், 4. அரசமரம், 5. இலுப்பைமரம், 6. பலாமரம், 7. கல்லாலமரம், 8. சந்தனமரம், 9. கருங்காலிமரம், 10. தேவதாருமரம், 11. பவழமல்லிகை மரத்தாலும்

லிங்கபேரத்தைச் செய்யவேண்டும் என காமிகாமகம் கூறுகிறது. விநாயகருக்கு உபதேசிக்கப்பட்ட சுப்ரபேதாகமம், மண்ணிலும் பாலலிங்கத்தை கூறுவதுடன், கல், மரம் இரண்டினாலும் முறைப்படி பாலாலயத்தையும் செய்யுமாறு விதிக்கின்றது. அதற்கான சான்று,

லோஹஜம் சைலஜம் லிங்கம் தாருஜம் மிருண்மயம் து வா |
காரயேத் து விசேஷேண லக்ஷணோக்தேந தேசிக: |
சைலஜம் விருக்ஷஜம் வாபி பாலலிங்கம் ப்ரகல்பயேத் |
பாலாலயம் ததா லிங்கம் ஏவம் ஸங்கல்ப்ய தேசிக: ||

(சுப்ரபேதாகமம்)

பாலஸ்தாபன காலநியமம்

சூக்ஷ்மாகமம் மற்றும் நூல் பலவும் பாலஸ்தாபனம் எனும் தேவதா பிரதிஷ்டையை, தேவலோகத்தின் பகலில்மட்டுமே செய்யவேண்டும் என்றும், “மாகமாஸம் விநா சஸ்தம் பாநோ ரயண முத்தரம்” எனும் வசனப்படி தட்சிணாயனமான இரவில் செய்யக்கூடாது என்றும் கூறியுள்ளன. முதலாவதான பாலஸ்தாபனத்தை மட்டும் கட்டாயமாக உத்தராயணகாலத்தில் செய்வது முறை.

பாலஸ்தாபன காலவிதி

உத்தராயண காலே து சுக்லபசேக்ஷ சுபே தினே |
சுமுகூர்த்தே சுநக்ஷத்ரே தைவஞாலய வேசநம் |
திருஷ்ட்வா தோஷம் ததா காலே தருணாலயகம் சுபம் ||

(சூக்ஷ்காமகம்)

உத்தராயணகாலத்தில் சுக்லபக்ஷத்தில் வளர்பிறைகாலத்தில் சுபமானநக்ஷத்திரம், யோகம், கரணம் கூடியநாளில் குற்றமற்றகாலமான சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபனம் செய்யப்படவேண்டும். காரணாகமம் முதலாவதான பாலஸ்தாபனத்திற்கு மட்டுமே நாள் பொருத்தம் கணிக்கப்படவேண்டும் என்கிறது. இரண்டாவதாக செய்யப்படும் அதாவது பூஜித்துவந்த பழையகோயிலின் மறுசீரமைப்பு காலத்திய இளங்கோயில் பிரதிஷ்டைக்கு லிங்கபிரதிஷடைக்குக் கூறப்பட்ட அதேமுறையிலேயே இதைச்செய்க, என்றும், நாள்முதலானவற்றைப் பார்த்துத் தள்ளிவைக்கத் தேவையில்லை என்றும், ஆனால் இந்த பாலஸ்தாபனக் கிரியையை சரராசியில், சரலக்னத்தில் மட்டுமே செய்வது சிறந்ததாகும் என்றும், உபயராசிகள் மத்யமம் என்றும், ஸ்திரராசிலக்னம் அதமம் என்றும், காரணாகமம் கூறியுள்ளது.

இதற்கான சான்று:

மாஸபக்ஷர்க்ஷ வாராதீன் ஆத்ய பாலாலயஸ்ய து |
லிங்கஸ்தாபந கர்மோக்த மார்க்கேணைவ ஸமாசரேத் |
தேஷு கச்சித் விசேஷோஸ்தி சிரேஷ்டா வை சர ராசய: |
மத்யமாச் சோபயா ஞேயா அதமா ஸ்திர ராசய: || (காரணாகமம்)

இந்த பாலாலயத்தை கோயில், சிதைவுற்ற ஜீர்ணித்த காலத்தில், மேல்தளத்தில் வேலைஆரம்பித்தாலும், உடைந்தாலும், கட்டிடந் தளர்ந்தாலும், பிளவுமுதலான தோஷங்கள் உண்டானாலும் பாலஸ்தாபனத்தைச் செய்யவேண்டும். புத்திமான்கள் லிங்கத்திற்கோ பேரத்திற்கோ ஏதோ ஒரு காரணத்தினால் அசைவு நேரிட்டால் பன்னிரெண்டு வருஷத்திற்கு உள்ளாகவே பாலஸ்தாபனத்தை செய்யவேண்டும். அதற்குமேல் வேறுஇடத்தில் ஸ்தாபனம் இஷ்டமாக ஸம்மதிக்கப்படவில்லை அவ்விடத்திலேயே ஸ்தாபிக்கவேண்டும்.

பாலாலய அமைப்புவிதி பாலாலயத்துடன் பாலாலயத்தின் முன்பாக நாற்கோண மண்டபம் செய்யத்தக்கது. அந்த முன்மண்டபம் என்பது பாலஸ்தாபன ஆலயத்திற்குச் சமமாகவாவது முக்காற்பாகமாவது அதிற்பாதியாவது செய்யத்தக்கது. இதனை சுட்ட (வெந்த) செங்கல் கருங்கல் முதலானவற்றால் விதிப்படியே செய்யவேண்டும். ஆகலத்திற்கு சரியான உயரத்தை உடையதாய் ஆலயத்திற்கு உரிய விமான இலக்கணப்படியே உபபீடத்துடன் 1. அதிஷ்டானம் 2 பாதம் 3. பிரஸ்தரம் 4 கண்டம் 5 சிகரம் 6 ஸ்தூபி என்பவைகளான ஷடத்வாக்களின் ரூபமான ஆறுமுக்கிய உறுப்புகளுடன் கூடியதாக ஆலயத்தை சம்பூர்ணமானதாயும் தண்டிகை (கோமுகை) திரையோடு கூடினதாயும் செய்யவேண்டும். மூலாலயம் எந்ததிசைநோக்கில் உள்ளதோ, அதே திசைநோக்கிலேயே பாலாலயம் அமைக்கப்படவேண்டும். அதில் துவாரம் கதவு பொருத்தப்பட்டிருத்தல் அவசியம்.

பாலலிங்க பேதமும் பீடபேதமும்

லிங்கபீடமானது நாற்கோணம், எண்கோணம், வட்டம் என்று மூன்றுவிதமாக செய்யப்படவேண்டும். லிங்கத்தின் நீள அகலத்தில், பீடமானது, பாதிஉயரம் உள்ளதாக இருந்திடவேண்டும். நன்றாக சுட்ட செங்கல்லினாலும், சுண்ணாம்பினாலும், மண்ணிணாலும் சிவலிங்கம் செய்யத்தக்கது ஆகும்.

பாலஸ்தாபனத்தில் செய்யத்தக்கவையும் - செய்யத்தகாதவையும்

ரத்னநியாஸம், யந்த்ரஸ்தாபனம், அஷ்டபந்தனம் முதலானவை பாலஸ்தாபத்திற்கு செய்யவேண்டியது இல்லை. அங்குரார்ப்பணம் முதலான பிரதிஷ்டைக்குரிய மற்ற எல்லாகிரியைகளும் இதற்கு செய்யத்தக்கவைகளே ஆகும்.

பாலஸ்தாபன யாகசாலை அமைப்பு முறை

பாலாலயாக்ரே கர்த்தவ்யம் மணடபம் சதுரச்ரகம் என்ற ஆகமவிதிப்படி, பாலாலயத்தின் முன்பாக, சதுரமானமண்டபம் செய்யத்தக்கது. பத்துமுழமாவது, எட்டுமுழமாவது, ஏழுமுழமாவது அளவுகொண்டதாக அந்த யாகமண்டபம் செய்யத்தக்கது. அகலமான உயரமான 12தூண்களோடு கூடினதாயும், மூன்றுவரிசை அடுக்குப் பகுதி உள்ளதாயும்

நடுவில் ஒருமுழஉயரத்தில் வேதிகை உள்ளதாயும், நான்கு திசைகளிலும் நான்குமரத்தால் தோரணவாயில்களை உடையதாயும், தர்பமாலைகள், மேற்கட்டுவிதான விரிப்பு, திசைக்கொடிகள், மாலை தோரணங்களோடும் அலங்கரிக்கப்பட்டதாயும் செய்யவேண்டும். வேதிகையை நடுப்பாகத்தில், அதில் நாலில் ஒருபாக உயரம் உள்ளதாய் அமைத்து, அந்தவேதிகைக்கு எட்டுதிக்கிலும் ஹோமகுண்டங்களை அமைத்திடவும் வேண்டும். ஹோமகுண்டங்கள் ஒன்பதையும் முறையே நான்குதிசையிலும் சமசதுரவடிவ குண்டங்களாக நான்கையும், நான்கு மூலைகளிலும் தாமரை எட்டிதழ்ப் பூவடிவ பத்மாகார குண்டங்கள் நான்கையும், கிழக்கிற்கும் வடகிழக்குமூலை குண்டங்களுக்கும் இடையில் நடுவே பிரதானகுண்டமாக சமவிருத்தமாய் வட்டபிந்து வடிவில் ஒருகுண்டத்தையும், ஆக இவ்விதம் ஒன்பது குண்டங்களை பாலஸ்தாபன யாகத்தின்பொருட்டு, அமைக்கவேண்டும் என்று காமிகாமத்திலும், காரணாகமத்திலும் இருபெரும் பிரதிஷ்டாதந்திர நூல்களிலும் கூறப்பட்டு உள்ளவாறு செய்வது முறை.

ப்ராகேவ விதிநா குர்யாத் விதிநா சாங்குரார்பணம் || 20
பாலாலயாக்ரே கர்த்தவ்யம் மண்டபம் சதுரச்ரகம் | 21
திசாசு சதுரச்ராணி கோணேஷ் வப்ஜாநி கல்பயேத் |
ஈசான சக்ரயோர் மத்யே பிரதானம் விருத்தகுண்டகம் | 25
மண்டபஸ்யோத்தரே பார்ச்வே ஸ்நான ச்வப்ரம் பிரகல்பயேத் | 26

நயனோன்மீலனம் குர்யாத் பூந்வோக்த விதிநா ஸஹ |
பச்சாத் பேரஸ்ய சுத்தி ஸ்யாத் சாஸ்திர திருஷ்டேன கர்மனா ||
(காரணாகமம்)

இவ்விதம் யாகசாலை, வேதிை,க குண்டம், இவற்றின் கட்டுமானப் பணிகளை முடித்து, அம்மண்டபத்திற்கு வடக்குதிசையில் பாலலிங்க பேரசுத்தி நீராட்டலுக்கு உரிய, ஸ்நாநவேதிகையை அமைத்து, அதில் முதல்நாள் இரவில் அங்குராதிகளைச்செய்து, பூஜையை முடித்தபின்பு பாலலிங்காதிகளை, கண்திறத்தலைச் செய்துமுடித்து, இந்த ஸ்நாந வேதிகையில்வைத்து, பஞ்சகவ்யத்தினால், அஸ்திரத்தினாலும் சாந்தி மந்திரத்தினாலும் ஐவகைமரப்பட்டைகள், மண்வகைகள், இலைத்தளிர் வகை, உலோகரத்னவகை, ஜலவகைகளால் நீராட்டி, பிம்பசுத்தியைச்செய்து, அதற்கு காப்புக்கட்டி, சயனத்தில்படுக்கவைத்து ஷடத்வநியாஸம் செய்து, அதிவாஸபூஜை, இவற்றை ஹோமம் பிரதிஷ்டைமுறையிலேயே செய்யவேண்டும். வேதாதிகளை யாகசாலையில் ஓதியும், பிரதிஷ்டை முறையில் யாகத்தை பூர்ணாகுதிவரையில் செய்து, முன்இரவில் அதிவாசக்கிரியையை முடித்திட வேண்டும். மீண்டும், மறுநாள் காலையில் முறைப்படியே யாகசாலையில் கும்பபூஜை கண்டஹோமம் இவற்றை முடித்து, பாலாலயத்தில் பகலில் பால லிங்காதிகளை முறையே ஸ்தாபிக்கவேண்டும். சுப்ரபேதாகமம் பாலலிங்க ஸ்தாபனத்தை திரிபந்தனத்துடன் செய்திடுமாறு கூறுகிறது.

ஸ்தாபயேத் பீடமத்யே து சிவமந்திர முதீரயன் |
பந்தயித்வா திரிபந்தேந ஹ்ருதயம் மந்திர முச்சரன் || (சுப்ரபேதம்)

இவ்விதமாக பாலஸ்தாபனத்தை செய்துமுடிப்பது முதலாவது பாலஸ்தாபனசெய்முறை ஆகும். இவ்வாலயத்தில் நித்யபூஜையையும் நித்யஉத்ஸவத்தையும், ஆத்யபாலாலயத்தில் செய்யவேண்டும் என காமிக, காரணஆகமங்கள் விதிக்கின்றன. யாகசாலைஅமைப்பில் முன்கூறியதுபோல ஒன்பதுகுண்ட அமைப்பு இன்றி ஐந்துகுண்டங் களை அமைத்தும் செய்யப்படலாம். அம்முறையில் நான்குமூலையில் அமைத்த நான்கு பத்மகுண்டங்களை நீக்கிவிட்டு மற்றவற்றுடன் முறையே யாகம் செய்திடவேண்டும். இவ்வாறு இன்றியும் கிழக்குதிசையில் மட்டும் ஒரு குண்டத்தை மட்டுமே அமைத்து ஏககுண்டவிதிமுறையாலும் யாகத்தைச் செய்யலாம்.

இரண்டாவது பாலஸ்தாபன சிறப்பு பூஜா விதி:

இரண்டாவதாக செய்யப்படும் தருணாலய பிரதிஷ்டையில் விசேஷமாக முதல்நாள் இரவில் ஜீர்ணோத்தாரம் செய்யஇருக்கிற மூலாலயத்தின் முன்பாக, முன்புபோலவே தானியஸ்தண்டிலத்தின் மேல் கும்பங்களை ஸ்தாபித்து, ஆசார்யர் ரித்விஜர்கள் யாவரும் முன்கூறப்பட்ட விதியால், மூலலிங்கத்தை சந்தனபுஷ்பம் முதலானவற்றால் ஹவிஸ் அன்னநிவேதனத்துடன் பூஜித்துத் தேவதேவர்க்குஈசனாகிய பரமசிவனை துதித்து, நமஸ்கரித்து, "ஒருவருஷகாலம் முதல், பன்னிருவருஷ காலத்திற்குள் இதன் நடுவில் உள்ள இடைப்பட்டகாலத்தில் நான் மறுபடியும் இதே ஆலயத்தை நூதனமாகச் செய்து மறுபடியும் முன்புபோலவே தங்களை ஸ்தாபிக்கிறேன்" என்று இவ்வாறு, ஆகமகிருத்தியத்தில் வித்வானான தேசிகர் ஆசார்யரோடு கூடியவராய் இறைவனிடம் கர்த்தாவானவர் விண்ணப்பித்து அறிவிக்கவேண்டும். பின்பு லிங்கத் திலிருந்தோ பிம்பத்திலிருந்தோ எதிரில் ஸ்தாபித்துள்ள கும்பத்தில் அனைத்து தெய்வத்தையும் ஆவாஹனம் செய்து, மூலமந்திரத்தால் கும்பத்தில் ஜீவநியாஸத்தைச் செய்தும், பீடத்திலிருந்து தேவியை வர்தனீகலசத்தில் ஆவாஹித்தும், பீடத்தின் எட்டுதிசையிலிருந்து ஸ்தாபித்திருக்கிற எட்டுவித்யேச்வரர்களை எட்டுசுற்றுகலசங்களிலும் விதிமுறைப்படி மூலபேரத்திலிருந்து மஹாகும்பத்தில் சேர்த்து, பின்பு ஸகல அரசுமரியாதையுடன் உபசரிப்புகளுடன் யாகசாலைக்கு புறப்பாடாக வலமாக எடுத்துச்சென்று, யாகவேதிகையில் ஸதாபித்து, பூஜை, யாகம் இவற்றை பிரதிஷ்டாவிதிப்படி செய்துமுடித்து, மீண்டும் அவ்வாறே உபசரிப்புடன் பாலாயத்திற்குள் எழுந்தருளச்செய்து, பாலலிங்கத்தின் முன் கற்பிக்கப்பட்ட தானியஸ்தண்டில இருக்கையில் இறக்கி வைத்து, கும்பத்தையும் பேரத்தையும் பூஜித்து, அழைத்த முறையிலேயே மீண்டும் கும்பங்களிலிருந்து லிங்கம் பீடம் எண்திசைப் பாகங்களில் உரிய தேவதைகளை உரியமுறையில் மூலமந்திர ஜீவநியாசத்தை செய்து ஆவாஹித்து, சேர்த்து, அந்தந்த பூசித்த மகாகும்பத்தால் அந்தந்த தேவதையை முழுகாட்டியும், தெளித்து சம்புரோக்ஷணம் செய்தும், பாலஸ்தாபனப் பிரதிஷ்டையை செய்து, போகாங்கபூஜையை செய்து அங்கு, ஆலயவழக்கப்படியே நித்யபூஜை முதலியவற்றை தொடர்ந்து செய்துவரவேண்டும் என்பது ஆகமவிதி முறையாகும்.

உருவ நிலையில் உள்ள கணபதி, ஸ்கந்தர், சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, நடேசர் முதலான அனைத்து விதமான மூர்த்திகட்கும்

இவ்வாறே பாலபிம்பத்தைச்செய்து, பிரதிமையிலும், பலிபீடத்திலும் சிலாமத்திலும், பரிவாரத்திலும் இவ்வாறு பாலபிம்பத்தை கற்பிக்க வேண்டும். பிறகு மற்ற அனைத்தையும் அதற்குச் சமானமாகச் செய்திடவேண்டும். இதற்கான சான்று:

லிங்கம் கும்போதகைஸ் ஸநாப்ய பிண்டிகாம் கரகோதகை: |
அஷ்ட வித்யேச்வரான் தத்ர பீடே பூர்வாதிஷு நியஸேத் |
அர்ச்சநோக்தம் ஸமாரப்ய சேஷம் பக்த்யா ஸமாசரேத் |
பரிவாரகடே யஸ்து ஸ்வஸ்தானேஷு க்ரமான் நியஸேத் |
நித்யோத்ஸவாதிகான் ஸர்வான் பாலஸ்தானே து காரயேத் |
ஏவம் பிரதம மாக்யாதம் த்விதீய மதுநா சுருணு

(காரணாகமம்)

இரண்டாவது பாலஸ்தாபன விதிமுறை

அருள்பாலித்துவந்த ஒருகோயில் காலப்போக்கில் சிதைவுறுதல், வெடித்தல், வலுவிழத்தல் முதலான பல்வேறு காரணங்களினால் குறை ஏற்பட்டபொழுது, அதனால் இறையருள் வெளியேறி சூரிய மண்டலத்தில் ஒளியில் கலந்து விடுமாகையால், அவ்வாறு அவ்வாலய தெய்வத்தின் அருட்சக்தியாகிய சாந்நித்யம் விலகாமலிருக்கவும், குறைகளைப் போக்கி பூரணத்துடன் விளங்கிடவும், பிராயச்சித்தமாக பரிகாரமாக பன்னிரு ஆண்டுக்குள் தேவைப்பட்டு செய்யப்படும் பாலாலயஸ்தாபனமே துவிதீய பாலஸ்தாபனம். இதனை குறைபோக்கி மேம்படுத்தத் தேவைப்படும் காலஅளவிற்கு ஏற்றவாறு, பாலலிங்கம் பிம்பம் அல்லது இலக்கு உருவப்பொருள், வடிவங்களில் தற்காலிகமாக ஆவாஹித்து, பாலஸ்தாபனம் செய்திடலாம். இந்த பாலலிங்கார்த்தம் பத்துவகை கூறப்பட்டுள்ளமையால் கட்டாயமாக பாலலிங்கமோ, பாலபிம்பமோதான் தேவை, என்று இல்லை, செய்தால் அது தவறில்லை சிறப்பாகும். ஆலயக்கருவறையில் ஸ்தலகர்மாவாகிய தரைத்தளத் திருப்பணி சரிசெய்தல் வலுவிழந்து சரிந்து முற்றிலும் புதுப்பித்தல் போன்றவற்றிலும் பழைய மூலபிம்பத்தை பாலபிம்பமாக பாலாலயத்தில் இடம்மாற்றி தற்காலிகமாக ஒருபோதும் கையாளும் வண்ணம் ஸ்தாபித்திடக்கூடாது. காரணம் தனித்தனியே இலக்கணமும், இடமும் விதிமுறையும் கூறப்பட்டு உள்ளதாலேயே இதனை அறியலாம். ஆகவே இந்த இரண்டாவது பாலஸ்தாபனத்தை பத்துவகையானவற்றால், தேவைப்படும் காலஅளவிற்கு ஏற்பவே செய்திடவேண்டும் என்றும், அதன் காலஅளவு முறைகளையும், அம்சுகமதாகமம் நன்கு விளக்கி உள்ளது. சிலைகளில் மட்டுமே பன்னிரெண்டு ஆண்டுகள்வரை தற்காலிகமாக பாலாலயத்தில் வைத்திருக்கலாம். அதற்கு

மூலாலயத்தில் சேர்த்திடுவது, மூலாலய பிரதிஷ்டை கும்பாபிஷேகம் செய்திடுவது சிறந்ததாகும். இதனை விளக்கும் அம்சுமதாகம சான்று இதுவே ஆகும்.

ஏவமாத்யகிரமம் புரோக்தம் துவிதீயம் சா துநா சுருணு |
பிராயச்சித்தார்த்தகம் யத்ர ஸ்தாபயேத் பாலலிங்ககம் |
துவிதீயம் தத்ர விக்ஞேயம் தத்பேதம் தசதா விது: |
கட்கே ச கூர்ச்சே பிம்பே ச தர்பணே பிரதிபிம்பகே |
கும்பே ச ஸ்தண்டிலே சைவ மண்டலே பாதுகே (அ)பி வா |
படே வா பித்திசித்ரே வா பாலலிங்கார்த்தகம் யஜேத் |
மாஸாதூர்த்துவம் ந கர்த்தவ்யம் கும்பஸம்ஸ்தாபனம் விது: |
கலச ஸ்தாபநஸ்யோக்த மார்கேணைவ ஸமாசரேத் |
மண்டலே ஸ்தண்டிலே சைவ கூர்ச்சே சைவ விசேஷத: |
தத்பிம்பஸ்யார்ச்சனம் குர்யாத் ஆஸப்த திவஸாந்தகம் |
மண்டலாச்சன மார்கேண காரயேத் தேசிகோத்தம: |
சேஷான்யந்யாநி பிப்பாநி துவாதசாப்தாவதிம் யஜேத் |

(அம்சுமதாகமம்)

சைவ விசேஷத் மண்டலார்ச்சந சேஷாண்யன்யாணிகாரயேத் |

மேற்காணும் அம்சுமதாகம வசனத்தின்படி, பிராயச்சித்தார்த்தகமாய் இடைக் காலத்தியதான இரண்டாவது பாலஸ்தாபனத்தை பத்துவகையாக அறிந்து செய்வதுமுறை அதனை 1 கத்தியிலும் 2. தர்பையை முடிந்து பின்னியகூர்ச்ச வடிவத்திலும் 3. மரவகைப் பதுமையிலும் 4. முகம் காட்டும் கண்ணாடியிலும், அதன் எதிரில் சிலையை வைத்து, அதனால் கண்ணாடியில் ஏற்படும் பிரதி பிம்பத்திலும், 5. முறையே தயாரித்த மகாகும்பத்திலும், 6 மண்மேடை (தானிய மேடை) செய்து சாணமெழுக்கிட ஸ்தண்டிலத்திலும், 7. வண்ணப் பொடிகளால்அமைத்த பூஜா, ஓவியமண்டலத்திலும் 8. இறைவனின் காலனிகளாகும் பாதுகையிலும் 9. துணியில் ஐந்துவண்ணத்தால் தீட்டப்பட்டதான உருவப்படத்திலும் 10. சுவரில் வரைந்து வண்ணம் தீட்டப்பட்ட சித்திரமாகிய சுவரோவியத்திலும் இவ்விதமாக பத்து உருவத்திலும், இரண்டாவதான பாலஸ்தாபனத்தை பாலலிங்கத்திற்கு பதிலாக, அதன்பொருட்டாக ஏற்று, சிவனை ஆவாஹித்து, பூஜிக்க வேண்டும். இவ்வாறே பிறதெய்வங்களுக்கும் செய்யத்தக்கதாகும். இவற்றுள் நீர்நிறைந்த, கும்பத்தில் 27நாள் பெருந்திருவிழாவில் முறையே வைக்கப்படுவது போல், உத்தமஇலக்கணப்படி நெடுநாள் அசையாதிருக்குமாறு, கும்பஸ்தாபன விதிமுறைப்படி வைக்கப்பட்ட

உலோகமயமான மஹாகும்பத்தில் செய்யத்தக்க பாலஸ்தாபனம் 30நாள்வரையிலுமே வைத்திருக்கக்கூடியது ஆகும். அதற்கு மேல் வைத்திருக்கக் கூடாது. வைத்தால் கிராமநாசம் விபரீதம் விளையும். எனவே அதற்குள் மூலாலயத்திற்கோ யாகாலயத்திற்கோ தேஹ மாற்றம்செய்து பூஜித்திடவேண்டும். மண்டலத்தில் செய்யப்படுவதனால் ஏழுநாட்கள் வரையில் பூஜிக்கலாம். இவ்வாறே ஸ்தண்டிலத்திலும், தருப்பைக்கூர்ச்சத்திலும், மிருத்திகாதி பிம்பத்திலும் ஏழுநாட்கள் வரை வைத்திருந்து பூஜிக்கலாம். இம்முறையை அஷ்டபந்தனத்தை மாற்றும்காலத்திலும் அந்தரிதப்பிரதிஷ்டா காலத்திலும் பின்பற்ற முடியும். மேலும் மற்றவைகளில் பன்னிருஆண்டுகள் வரையில் பாலஸ்தாபனத்தில் பூஜிக்கலாம். மேற்கூறிய 1. கட்கம் 2. கூர்ச்சம் 3. பிரதிமை 4. கண்ணாடி 5. கும்பம் 6.ஸ்தண்டிலம் 7. மண்டலம் 8. பாதுகை 9. சித்திர படம் 10. பித்திசித்திரம் ஆகியவற்றில் கூர்ச்சம், கும்பம், ஸ்தண்டிலம், மண்டலம் ஆகிய நான்கு உருவத்தை தவிர்த்து மற்றைய ஆறுவடிவத்தில் பலஆண்டுகாலம் அசையாதிருக்கும்படியும் மற்றும் அழியாதிருக்கும்படியும் புத்திசாலியான ஆசார்யர் அமைத்து, அதில் 12ஆண்டு காலம்வரையில் வைத்துஇருந்து அதற்குள் தேவைப்படும் மூன்றுஆண்டிலோ, ஐந்தாண்டிலோ, ஏழாண்டிலோ, மூலாலயத்தில் சேர்த்திடவும் செய்யவேண்டும். மேலும் கும்பத்தில் ஒன்பதுநாள்வரை பூஜிப்பது உத்தமம் என்றும் பதினைந்துநாள் வரை பூஜிப்பது மத்யமம் என்றும், 30நாள்வரை ஒருமாஸம்வரை வைத்துப் பூஜிப்பது கன்யஸம் என்றும், காலஅளவால் பலனில் மூவகைத் தரத்தை லலிதாகமம் கூறியுள்ளது. மேலும் இவ்வாகமம் கட்கத்தில் (வெட்டரிவாள் கத்தியில்) இருமாஸகாலம் வரையிலும், கண்ணாடியில் ஆறுமாதகாலம் வரையிலும், லதாலிங்க பத்ராதி மண்டலத்தில் மூன்றுநாள் வரையிலும், ஓவியத்தில் (துணியில் மற்றும் சுவரில்), சித்திரத்தில் ஒருவருடகாலம் வரையிலும் மரச்சிலைகளில் 36மாதம் (மூன்றாண்டு) காலம்வரையிலும் பாலஸ்தாபனம் செய்து பூஜிக்கப்படவேண்டும். இந்த மேலே குறிப்பிட்ட கால அளவிற்கு மேல்வைத்திருந்து பூஜிக்கப்படுமேயானால், கர்த்தாவும் முன்னின்று உதவிகாத்து செய்விப்போரும் விநாசத்தை அடைவார்கள் என்று உரிய பயனுடன் எச்சரித்து விளக்கி லலிதாகமம் கூறி உள்ளது. காலஅளவிற்கான லலிதாகம சான்றுகள்:

கும்பே நவதினம் பூஜா உத்தமம் து விதீயதே |
மத்யமம் பக்ஷஸங்கியா ச கந்யஸம் மாஸ மேவ ச |
த்விமாஸம் கட்கபூஜா ச ஷண்மாஸம் சைவ தர்பணே |

மண்டலே த்ரீணி ராத்ராணி சித்ரே வத்ஸர பூஜனம் |
ஷட்திரிம்சத் மாஸ மேவோக்தம் தாருபிம்பே ஸமர்ச்சயேத் |
உபரி பூஜயேத் சைவ கர்த்தா பர்த்தா விநச்யதி || (லலிதாகமம்)

இவ்வாகமம் லலிதாதேவியின் சிறப்புஆராதனைகளை விளக்குவதாய், சிறப்புமிக்கதாகத் தெளிவாகக் கூறுகிறது. எனவே கருங்கல்லிலான பாலபிம்பத்தை ஸ்தாபித்தல் மட்டுமே பன்னிரு ஆண்டுகாலம்வரை பூஜிக்கலாம் என்றும், இலுப்பமரம், கருங்காலிமரம், சந்தனாதிமரங்களில் முன்னும் பின்னுமாக முழு உருவச்சிலை அல்லது லிங்கம் செய்து மரத்திலேயே பீடம் முதலானவற்றை செய்து செப்புப் பட்டயம் பொன்தகடு ஊசிஆணி கொண்டு இணைப்புகளை பந்தனம் செய்து, சேர்த்து, மரத்தாலான கோயிலில் உரிய தைலக்காப்புடன் பாதுகாப்பாக ஏழுஆண்டுகாலம்வரை வைத்து பூஜிக்கலாம் என்பதும் சைவாகமஅறிஞர்களின், சான்றோர்களின்கருத்து முடிவாகும். ஆலயங்களில் விளங்கும் லிங்கங்கள் ஏழுவகையாகும். அவற்றுள் சுயம்புலிங்கத்திற்கும், மகரிஷிகளாலும், தேவியாலும், தேவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டவைக்கு பாலலிங்கத்தையே ஏற்று, பாலஸ்தாபனம் செய்யப்படவேண்டும். அதுவும் ஜீரணமாயிருந்தால் மட்டுமே பாலஸ்தாபனம் செய்யவேண்டும். அவ்வாறு ஜீரணமில்லாத பொழுதில் வேறுகாலாதி காரணங்களால் பாலஸ்தாபனம் செய்யக்கூடாது என்று வீராகமம் விசேஷமாகக்கூறிஉள்ளது. எனவே பிறவடிவங்களில் ஆவாஹிப்பது மன்னர்களாலும் மனிதர்களாலும் ஸ்தாபிக்கப்பட்ட மானுஷலிங்காதிகளிலும் சிலைகளிலும் மட்டுமே பின்பற்றத்தக்கது.

ஸ்வயமுத்பூத லிங்கஸ்ய ஸ்தாபிதஸ்ய மஹர்ஷிபி: |
தேவைர் வா ஸ்தாபிதஸ் யாபி பாலலிங்கம் து காரயேத் |
ஜீர்ணலிங்கே து கர்த்தவ்யம் அன்யதா துந காரயேத் || (வீராகமம்)

மேலும் சிறப்புவிதியாக சிவலிங்கத்திலிருந்து, சிவனுக்கு செய்யப்படும் பாலஸ்தாபனத்தை சோமாஸ்கந்தர் முதலிய மாஹேச்வர மூர்த்திகளின் கல் அல்லது உலோகவகை பிம்பத்தில் பாலஸ்தாபனத்தை செய்திட்டால், முப்பத்திரண்டு ஆண்டுகள் வரையில் (பெருந்திட்ட ஆலய நிர்மாண காலத்திற்கு ஏற்றவாறு) பாலஸ்தாபனத்தில் வைத்திருந்து பூஜிக்கலாம் என்று ஸ்ரீமத் காமிகாகமம் கூறி உள்ளது உற்று நோக்கத்தக்கது.

ஸோமாஸ்கந்தாதி பிம்பேஷு துவாத்ரிம்சத் வர்ஷ முச்யதே |
(காமிகாகமம்)

ஆஜிதாகமமும் சிவனுக்கு பாலலிங்கத்தையே விதிக்கிறது.

பாலஸ்தாந ஸ்திதே லிங்கே தேவ மாவாஹ்ய மந்த்ரவித்| (அஜிதாகமம்)

பாலாலயத்திற்கு தேவனை அழைத்துச் செல்வதற்கு முன்கூறியபடி தேவனெதிரில் கும்பம்வைத்து பூஜித்து, பிறகு கர்த்தா ஆசார்யருடன் பன்னிருஆண்டுக்குள், கூடியவிரைவில் குறுகியகாலத்தில் மூலாலயத்திலேயே தங்களை மீண்டும்ஸ்தாபிப்பேன் என்று வாக்குறுதி மொழி அளித்து வேண்டியபின்பே மூலலிங்கத்திலிருந்து கும்பத்தில் அழைத்து சேர்த்திடவேண்டும் என்று காமிகாகமம் கூறுகிறது. இதனால் இறையிடம் அளித்திடும் உறுதிமொழியை காப்பது அனைவரின் கடமையாகிறது. விண்ணப்பமுறை கூறும் சான்று.

மூலலிங்கம் து ஸம்பூஜ்ய கந்தாதி ஹவிஷா ஸஹ |
பிரணம்ய தேவதேவேசம் கர்த்தா கர்மவிசக்ஷண: |
ஏகவத்ஸர மாரப்ய யாவத் ஸ்யாத் துவாதசாப்தகம் |
தேஷ்வந்தரே நவீகிருத்ய புனஸ் ஸம்ஸ்தாபயாம்யஹம் |
இதிவிக்ஞாப்ய தத்கர்த்தா தேசிகேந ஸஹைவது |
லிங்காத் தேவம் ஸமாவாஹ்ய கும்பமத்யே ந்யஸேத் குரு: |
பீடாத் தேவீம் ஸமாவாஹ்ய வர்தன்யாம் மத்யமே ந்யஸேத்|
(காமிகாகமம்)

இத்தகைய உறுதிமொழி அறிவிப்பாகிய விக்ஞாபனத்தை சுவாமியே! பன்னிரு ஆண்டுவரை இளங்கோயிலில் இருங்கள். இதற்குள் மூலாலய புகுவிழாவைச் செய்கிறேன் என்பது முதலாவதான பாலஸ்தாபனத்திற்கு இல்லாமலும், இரண்டாவதான பாலஸ்தாபனத்திற்கு பிரார்தனை விக்ஞாபனம் செய்வதைத் தவறாமலும் செய்யவேண்டும் என்கிறது ஸ்ரீமத்சுப்ரபேதாகமம்.

விக்ஞாப்ய தேவதேவேசம் க்ஷணகாலம் விசக்ஷண: |
ஏகாப்தாத் துவாதசாப்தாந்தம் பாலஸ்தாநே ஸ்திதோ பவ |
ஏதயோ ரப்தயோர் மத்யே குர்யான் மூலப் பரவேசநம் |
விக்ஞாபயேத் து விதினா ஆத்யே விக்ஞாபனம் விநா ||
(சுப்ரபேதாகமம்)

ஸ்ரீமத் காரணாகமம் இவ்விரு ஆலய இடத்திலிருக்கும் இறைவனின் நிலையை சிறப்பாக விளக்கி உள்ளது.அதாவது மூலாலயத்திலிருந்து பாலபிம்பத்தில் ஆவாஹித்து சேர்த்திடவேண்டும் என்றும் அந்த மூலலிங்கத்திலேயும் சிவனை சித்திரப்பறவையைப்போல விரும்பினால் வெளியில்சென்று மீணடும் தன்கூட்டிற்கே வந்தடையும், விசித்திர

ஞானப்பறவையைப்போல கருதவேண்டும் என்றும், இரண்டாவதான தருணாலயத்தில் பாலலிங்கத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்றும், மூலலிங்கத்தை மரம் முதலானவற்றால் பாதுகாப்பாக உச்சிமேல் எதுவும் விழாதவாறும், நால்திசையிலும் சுற்றிலும் எதுவும் தீண்டாதவாறும், சிவலிங்கத்தைச் சுற்றிலும் மையமாகக் கொண்டுள்ளவாறு மரச்சட்டப் பலகைகளால் கூடுஅமைத்து, காற்றுபுகுமாறு வைத்து, பாதுகாத்தும், மணிஓசை தரிசனமற்ற ரகசியமாய் புஷ்பம்சாத்தியும் தருணாலயத்தில் மட்டும் விசேஷமாக சம்புரோக்ஷணம் செய்யும்வரை சிறப்பாகவும் பூசித்திடவேண்டும் என்றும், காரணாகமம் கூறிஉள்ளது.

மூலாலயாத் ஸமாவாஹ்ய பாலபிம்பே து யோஜயேத் |
தல் லிங்கே தச் சிவம் சைவ பாவயேத் சித்ரபக்ஷி வத் |
பாலலிங்கம் தத: குர்யாத் ஸ்தாபயேத் தருணாலயே |
மூலலிங்கம் விசேஷேண பஞ்சரேண து யோஜயேத் |
தத்ர பூஜா ப்ரகர்த்தவ்யா ப்ரோக்ஷணாந்தம் விக்ஷேத: | (காரணே)

இவ்விதமாய் இறைவன் பாலாலயத்தில் இருக்கும் நாட்களில், தினமும் அஸ்திரமந்திரஜபஆகுதிகளுடன் கூடியசாந்தி ஹோமத்துடன் கூடியதாக பாலாலய நித்தியபூஜை செய்யத்தக்கது என்று காமிகாகமத்தில் கூறப்பட்டுள்ளது. சான்று:

பிரத்யஹம் து அர்சனம் கார்யம் சாந்திஹோம ஸமன்விதம் |

மேலும் பன்னிரு ஆண்டுகளுக்குள் இடைப்பட்டகாலநாட்களில் பாலாலயத்தில் இருந்து இறைவனை மூலலிங்கத்தில் உரைந் திடச் செய்யவேண்டும் என்கிறது காமிகாகமம் இதன் சான்று:

மாஸாதி துவாதசாப்தாந்தம் ததந்தர தினேஷ் வத |
தஸ்மாத் ஆதாய தேவேசம் மூலலிங்கே நிவேசயேத் ||

(காமிகாகமம்)

இடைப்பட்டகாலத்திற்குள் தவறாமல் ஆலயத்தை முன்புபோலவே பழுதுநீக்கி புதுப்பித்துப்பிறகு ஸம்புரோக்ஷணத்தைச் செய்யவேண்டும் என்று விளக்கி விதிக்கிறது காரணாகமம்

பிராஸாதம் பூர்வவத் கிருத்வா ஸம்புரோக்ஷண மதாசரேத் | (காரணாகமம்)

மேலும் இடைக்காலங்களில் திருப்பணிகளில் தொய்வு ஏற்படாத வாறு. வாதுளாகமத்தில் அவ்வப்பொழுது மூன்றுபக்ஷம் மூன்றுமாதம் மூன்றுவருடம் ஆகிய காலகட்டங்களில், கர்த்தாவுடன் ஆசார்யர் சுவாமிசந்நிதியில் மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளித்ததை அறிவிக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

பிரார்த்தயேத் து நமஸ்கிருத்ய திரிபக்ஷே வாதிரிமாஸிகே |
அப்தே திருதீயே கர்த்தவ்யா ஞாபயேத் சுவாமி ஸந்நிதௌ ||
(வாதுளாகமம்)

இவ்விதமாக, சைவாகமங்களில் காமிகம் முதல் வாதுளாகமம் வரையிலான சித்தாந்தங்களின்படி, பாலஸ்தாபனம் இருவகை என்பதும் செய்யத்தக்கவிதிமுறைகளும், சுருக்கமாக விளக்கித் தொகுத்துக் கூறப்பட்டது. இதற்கு உரியகால விதானத்தையும் பூஜைகளின் செயல்விதிமுறைகளையும், சைவாகம பத்ததிகளையும் தலங்களின்செயல் வழக்கமான சிஷ்டாசாரங்களின்படியும், முறையே ஆகமசதுஷ்பாதங்களிலும் நிபுணராகிய சிவாசார்யரால் மட்டுமே பாலஸ்தாபனம் மற்றும் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும். ஆலயமானது இறைவனின் ஸ்தூலதேகமாகும்.

தேஹோ தேவாலயப் ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸதாசிவ:| (ஆகமம்)

ஆதலால் காலதாமதத்தை தவிர்த்தும், காலநேரத்திற்கு காத்திரா மலும், நலமற்ற மன்னனுக்கு அளிக்கவேண்டிய முதலுதவியைப் போன்று, இறைவனது உடலாகிய ஆலய கட்டடமேம்பாட்டுப் பணியை, தாமதமின்றி, உடனே செய்திடவேண்டும். பாலஸ்தாபனம் செய்யாமல் ஒருபோதும் மூலாலயலிங்கத்தின்மீது திருப்பணி கட்டிடவேலைகளை செய்யக்கூடாது. ஆகமங்களைப் பின்பற்றாது செயல்படுதல் சிவநிந்தை. சிவசாஸ்திர நிந்தை, சிவவாக்கிய கட்டளையை அலட்சியம்செய்தது ஆகியகுற்றங்கள், ஊராருக்கும், நிர்வாகிகளுக்கும், ஏற்பட்டு, தீங்கு விளையும். ஆதலால் உடனே இரண்டாவது பாலஸ்தாபனத்தை செய்யுமாறு ஆகமங்கள் வலியுறுத்திக்கூறியுள்ளன. ஆகமநெறியே அருள் நெறியாகும்.

முதலாவதான பாலாலயத்தில் இறைவன் உள்ளபொழுதில் பலநாள் மஹோத்ஸவத்தைச் செய்யலாம். இரண்டாவதான பாலாலயத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டால் வேறுஇடத்தில் பாலமூர்த்தியை ஸ்தாபனம் செய்யக்கூடாது. எனவே வேறிடத்தில் செய்வதைத் தவிர்த்து, முன்பிருந்த மூலஸ்தானத்திலேயே மூலபேரத்தை ஸ்தாபிக்கவேண்டும். சுயம்புலிங்கத்தில் விரிசல் பிளவு முதலானவை தென்பட்டால் உடனே கும்பத்தில் ஆவாஹித்து அப்பொழுதே தங்கத்தினால் பிளவைமூடி இடைவெளியை நிரப்பி, ஸந்தானத்தைச்செய்து ஒன்றுசேர்த்து, கட்டுபட்டை அல்லது பொற்குவளை அணிவித்து, மீண்டும் கும்பத்திலிருந்து சேர்த்து, பூசிக்கவேண்டும். அந்த லிங்கத்தையோ

பிண்டிகையிலோ, பிம்பத்திலோ, குறைபழுதுஏற்பட்டால், அதனையே ஒன்று சேர்க்காமல் உடனே அதைவிலக்கி, ஜலத்தில் கைவிட்டு, புதிதாக வேறுஒன்றைச் செய்து, பதிலாக பொறுத்தி அஷ்டபந்தனம் செய்து சம்புரோகரணத்தைச் செய்து, பூஜிக்கவேண்டும். புதுக்கோயில் கும்பாபிஷேகத்திலும் பத்துமடங்கு உயர்ந்தபயனை புதுப்பிக்கும்செயல் தருவதாகும். தரும். இவ்வாறாக சைவாகம சிறப்புவிதிமுறைகளை வழுவாது பின்பற்றி, ஆலயாதிகளில் ஜீர்ணோத்தாரத்தையும், அதற்கான பாலஸ்தாபனத்தையும் செய்து, போகமோக்ஷங்களாகிற இகபர சுகவாழ்வுப் பயன்களைப் பெற்றிட உதவுவதே சைவாகமநெறியாம். அருள்நெறியில் நாம்பூஜித்து அருள்பெற்று உய்ய முயல்வோமாக.

வாழ்க சீரடியாரெல்லாம்

சுபமஸ்து.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆலய ப்ரதிமாஸிக பஞ்சபர்வாராதன கிரமம்

கட்டுரையாசிரியர்:

ஆகம பண்டிதர்,

ஸ்ரீ வெங்கடேஸ்வரா வேத பல்கலைகழகம், திருப்பதி

சிவஸ்ரீ Dr. ஊ. கார்த்திகேய சிவாசார்யர், திருப்பதி.

பல ஆகமஅறிஞர்கள் மற்றும் சிவாசார்ய பெருமக்கள் உரையாற்றிய இச்சபையில் எனக்கும் வாய்ப்பளித்த அனைவருக்கும் என் நன்றிகலந்த வணக்கங்கள். எனக்கு தரப்பட்டுள்ள தலைப்பு க்ரியாபகுதியைச் சார்ந்த, பஞ்ச பர்வாராதன மாஸிகபூஜா க்ரமம். அதாவது மாதத்தின் ஐந்து சிறப்பு தினங்கள் மற்றும் மாதபூஜை செயல்முறைகள் என்பதாகும்.

பஞ்ச பர்வாராதனம் (மாதத்தின் ஐந்து சிறப்பு தினங்கள்)

பஞ்ச பர்வாராதனம் என்பது மாதத்தின் ஐந்து சிறப்புநாட்களில் சிறப்பு பூஜையைச் செய்வதாகும். ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிட்ட ஐந்துதினங்களில் சிறப்பாக பூஜையைச் செய்வது பஞ்ச பர்வாராதனம் என்று சொல்லப்படும். இது இரண்டு வகையாக ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது.

சதுர்தச் யஷ்டமீ க்ருஷ்ணே பர்வணி ரவி ஸங்க்ரம: |
பஞ்சபர்வணி சேந்நாம முனிபி : சாஸ்த்ர வேதிபி ||

மஹோத்ஸவ விதியில் இவ்வாறாக சொல்லப்பட்டுள்ளது.

1. க்ருஷ்ணபக்ஷ சதுர்தசீ திதி
2. க்ருஷ்ணபக்ஷ அஷ்டமீ திதி
3. அமாவாஸ்யை திதி
4. பௌர்ணமீ திதி
5. மாதப்பிறப்பு தினம். ஆகியவை ஐந்தும் பஞ்சபர்வம் எனப்படுவன ஆகும்.

மேலும் வேறொரு இடத்தில்,

சதுர்தச் யஷ்டமீ பக்ஷத்வயே தர்சச் ச பூர்ணிமா |
ஸங்க்ராந்திச் சேதி பர்வாணி பஞ்ச ப்ராஹுர் மஹர்ஷய: ||

என்றும் சொல்லப்பட்டுள்ளது.

1. இரண்டு சதுர்த்தசிகள்.
2. இரண்டு அஷ்டமிகள்.
3. அமாவாஸ்யை.
4. பௌர்ணமி.
5. மாதப்பிறப்பு என்பதாக சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆகமங்களில் பஞ்சபர்வபூஜைகளில் அந்தந்த மாதங்களில் சொல்லப்பட்டுள்ள விசேஷத்ரவியங்களினால், சிறப்பாக பூஜைசெய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

மாதபூஜை

பூஜையானது, நித்யம், நைமித்திகம், காம்யம், என மூன்று விதமாக சொல்லப்பட்டுள்ளது. மாதபூஜை முதலானவைகள் நைமித்திக பூஜையின் அங்கமாக சொல்லப்படுகின்றது. அம்சுமதிஆகமத்தில் மாதங்களானது ஸ்தூலம், ஸூக்ஷமம் என்று இரண்டு விதமாக சொல்லப்படுகிறது. மார்கசீர்ஷம் முதலான மாதங்கள் ஸ்தூலம் எனவும், மேஷம் முதலான மாதங்கள் ஸூக்ஷமம் எனவும் அம்சுமதி ஆகமத்தில் சொல்லப்படுகிறது. ஸ்தூலமாதம் முதலாகவே மாத பூஜைகளைச் செய்யவேண்டும். ஸ்தூலமாதங்கள் நக்ஷத்ரங்களைக் கொண்டு கணக்கிடப்படுகின்றன. சந்த்ரஞான ஆகமத்தில் ஸ்தூல மாதங்களுக்கு உண்டான நக்ஷத்ரங்கள் கூறப்படுகின்றன. சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், உத்திரட்டாதி, அச்வினீ, க்ருத்திகை, திருவாதிரை, புனர்வஸு, மகம், உத்தரம் என்பவை 12 மாதங்களுக்குண்டான 12நக்ஷத்ரங்கள் என்று கூறப்படுகின்றன.

ஸூர்யக்ரஹணம், சந்த்ரக்ரஹணம், வ்யதீபாதங்கள், மேஷம் முதலான 12ஸங்க்ராந்திகாலங்கள், அரசனுடைய ஜன்மநக்ஷத்ரம், யுத்தாரம்பம், முதலான காலங்களில், அந்தந்த மாதங்களுக்குண்டான த்ரவியங்களைக் கொண்டு, சிறப்பாக பூஜைசெய்ய வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது. அம்சுமதி ஆகமத்தில் கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்ரம், ஆருத்ரா, அயனங்கள், பர்வத்வயம், என சொல்லப்பட்டுள்ளது. ஸூக்ஷ்மாமகத்தில் யுத்தத்தின் முடிவிலும் கர்த்தாவினுடைய அனுகூலமான நக்ஷத்ரத்திலும், புண்யகாலங்களிலும், மாதபூஜையைச் செய்யவேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

அம்சுமதி ஆகமத்தில் மாதபூஜைக்குரிய த்ரவ்யங்கள் சொல்லப்பட்டுள்ளது. மார்கசீர்ஷ மாதத்தில் நெய்யும், புஷ்யத்தில் (க்ஷௌத்ரம்) தேன் பூஜையும், மாசியில் க்ருதகம்பளமும், பங்குனியில் தயிரும், சித்திரையில் தமனபூஜையும், வைகாசியில் கந்தபூஜையும், ஆனிமாதத்தில் பழங்களால் பூஜையும், ஆடிமாதத்தில் பாலாலும், ஆவணியில் சர்க்கரையாலும், புரட்டாசியில் அபூபத்தாலும் ஐப்பசியில் அன்னத்தாலும் (அன்னாபிஷேகம்), கார்த்திகையில் தீப பூஜையும் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்திலும் பாத்யம் முதலான 28 உபசாரங்கள் அம்சுமதியில் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறாகவே ஸூக்ஷ்மாகமத்திலும் சொல்லப்பட்டுள்ளது. மாத பூஜைகளின் பலன்களாக (நெய்) க்ருதத்தினால் மோக்ஷமும் தேனினால் ஆயுஸும், க்ருதகம்பளத்தால் சேஷமம் மற்றும் ஆரோக்கியமும், தயிரால் அபிவ்ருத்தியும், தமனத்தால் செல்வமும், கந்தத்தால் ஸாலோக ப்ராப்தியும், பழபூஜையால் விருப்பமானவைகள் கிடைத்தலும், அபூபத்தால் தனலாபமும், அன்னாபிஷேகத்தால் விருப்பமும், தீப்பூஜையால் ப்ரஹ்மஹத்யாதி தோஷநிவர்த்தியும் ஸூக்ஷ்மாகமத்தில் விரிவாகச் சொல்லப்பட்டு உள்ளது. அம்சுமதி ஆகமத்தில் ஒரேமாதத்தில் இருமுறை நக்ஷத்ரம் வருமானால் இரு முறையும் மாதபூஜையைச் செய்யவேண்டுமென சொல்லப்பட்டுள்ளது. மற்றோரிடத்தில் ஒரே மாதத்தில் இருமுறை உரியநக்ஷத்ரம் வருமானால், பகலில் அதிகமாக உள்ள நக்ஷத்ரத்தையே பூசைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் சொல்லப்பட்டுள்ளது.

1. சித்திரை மாதம்

ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு சிறப்பான பூஜைமுறை ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. அதனைக் கண்போம்.

சித்திரைமாதத்தில், காமிகாகமத்தில் வஸந்தபூஜை என்பதாக ஒரு சிறப்புப்பூசை சொல்லப்பட்டுள்ளது. அதற்கு முன்நாள்இரவு கௌதுகபந்தனம் செய்யவேண்டும். பிறகு மாலையில் ஸ்வாமிக்கு எல்லாவிதமான அலங்காரங்களையும் செய்வித்து, க்ராம ப்ரதக்ஷிணம் செய்து உத்யான வனத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும். உத்யான வனத்தில் உபசாரங்களோடுகூட சிறப்பான பூஜைகளைச் செய்ய வேண்டும். அவ்விடத்தில் தேவனை தரிசிப்பதற்காக தோழனோடு கூடிய மன்மதன் வந்ததாக மனதால்பாவித்து, ஆசாரியர் இருகும்பங்களுக்கு பலவிதபுஷ்பங்களால் பூஜையைச் செய்யவேண்டும். பிறகு ந்ருத்தம், வாத்யம், முதலான இனிமையான கீதங்களால் இறைவனை மகிழ்ச்சி

அடைந்தவராகச் செய்யவேண்டும். இதன் பலனாக இஷ்டமானதைத் தருவதாகவும் செய்பவரின் எல்லாவிதமான விருப்பங்களையும் நிறைவேற்றுவதாகவும் பலன் சொல்லப்பட்டுள்ளது.

சித்திரைமாதத்தில் காமிகாகமத்தில் **தமனபூஜைவிதி** சொல்லப் பட்டுள்ளது. தமனத்தினுடைய உற்பத்தி, அதன் பூஜைமுறை, பலன், தமனத்தை எடுத்தல், ஆகியவை கூறப்பட்டுள்ளன. முதலில் இதற்கென மாலையில் அதிவாஸத்தைச்செய்து, பவித்ராரோபனத்தைப் போலவே தமனத்தால் பரமேச்வரனை பூஜித்து, ப்ரார்த்தனை செய்யவேண்டும். பிறகு ஆசார்யபூஜையைச் செய்யவேண்டும். இப்பூஜையைச் செய்பவருக்கு சித்திரை மாதம் முழுவதும் செய்யப்படும் பூஜையின் பயன் கிடைக்குமென்று காமிகாகமகத்தில் பலன் சொல்லப்பட்டுள்ளது.

அஜிதாகமம் 3ம்பாகத்தில் **வஸந்தோத்ஸவம்** சொல்லப்பட்டுள்ளது. சித்திரை அல்லது வைகாசி மாதத்தில் பௌர்ணமியில் வஸந்தோத்ஸ வத்திற்கான காலம் சொல்லப்பட்டுள்ளது. முதலில் அதிவாஸம் செய்து (ப்ராஸாதத்தின்) ஈசானம் (வடகிழக்கு) அல்லது உத்திரத்தில் வடக்குதிசையில் வசந்தமண்டபத்தை அமைத்து, அதன் நடுவில் வேதிகையில் ஸ்தண்டிலம் செய்து அதன்மேல் பத்மத்தில் தமனத்தை வைக்கவேண்டும். பிறகு கும்ப ஸ்தாபனம், பூஜை செய்து மந்திரத்தினால் தமனத்தைச் சாற்றி பூஜைசெய்ய வேண்டும். இவ்வாறாக அதிவாஸம் செய்து மறுநாள் காலையில் முன்பு போலவே விசேஷமாக பூஜையை செய்து மூலலிங்கத்திற்கு அபிஷேகம் முதலானவைகளைச் செய்து எல்லாவற்றையும் லிங்கத்தின்மேல் சேர்க்கவேண்டும். மாலையில் உற்சவமூர்த்திக்கு பலவிதமான அலங்காரங்களை விசேஷமாகச் செய்வித்து, வாத்யங்களுடன் கூட உத்ஸவத்தை செய்யவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் செய்பவர் அச்வமேதயாகபலனை அடைவார்கள். மேலும் நித்யமாக சிவலோகப்ராப்தியும் கிடைக்குமென்று அஜிதாகமம் 3ம்பாகத்தில் விஸ்தாரமாக கூறப்பட்டுள்ளது.

அஜிதாகமம் 3ம்பாகத்தில், **தமனபூஜாவிதியானது** சொல்லப் பட்டுள்ளது. சித்திரை மாதத்தில் தமனபூஜையைச் செய்ய வேண்டும். ஸப்தமி அல்லது சதுர்தசி திதியில் தமனத்தை அஸ்த்ரமந்திரத்தால் பரிசோதித்து (சுத்தம்செய்து) அதில் ஸம்ஹிதா மந்திரங்களினால் பூஜையை செய்யவேண்டும். குமாரதந்த்ரத்தில் சித்திரைமாதத்தில் சஷ்டி, ஸப்தமி, திரியோதசியில் தமன பூஜை சொல்லப்பட்டுள்ளது. தமனபூஜை எல்லாதேவதைகளுக்கும் மகிழ்ச்சியைத் தருவதாக சொல்லப்பட்டு உள்ளது. முதலில் தமனத்தை முறைப்படி (க்ரமமாக)

சேகரித்து முதல்நாள் மாலையில் அதிவாஸம் செய்து தமனம் முதலான யாகத்ரவ்யங்களுக்கு நியாஸம் முதலானவைகளைச் செய்ய வேண்டும். பிறகு தமனபூஜையை விஸ்தாரமாகச் செய்யவேண்டும்.

2. வைகாசி மாதம்

வைகாசி மாதத்தில் காமிகாகமத்தில் சீதகும்பவிதியானது சொல்லப்பட்டு உள்ளது. வைகாசி மாதத்தில் விசாக நக்ஷத்ரத்தில் சீத கும்ப விதியைச் செய்ய வேண்டும். எல்லாவிதமான தோஷ ங்களைப் போக்குவதற்கும் ஸகல ப்ராயச்சித்தமாகவும் ப்ராயசித்த விதி சொல்லப்பட்டுள்ளது. இலிங்கத்தின் மேல் த்ரிபாதியை வைத்து லிங்கத்திற்கு ந்யாஸம் முதலானவைகளைச் செய்ய வேண்டும். கும்பத்தில் ஓட்டையிட்டு தங்கத்தினால் தண்டு செய்து ஸ்தன்டிலத்தில் வைக்க வேண்டும். தசஷிணத்தில் (வலது பாகத்தில்) உபகும்பத்தை வைக்க வேண்டும். பிறகு ஜபம், ஹோமம் இவைகளைச் செய்ய வேண்டும். ஹோமத்தில் பசும்பால் விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளது. விசேஷ த்ரவியங்களைக் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும். பலவிதமான நிவேதனங்கள், பலவித வாத்யங்கள், ஜப கோஷங்கள், ஸ்தோத்ரங்கள், நர்த்தனங்களால் இறைவனை ஸ்ந்தோஷிக்கச் செய்ய வேண்டும். எப்பொழுது வரை விரும்பிய பலன் கிடைக்கிறதோ அப்பொழுது வரை தினந்தோறும் இவ்வாறாகச் செய்ய வேண்டும். இவ்வாறாக ஏழு நாட்கள் பதினான்கு நாட்கள் இருபத்தியோரு நாட்கள் ஒரு மாதம், இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் செய்ய வேண்டும். பிறகு ஆசார்ய தக்ஷிணை, ப்ராமண போஜனம், பக்தர்கள் மற்றவர்களுக்கான போஜனம் முதலானவைகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக உத்தரகாமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

3. ஆனி மாதம்

ஆனிமாதத்தில் பழங்களினால் பூஜையானது சொல்லப்பட்டுள்ளது. ஆனிமாதத்தில் மூலம்நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் பழங்களினால் பூஜை செய்யவேண்டும். பஞ்சாமிர்தத்தோடு கூடிய விசேஷ ஸ்நபனத்தைச் செய்து, பலவித பழங்களினால் ஹோமம் செய்ய வேண்டும். சிவலிங்கத்திற்கு வஸ்த்ரங்களைச் சாற்றி பீடத்திலிருந்து தலை வரை பலவிதமான பழங்களினால் முழுவதுமாக அலங்கரிக்க வேண்டும். அன்று மாலையோ மறுநாளோ அப்பழங்களை விஸர்ஜனம் செய்து ஆசார்யபூஜையைச் செய்யவேண்டும். இதன்பலனாக செய்பவருடைய விருப்பங்கள் நிறைவேறும் என்று உத்தரகாமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

4. ஆடி மாதம்

உத்தரகாமிகாகமத்தில் ஆடிமாதத்தில் பூர்வபல்குனி பூஜாவிதி சொல்லப்பட்டுள்ளது. ஆடிமாத பூரநக்ஷத்ரத்திலோ அல்லது ஆச்வயுஜம் (சாந்திரமானப்படி) புரட்டாசிமாதத்திலோ என காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதலில் தேவிக்கோ இறைவனுக்கோ கௌதுபந்தனம் செய்து, கன்யாபூஜையைச் செய்து, தேவிக்கு பால் நிவேதனம் செய்யவேண்டும். பிறகு சூர்ணோத்ஸவ முறைப்படி இடித்து சூர்ணம் செய்யும் கார்யத்தை மட்டும், விட்டுவிட்டு, மற்ற செயல்கள் அனைத்தையும் செய்ய வேண்டும். பிறகு த்ரிசூலத்துடன் தேவியை, நதீமுதலானவற்றிற்கு அழைத்துச்சென்று தீர்த்தோத்ஸவத்தைச் செய்ய வேண்டும். அல்லது க்ராமப்ரதக்ஷிணத்தை மட்டுமாவது செய்யலாம். அல்லது தேவி, இறைவன் இருவருக்கும்கூட க்ராமப்ரதக்ஷிணம் முதலான தீர்த்தோத்ஸவம் சொல்லப்பட்டுள்ளது. பிறகு ஸ்நபனத்துடன் கூட சகல உபசாரங்களையும் செய்து, ஆசார்யபூஜையையும் செய்ய வேண்டும். இதனுடைய பலனாக தேவிக்குமகிழ்ச்சியும் செய்பவரின் சகலவிதமான அரிஷ்டங்கள், பாபங்கள் விலகுவதாகவும், சகலவிதமான கார்யங்கள் மற்றும் விருப்பமானவைகள் நிறைவேறுவதாகவும் காமிகாமகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஆஷாட பூரகர்ம விதி:

ஸுப்ரபேதத்தில் ஆடிமாதம் பூரநக்ஷத்திரத்தில் அதிவாஸத்துடன் பூரகர்மவிதியைச் செய்யவேண்டும். முதல்நாள் இரவில், ப்ரதிஸர பந்தனம் செய்து, மறுநாள் காலையில் இறைவனுக்கு விசேஷபூஜையைச் செய்து க்ராமப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். ஜலதீரத்தை அடைந்து, த்ரிசூலத்திற்கு அபிஷேகம் முதலானவைகள் செய்வித்து, மறுபடியும் ஆலயத்தை அடைந்து, ஸ்நபனம்வைத்து விசேஷபூஜைகளைச் செய்ய வேண்டும்.

5. ஆவணி மாதம்

காமிகாமத்தில் ஆவணி மாதத்தில் பவித்ராரோபணவிதி சொல்லப்பட்டு உள்ளது. வருடம் முழுவதிற்குமான ப்ராயச்சித்தமாக பவித்ரோத்ஸவம் சொல்லப்பட்டு உள்ளது. பவித்ரோத்ஸவம் செய்ய வில்லையெனில் ஆசார்யர் முதலானவர்களுக்கு தோஷம் ஏற்படுமெனவும் சொல்லப்பட்டுள்ளது. பிறகு பவித்ர காலம் பவித்திரத்தினுடைய அதிதேவதைகள், ஸ்வாயம்புவாதி லிங்கத்திற்குண்டான பவித்ரஸ்ங்க் யைகள், (முடிச்சு) க்ரந்தி ப்ரகாரம், பலவிதமாலைகளின் அளவுகள்,

பரிவாரதேவதைகளுடைய பவித்ர நிர்ணயம், அதிவாஸ விவரணம், மண்டபம், வேதிகை, மண்டலம், குண்டம், ஆகியவற்றின் விபரங்கள் தந்தகாஷ்டம் (பல் தேய்க்கும் குச்சி) முதலான வ்ரதாங்க வஸ்துக்களி னுடைய அதிவாஸவிவரம், பவித்ரத்தினுடைய அதிவாஸ விவரம், ஸம்பாதஹோமவிதி, கந்த பவித்ரம் முதலான பவித்ரங்களுடைய விவரங்கள், பூஜை முறைகள் ஆகியவை விஸ்தாரமாக சொல்லப் பட்டுள்ளது.

ரௌரவாகமம் முதல்பாகம் க்ரியாபாதத்தில், முதலில் பவித்ராரோபணத்திற்கான காரணம் சொல்லப்படுகிறது. பிறகு ஆடிமாதம் முதல் நான்குமாதங்கள்வரை, காலமானது சொல்லப்பட்டுள்ளது. பவித்ர ஸூத்ரத்திற்கான பட்டு முதலான நூல் ஸூத்திரத்திற்கான ஸ்ம்ஸ்காரங்கள் ஸூத்ரஎண்ணிக்கை, பவித்ரத்தின் முடிச்சுகள் அதிதேவதைகள் பரிவார தேவதைகளுக்குண்டான பவித்ரஸூத்ர எண்ணிக்கை, கந்தத்ரவ்யம், யாகமண்டபம், குண்டம், ஸ்தண்டிலம், இவைகளுடைய லக்ஷணங்கள், பவித்ரபூஜை, ஹோமவிதி, பவித்ரம் சாற்றுதல் முதலானவைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

சர்க்கரா பூஜை

ஆவணிமாதம், அவிட்டநக்ஷத்ரத்தில், பௌர்ணமியுடன் கூடி இருக்கும்போது, சர்க்கராபூஜையைச் செய்யவேண்டும். (100படிஅளவில்) நூறுப்ரஸ்தம் எள் மற்றும் சர்க்கரையோடு சேர்த்து, ஸ்பர்சாஹுதி செய்யவேண்டும்.

6. புரட்டாசி மாதம் - அபூப பூஜாவிதி

உத்தரகாரணாகமத்தில் புரட்டாசிமாதத்தில் உள்ள உத்திரட்டாதி நடக்ஷத்ரத்தில், அபூபபூஜா விதியைச் செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது. ஒரே மாதத்தில் இரண்டுமுறை அந்தமாஸ நக்ஷத்ரம் வந்தால், இருமுறையும் அபூபவிதியைச் செய்யவேண்டும். இது ஐஸ்வர்யத்தைத் தருவதாகும். பசுவின் நெய்யினால் பலவிதமான அபூபங்களை (அப்பம், வடை, உருண்டை வகைளை) உளுந்து, எள்ளு முதலானவைகளால் செய்து, அவைகளைச் சுத்தமான பாத்திரத்தில் எடுத்து, அதைஎட்டு பாகமாகச் செய்து, ஒருபாகத்தை ஆசார்யரின் பொருட்டும், மீதி ஏழுபாக பக்ஷணத்தை நைவேத்யமாக இடது பக்கத்தில் வாமபாகத்தில் ஸ்தாபிக்க வேண்டும்.

மாஸபூஜாயாகத்தின்பொருட்டு மண்டலம், குண்டம் ஆகியவைகளை அமைக்கவேண்டும். ஈசான்யத்தில் பத்துகும்பங்களை வைத்து, அவற்றில் முறையே பரமேஸ்வரனை பூஜிக்கவேண்டும். நடுவில் மண்டலத்தில் பஞ்சாவரணத்துடன் விசேஷமாக பரமேஸ்வரனை பூஜித்து பிறகு ஹோமம்செய்து மூலலிங்கத்திற்கு அபிஷேகத்தை செய்யவேண்டும். வஸ்திரங்களைச் சாற்றி ஆபரணங்களினால் அலங்காரம் செய்து, உபசாரங்களைச்செய்து அபூபங்களை நிவேதனம் செய்யவேண்டும். இதனால் ஸர்வ ஸௌபாக்யங்களும் கிடைக்கும் என உத்தரகாரணாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

7. ஐப்பசி மாதம்

ஐப்பசி மாதத்தில் உத்தரகாரணகாமத்தில் அன்னபூஜா விதி சொல்லப்பட்டு உள்ளது. ஐப்பசிமாதம், சுக்லபக்ஷம், பௌர்ணமி தினத்திலோ அல்லது அச்வினி நக்ஷத்திரத்திலோ அன்னாபிஷேகத்தை செய்யவேண்டும். யாகமண்டபத்தின் மத்தியில், வேதிகையை அமைத்து அதில் மண்டலத்தில் சிவபூஜையை செய்யவேண்டும். ஈசானத்தில் வேதிகையை அமைத்து பத்துகும்பங்களை ஸ்தாபித்து, பூஜையை செய்யவேண்டும். ஹோமம்செய்து ஸ்பர்சாஹுதியைச் செய்து, சாலி, யவம் முதலியவைகளால் ஹோமம் செய்து, பூர்ணாஹுதியைச் செய்யவேண்டும். பிறகு ஆயிரம் ப்ரஸ்தம் அளவுள்ள அன்னத்தை தயார்செய்து அதிக சூடில்லாமலும், ஆறியதாக இல்லாமலும், வ்யஞ் ஜனாதிகளையும் தயார் செய்யவேண்டும். பிறகு பக்குவமாக தயார் செய்யப்பட்டவைகளை, பரிசாரகர் சிரஸில்தரித்து (தலையில்தாங்கி) வாத்ய ஸகிதமாக ப்ரதக்ஷிணமாக மூலாலயத்திற்குக் கொண்டுவர வேண்டும். மூலமூர்த்திக்கு அன்னத்தையும், அபிஷேகம் செய்விக்க வேண்டும். ஆபரணங்களை அணிவிக்க வேண்டும். ஸர்வஅலங்காரங் களையும் செய்து, ஸகலவித உபசாரங்களால் ஸந்தோஷமடையச் செய்யவேண்டும். இதனால் ஸகலகார்யங்களிலும் விஜயத்தை அடைவார்கள் என உத்தரகாரணாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

கார்த்திகை மாதம்

உத்தரகாமிகாகமத்தில், கார்த்திகை மாதத்தில், தீபாரோஹண விதி சொல்லப்பட்டுள்ளது. கார்த்திகைமாதம் க்ருத்திகா நக்ஷத்ரத்தில் பௌர்ணமியோடு சேர்ந்து இருக்கும் பொழுது சூர்ய அஸ்தமன சமயத்தில் தீபாரோஹணத்தைச் செய்யவேண்டும். இதற்கு முதலில் அங்குரார்ப்பணம் செய்து, அதிவாஸக்ரியையைச் செய்ய

வேண்டும். தீப தண்ட ஸ்தாபனம், தண்டப்ரமாணம், தண்டவ்ருஷம் ஆகியவை ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளவாறு செய்யவேண்டும். மாலை போன்றதான தீபதண்டம், ப்ராஸாதத்திற்குத் தகுந்ததான தீபதண்டம், க்ராமத்தின் வெளியே தீபஜ்வலனம் இவைகளை மிகுந்த ச்ரத்தையோடு க்ரமமாக செய்யவேண்டும். பிறகு அதிவாஸத்தில் **தீபதண்டஸ்தாபனம்,** வேதிகையை கல்பித்தல், ஹோமங்கள் முதலானவைகள் சொல்லப்பட்டுள்ளன. இரண்டாவது நாளில் நான்கு திக்குகள் மற்றும் விதிக்குகளில் கூடங்கள் (தீபம் வைக்கும் அமைப்பு) செய்தல், மாலையில் தீபதண்டத்திற்குபூஜை, வஸ்திரங்கள் சாற்றுதல், கூடம், ஸ்தண்டிலம், குண்டம் முதலானவைகளில் பூஜை, ஹோமங்கள் செய்தல், பூர்ணாஹுதிசெய்து எல்லாதீபங்களையும் ஒன்றுசேர்த்தல், ஸகல ந்ருத்தவாத்யங்களுடன் தீபதண்டத்தில் தீபங்களை ஏற்றுதல், ஆசார்யதக்ஷிணை அளித்தல் இவைகளை வரிசையாக முறையாக செய்யவேண்டும்.

வேறுவிதமாக, அதிவாசம் இல்லாமலும், கூடம்இல்லாமலும், பேரயாத்திரை இல்லாமலும், **தீபாரோஹணம்** சொல்லப்பட்டுள்ளது. பிறகு தீபதண்டத்தை ப்ரதக்ஷிணம் செய்து, ஆஸ்தான மண்டபத்தை அடைந்து, ஆலயத்தினுள் எல்லா இடங்களிலும் தீபத்தை ஏற்ற வேண்டும். (நாளிகேரம்) தேங்காய் அளவு கொண்டதான, அவலை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யவேண்டும். பிறகு ஆசார்ய பூஜையை செய்யவேண்டும். இவ்வாறாகவே ராஜக்ருஹம், க்ராமம் முதலியவற்றிலும் செய்யவேண்டும். கோசாலையில் தீபாரோஹணம் செய்வதால் வியாதிகள் நீங்கும். இவ்வாறாக உத்தரகாமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. உத்தர காரணாகமத்தில் கார்த்திகை மாதத்தில் தீபாரோஹணவிதி சொல்லப்பட்டுள்ளது. முதலில் பூஜாகாலம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுள்ளது. க்ருத்திகைநக்ஷத்ரமானது பௌர்ணமியோடு சேர்ந்திருப்பது விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஸூர்ய உதயத்திலிருந்து அஸ்தமனம்வரை நக்ஷத்ரம் இருந்தாலோ, அல்லது அஸ்தமனத்திற்கு முன்பு 10 நாழிகைகள் நக்ஷத்ரம் இருந்து மறுநாள் 20 நாழிகைகள் இருப்பின் முன்நாளே பூஜையைச் செய்ய வேண்டும் என்றும், எந்த நாளில் அஸ்தமனத்திற்கு முன்பு 3 முகூர்த்த காலம் க்ருத்திகைநக்ஷத்ர காலம் இருப்பின், அந்த காலம் மாத பூஜைக்கு உத்தமமாகச் சொல்லப்பட்டுள்ளது.

பௌர்ணமியோடு க்ருத்திகைநக்ஷத்ரம் சேர்ந்திருப்பது உத்தமமாகவும், பௌர்ணமி கூடிஇல்லையென்றாலும் கூட நக்ஷத்ரமே முக்கியம் (ப்ரதானம்) எனவும் சொல்லப்பட்டு உள்ளது. பௌர்ணமிதிதி ரோஹிணி, பரணியோடு சேர்ந்துள்ள அந்நாளில் பூஜைசெய்யின் அது ப்ராணன்இல்லாத சரீரத்திற்கு ஒப்பானதாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஒரேமாதத்தில் இரண்டு நக்ஷத்ரங்கள் வருமாயின் இரண்டிலும் பூஜை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. க்ருத்திகா தீப விதியை மாலையில் செய்ய வேண்டும். வேதிகையில் ஸர்வதோபத்ர மண்டலம் செய்து, முன்பாக சதுரச்ரகுண்டம், ஈசானத்தில் ஒரு வேதிகை அமைத்து, ஸ்நபனத்திற்காக 10குடங்களை அமைத்து, பூஜை ஹோமம் இவைகளை முறைப்படி செய்ய வேண்டும். அவல், நெல்பொறி, வெல்லம் முதலானவைகளை நிவேதனம் செய்யவேண்டும். அதிவாஸ கிரியைகள் முதலானவைகள் ஸாதகனால் முறைப்படி செய்யவேண்டும். யாக விருக்ஷங்களால் செய்யப்பட்ட தீபதண்டத்தை பரமேச்வரருக்கு முன்பாக கோபுரம் முதலான இடங்களில் ஸ்தாபிக்க வேண்டும். அதிபால (இளம்), அதிவருத்த (பழமையான) வ்ருக்ஷங்களை தீபதண்டத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

பாலவ்ருக்ஷம் என்பது ஐம்பதுவருடங்களுக்கு முந்தியதாகவும், (முதிய) விருத்தவிருக்ஷம் என்பது, நூறுவருடங்களுக்கு அதிகமானதாகவும் சொல்லப்படுகிறது. பாலவ்ருக்ஷம் க்ராமநாசத்தையும் வ்ருத்த விருக்ஷம் ஆயுள்குறைவையும் தரும். தீபதண்டத்தில் யஷ்டி(கம்பு), கீலம் (சக்கை) ஆகியவற்றைபந்தனம் செய்யவேண்டும். புதியதான வெள்ளை வஸ்திரத்தை சாற்றி, பலவித வர்ணமுள்ள வஸ்த்ரங்களால் அலங்காரம் செய்யவேண்டும். யஷ்டி இல்லாமையால் மஹாவ்யாதியும், பத்ரம் இல்லையெனில் தனசஷயமும், சித்ரம் இல்லையெனில் தரித்திரமும் சொல்லப்பட்டுள்ளது. பிறகு முறைப்படி மஹாதீபம் முதலான தீபங்களை எல்லா இடங்களிலும் ஏற்ற வேண்டும். பிறகு தூபம், தீபம் முதலானவைகளால் விசேஷ பூஜையைச் செய்து ஆசார்ய பூஜையையும் முறையே செய்யவேண்டும். இவ்வாறாக உத்தரகாரணாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஸுப்ரபேதத்தில் க்ருத்திகாதீப விதி:

தேவாலயத்தை அலங்கரித்து தீபஸாதனங்களைச் சேகரித்து ஸ்நபனம் செய்யவேண்டும். கோவிலைச் சுற்றி எட்டு திக்குகளிலும் மற்றும் வாயில்களின் இரு பக்கங்களிலும் தீபஸ்தம்பங்களை நிறுவி, அவற்றில் தீபங்களை வைக்கவேண்டும். ஸூத்ரந்யாஸம்,

மஹாந்யாஸம் முதலியவைகளை கும்பத்திற்கு செய்யவேண்டும். ப்ராஸாதம், மண்டபம்,கோபுரம், ப்ரகாரங்களிலும் தீபங்களை வைக்க வேண்டும். கூடதீபம் உத்தமமாகவும், ஸதம்பதீபம் மத்யமமாகவும், கை உயர தீபம் அதமமாகவும் சொல்லப்பட்டுள்ளது. க்ராமம், நகரம், ஆலயம் முதலானவைகளில் ஒன்றை ப்ரதக்ஷிணம் செய்து ஸ்தோத்ரங்கள், வாத்யம் ந்ருத்தங்கள் முதலான எல்லா க்ரியைகளையும் க்ரமமாகச் செய்து தீபவிதியை பூர்த்திசெய்யவேண்டும்.

அஜிதாகமம் 3ம் பாகம் க்ருத்திகா தீப விதி:

கார்த்திகை மாதம் க்ருத்திகை நக்ஷத்ரம் பௌர்ணமியுடன் கூடிய தினத்தில் ப்ரதோஷ சமயத்தில் க்ருத்திகாதீப விதியைச் செய்ய வேண்டும். பௌர்ணமியினுடைய ப்ரதோஷகாலத்தில் மட்டுமாவது செய்யலாம் என சொல்லப்பட்டுள்ளது. முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து, அதிவாஸ க்ரியைகளைச் செய்யவேண்டும். (ப்ராஸாதத்தில்) கோயிலில் ஈசானத்திலோ ஆக்னேயத்திலோ மண்டபம் அமைத்து, புண்யாஹம் செய்து சிவதீர்த்தத்தால் தீபத்தின் ஆதாரத்தை ப்ரோக்ஷணம் செய்து நான்கு புறங்களிலும் மற்றும் நடுவிலும் வைக்கவேண்டும்.

ப்ராஸாதத்தின் நான்கு புறங்களிலும் தீபஸ்தம்பத்தை வைத்து தீபத்தில் அக்னியை பூஜித்து,1 அதன் பொருட்டு ஹோமாதிகளைச் செய்து தீபத்திற்கு விஸ்தாரமாக பூஜையைச் செய்யவேண்டும். தீபத்தோடு கூடி உத்ஸவத்தைச் செய்ய வேண்டும். பிறகு பரிசாரகர் தீபஸ்தம்பத்தின் மேல் ஏறி தீபத்தை ஏற்ற வேண்டும். தீபாரோபணத்திற்குப் பிறகு பரமேச்வரனுக்கு விசேஷமாக பூஜை செய்து உத்ஸவம் செய்ய வேண்டும் என அஜிதாகமம் 3ம் பாகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ரௌரவம் முதல் பாகம் - கிருத்திகாதீப விதி.

பௌர்ணமி அன்று இரவில் க்ருத்திகாதீபத்தைச் செய்யவேண்டுமென்று லக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது. தீபஸ்தம்பத்திற்கான மரங்கள் அளவு, ஸ்தாபனம், தீபஸ்தம்பத்தின் முதலானவைகளின் யோஜனம், நுனியில் தீபபாத்ரம் உத்தமமான யஷ்டி (கம்பு), ஸ்தாபித்தல், ப்ராஸாதம் முதலான இடங்களில் தீபங்கள் முதலானவைகள் விஸ்தாரமாக சொல்லப்பட்டுள்ளது.

9. மார்கழி மாதம் (டேலோத்ஸவம்/ஊஞ்சல்)

உத்தர காமிகாகமத்தில் மார்கழி அல்லது தை மாதத்தில் விசேஷ பூஜைகள் சொல்லப்பட்டுள்ளது. மார்கழி மாதத்தில் ஆருத்ரா நக்ஷத்ரம் கூடிய நன்னாளில் பரமேச்வருக்கு நெய்யுடன் கூடிய ஸ்நபனம் அல்லது ஸாமான்ய ஸ்நபனம் செய்து சந்தனாதிகளால் அலங்கரித்து கானம், வாத்யங்களுடன் க்ராமப்ரதக்ஷிணம் செய்து, கோயிலை அடையவேண்டும். அல்லது ஹோமத்துடன் கூடி விசேஷமாக தீர்த்தோத்ஸவம்வரை செய்யலாம். பிறகு மாலையில் **டோலோத்ஸவம்** (டோலோ=ஊஞ்சல்) விசேஷமாகச் செய்யவேண்டும். வேறொரு நாளிலும் டோலோத்ஸவம் செய்யலாம். தினமும் கூட செய்யலாம். பேராரோஹணம் (பேரம்=மூர்த்தி) இல்லாமல் கேவலம் ஊஞ்சலுடைய சலனம் (அசைவை) மாத்ரம் கூட விருப்பமானதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறான முறையில் பல்லக்கிலேயே இறைவனை ஆவாஹணம் செய்து ஸாந்நித்யத்தை ஏற்படுத்தலாம்.

மார்கழிமாதத்தில், மகநக்ஷத்ரத்தில், ஸ்வாமி மற்றும் தேவிக்கு நெய்யுடன் சேர்ந்த **பாயாஸநிவேதனம்** சிறப்பானதாக உத்தர காமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. உத்தரகாரணாகமத்தில் மார்கழிமாதத்தில் **உஷ:காலபூஜா** விதியானது சொல்லப்பட்டுள்ளது. விடியற்காலையில் சிவார்ச்சனம் சிறப்பாக சொல்லப்படுகிறது. ஸௌரமானத்தில் தனுர்ராசியில் சூரியன் ப்ரவேசிக்கும் முதல்நாளிலிருந்து முப்பதுநாளில் தனுர்மாஸ பூஜை அதிகாலையில் விசேஷபூஜையாக செய்யத்தக்கது.

10. தை மாதம் (அயனராம் பூஜை & க்ஷெளத்ராபிஷேகம்)

உத்தரகாமிகாமத்தில் தைமாதத்தில் பௌர்ணமியில் பூசநட்சத் திரத்தில் சிறப்பாக தூய்மையான தேனினால் அபிஷேகமும் பலவிதமான நிவேதனங்களும் பிறகு பேர யாத்திரையும் சொல்லப்பட்டுள்ளது. தைமாதத்தின் பிறப்பன்று உத்தராயண புண்யகால அபிஷேகம் மற்றும் உத்ஸவம், தீர்த்தம் செய்யதக்கது.

11. மாசிமாதம் (கிருதகம்பள பூஜை)

மாசிமாதத்தில் **க்ருதகம்பளபூஜா** விதியானது, காமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதனை மாசிமாதத்தில் மக நக்ஷத்திரத்தில் செய்ய வேண்டும். முதலில் நெய்யை சேகரித்து அதற்கு ஸம்ஸ்காரம்

செய்யவேண்டும். பிறகு பஞ்சகவ்யம் முதலானவைகளால் விசேஷ ஸ்நபனம், ஹோமம் இவைகளைச் செய்யவேண்டும். காலையிலோ அல்லது மத்யான்ஹத்திலோ ஸ்வாமிக்கு ஸ்நபனாபிஷேகத்தை செய்து, ஆலயப்ரதக்ஷிணம் செய்து, ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட நெய்யை, லிங்கத்தின் தலையிலிருந்து பாதம்வரை தடவவேண்டும். பிறகு கந்தம் முதலானவைகளால் பூஜைசெய்து, கம்பளம்சாற்றி, மஹாஹவிஸ்ஸை நிவேதனம் செய்ய வேண்டும். மாலையிலோ மறுநாளோ கம்பளத்தை விஸர்ஜனம் செய்து முன்புபோல பூஜையை செய்யவேண்டும். பிறகு ஆசார்யபூஜையை செய்யவேண்டும். க்ருதகம்பளபூஜையானது அங்குரார்ப்பணத்துடனோ அது இல்லாமலோ செய்யலாம் என காமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சிவராத்ரி பூஜை

மாசிமாதத்தில் சிவராத்ரிபூஜா விதியானது, சொல்லப்பட்டுள்ளது. மாசிமாதத்தின் கிருஷ்ணபக்ஷ சதுர்தசியுடனான ராத்ரியானது, சிவராத்ரி என்று சொல்லப்பட்டுள்ளது. பகலில் ஸாதகன் ஸ்நானம் செய்து, இரவில் ச்ரத்தையுடன் நான்குயாமங்களிலும் பூஜையை செய்யவேண்டும். தன்னால் செய்யமுடியவில்லையெனில் வேறொருவரின் மூலமாக விரதத்தைச் செய்யவேண்டும். இரவுமுழுவதும் விழித்திருந்து மறுநாள் காலையில் நித்ய கர்மாவினைச் செய்து ஸ்வாமிக்கு ஸ்நபனாபிஷேகம் செய்து ஆசார்ய பூஜையைச் செய்ய வேண்டும். பிறகு சிவலிங்கம், சிவபக்தர்கள், ப்ராஹ்மணர்கள், அதிதிகள் முதலானவர்களுக்கு பூஜையை செய்யவேண்டும். பிறகு சாதகன் பூஜையை நன்றாக முடித்துக் கொண்டு, வீட்டிற்குசென்று பந்துக்களுடன் சேர்ந்து பாரணை செய்ய வேண்டும். இவ்வாறாக சிவராத்ரிபூஜாவிதியானது காமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

12. பங்குனி மாதம் (கந்தபூஜா)

பங்குனி மாதத்தில் காமிகாகமத்தில் கந்த(சந்தன) பூஜை சொல்லப்பட்டு உள்ளது. பங்குனி மாதம் உத்திரம் நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் கந்த பூஜை செய்ய வேண்டும். விசேஷ ஸ்நபனம் மற்றும் விசேஷ பூஜையுடன் கூடி கந்த பூஜையைச் செய்ய வேண்டும்.

தூய சந்தனம் மற்றும் அதனுடன் சேர்க்கத் தகுந்த அகரு, குங்குமபூ முதலான வஸ்த்துக்களுடன் கூட கந்தத்தை தயார் செய்து ஆலய ப்ரதக்ஷிணம் செய்து லிங்கம் மற்றும் பீடத்திலும் கந்தத்தை லேபனம்

செய்து மஹா ஹவிஸ்ஸை நிவேதனம் செய்ய வேண்டும். மாலையோ அல்லது மறுநாளோ சந்தனத்தை வஸர்ஜனம் செய்து முன்பு போல் பூஜை செய்ய வேண்டும். பிறகு ஆசார்ய பூஜை செய்ய வேண்டும். இதனால் எல்லாவிதமான தோஷங்கள், ரோகங்கள், ஆபிசாரம் முதலியவை நீங்குமென்றும் விரும்பிய பலன் கிடைக்குமென்றும் காமிகாகமத்தில் பலன் சொல்லப்பட்டுள்ளது.

ததி பூஜா விதி:

பங்குனிமாதத்தில் (ததி)தயிர்பூஜையைச் செய்யவேண்டும். இது ஆரோக்யத்தையும் எல்லாவிருப்ப பயன்களையும் தருவதாகும். யாகசாலையின் நடுவே வேதிகையை அமைத்து, ப்ரதான கும்பத்தில் நாலுத்ரோணம் அளவுள்ள தயிரை நிரப்பவேண்டும். பரிவாரங்களாக 1000 கலசங்களில் இரண்டுப்ரஸ்தம் அளவுள்ளதான தயிரை நிரப்ப வேண்டும். கலசங்களை முறையாக பூஜித்து ஹோமம் செய்து, ஸ்பர்சாஹுதியைச்செய்து, பூர்ணாஹுதியைச் செய்யவேண்டும். சுவாமிக்கு சிறப்புடன் பிறகு தயிரை அபிஷேகம் செய்வித்து, முன்பு போல பூஜை, நைவேத்யம் உபசாரங்களைச் செய்யவேண்டும். பிறகு சண்டேச்வர பூஜையைச் செய்யவேண்டும். இதனால் புண்யமானகதியை அடைவார்கள்.

நவ நைவேத்ய விதி:

ஆடி, மார்கழி, மாசி மாதங்களைத் தவிர்த்து மற்ற மாதங்களில் நவநைவேத்யவிதி உத்தரகாமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு முதலில் ஆசார்யர் அங்குரார்ப்பணம் செய்து, நல்லநாளில் ஸ்வாமி மற்றும் பரிவாரதேவதைகளுடன்கூட ஸகலவிதமான ந்ருத்தவாத்யங்களுடன் மண்டபத்தை அடைந்து தயிர்சாதத்தால் பூதபலியைக் கொடுத்து, பலவிதமான புதிய தான்யங்களை சேகரித்துக் கொண்டு, க்ராமப்ரதசக்ஷிணமாக ஆலயத்தை அடையவேண்டும். இங்கு அங்குரார்ப்பணம், த்ரிசூலம் (அஸ்த்ரதேவர்) சண்டேச்வரர் இல்லாமலும் செய்யலாம் என சொல்லப்பட்டுள்ளது. பிறகு சூர்ணோத்ஸவம் போலவே நெல்லிலிருந்து அரிசியை எடுக்க வேண்டும். பிறகு மிளகு முதலானவற்றுடன் புது அரிசி முதலானவற்றை பக்குவமாக சமைக்கவேண்டும். பிறகு ஸ்நபனாபிஷேகம் செய்து பரமேச்வரர் மற்றும் பரிவாரதேவதைகளுக்கும் நிவேதனம்செய்து, பலிவரை க்ரமமாக செய்து, ஆசார்ய பூஜையை செய்யவேண்டும். இதனால் செய்பவர் உயர்ந்ததான புண்ணியகதியை அடைவார் என்று உத்தரகாமிகாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

(அஜிதாகமம் 3 பாகம்) நவநைவேத்ய விதி

இப்பூமியில் விளையக்கூடிய தான்யம், பழம், புஷ்பம் இவைகளை, புதியதாக முதலாவதாக இறைவனுக்காக ஸமர்ப்பிக்கவேண்டும். இதனால் நூறுமடங்கு கூடுதலாக பலன்கிடைக்கும். சித்திரை அல்லது பங்குனியில் பூர்வபக்ஷத்தில் சுபதினத்தில் நவ நைவேத்ய விதியைச் செய்யவேண்டும். பிறகு (தானியகளஞ்சியம்) தேவக்ஷேத்ரம் செய்து, தான்யங்களை சேகரித்துக் கொண்டு, சிவாலயத்திற்கு எடுத்துவர வேண்டும். அரிசி முதலானவற்றை பக்குவம் செய்து, மந்திரத்துடன்கூடி நிவேதனம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதினால் ஒவ்வொரு வருடமும் பயிர்களுடைய உற்பத்தி அதிகரிக்கும் என பலன் சொல்லப்பட்டுள்ளது.

(ரௌரவாகமம் முதல்பாகம்) நவநைவேத்ய விதி

புரட்டாசி மாதம் தவிர்த்து மற்ற மாதங்களில் நவ நைவேத்ய விதி செய்யப்படவேண்டும். உத்தமமான முஹூர்த்தத்தில் அஸ்த்ர தேவர். சண்டிகேச்வரருடன் வயல்வெளியை அடைந்து, அங்கு சேஷத்திரபாலகரை பூஜைசெய்து நெல், பருப்பு முதலான தானியங்களை, சுத்தமாக புதிதாக மூங்கில்கூடைகளில் சேகரித்துக் கொண்டு, க்ராமப்ரதக்ஷிணமாக கோவிலை அடைந்து, நெல் முதலான தான்யங்களைப் உரலில் இட்டுகையால் இடித்து, பக்குவம் செய்து அதை சமைத்து இறைவனுக்கு நிவேதனம் செய்யவேண்டும். பிறகு ஆசார்ய பூஜை செய்ய வேண்டும்.

(ஸுப்ரபேதாகமத்தில்) நவநைவேத்ய விதி

நல்லநாள் மற்றும் நல்லநேரத்தில் அஸ்த்ரதேவருடன் கூட வாத்ய ஸகிதம் பக்தஜனங்களுடன்கூடி சேஷத்திரத்தின் (வயல்வெளி) ஈசானதிக்கை அடையவேண்டும். க்ஷேத்ரரக்ஷகர்களுக்கு (இந்திரன் முதலானவர்களுக்கு) தத்யன்னத்தால் பலிதர வேண்டும். பிறகு நெல், அரிசி, பருப்பு முதலான தான்யங்களை சேகரித்துக்கொண்டு க்ராம ப்ரதக்ஷிணமாக ஆலயத்தை அடையவேண்டும். மண்டபத்தில் அனைத்தையும் சேகரித்து உரல், உலக்கை ஆகியவற்றை அர்ச்சித்து, நெல்லிலிருந்து அரிசியைப் பிரித்தெடுத்து, அதனுடன் தேங்காய், வெல்லம், மிளகு, ஜீரகம் ஆகியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்து பக்தியோடு நிவேதனம் செய்யவேண்டும். பரிவாரதேவதைகளுக்கு நிவேதனம் செய்து, பலிதந்துவிட்டு, சண்டேச்வரருக்கு நிவேதனம்

செய்துவிட்டு உபசாரங்களைச்செய்து பக்தர்களுக்கு, நவான்ன போஜனம் செய்விக்கவேண்டும். இவ்வாறாக நவநைவேத்ய விதி ஸுப்ரபேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஸுப்ரபேதாகமத்தில் சீதகும்ப விதி

மழை இல்லாமலிருந்தாலும் துர்பிக்ஷம் வந்தாலும் வேறு நாட்டிற்கு செல்வதாயினும், ஜ்வரம் மற்றும் மாரியின் உக்ரம் தணிய வேண்டுமோனாலும் சீதகும்பவிதியைச் செய்ய வேண்டும். பரமேச்வரனுக்கு முன்பாக ஸ்தண்டிலம்அமைத்து சாலி (நெல்), தண்டுலம்(அரிசி), எள் முதலியவைகளை நிரப்பி அலங்கரித்து, ஸ்தண்டிலத்தில் வைத்து அதிவாஸபூஜையைச் செய்யவேண்டும். மறுநாள் கும்பத்தில் ஜபம் செய்து, சாந்திஹோமம் செய்து, பரமேச்வரனுக்கு பூஜைசெய்து சிரசின் மேல் கும்பத்தை ஸ்தாபித்து, நடுவில் தங்கஊசியால் துளையிட வேண்டும். பாலிற்கு இரண்டு மடங்கு பெரியதாகவும் தேனிற்கு மூன்று மடங்கு பெரியதாகவும் துளையிட வேண்டும். 21,14,7,5,3 நாட்கள் இவ்வாறாக பூஜை செய்ய வேண்டும். துளையிலிருந்து எப்பொழுதும் இடைவிடாமல் விழும்படியாகச் செய்யவேண்டும். கும்பத்தை எவ்வளவு நாட்கள் வைத்திருக்கிறோமோ அவ்வளவு நாட்கள் ஹோமம் செய்ய வேண்டும். பிறகு ஆசார்யபூஜை செய்யவேண்டும். இவ்வாறாக ஸுப்ரபேதாகமத்தில் சீதகும்ப விதியானது சொல்லப்பட்டுள்ளது.

(தீப்தாகமம் 2ம் பாகம்) க்ருதஸ்நான விதி

க்ருத(நெய்) ஸ்நானத்தினால் ஆயுள், ஆரோக்யம், வம்சவிருத்தி, தனலாபம், ராஜஜபம், ராஷ்டரத்திற்கு அபிவிருத்தி, என பலன்கள் சொல்லப்பட்டுள்ளது.

ப்ராஸாதத்திற்கு முன்பு, மண்டலம், ஸ்தண்டிலம், கும்பஸ்தாபனம் இவைகளைச் செய்து, மூலலிங்கத்திற்கு கலசங்களை வ்யோமவியா எனும் மந்திரத்தால் அபிஷேகம் மற்றும் க்ருதஸ்நானம் செய்து நைவேத்யாதி உபசாரங்களை முறைப்படி செய்யவேண்டும். இதனால் அனைத்து பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாகவும், சிவலோகத்தில் வசிப்பவனாகவும் ஆயிரம்கோடி கல்பவருடங்கள் போகத்தை அனுபவிப்பவனாகவும், அரசன் தார்மீகனாகவும் இருப்பார்கள் என தீப்தாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

க்ஷீரஸ்நான விதி (தீப்தாகமம் 2ம்பாகம்) (பாலாபிஷேகம்)

ஷீர(பால்) ஸ்நானத்தினால் ஆயுள், ஆரோக்யம் அபிவ்ருத்தியும், எல்லா வ்யாதிகளும் நீங்குமெனவும், சந்ததி அபிவ்ருத்தி அடையுமெனவும் உலக அமைதி ஏற்படுமெனவும் பலன் சொல்லப்பட்டு உள்ளது. ஸங்கீர்ணம், விகீரணம், ஸம்யோகம் என மூன்றுவிதமான ஸ்நானங்கள், நந்தா, பத்ரா, ஸுமனா, ஸுரபி, ஸுசீலகா என ஐந்து விதமான நிறங்களைக் கொண்ட பசுக்களும், பசுக்களிடத்தில் தேவதைகளுக்கும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

வீரியத்தின் பொருட்டு க்ஷீரஸ்நானம் அவசியமானதாகச் சொல்லப்பட்டு உள்ளது. ஸங்கீரணஸ்நானத்தில் மண்டலம், ஸ்தண்டிலம், கும்பம், கலசம் ஆகியவையும் ஸ்நானம், கந்த புஷ்பங்களால் பூஜை முதலியவை சொல்லப்பட்டு உள்ளன. இவ்வாறாக தீப்தாகமத்தில் ஷீர ஸ்நான விதியானது சொல்லப்பட்டு உள்ளது. இவ்வாறாகவே ஆகமங்களில்பல இடங்களில் பூஜையானது விஸ்தாரமாக கூறப்பட்டுள்ளது.

எனக்கு வாய்ப்பளித்தமைக்கு அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேன்மேலும் இப்பணி தொடர இறைவனைப் ப்ரார்த்திக்கிறேன்.



வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(அருணகிரிநாதர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.



வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

உ
ஸ்ரீகுருப்யோ நம:

சென்னை சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாச்சார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
1.	உருவத்தில் இறைவன்	தமிழ்	தமிழ்	No Stock
2.	விபூதி மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
3.	நவராத்திரி தேவியர் துதித்திரட்டு	தமிழ்	தமிழ்	No Stock
4.	புதுக்கோயில் சடங்கு ஐந்து	64-தமிழ்	தமிழ்	Rs.200/-
5.	சிவாகம கட்டுரைத் திரட்டு-1	122-தமிழ்	தமிழ்	Rs.300/-
6.	சிவாகம கட்டுரைத் திரட்டு-2	132-தமிழ்	தமிழ்	Rs.300/-
7.	காக்கும்காளியின் காருண்ய மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
8.	சிவாகம கட்டுரைத்திரட்டு-3	தமிழ்	தமிழ்	Rs.300/-
9.	சிவாகம கட்டுரைத் திரட்டு-4	168-தமிழ்	தமிழ்	Rs.300/-
10.	சிவயோகநெறி (சைவாகமத்தில்)	116-தமிழ்	தமிழ்	No Stock
11.	ஆலயாகார அர்த்த விவரணம்	64-தமிழ்	தமிழ்	No Stock
12.	புஷ்பார்ச்சன விதி	124-தமிழ்	தமிழ்	Rs.200/-
13.	திவ்யாபிஷேக விதி	136-தமிழ்	தமிழ்	Rs.200/-
14.	ஹோமலக்ஷண ஸங்கிரஹம்	340-தமிழ்	தமிழ்	Rs.500/-
15.	சண்டீயாக விவேகம்	306-தமிழ்	தமிழ்	Rs.400/-
16.	திவ்ய ஸ்தவ கதம்பம் (கிரந்தம்)	180-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
17.	சிவாகம கட்டுரைத்திரட்டு-5	160-தமிழ்	தமிழ்	Rs.200/-
18.	நக்ஷத்ரசாந்தி விதானம்	124-தமிழ்	தமிழ்	Rs.550/-
19.	உத்ஸவபேத க்ரியாபோதம்	224-தமிழ்	தமிழ்	Rs.350/-

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
20.	நற்கூற்று மணிமாலை	352-தமிழ்	தமிழ்	Rs.400/-
21.	சிவாகம சூக்தி மஞ்ஜரீ	224-தமிழ்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
22.	காளீபூஜாப்ரபாவம்	380-தமிழ்	தமிழ்	Rs.450/-
23.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	48-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.250/-
24.	புவனேச்வரீ பூஜாகல்பம்	202-தமிழ்	தமிழ்	Rs.350/-
25.	சைவநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	No Stock
26.	சிவசக்தி ஸ்தோத்ரமாலா	320-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.350/-
27.	பத்ரகாளீ தீபபூஜையும் துதிகளும்	124-தமிழ்	தமிழ்	Rs.200/-
28.	பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம்	560-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
29.	பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம்	150-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
30.	சிவாகம கட்டுரைத்திரட்டு-6	108-தமிழ்	தமிழ்	Rs.200/-
31.	திவ்யஸ்தவகதம்பம்	180-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
32.	கோயில்விழாக்களின் வாஹனஉலா	256-தமிழ்	தமிழ்	Rs.400/-
33.	தேர்பவனிப்பெருமை	176-தமிழ்	தமிழ்	Rs.300/-
34.	சிவகாமகட்டுரைத்திரட்டு-13	136-தமிழ்	தமிழ்	Rs.300/-
35.	சிவஸ்தோத்ர முக்தாவளீ	104-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
36.	ஆகமச்சான்றுப் பேழை	186-தமிழ்	தமிழ்	Rs.300/-
37.	சண்டீயாக ப்ரயோகம்	300-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
38.	ஆகமக்கோயில் அமைப்பு முறை	576-தமிழ்	தமிழ்	Rs.750/-
39.	லக்ஷ்மீ ஆராதன சந்திரிகா	528-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.800/-
40.	லிங்கஸ்தாபனம் & அஷ்டபந்தனம்	572-தமிழ்	தமிழ்	Rs.500/-
41.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	80-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
42.	திரிகால ஸந்தியாவந்தனம்	கிரந்தம்-24	சம்ஸ்க்ருதம்	Rs.100/-
43.	சிவாகமகட்டுரைத்திரட்டு பாகம்-10	262-தமிழ்	தமிழ்	Rs.300/-

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்த எழுத்தில் ரூ.1000/-

சைவ, வைணவக் கோயிலின் அறுசமயத் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3×3 அல்லது 5×5ல் ஆகம விதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ) (தமிழ் - பாகம்-3)



நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார்

சென்னை, மஹரிஷி வேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள், பலவற்றை பலமுறை தலைமையேற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமை அர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத் தேர்வுகளில் பலமுறை பரிக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், சிவாகம வித்யா பீடத்தின் ஸ்தாபகரும், சமய போதகராக இருந்து பல மாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னை சிவாசாரியார் அறக்கட்டளையின் கௌரவ ஆலோசகரும், அதன் சைவாகம கலாச்சார வித்யா கேந்திரத்தின் குருமுதல்வரும், சென்னையில் 8 ஆண்டுகள் மாதந்தோறும் 96 சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தியவரும், சமயம் சார்ந்த 40-க்கும் மேற்பட்ட விளக்க நூல்களை தொகுத்து வெளியிட்டவரும் ஆவார்.

₹ 300/-